


Optimized by www.ImageOptimizer.net

[illegible] மரம் வளர்ப்போம் என்று [illegible] கோவிலை நாம் பாதுகாக்க [illegible]

[illegible] ஊரில் கோவில்கள் சிதிலமடைய [illegible]... அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அந்தக் கோவிலை [illegible] பொறுப்பை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் [illegible] கோவில் மதில் சுவர்களையும்... [illegible] அதன் சுற்றுப் புறத்தையும் நாம் தரவேண்டும்... ஆலய [illegible] ஆயிரம் நன்மைகளைத் தரும்...

கோவிலைப் பாதுகாப்போம்...'

[illegible] இந்த முதல் பாகத்தின் ஆசிரியர் [illegible] நான் உங்கள் முன் வைக்கின்றேன்...



நட்புடன்

- முத்துலட்சுமி ராகவன் -

[illegible]: muthulakshmiraghavan24@gmail.com

## முத்துலட்சுமி ராகவன் எழுதிய

## "அம்மம்மா... கேளடி தோழி..!"

பாகம் – I






அந்தரங்க மனதினிலே
உன் முகம் தான் அதை அறிவாயா?

வெண்மேகங்கள் பஞ்சுப் பொதியைப் போல மிதந்து கொண்டிருந்தன.. அதன் மேற்பரப்பு பஞ்சுப் பொதியைப் போல இருக்க... அதில் உட்கார்ந்து சவாரி செய்ய ஆசைப்பட்டாள் ராதிகா... அவளது ஆசையை அறிந்ததைப் போல... ஒரு மேகம் அவளருகில் வேகம் குறைந்து நின்றது...

'ஆஹா...' என்று மகிழ்ந்து போனவளாக... அதில் ஏறி அமர்ந்து கொண்டாள் ராதிகா...

மேகம் மீண்டும் பயணத்தைத் தொடர... ராதிகா விண்ணில் பறந்தபடி.. பூலோகத்தை பார்வையிட்டாள்..

'அதென்ன.. அருவிக்கரையைப் போல இருக்கே..'

அவளது பார்வை படிந்த இடத்தில் பச்சைப் பசேலன்று செடி.. கொடிகள் அடர்ந்திருந்தன... உயரமான

Optimized by www.ImageOptimizer.net

பாறையின் திட்டின் மேல் கழித்தோடி வந்த ஆறு... அருவியாக மாறி கொட்டிக் கொண்டிருந்தது...

அது கொட்டிக் கொண்டிருந்த இடத்தில் பெரும் பள்ளம் இருக்க அதில் வழிந்து நிரம்பிய அருவிநீர்.. ஆறாக பெருகி ஓடிக் கொண்டிருந்தது...

ஆற்றங்கரையின் அருகில் பெரிய அரசமரம் இருந்தது.. அதனடியில் பெரியசிமிண்ட் மேடை இருந்தது.. மேடையின் மேல் பிள்ளையார் வீற்றிருந்தார்...

ஆற்றங்கரைக்கும்.. அரசமரத்தடி பிள்ளையார்க்கும்... காலம் காலமாக இருந்து வரும் சம்பந்தத்தை உணராதவளாக...

'அது எப்படி.. எல்லா ஆற்றங்கரையிலும்.. ஒரு அரச மரத்தடி பிள்ளையார் இருக்கிறாரு...?' என்று நெற்றியில் ஒற்றை விரலைத் தட்டி யோசித்தாள் ராதிகா...

அவளது யோசனையை.. நிறுத்தி.. இறக்கி விடச் சொல்லும் சமிக்ஞையாக மேகம் நினைத்ததோ என்னவோ... 'டகார்' என்று பூமிக்கு இறங்கி விட்டது...

'இதென்ன இங்கே இறக்கி விடுது...'

என்னவோ... இறங்க வேண்டிய இடத்தை அவள் மேகத்திடம் சொல்லியிருந்ததைப் போலவும்... அது அதை மறந்து.. வேறு இடத்தில் இறக்கி விடுவதைப் போலவும்.. நினைத்தபடி.. வேறு வழியின்றி மேகத்தைவிட்டு இறங்கி.. அருவிக் கரையில் கால் பதித்தாள் ராதிகா...



'இந்த இடம் டக்கரா இருக்கே...'

அவள் ரசித்துக் கொண்டிருந்தபோது... மேகம் உயர்ந்து... வானில் மிதந்து பறந்து விட...

'ஏய்.. என்னை எதுக்காக இங்கே விட்டுட்டுப் போகிற...' என்று கூவியபடி... அருவிக்கரையில் ஓடினாள் ராதிகா...

அவளது கூச்சலை மதிக்காமல் மேகம் போயே.. போய்விட... நின்று.. அருவிக்கரையைச் சுற்றிப் பார்த்தாள்...

'இனி என்ன செய்கிறது...?'

கண்களை மூடி யோசித்துக் கொண்டிருந்தவளை... யாரோ தோள் பற்றி உலுக்கினார்கள்...

"ராது... ஏய்.. ராது..."

"த்சு... யாரது..? நானே அருவிக் கரையில் நின்னுக்கிட்டு அடுத்து என்ன செய்கிறதுன்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.. இதில.. ராதுவாவது.. கீதுவாவது..."

"என்னது... அருவிக்கரையா..? அடியேய் கீது.. இங்கேவாடி... இவ என்னவோ புலம்பறா..."

"கீதுவும் வந்தாச்சா.. விளங்கினாப்புலதான்... ஹீ ஆர் யு மேன்..?"

"இது மேன் இல்லைடி... வுமன்.. மேனுக்கு உன்னை எழுப்பி காலேஜிக்கு அனுப்புற 'ஜொள்ளு' பிடிச்ச

Optimized by www.ImageOptimizer.net

வேலையெல்லாம் கிடையாதே.. அவரு நிம்மதியா எழுந்திருச்சு... காபியைக் குடிச்சுக்கிட்டே பேப்பரைப் படிச்சுக்கிட்டு இருக்கிறாரு... உமன் தலையில அப்படியா எழுதி வைச்சிருக்கு..? கொஞ்சம் படுத்தாம எழுந்திருச்சுத் தொலைடி..."

"என்னடா இது பெருந்தொல்லையாய் போச்சு..."

பேசத்தை தேடியபடி கண் விழித்த ராதிகாவின் முன்னால் கோப முகத்துடன் ராஜேஸ்வரி நின்று கொண்டிருந்தாள்...

அருவிக்கரை மறைந்து.. நான்கு சுவர்களும்.. ஜன்னலும் தட்டுப்பட... அவசரமாக எழுந்து கட்டிலில் அமர்ந்தாள் ராதிகா...

"நான் எங்கேயிருக்கேன்..?"

"ம்ம்... உன் அப்பா கட்டி வைச்சிருக்கிற அரண்மனையில் இருக்கிற... போதுமா..? காபியைப் பிடி.. எனக்கு அடுப்படியில் ஆயிரம் வேலை இருக்கு..."

"அருவிக்கரை எங்கேம்மா..?"

காபியை வாங்கியபடி ராதிகா கேட்டுவைக்க.. ராஜேஸ்வரியின் கண்களில் தீப்பொறி பறந்தது...

"வேண்டாம்டி... காலங்கார்த்தாலே வம்பைக் கட்டி இழுக்காதே எனக்கு நல்லா வந்திரும் வாயிலே..."

"எதுக்கும்மா கோபிச்சுக்கறிங்க...?"



"எழுகழுதை வயசாகுது... என்ஜினியருக்கு படிக்கிறேன்னுதான் பேரு.. ஒரு நாளைக்காவது நேரத்தோடு எழுந்திருச்சு கிளம்புகிறயாடி..? எனக்கு உதவிதான் செய்ய வேணாம்... உபத்திரமாவது.. பண்ணாமல் இருக்கலாமில்ல..?"

"நான் என்னம்மா செய்தேன்..."

"பேசாதே.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே... தண்ணியில்லாக் காட்டுல இருந்துக்கிட்டு.. இவ அருவிக்கரையில் நிற்கிறாளாம்.. அதைக் காணோமுன்னு கேள்வி வேற கேட்கிறா..."

"என்னவோ.. மெட்ராஸ் மாப்பிள்ளைதான் வேணும்ன்னு நீங்க ஒற்றைக் காலில் நின்று அப்பாவைக் கட்டிக் கிட்டிங்களாம்.. அப்புறம் எதுக்காக... இந்த சிங்காரச் சென்னையை தண்ணியில்லாக் காடுன்னு சொல்கிறிங்க..?"

காபியை உறிஞ்சியபடி ராதிகா புருவங்களை உயர்த்த... அவள் தலையில் ஒரு போடு போட்டாள் ராஜேஸ்வரி...

"யாரு ஒற்றைக் காலில் நின்னது..? நானா..? உன் அழகு மன்மத அப்பாவைக் கல்யாணம் பண்ணிக்க நான் ஒற்றைக் காலில் நின்னேனா...? தேவைதான் எனக்கு.. உனக்கு யாருடி இந்தக் கதையை அள்ளி விட்டது..?"

"வேற யாரு அள்ளி விட்டது... எல்லாம் அப்பாதான்.."

Optimized by www.ImageOptimizer.net

ராதிகா காபியைக் குடித்து விட்டு காலி தம்பளரை ராஜேஸ்வரியிடம் நீட்டி விட்டு.. அதற்கும் ஒரு அடியை தலையில் வாங்கினாள்...

"காபி போட்டுத்தான் குடிக்கத் தெரியாதுன்னா.. காலி தம்ளரைப் போய் கிச்சனில் இருக்கிற சின்க்கில் போடக் கூடவா உனக்குத் தெரியாது...?"

"எனக்கு காலேஜீக்கு நேரமாச்சம்மா..." ராதிகா சிணுங்க..

"எதுக்கெடுத்தாலும் இதையொண்ணைச் சொல்லிருவியே.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே... போடி... எனக்குன்னு வந்து வாய்ச்சதும் சரியில்ல... பிறந்ததும் சரியில்ல..."

தலையில் அடித்துக் கொண்டு.. காலி காபித் தம்ளரை எடுத்தபடி ராஜேஸ்வரி நகன்று விட.. கட்டிலில் அமர்ந்து ஒயிலாக சோம்பல் முறித்த ராதிகா... அழகாக இருந்தாள்...

ஒல்லியாக.. உயரமாக.. வட்ட முகத்தில் பெரிய கண்களுடன் இருந்தவளின் அழகுக்கு அழகு சேர்த்தது.. அவளின் கூடவே பிறந்ததைப் போல ஒட்டிக் கொண்டிருந்த அந்த துறுதுறுப்பு...

கட்டிலை விட்டு எழுந்தவளின் இடுப்புக்கு கீழே படர்ந்து பாவித் தொங்கிக் கொண்டிருந்தது.. அடர்ந்த கருமையான முடி...



ராதிகாவுக்கு... நீண்ட கூந்தலைக் கொண்டிருப்பதில் சங்கடங்கள் சில இருந்தன...

அதற்கு தினந்தோறும் எண்ணை தடவி பராமரிக்க வேண்டும்.. வாரம் இருமுறை... ஷாம்பூ போட்டு அலசி உலர வைக்க வேண்டும்..

நீண்டு.. அடர்ந்த முடி.. அவ்வளவு சீக்கிரத்தில் உலர்ந்தும் தொலைக்காது.. ஈரமுடியுடன் தலையைப் பின்னிவிட்டு தலைவலி வந்து அவஸ்தைப் படவேண்டும்...

ராதிகாவின் குட்டை முடித் தோழிகள்.. மாதந்தோறும் பியூட்டி பார்லருக்கு சென்று.. முடியை வெட்டி விட்டு சீராக்கிக் கொள்வார்கள்...

அவர்கள் முடியை விரியவிட்டு.. சின்னத்திரையில் வரும் விளம்பர மாடல்களைப் போல அலட்டலாக வரும்போது.. ராதிகா நீண்ட பின்னலுடன்.. அம்சமாக வந்து சேருவாள்...

"அம்மா... இந்த முடியாலே பெருந்தொல்லைம்மா.."

"யாருக்கு...?"

"வேற யாருக்கு..? எல்லாம் உங்களுக்குத்தான்.. இந்த முடியை பின்னல் போட்டு விட நீங்க தினமும் படுகிற சிரமத்தைப் பார்த்து எனக்கு மனசே தாங்கலைம்மா..."

ராதிகா இமை கொட்டி மூக்கை உறிஞ்ச...

Optimized by www.ImageOptimizer.net

'இதைப்போல எத்தனை நாடகத்தை நான் பார்த்திருப்பேன்...' என்ற ரீதியில் பார்த்து வைப்பாள் ராஜேஸ்வரி..

"காலையில் ஐந்து மணிக்கெல்லாம் அலாரம் வைச்சு எழுந்திருச்சு.. இந்த வீட்டில் அத்தனை வேலைகளையும்.. நான் ஒருத்தியாய் பார்த்துக்கிட்டு கிடக்கிறேன்... அதுக்கு உன் மனசு தாங்குது.. இந்த ஒற்றைப் பின்னலை ஒரு நிமிசத்தில் நான் பின்னி விடுகிற சிரமத்தைப் பார்த்துத்தான் உன் மனசு தாங்காம போச்சா..?"

இருந்தாலும்.. இந்த அம்மா இத்தனை புத்திசாலியாய் இருந்து வைக்கக் கூடாது என்று ராதிகாவுக்கு தோன்றியது..

அது என்னவோ.. அந்த வீட்டில் யார் என்ன வார்த்தை அஸ்திரங்களை விட்டாலும்.. சளைக்காமல் மறுநொடியில் பதில் அஸ்திரத்தை பிரயோகித்து.. அவற்றை முறியடிப்பதில் ராஜேஸ்வரிக்கு நிகர் ராஜேஸ்வரிதான்...

"நான் அதுக்கு சொல்லலைம்மா..."

"நீ எதுக்கு சொல்கிறேன்னு எனக்குத் தெரியும்டி மகளே.. நீ விடிய விடிய ராமாயணம் படிச்சாலும்.. உன் முடியை கந்தலகோலமா... கீத்துமாத்தா.. வெட்டிக்க ஒருநாளும் நான் சம்மதிக்க மாட்டேன்.. நான் வாழ்க்கைப்



பட்டதுதான் சென்னை... பிறந்துவளர்ந்தது காமலாபுரம்.. அதனால.. இந்த சென்னைப் பட்டினத்து டகால்பாச்சா வேலையையெல்லாம் விட்டுட்டு.. ஒழுங்காய் முடியை பின்னிக்கிட்டு காலேஜிக்கு கிளம்புகிற வழியைப் பாரு.."

"இது இர்ரிட்டேட்டா இருக்கும்மா..."

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.. எதுடி இர்ரிட்டேட்டா இருக்குது..? நானா.. இல்லை உன் முடியா..?"

'லேடி ஹிட்லர்...'

தன் செல்ல அம்மாவிற்கு ராதிகா வைத்திருக்கும் பட்டப் பெயர் இது...

ராஜேஸ்வரியைத் தவிர.. அந்த வீட்டிலிருக்கும் மற்ற ஜீவன்களுக்கு அந்தப் பட்டப் பெயரைப் பற்றித் தெரியும்...

பேஸ்டும்.. பிரஷ்ஷீமாக வாசல் பக்கம் போன ராதிகாவைப் பார்த்து...

"என்ன ராது... காலையில அருவிக்கரையில குளியல் போட்ட போல..." என்று கண்சிமிட்டிச் சிரித்தாள் கீதா... குளித்து முடித்து... பள்ளிக்குச் செல்ல சீருடையுடன் தயாராக நின்றாள்...

"ம்ஹீம்.. கனவிலதான் நாம அருவிக்கரையைப் பார்க்கமுடியும்.. நிஜத்தில் முடியுமா..? அது நம்மவீட்டு லேடி ஹிட்லருக்குத் தெரியுதா..? தூக்கத்தைக் கெடுத்து..

Optimized by www.ImageOptimizer.net

கனவைக் கலைச்சிட்டாங்கடி..." பல்லைத் தேய்த்தபடி கீதாவை மேலும்.. கீழுமாக பார்வையிட்டாள் ராதிகா...

"என்னடி நீ.. என்னைப் போயி இப்படிப் பார்க்கிற... இந்தப் பார்வையை.. எதிர்த்த வீட்டுத் தடியன்தான் பார்க்கணும்..." கீதா புருவங்களை உயர்த்திச் சிரித்தாள்...

"அவன் எப்படிப் பார்ப்பான்..? அவன் பார்க்கிறதுக்கு முன்னாடியே.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர்.. அவனை அனல் பார்வை பார்த்து வைச்சிருக்காங்களே.. இவங்களாலே இந்தத் தெருவில் ஒருத்தன் கூட நம்மளை சைட் அடிக்க மாட்டேன்கிறாங்கடி... அவ்வளவு பயம்..."

"அதைச் சொல்லு..."

"எதைச் சொன்னாலும்.. நல்லா வந்திரும் வாயிலே... நல்லா வந்திரும் வாயிலேன்னு.. சொல்லியே விரட்டியடிக்கிறாங்களேடி..."

"இப்ப பேசறதை விட.. எதை நல்லாப் பேசிறப் போறாங்க ராது..."

"வேணும்னா இதை அவங்ககிட்டயே கேட்டுச் சொல்லவா..?"

"எதுக்கு இந்த கொலைவெறி...?"

"தெரியுதில்ல...? அலம்பல் பண்ணாம அடங்கு.. என்ஜினியரிங் படிக்கிறவளே.. அடக்கி வாசிக்கிறேன்.. நீ



பிளஸ்டூவைப் படிச்சுக்கிட்டு.. எதிர்த்த வீட்டுத் தடியனைப் பத்திப் பேசறியா..?"

"என்னடி ஆச்சு..? ஔவையாரைப் போல ஆரம்பிச்சுட்ட..?"

"உன்னை யாருடி... இத்தனை சீக்கிரமாய் குளிச்சு... ரெடியாகச் சொன்னது...?"

"அதான் விசயமா..? என்னடா.. வேதாளம்.. தேவாரம் பாடுதேன்னு நினைச்சேன்..."

"நீ இதைமட்டுமா நினைப்ப...? இன்னும் என்னென்னவோ நினைப்ப.. இரு.. லேடி ஹிட்லர்கிட்ட பற்ற வைக்கிறேன்..."

ராதிகா தங்கையை மிரட்டிக் கொண்டிருந்த போது...

"அக்கா... என் பேனாவை ஏன் எடுத்த..?" என்று கேட்டபடி சுந்தர் அங்கு வந்து நின்றான்...

தினமும் ஒரு பேனாவைத் தொலைத்து விட்டு.. தம்பி... தங்கையின் பேனாவில் கை வைக்கும் ராதிகா அசடு வழிந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net



## 2

**தேவதையாய் என் கண்களுக்கு...
தேன்மொழியே..! நீ தெரிவதென்ன...**

"சுந்தர்... என் கண்ணில்ல..." தம்பியின் முகவாயைப் பிடித்து ராதிகா கொஞ்ச ஆரம்பிக்க.. அவள் கையை விலக்கி...

"இல்லை..." என்று நிர்தாட்சண்யமாக சொன்னான் சுந்தர்...

"ஏண்டா.. ஒரு பேனாவுக்காக.. கூடப் பிறந்தவளின் பாசத்தையே தூக்கி எறிவியாடா...?" ராதிகா வராத கண்ணீரைத் துடைத்துக் கொள்ள..

"நடிக்காதே.. ஒரு பேனாவா..? ஓராயிரம் பேனா..! தினமும் ஒரு பேனான்னு என் பேனாவைச் சுட்டு வைக்கறியே.. பாக்கெட் மணி கட்டாகிறது.. உனக்கா.. இல்லை எனக்கா.." என்று எரிந்து விழுந்தான் அவளது தம்பி...

"எனக்காக இந்தச் சின்னச் செலவை நீ செய்யக் கூடாதாடா...?"



"அதை நீ செய்ய வேண்டியது தானே..."

"காலேஜ் போகிறவளுக்கு ஆயிரம் செலவு இருக்கும்டா கண்ணா... அதில கையை வைச்சா... கையைக் கடிக்கும்டா..."

"எனக்கு மட்டும் கடிக்காதா...?"

"இப்ப என்ன...? உன் பேனாவை நான் எடுக்கக் கூடாது... அவ்வளவு தானே... நாளையில இருந்து எடுக்க மாட்டேன்.. போதுமா..."

"அப்ப.. இன்னைக்கு...?"

சுந்தரின் கேள்வி காதில் விழாததைப் போன்ற பாவனையுடன் ராதிகா வீட்டுக்குள் சென்றுவிட.. கீதா சிரித்தாள்...

"இது நாளை முதல் குடிக்க மாட்டேன்னு.. குடிமகன்கள் சொல்கிற வசனம்டா சுந்தர்.. உன் பேனாவை அவ கைவைக்கிறதை நிறுத்தவே மாட்டா... நாளைக்கு நீ கேட்டா.. இதே டயலாக்கை திருப்பிச் சொல்லுவா... அவள் ஒரு தொடர்கதைடா சுந்தர்.."

"இன்னைக்கு இதை விடப் போறதில்லை..."

"என்னடா செய்யப் போகிற...?"

"பஞ்சாயத்தைக் கூட்டப் போறேன்..."

Optimized by www.ImageOptimizer.net

காலை டிபன் சாப்பிட டைனிங் ஹாலுக்கு வந்த கிருஷ்ணமூர்த்தியிடம் வழக்கு வந்தது....

அவர் நிதானமாக இட்லி.. தோசையைக் காலி பண்ணியபடி சுந்தரின் மனக் குமுறலைக் கேட்டார்... ராதிகாவை நிமிர்ந்து பார்த்தார்... அவள் ஒன்றுமறியாத பச்சைக் குழந்தையைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்...

"ஏம்மா ராதிகா... உன் தம்பி பாவம் சின்னவன்..."

"ஆமாம்ப்பா..."

"அவனுக்கு ஒரு சிக்கலை நீ உண்டாக்கலாமா..?"

"கூடாதுப்பா..."

"இனிமே.. இப்படிச் செய்யாதே..."

"ஆகட்டும்ப்பா..."

விசாரணையை முடித்து.. தீர்ப்பு வழங்கி விட்ட நீதிபதியைப் போல மகனின் முகத்தைப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி... அவன் பல்லைக் கடித்தான்...

"பார்வையைப் பாரேன்.. சின்னக்கவுண்டர் கூட இவர் கிட்ட வாமுடியாதுங்கிறதைப் போல... என்னமாய் பார்த்து வைக்கிறாரு..." கீதாவின் காதருகில் முணுமுணுத்தான்...

"அக்காகிட்ட சொல்லிட்டேன் சுந்தர்.. அவ இனி உன் வழிக்கு வரமாட்டா..." கிருஷ்ணமூர்த்தி எழுந்து கொள்ள முயல...



"அப்பா.. தீர்ப்பை மாத்திச் சொல்லுங்க.." என்றான் சுந்தர்..

ராதிகா அப்பாவியாய் தந்தையைப் பார்க்க.. கீதா சிரிப்பை அடக்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்...

"என்னடா..?" கிருஷ்ணமூர்த்திக்கு எதுவும் புரியவில்லை...

அவர் மத்திய அரசாங்கத்தில்.. முக்கியமான பதவியில் இருந்தார்..பொறுப்புக்கள் அதிகம் என்பதால்.. சினிமாக்களை அதிகமாக பார்க்கமாட்டார்... அப்படியே பார்த்தாலும்.. வசனங்களை நினைவில் வைத்துக் கொள்ளமாட்டார்..

ஆகையால்.. சுந்தர் சொல்லிய வார்த்தைகளின் சாராம்சம் புரிந்தாலும்.. அது ஒரு திரைப்படத்தின் முக்கியமான வசனம் என்று அவருக்குப் புரியவில்லை...

"இவள்லாம்... சொன்னால் கேட்டுக்கிற பிறவியில்லை..."

"அதுக்காக...?"

"இனி பேனாவைத் தொலைச்சா.. உங்க பாக்கெட்டில் கை வைக்கச் சொல்லுங்க..."

"ஏண்டா.. எனக்கு பேனா வேண்டாமா...?"

Optimized by www.ImageOptimizer.net

"உங்களுக்கு எதுக்குப்பா பேனா..? அதுதான் கடைவீதியில இருந்து எல்லா இடத்திலயும் கம்ப்யூட்டர் ஆட்சி பண்ண ஆரம்பிச்சிருச்சு.. நீங்க கையெழுத்துக் கூடப் போட வேண்டியதில்லை.. அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டருக்குப் பதில் நீங்க கைநாட்டைப் பதிக்க ஒரு மெஷினிருக்கு..."

"கைநாட்டா..?"

கிருஷ்ணமூர்த்தி.. ஒரு முதுகலைப் பட்டதாரி.. அவரை அவரது செல்லமகன் கைநாட்டாக்கி விட்டதில் அவருக்கு ஏகப்பட்ட வருத்தம்..

"அதுக்குப் பெயர் கைநாட்டு மெஷின்தானேப்பா..."

அவர் வருத்தத்தை கண்டுகொள்வேனா என்று... இரக்கமில்லாமல் சொன்னான் சுந்தர்...

ஏதோ சொல்ல வாய்திறந்த கிருஷ்ணமூர்த்தி.. மகனிடம் தர்க்கம் செய்து ஜெயிக்க முடியாது என்று கடந்தகால வரலாற்றை நினைவு படுத்திக் கொண்டவராக வாய் மூடிக் கொண்டார்..

"அப்பா கூட ஏன்டா மல்லுக்கு நிற்கிற..?" ராஜேஸ்வரி கணவன் பாசத்தில் மகனை அதட்டினாள்...

"வேறு யாருகூட மல்லுக்கட்டறதும்மா..? நீங்களே சொல்லுங்க..." தாயிடம் நியாயம் கேட்டான் சுந்தர்...



"அப்படியொரு நேர்த்திக்கடன் இருக்காடா உனக்கு..?"

"இல்லைதான்.. ஆனா.. எனக்கு முதல்ல பிறந்திருக்கிற உங்க மூத்த மகள் தினமும் அப்படியொரு நேர்த்திக்கடனை எனக்கு உண்டாக்கி வைக்கிறாளே.. அதை ஏன்னு கேட்க மாட்டிங்களா..?"

"அவளை கேட்டுட்டாலும்..." ராஜேஸ்வரி அலுத்துக் கொண்டாள்...

"நல்லா வருது வாயிலே.. நல்லா வருது வாயிலேன்னு பேசுகிற உங்களாலேயே அவளைக் கேட்க முடியலைன்னா.. யாரும்மா அவளைக் கேட்கிறது..? நம்ம குடும்பத்தலைவர்தானே கேட்கணும்..?"

சேவல் கூவுவதற்கு முன்னாலே எழுந்து.. சேவலை எழுப்பிவிட்டு நாள் முழுவதும் அந்தக் குடும்பத்திற்காக உழைத்துவிட்டு நள்ளிரவில் துயில் கொள்ளும் தன்னை விட்டுவிட்டு... சூரியன் புறப்பட்டு வெகு நேரம் ஆனபின்னால் ஹாயாய் கண் விழித்து... கையில் பேப்பரோடு காபியை உறிஞ்சி.. குளித்து முடிக்கும் மிகப் பெரிய வீட்டு வேலையை செய்து முடித்து.. காலை டிபனை உள்ளுக்கு தள்ளிவிட்டு.. ராஜேஸ்வரி செய்து வைத்திருக்கும் மதிய உணவு கேரியரை தூக்கிக் கொண்டு.. வேலைக்குப் போகிறேன் பேர்வழியென்று... வீட்டுப் பிரச்னைகளில் இருந்து தப்பித்து.. மாலையில் வீடு திரும்பி... ஒருகுளியல் போட்டு..

Optimized by www.ImageOptimizer.net

ராஜேஸ்வரி செய்து வைத்திருக்கும் பலகாரத்தை லொக்கிவிட்டு... காபியை வயிற்றுக்குள் சரித்து.. டீவியின் முன்னே அமர்ந்து ஒரு சேனலை கூட மற்றவர்களை பார்க்க விடாமல் நியூஸ் சேனலை வைத்து.. உலக நடப்பை விமரிசனம் செய்து விட்டு.. இரவு டிபனை ஒரு கைபார்த்து விட்டு... சுகமாக தூங்கப் போய்விடும் கொடுத்து வைத்த பிறவியான கிருஷ்ணமூர்த்தியை சுந்தர் குடும்பத்தலைவனாக்கியதில் ராஜேஸ்வரிக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

"அடேங்கப்பா.. சம்பாதித்துப் போட்டுட்டா மட்டும் தலைவராகி விட முடியுமா...?" என்று நொடித்தாள்...

"டேய் சுந்து... நாற்காலிச் சண்டையை கிளப்பி விட்டுட்டயேடா..."

சுந்தர் தனக்கெதிராகத்தான் பிராது கொடுத்திருக்கிறான் என்பதை மறந்து தம்பியின் காதில் கிசுகிசுத்தாள் ராதிகா...

அதை செவிமடுத்த சுந்தர் அவளை முறைக்க... அருகிலிருந்த கீதா.. வாயைப் பொத்திக் கொண்டு 'களுக்' கென்று சிரித்தாள்...

"சிரிப்பென்னடி வேண்டிக்கிடக்கு..?" ராஜேஸ்வரியின் கண்களில் அனல் பறந்தது...

குடும்பத்தினரின் பேச்சைக் கவனித்தபடி சந்தடி சாக்கில் நழுவப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியை...



"அப்பா.." என்று சுந்தரின் குரல் தடுத்து நிறுத்தியது..

"என்னை என்னடா செய்யச் சொல்கிற..?" கிருஷ்ணமூர்த்தி அழமாட்டாத குறையாய் வினவினார்...

"அக்காவை என்னன்னு கேளுங்கன்னா... 'என்ன'ன்னு ஒற்றைவார்த்தையில் கேட்டுட்டு அப்படியே எஸ்கேப் ஆகிவிடப் பார்க்கறிங்களே.. உங்ககிட்ட இந்தப் பஞ்சாயத்தை கொண்டு வந்ததுக்கு பேசாம அம்மா கிட்டயே இந்தப் பஞ்சாயத்தை கொண்டு போயிருக்கலாம்..."

தீர்ப்பு வழங்கும் உரிமை.. கணவனிடமிருந்து கைமாறி தன்கைக்கு வந்ததில் ராஜேஸ்வரி உற்சாகமானாள்...

"இப்ப உனக்கு என்னடா செய்யனும்...?"

"இவளை அடக்கனும்மா..."

"அது முடியாத காரியம்டா மகனே.. இவ அப்படியே உங்க அப்பாவைக் கொண்டு பிறந்திருக்கிறா.. இவளாவது.. அடங்குகிறதாவது..."

கணவனைத் திட்ட இந்த முறையைத்தான் கையாளுவாள் ராஜேஸ்வரி.. அதைத் தெளிவாக உணர்ந்து வைத்திருந்த கிருஷ்ணமூர்த்தி...

'போதுமாடா..?' என்ற அர்த்தத்தில் மகனைப் பார்த்தார்...

Optimized by www.ImageOptimizer.net

இந்த வேலைக்காரது போல... அக்கா.. இனிமே என் பேனாவை எடுக்கிற வேலையை வைச்சுக்காதே..."

"அதுக்கென்னடா சந்து... நீதான் எனக்கொரு வழியை காட்டிட்டியே.. இனிமே அப்பா பேனாவையே கை வைக்கிறேன்..."

"அந்து... அதை விட்டுட்டு என்பக்கம் திரும்பாதே.."

"ஹரீம்... நான் ஸ்டெராயிட் பார்வர்டா.. அப்பா பக்கம் மட்டுமே பார்ப்பேன்.. கவலையே படாதே..."

ராதிகா.. உத்திரவாதம் அளிக்க... பேச்சு வார்த்தை முடிந்து விட்ட பாவனையில்...

"பஞ்சாயத்து கலைஞ்சிருச்சு..." என்று அறிவித்து விட்டு சுந்தர் பள்ளிக்கு கிளம்பி விட்டான்...

"அம்மா... நானும் ஸ்கூலுக்கு கிளம்பறேன்.." கீதா கையசைத்து விட்டு.. சுந்தரைத் தொடர்ந்து வெளியேறினாள்...

"ம்மா... என் லன்ச் பாக்ஸ்..." ராதிகா மட்டும் கிளம்பாமல் ராஜேஸ்வரியின் முகம் பார்க்க... அவள் சிடுசிடுத்தாள்...

"ஏண்டி... அதுக ரெண்டும் உனக்கு இளையதுக தானே..? அதுக எப்படி தானாய் லன்ச் பாக்ஸை எடுத்துக்கிட்டு போகுதுக.. உனக்கு மட்டும் நான் கையிலெடுத்துக் கொடுக்கணுமாக்கும்..?"



ராஜேஸ்வரியை தொடர்ந்து பேச விட்டால்... அவள் வாயில் நல்லதாக நான்கு வார்த்தைகள் வந்து விழுந்து விடும் அபாயம் இருந்ததால் அவசர.. அவசரமாக.. ராதிகா தன் மதிய உணவு டப்பாவை கையில் எடுத்துக் கொண்டு பறந்தாள்...

புயலடித்தபின் நிலவும் அமைதி அந்த வீட்டில் படர்ந்திருக்க... கிருஷ்ணமூர்த்தி.. மனைவியை பருகுவதைப் போலப் பார்த்தபடி நின்றார்...

"என்னாச்சு..? ஒருமார்க்கமாய் பார்த்துக்கிட்டு நிக்கறிங்க...? ஆபிஸீக்கு கிளம்பும் உத்தேசமில்லையா..?" கணவரை சந்தேகமாகப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

"ராஜி...." கிருஷ்ணமூர்த்தியின் குரல் குழைந்தது...

"ராஜிக்கு என்ன வைச்சிருக்கீங்க..." ராஜேஸ்வரியின் முகத்தில் மென்மை வந்தது...

"மூன்று பிள்ளைகளைப் பெத்து வளர்த்தவளைப் போலவே நீ இல்லைடி..."

"அப்புறம்... வேற எப்படி இருக்கேனாம்..?"

"உன்னைப் பொண்ணுப் பார்க்க வந்தப்போ.. எப்படி இருந்தியோ... அப்படியே இருக்கேடி..."

"ஆபிஸீக்குப் போகலையா..?"

"போகலை..."

Optimized by www.ImageOptimizer.net

"ஏன்..?"

"உனக்குத் தெரியாதா..?"

"கல்யாண வயசிலே பொண்ணுக இருக்காங்க... நினைப்பிருக்கட்டும்..."

"சீச்சி.. அதுக பாவம் பச்சைக் குழந்தைக..."

கிருஷ்ணமூர்த்தியின் கைகள் தாபத்துடன் ராஜேஸ்வரியை அணைத்துக் கொண்டிருந்த போது.. அவரால் 'பச்சைக் குழந்தை...' என்று விளிக்கப்பட்ட ராதிகா.. கல்லூரிக்கு நுழைந்து கொண்டிருந்தாள்...

"என்னடி.. உன் ஸ்கூட்டி எங்கே போச்சு..?" எதிரே வந்த ஹேமா விசாரித்தாள்..

"ரிப்பேர்..." ராதிகா சுவாதீனமாக பதில் சொன்னாள்...

"ரிப்பேர்ன்னா.. மெக்கானிக் ஷாப்பில் விட்டிருக்கியா..?"

"ஊஹீம்... எங்க வீட்டு காம்பவுண்டுக்குள் விட்டிருக்கேன்..."

"ஏண்டி..?"

"அப்பாவுக்கு தெரியாது..."

"உன் அம்மாவுக்கு தெரியுமா..?"



"அவங்களுக்குத்தான் முக்கியமாகத் தெரியக் கூடாது... அம்மாவுக்கு.. அப்பாவே மேல்.."

"அப்பான்னா மேலாத்தான் இருப்பார்..."

ஹேமா சிரிக்காமல் சொன்னாலும்.. அவள் கண்களில் சிரிப்பிருக்க.. சட்டென்று ராதிகா அதன் உட்பொருளை உணர்ந்து கொண்டாள்...

"அப்போ.. அம்மா ஃபீமேலா இருப்பாங்கன்னு சொல்லப்போகிறயாக்கும்..."

"கண்டு பிடிச்சிட்டயா..?"

"இதை பிரிகேஜி படிக்கிற பப்பா கூட கண்டுபிடிச்சிரும்..."

"ஆனா.. நம்ம ஷோபாகிட்ட நேத்து இதைச் சொன்னேன்... அவளால கண்டு பிடிக்க முடியல..."

"அவளை பிரிகேஜியில கூடச் சேர்த்துக்க மாட்டாங்க... இவளெல்லாம்... எப்படித்தான் என்ஜினியரிங் காலேஜ் வாசலை மிதித்தாளோ..."

"ஹா..ஹா..."

அவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டே வகுப்பறைக்குள் போனபோது.. அங்கே அந்த ஷோபா சுற்றிலும் இருந்த தோழிகளிடம் பெருமை பேசிக் கொண்டிருந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

"ஏய்.. இது என் டாடி சிங்கப்பூர் போனப்போ வாங்கி வந்தது.. இது மம்மி... மலேசியா போனப்போ வாங்கி வந்தது..."

இதே ரீதியில் அவள் பேசிக்கொண்டிருக்க... ராதிகா.. 'சுள்' கொட்டினாள் "பெரிய பெருமை பீற்றல் களஞ்சியம் தான்... எப்படிடி.. இவளுக இந்தப் பீற்றலை பொறுமையாய் கேட்கிறாங்க...?"






தேடுதல்கள் பல உண்டு..
உனக்கான தேடுதலும் என் நெஞ்சில் உண்டு...

இதைச் சொன்ன ராதிகா மெதுவாக அதைச் சொல்லியிருக்கலாம்... ஹேமாவுக்கு மட்டும் அது கேட்டிருந்தால்... அவள்.. வழக்கப்படியான தனது சிரிப்பை உதிர்த்து விட்டு பேசாமல் இருந்திருப்பாள்...

ராதிகா அதைச் செய்யாமல் சத்தமாக சொல்லிவைத்ததில்.. ஷோபாவைச் சுற்றியிருந்த அத்தனை பெண்களும் சிரிப்பை உதிர்த்து வைக்க.. ஷோபா அதீதமான மனப்பாதிப்புக்கு ஆளானாள்...



"ஏய்ப்... என்கிட்ட இருக்குது... நான் பெருமையாய் சொல்லிக்கிறேன்.. உனக்கேன்டி பொறாமையா இருக்கு..?" என்று சண்டைக்கு வந்தாள்...

உண்மையில் ராதிகா அப்படி அவளைப் பார்த்து பொறாமைப் படவில்லை என்பதில்தான் அவளுக்கு ஏகப்பட்ட எரிச்சல் இருந்தது...

ஷோபாவிடம் இருக்கும் வெளிநாட்டுக் காராக இருக்கட்டும்... அவளிடம் இருக்கும் இறக்குமதிப் பொருள்களாக இருக்கட்டும்.. விழா நாள்களில் அவள் அணிந்து வரும் வைர நகைகளாக இருக்கட்டும்.. எதைப் பார்த்தும் ராதிகாவிற்கு அவள் மேல் பொறாமை வந்ததே இல்லை...

அதைக்கூட ஷோபாவினால் தாங்கிக் கொள்ள முடிந்தது.. மாறாக இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை என்ற பார்வையை அவள் வீசுவதைத்தான் ஷோபாவினால் தாங்கிக்கொள்ள முடிவதே இல்லை...

அதனால்.. அவளும் பல்வேறு வழிமுறைகளில் ராதிகா அவளைப் பார்த்துப் பொறாமைப் படுகிறாள் என்பதை நிலைநிறுத்தப் பார்த்தாள்...

ராதிகா அசைந்து கொடுத்ததே இல்லை...

அன்றும் அதைப்போல ஒரு கேள்வியைக் கேட்டு.. அவளை பொறாமைக்காரியாக்க ஷோபா முயல... ராதிகா...

Optimized by www.ImageOptimizer.net

“போடி.. இவளே...” என்றாள்...

இவள் எங்கே போகச் சொல்கிறாள் என்று ஷோபா விழிக்க...

“இந்த செமஸ்டரில் நீ பர்ஸ்ட் மார்க் வாங்கியிருந்தால்.. நான் உன்மேல் பொறாமைப்படலாம்... பட்.. நீதான் நம்ம பேட்ஜிலேயே கடைசி மார்க்... உன்னைப் பார்த்து நான் ஏண்டி பொறாமைப் படப் போறேன்..?” என்று கேட்டாள்...

மற்ற பெண்களின் சிரிப்பு இப்போது உரத்து ஒலிக்க ஆரம்பிக்க ஷோபாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது... முகமெல்லாம் சிவக்க... அவள் சட்டென்று வெளியே போய் விட்டாள்...

“அவ்வளவுதான்.. இன்னைக்கு கிளாஸிக்கு மட்டம் போட்டு விடுவா... இனி நாளைக்குத்தான் வருவான்னு நினைக்கிறேன்...” ஹேமா சொன்னாள்...

“விடுடி.. அவளுக்கு இது ஒரு சாக்கு.. அவளெல்லாம் கிளாஸில் உட்கார்ந்து என்னத்தைப் படித்துக் கிழிக்கப் போறா..? வெளியே போனாலாவது உருப்படியாய் ஊரைச் சுற்றுவா..” ராதிகா அலட்டிக் கொள்ளாமல் உட்கார்ந்தாள்...

“நல்லவேளை.. நீ வந்து எங்களைக் காப்பாற்றின ராதிகா.. இல்லைன்னா.. எங்க காது ஜவ்வே கிழிஞ்சு போயிருக்கும்...” ஷீலா மகா நன்றியுடன் ஒரு பார்வை பார்த்தாள்...



“ஆமாண்டி.. எனக்குத்தான் வாய் இருக்கு.. உங்களுக்கெல்லாம் அது இல்லவே இல்லை பாருங்க... ஏன்..? அவகிட்டச் சொல்லவேண்டியதுதானே.. இதெல்லாம் உங்களுக்குப் பிடிக்காதுன்னு.. அவளைப் பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியது.. அப்புறம்.. அவபோன பின்னாலே முதுகுக்கு பின்னாடி அவ சொன்னதைச் சொல்லி கமெண்ட் பண்ணிச் சிரிக்க வேண்டியது.. உங்களுக்கு இதே பிழைப்பா போச்சுடி...” அதற்கும் ராதிகா கோபப்பட்டாள்...

“கூல்டவுன் ராதி... அவ முகத்துக்கு நேரே எப்படிடி சொல்கிறது..?”

“ஏன்..? வாயால்தான் சொல்லனும்.. உனக்கு வாய் இல்லையா..?”

“அதுக்கில்லைடி... முகத்துக்கு நேரே பேசினா.. முகத்திலடித்ததைப் போல இருக்காதா..?”

“முதுகுக்கு பின்னாலே பேசினா... அது அவங்க மனசில அடித்தைப் போல இருக்கும் ஷீலா...”

“ஏய்.. என்னடி நீ.. இப்படிச் சொல்கிற...”

“நிஜமாய்த்தான் சொல்கிறேன்... ஒருத்தங்க மனசில் அடிக்கிறதை விட... முகத்திலடித்தைப் போலப் பேசறது பெட்டர்...”

உருண்ட முகமும்.. துறுதுறுத்த கண்களுமாக... இதைச் சொல்லிய ராதிகா.. ஷீலாவை வசீகரித்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

ராதிகாவின் இது போன்ற பேச்சுக்களைக் கேட்க [illegible] மிகவும் பிடிக்கும்...

ஒரு பட்டாம் பூச்சியைப் போல.. அழகாக.. இரலையின் வேகத்துடன் துள்ளிக் குதித்து சுற்றி வரும் ராதிகாவின் மனதில்.. ஆழ்கடலின் ஆழத்தைப் போல.. ஆழமான நன்மைகள் நிறைய உண்டு...

அந்தத் தன்மைகளை உணர்ந்தவர்களால் அவளை நேசிக்காமல் இருக்கவே முடியாது.. ராதிகாவுடன் பழகுபவர்கள் சில நொடிகளிலேயே அவளால் வசீகரிக்கப் படுவதற்கான அடிப்படைத் தாத்பர்யம் இதுதான்...

ராதிகா வசீகரி.. அதை உணர்ந்திருந்ததால்தான்.. அவளது தோழிகள் அவள்மேல் உயிராய் இருந்தார்கள்.. ஷோபா அவள் மீது வெறுப்பாக இருந்தாள்...

'எப்படி இவளாலே.. அத்தனை பேரையும் அவள் பின்னால் வர வைக்க முடியுது...'

ராதிகாவைக் கண்ட நாள்முதல் அந்த நாள் வரை.. ஷோபாவிற்கு அதற்கான விடை கிடைக்கவே இல்லை...

அவளும் எத்தனையெத்தனை வழிமுறைகள் உலகத்தில் உண்டோ.. அவை அத்தனையையும் பிரயோகித்துப் பார்த்துவிட்டாள்...

ராதிகாவைச் சூழ்ந்து கொள்பவர்களின் கவனத்தைக் கவர்ந்து அவள் பக்கம் இழுத்துக் கொள்ள.. அவளால் முடியவே இல்லை...



'ஏதாவது ஒரு விசயத்தில் அவளைத் தோற்கடித்தே ஆகணும்...'

ஷோபாவின் மனதின் அடி ஆழத்தில்... அல்லும்.. பகலும்.. துடித்துக் கொண்டிருக்கும் ஆவேசம் இது...

தினமும் ஒரு காரில் காலேஜிக்கு சென்று பார்த்தாள்... ஒட்டை ஸ்கூட்டியில் வந்து இறங்கும் ராதிகாவைக் கண்டதும்...

'ஹாய்...' சொல்லி ஆர்ப்பரிக்கும் தோழியர் கூட்டம்.. இவளைக் கண்டதும்..

'ஏய்... பெருமைப் பீற்றல் களஞ்சியம் வந்துருச்சுடி...' என்று சொல்லி மாயமாய் மறைந்தனர்...

அந்தப் பட்டப் பெயரையும் ராதிகாதான் அவளுக்கு சூட்டியிருந்தாள் என்பதை அறிந்தபோது ஷோபா இன்னும் மனம் கொதித்தாள்...

'எப்படி டீ நீ எனக்கு நிக்நேம் வைக்கலாம்...' என்று அவளிடம் நேரடியாக மோதலாம்..

ஆனால் அதன் பின் விளைவுகள் வேறு மாதிரியாக இருக்கும்...

அதநாள்வரை... அவளது முதுக்குப் பின்னால் அந்தப் பட்டப்பெயரைச் சொல்லி அழைத்து வருபவர்கள்..

'இவளுக்குத்தான் இது தெரிஞ்சுருக்சே...' என்ற எண்ணத்தில் அவளது முகத்துக்கு நேரேயே அதைச் சொல்லி அழைத்து விடும் அபாயம் இருந்தது...

Optimized by www.ImageOptimizer.net

அதனால்... அதைக் கண்டும்.. காணாமல்.. அறிந்தும்.. அறியாதவளைப் போல அகன்று விட வேண்டிய நிர்ப்பந்தம் ஷோபாவுக்கு ஏற்பட்டு விட்டது...

இதைப் போன்ற எண்ணற்ற நிர்பந்தங்களை ஷோபாவுக்கு உருவாக்கி.. அவளுக்கு எதிரியென்னும் வட்டத்தில் சிக்குண்டு விட்டாள் ராதிகா...

இரவு.. இமை மூடித் தூங்கினால் கூட.. அதில் ராதிகாவின் முகம் மறையாமல் வந்து கண்களை உறுத்த.. இடைவிடாத மனஉளைச்சலுக்கு ஆளானாள் ஷோபா...

“ஷோபி.. வாட் இஸ்திஸ்..? இப்போத்தானே காலேஜிக்கு போன...?”

அவளுடைய தந்தை பரந்தாமன் ஆச்சரியமாக புருவங்களை உயர்த்தினார்..

“ஹெட் ஏக் டாடி...” சோர்வாக பதில் சொன்னாள் ஷோபா...

“ஓ.. காட்.. சுசி... வந்து குழந்தைக்கு என்னன்னு பாரு...”

பரந்தாமனின் பதட்டம் சுசிலாவையும் தொற்றிக் கொள்ள.. அவள் அவசரமாக வந்து மகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்..

“வாடா செல்லம்... வந்து ரெஸ்ட் எடு.. மரகதம்.. ஷோபாக்கு சூடாய் ஒரு கப் காபி கொண்டுவா...”



அடுத்த சில நிமிடங்களில் அந்த வீடே பரபரப்பாக.. தனக்கான அங்கீகாரம் கிடைத்துக் கொண்டிருக்கும் நிறைவில் ஷோபாவின் மனம் மெதுமெதுவாக அமைதி நிலைக்கு திரும்பியது...

“தூங்குடா செல்லம்...”

சுசிலா.. அறையில் ஏஸியை போட்டுவிட்டு வெளியேற.. ஷோபா கண்மூடித் தூங்க முயன்றாள்...

“தூங்கிட்டாயா..”

அறைக்குள் வந்த பரந்தாமனைப் பார்த்து...

“உஷ்ஷ்..!” என்று வாயின் மீது விரலை வைத்து எச்சரித்தாள் சுசிலா...

“என்ன..?” அவளுக்குப் புரியவில்லை..

“குழந்தை இப்போதுதான் தூங்க ஆரம்பிக்கிறா.. சத்தமாய் பேசாதீங்க...”

“நீ சொல்கிறதும் சரிதான்..”

பரந்தாமன்.. ஷோபாவின் தலைப்பக்கம் அமர்ந்து கொள்ள.. சுசிலா.. மகளின் மீது கை போட்டபடி... ‘என்ன..?’ என்று கண்களினாலேயே வினவினாள்...

“ஷோபிக்கு பர்த்டே வருதே...”

“ஆமாம்.. அதுக்கென்ன..?”

“எனக்கு ஒரு எண்ணம் சுசி...”

Optimized by www.ImageOptimizer.net

வியாபாரத்தை மேம்படுத்தக்கூட... இவ்வளவு தீவிரமாய் பரந்தாமன் யோசித்திருக்க மாட்டார்.. அவ்வளவு தீவிரமாய் அதை யோசித்தார்...

அவர் மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்க.. அப்படிப்பட்ட கடினமான முயற்சிகளைக் கையாளாமலேயே சுசிலா இயல்பாக ஒரு வழியைச் சொன்னாள்..

"நம்ம வீட்டு கார்டனில் பங்சனை வைத்துக்கலாமா..?"

ஒரு நொடியில் வழியைச் சொல்லி விட்ட மனைவியை ஆச்சரியத்துடன் பார்த்தார் பரந்தாமன்...

'இது எப்படி எனக்குத் தோணாம போயிருச்சு...?'

"பெண்டாஸ்டிக் சுசி..."

"ஈவினிங் முடிகிற சமயம்தான் பங்சனை ஆரம்பிக்கப் போகிறோம்.. அதனால.. கார்டனில்.. பூச்செடிகளின் மேலே.. சீரியல் லைட்டை பரத்தி எரிய விடலாம்... பக்கத்து வீட்டிலிருக்கிற முயல் குட்டிகளை அன்னைக்கு மட்டும் நம்ம கார்டனில் ஓட விடலாம்... செடிகளுக்கு மத்தியில் ரப்பர் டியூபைச் செருகி... செயற்கையாய் ஊற்று நீர் வருகிற மாதிரிச் செய்யலாம்.. மண் பொம்மைக் குதிரைகளை வாங்கி நிப்பாட்டலாம்.. இன்னும் செயற்கையாய் நேச்சரைக் காட்ட... எத்தனையோ வழிகள் இருக்கு..."



செயற்கையான இயற்கையைக்காட்ட அவர்கள் வழிமுறைகளை யோசித்துக் கொண்டிருக்க.. எப்போதையும் விட... ஆடம்பரம் அதிகமாக இருக்கப் போகும் அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டத்தை வைத்து தன் தோழிகளின் மத்தியில் தன் பெருமையை நிலை நிறுத்திக் கொள்ளும் வழிமுறையை யோசிக்க ஆரம்பித்தாள் ஷோபா...






**கோடைவெயிலின் கடுமைதனிக்க..**
**குளிர் நிழலாய் நீ வந்தால் என்ன..?**

என்றைக்கும் இல்லாத திருநாளாய்.. ஷோபா சிரித்த முகத்துடன் ராதிகாவைத் தேடி... அருகில் வந்தாள்...

"இவ என்னத்துக்குடி இப்படி சிரிச்சுக்கிட்டே வர்றா..?" ஹேமா புரியாமல் கேட்டாள்..

"அப்போ.. டேன்ஜர் சிக்னல் எரிய ஆரம்பிக்குதுன்னு அர்த்தம்.. இவ பூசுவலாய் இப்படி சிரிச்ச முகமாய் இருக்க மாட்டாளே..."

ராதிகாவுக்கு சந்தேகம் தட்டியது...

Optimized by www.ImageOptimizer.net

"ஏன்டி.. ஒருத்தி சிரிச்சாக் கூடத் தப்பா..?" ஷோபாவுக்கு சிரிப்பு வந்தது...

"இவசிரிச்சாத் தப்பு..." தீவிரமான முக பாவனையுடன் சொன்னாள் ராதிகா...

அதற்குள் ஷோபா அவர்களை சமீபித்து விட்டாள்..

"ஹாய்.. ராதிகா..." என்று வேறு சொன்னாள்...

பதிலுக்கு 'ஹாய்' சொல்லாமல் ஷோபாவின் முகத்தையே கூர்ந்து பார்த்தாள் ராதிகா...

"என்னடி.. அப்படிப்பார்க்கிற..?" ஷோபாவுக்கு புரியவில்லை...

"என்ன சொல்ல வந்த...?" ராதிகா நிதானமாகக் கேட்டாள்..

"என்..? எதுவும் சொல்லித்தான் ஆகனுமா...?"

"ஷ்யூர்.. எதும் விசயம் இல்லாமல் நீ ஒரு 'ஹாயை' எனக்காக வேஸ்ட் பண்ண மாட்ட.. ஸோ.. எதைச் சொல்ல வந்தியோ.. அதைச் சொல்லு..."

அவளின் அந்த அதீத புத்திசாலித்தனத்தில் ஷோபாவின் மனதில் எரிச்சல் மண்டியது... ஆனாலும்.. பேச வந்ததைப் பேசியாக வேண்டுமே.. அதனால்.. பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு இயல்பாக பேச முயன்றாள்...

'இவ எதுக்கு இத்தனை கஷ்டப்படறா..?'



வராத இயல்பை வரவைக்க.. ஷோபா எதற்காக மெனக்கெட வேண்டும் என்று ராதிகாவுக்கு சுத்தமாகப் புரியவில்லை....

ஆனாலும்.. அவள் பேச வந்துவிட்டாள்.. கேட்டுவைத்துத் தொலைப்போம் என்ற நினைவுடன் ஷோபாவின் முகம் பார்த்தாள்...

"எனக்கு பர்த்டே வருது ராதிகா..." அவள் உற்சாகமாகச் சொல்ல...

"இதைச் சொல்லவா இத்தனை பில்ட் அப் பண்ணின..? நான் பெரிசா எதையோ சொல்லப் போகிறேன்னு நினைச்சுட்டேன்.. அதான் வருசாவருசம் உனக்கு பர்த்தேட வருதே.. அதை எதுக்கு என்கிட்ட வந்து சொல்ற...?" என்று புருவம் உயர்த்தினாள் ராதிகா...

ஷோபாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.. எந்தப் பக்கம் போனாலும்.. அந்தப் பக்கம் வந்து வழி மறிக்கும் ராதிகாவிடம் பேசுவது என்பது அவளைப் பொறுத்தவரை மிகக் கடினமான ஒன்று...

அதையும் மீறி அவள் ராதிகாவுடன் பேச வேண்டியிருந்தது... அவளது பிறந்தநாள் விழாவிற்கு அவளை அழைக்க வேண்டி இருந்தது...

'பார்.. இதுதான் என் வீடு.. உன் அகராதியில் இதற்கு மாளிகை என்று பெயர்... இவர்கள் என்னைப்

Optimized by www.ImageOptimizer.net

பெற்றவர்கள்.. என் தோழி என்பதற்காக மட்டுமே உன்னுடன் நின்று ஒருவார்த்தை பேசுகிறார்கள்... இல்லையென்றால் உன்னால் இவர்களின் கிட்ட நின்று பார்க்கக் கூட முடியாது... என் பிறந்தநாள் விழாதான் இவர்களுக்கான முக்கியமான விழா.. அதை அவர்கள் கொண்டாடும் பிரம்மாண்டத்தைப் பார்...’

ராதிகாவிற்கு ஷோபாவின் உயரத்தை அறிவுறுத்த இதை விட்டால் சிறந்த வேறு வழியெதுவும் அவளுக்குத் தெரியவில்லை..

அதற்கு முன்னால் வந்த பிறந்த நாள் விழாக்களுக்கு அவள் ராதிகாவை அழைத்ததில்லை...

‘அன்னைக்கும் என்னை இவ மூட்அவுட் ஆக்குவா.. இவளெல்லாம் நான் இன்வைட் பண்ண வேண்டிய அளவுக்கு பெரிய ஆளா..?’

இதுதான் நேற்றுவரை ஷோபாவின் எண்ணமாக இருந்தது.. அதையெல்லாம் தாண்டித்தான் அவள் ராதிகாவை பிறந்தநாள் விழாவிற்கு அழைத்தாள்..

“அதை எங்க வீட்டில் செலிபரேட் பண்ணப் போறோம்...”

“பண்ணு...”

“பங்சனுக்கு நம்ம பிரண்ட்ஸையெல்லாம் இன்வைட் பண்ணியிருக்கேன் ராதிகா...”



“உன் பிரண்ட்ஸை இன்வைட் பண்ணியிருக்கேன்னு சொல்லு... எதுக்கு நம்ம பிரண்டுன்னு... என்னையும் உன்கூட கூட்டுச் சேர்த்துக்கிற...”

இப்படிப் பேசுகிறவளை எப்படி விழாவுக்கு அழைப்பது என்று ஷோபாவிற்கு தலைவலியே வந்துவிட்டது...

ஆனாலும்.. மனம் தளர்ந்து விடாமல் முயற்சியைத் தொடர்ந்தாள்....

“நீயும் என் பர்த்டே பார்ட்டிக்கு வரனும் ராதிகா...”

“நானா..?” ராதிகாவின் குரலில் ஆச்சரியமிருந்தது...

“யெஸ்...” அவளது ஆச்சரியத்தை உணர்ந்த மிதப்பில் சொன்னாள் ஷோபா...

‘இவளையெல்லாம் நான் இன்வைட் பண்ணுவேன்னு இவ நினைச்சுக்கூடப் பார்த்திருக்க மாட்டா... இப்ப கூப்பிட்டதும் நம்ப முடியாமல் திகைச்சுப் போயிட்டா...’

அவளுக்கு மகாப் பெருமையாக இருந்தது...

அதைத் தகர்க்கும் வார்த்தைகளை ராதிகா சொல்லப் போகிறாள் என்பதை அறியாமல் அவள் கர்வத்துடன் கித்தாய்ப்பாய் ஒரு பார்வையை பார்த்துவைக்க...

Optimized by www.ImageOptimizer.net

"இதுக்கெல்லாம் எங்க வீட்டிலே அலோப் பண்ண மாட்டாங்க ஷோபா.. ஸோ.. ஐ ஆம் வெரி ஸாரி... உன் பர்த்டே பங்சனுக்கு என்னால் வரமுடியாது..." என்று அவள் அழைப்பை நிராகரித்தாள் ராதிகா...

"வாட்..?" ஷோபாவிற்கு என்னவோ போல் ஆகிவிட்டது...

"யெஸ்.. பர்த்டேன்னா கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணனும்.. வீட்டில் வடை பாயாசத்தோட விருந்து சாப்பிடனும்.. புது டிரெஸ் போடனும்.. பிரண்ட்ஸிக்கு இனிப்பு கொடுக்கனும்.. இதுதான் எங்க வீட்டுப்பழக்கம்..."

"மிடில் கிளாஸ்ன்னா அப்படித்தான் இருப்பாங்க..."

தன் அழைப்பை ராதிகா மறுத்து விட்ட கோபத்தில் அவளை மட்டம் தட்டினாள் ஷோபா...

ராதிகாவா.. அவள் குட்டுவதற்கு தலையைக் கொடுப்பாள்...?

"இந்தக் கிளாஸ் விசயமெல்லாம் எனக்குத் தெரியாது... இருட்டின பின்னாலே.. எல்லோரையும் கூப்பிட்டுவைச்சுக் கூத்தடிக்கிறதுதான் ஹைகிளாஸ் பழக்கம்ன்னா... அப்படியொரு பழக்கமே எங்களுக்கு வேண்டாம்..." என்று இமைக்கும் பொழுதிற்குள் ஷோபாவை மட்டம் தட்டி விட்டாள் ராதிகா...

'இவளுக்கு எவ்வளவு திமிர்...'



ஷோபா பல்லைக் கடித்தாள்.. அவளுக்கு ராதிகாவை எப்படியும் தன் வீட்டு விழாவிற்கு வரவைத்து விடவேண்டுமென்று வெறியாக இருந்தது...

அழகான உடையுடுத்தி.. வைரங்கள் மின்ன.. தேவதை போல விழா நாயகியாக சிரித்து.. சங்கரின் அருகே அவள் நிற்க வேண்டும்..

'பார்.. இவன்தான் என் வருங்காலக் கணவன்.. இப்படியொருவனை நீ கனவிலும் நினைத்துப் பார்க்க முடியுமா..?' என்ற கர்வத்துடன் ராதிகாவின் முன்னால் சங்கருடன் கை கோர்த்து அவள் வலம் வரவேண்டும்...

ராதிகாவைப் போன்ற வாழ்க்கைத்தரத்தை உடைய ஒரு பெண்ணுக்கு சங்கரைப் போன்ற மணமகன் எட்டாக்கனி...

'இவ படிச்சு முடிச்சு.. கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை வாங்கி.. சம்பாதிச்சு.. இவளைப் போல மாதச் சம்பளம் வாங்குகிற எவனையாவது கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்தி... பேங்கில் லோனைப் போட்டு வீடு வாங்கி.. பிள்ளைகளைப் பெத்து.. வளர்த்து படிக்க வைச்சு.. அதுகளோட எதிர்காலத்துக்கு சேமிச்சுன்னு இவ வாழப்போகிற வாழ்க்கையை மனசுக்குள் சொல்லிப் பார்க்கும் போதே மூச்சு இரைக்குது.. இந்த லட்சணத்தில் இவ என்னைப் பார்த்து மட்டம் தட்டறா..'

காலேஜிற்குள் ஷோபாவை பிரமிப்பாக ராதிகா பார்க்க மாட்டாள் என்று ஆகிவிட்டது.. பாடங்களில் அவள்

Optimized by www.ImageOptimizer.net

முதல் மதிப்பெண் எடுத்து வைப்பாள்.. ஷோபாவோ.. பொழுது போக காலேஜிற்கு வந்து போகிற ரகம் என்பதால் கடைசி மதிப்பெண்களில் நின்றாள்.. மற்ற வசதிகளைக் காட்டி அவள் தன்னை பெரிய ஆளாக நிருபிக்க முயன்றால் ராதிகா அவற்றை சட்டை பண்ணவே மாட்டாள்..

'இவளை ஒருநாளாவது என் வீட்டுப்பக்கம் இழுத்து என் வசதியென்ன.. வாழ்க்கையென்னங்கிறதை காட்டணும்..'

ஷோபாவின் மனதில் ஆவேசக் கனல் மூண்டிருந்தது.. அதன் விளைவாக அவள் ஏறக்குறைய ராதிகாவை வற்புறுத்தினாள்..

"ஆயிரம்தான் இருந்தாலும் நான் உன் பிரண்ட்..."

"ஊஹீம்.. நீ என் கிளாஸ்மேட்..."

"இரண்டும் ஒன்றுதானே ராதிகா.. ?"

"ஊஹீம்.. இரண்டுமே வேறு வேறு..."

"அப்படியே இருக்கட்டும்.. உன் கிளாஸ் மேட்டின் பர்த்டே பார்ட்டிக்கு நீ வரக்கூடாதா.. ?"

'இவ ஏன் இந்த அளவுக்கு இறங்கி வந்து வற்புறுத்துகிறா.. ?'

இதில் ஏதோ இருக்கிறது என்று ராதிகாவிற்கு தோன்றிவிட்டது.. என்னவாக இருக்கும் என்று அவளும்



மண்டையை உடைத்துக் கொள்ளாத குறையாய் யோசித்துப் பார்த்தாள்.. ஒரு மண்ணும் விளங்கவில்லை...

'நான் இவ பர்த்டே பார்ட்டிக்கு போறதினாலே இவளுக்கு என்னவந்துவிடப் போகுது... ?'

ராதிகாவின் பிரசன்னத்தால் ஷோபாவிற்கு நிச்சயமாய் எதுவும் லாபம் வந்துவிடப் போவதில்லை என்பதை தெளிவாகப் புரிந்து வைத்திருந்ததினால் அந்தச் சந்தேகத்தை புறம் தள்ளினாள் ராதிகா...

அவளுக்கு ஷோபாவின் மனதிலிருக்கிற எண்ணத்தைப் பற்றி என்ன தெரியும்.. ?

'ஒருவேளை.. இவ நிஜமாகவே குணம் மாறிட்டாளோ என்னவோ.. என்கூட பிரண்டா இருக்கணும்னு ஆசைப்படுகிறாளோ என்னவோ.. அதுக்கு இந்த பர்த்டே பார்ட்டியை சாக்காக வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்னவோ...'

ஆயிரம் 'என்னவோ'களை யோசித்து விட்டு.. அரை மனதாக அந்தப் பிறந்தநாள் விழாவிற்கு வர ஒப்புக் கொண்டாள் ராதிகா...

"நீ இவ்வளவு தூரத்துக்கு வற்புறுத்திக் கூப்பிடுகிறதாலே நான் வருகிறேன் ஷோபா.. பட்.. அதிக நேரம் அங்கே இருக்க மாட்டேன்..."

'இவ பெரிய வி.ஐ.பி.. அதிகநேரம் இருக்க மாட்டேன்னு கண்டின் போடறா..'

Optimized by www.ImageOptimizer.net

மனதுக்குள் குமைந்து கொண்டாலும்.. வெளியே வரிசைப் பற்கள் தெரிய சிரித்தபடி...

"தேங்க்யு ராதிகா... தேங்க்யு வெரிமச்..." என்றாள் ஷோபா...

செய்தியை அறிந்த ஹேமா ஆச்சரியப்பட்டுப் போனாள்...

"அவளுக்கும்.. உனக்கும்தான் ஆகவே ஆகாதே ராதிகா... அவ வீட்டு பங்சனுக்கா போகிற...?"

"போகிற... இல்லை.. போகிறோம்... நீயும் என்கூட வர்ற..."

"நான் எதுக்குடி...?"

"எனக்குத் துணையாகத்தான்.. ஆமாம்.. நான் என்னவோ உன்னை ஊர்.. பெயர் தெரியாத இடத்துக்கு அழைக்கிறதைப் போல இவ்வளவு கேள்வி கேட்கிறயே.. அவ உனக்கும் பிரண்ட்தானே.. உன்னை இன்வைட் பண்ணலியா..?"

"பண்ணினா.. பண்ணினா..."

"அப்புறம் எதுக்குடி கேள்வி கேட்கிற...?"

"இவகூடல்லாம் கிளாஸ் ரூமில் பார்க்கிறப்போ நாலு வார்த்தை பேசுகிறதோட நிப்பாட்டிரனும் ராதிகா..."

"அதை எனக்கு சொல்லுறயா..? எனக்கே அது தெரியுமே..."



"தெரிஞ்சும் எப்படிடி அவவீட்டுக்குப் போக ஒப்புக்கிட்ட...?"

"ரொம்ப கெஞ்சறாடி.. போய்த்தான் பார்ப்போமே..."

"அதுக்கு என்னையும் ஏண்டி இழுத்தடிக்கிற..?"

"எனக்காக வா.. ஹேமா..."

"நீ சொன்னாலும்.. சொல்லாட்டியும் உனக்காத்தான் நான் வரனும்.. அவளுக்காக யாருடி வருவா..?"

"அதுக்கும் ஒரு கூட்டமிருக்கு..."

அன்று இரவு உணவுநேரத்தின் போது.. ஷோபாவின் பிறந்தநாள் விழாவிற்குப் போக பெற்றவர்களிடம் அனுமதி கேட்டாள் ராதிகா...

"இருட்டின பின்னாலேயா..? இது என்னடி புதுப் பழக்கம்..?" ராஜேஸ்வரி அதட்டினால்...

"அந்த ஷோபா ரொம்பக் கெஞ்சறாம்மா..." ராதிகா கெஞ்சினாள்...

"யாரைச் சொல்ற ராது...? அந்தப் பெருமை பீற்றல் களஞ்சியத்தையா சொல்ற...?" கீதா ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"ஆமாண்டி..." ராதிகா தண்ணீரைக் குடித்தபடி சொன்னாள்..

"அவ வீட்டுக்கு நீ போக மாட்டயே..." கீதா வினவினாள்...

Optimized by www.ImageOptimizer.net

"நேத்து வரைக்கும் அப்படித்தான் இருந்தது.." சலிப்புடன் சொன்னாள் ராதிகா...

"இன்னைக்கு மாற்றம் வந்திருச்சா..? மாற்றம் ஒன்றுதானே மாற்றமில்லாதது..." கீதா இயல்பாகக் கூறியபடி எழுந்து கொண்டாள்...

ராதிகாவிற்கு ஷோபாவின் பிறந்தநாள் விழாவிற்கு போய்வர அனுமதி கிடைத்துவிட்டது.. அவளுக்குத் தெரியாது. கீதா சொன்ன மாற்றம் அங்கே அவளுக்காக காத்திருக்கிறது என்பது...

## 5

## மாலையிலே நீகொண்ட... மயக்கமெல்லாம் யாருக்காக..?

"குட்மார்னிங் எவ்ரிபடி..."

அந்த ஏஸி ஹாலின் உள்ளே நுழைந்த சங்கர் கம்பீரமாகச் சொன்னான்... நீண்ட மேஜையின் இருபக்கமும் அமர்ந்திருந்தவர்கள் பதிலுக்கு வணக்கம் சொன்னார்கள்.. மேஜையின் நடு மையத்தில் இருந்த மேனேஜிங் டைரக்டரின் இருக்கையில் சங்கர் அமர்ந்ததும் போர்டு மீட்டிங் துவங்கியது...



அழகாய்.. அளவான உயரத்துடன் இருந்த சங்கரின் முகத்தில் சிரிப்பில்லை.. கண்டிப்பான முகபாவனையுடன் அவன் தீவிரமாக தன் கருத்துக்களை அங்கே சொல்லிக் கொண்டிருந்தான்.. மேஜையின் இருபக்கத்திலும் அமர்ந்திருந்த டைரக்டர்கள் அதைக் கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்..

ராமாமிர்தத்திற்கு அதைப் பார்க்க வெகு பெருமையாக இருந்தது.. அவரும் டைரக்டர்களில் ஒருவராக அமர்ந்திருந்தார்.. மகன் வெளிநாட்டுப் படிப்பை முடித்து விட்டு வந்ததும்.. அவன் கையில் கம்பெனியின் பொறுப்பை ஒப்படைத்து அவனை எம்.டியாக்கி விட்டு.. அவர் வெறும் டைரக்டராக ஒதுங்கிக் கொண்டார்..

சங்கரின் கைக்கு கம்பெனி போன பின்னால் ஏற்பட்டிருக்கும் விசுவரூப வளர்ச்சியில் அவர் பிரமித்துப் போயிருந்தார்...

"அவன் தகப்பனுக்கே பாடம் சொல்கிற சுப்பிரமணியக் கடவுள்டி..."

மனைவி வனஜாவிடம் அவர் பெருமைப் பட்டுக் கொள்ளும் வார்த்தைகள் இவை...

"ஒகே ஜென்டில் மென்.. தி மீட்டிங் இஸ் ஓவர்.."

போர்டு மீட்டிங் முடிந்து... டைரக்டர்கள் கலைந்து வெளியே போக ஆரம்பித்தனர்.. சிலர் அவனிடம் வந்து அவன் பேசியவிதம் நன்றாக இருந்ததாகக் கூறி கை கொடுத்தனர்..

Optimized by www.ImageOptimizer.net

ஒரு வழியாக சங்கரும் ராமாமிர்தமும் தனிமையான போது.. "மே ஐ கமின்..?" என்றபடி பரந்தாமன் உள்ளே வந்தார்...

உள்ளே வர அனுமதி கேட்டுவிட்டு.. பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே வரும் அவரது செய்கையைக் கண்டு சங்கரின் மனதில் எரிச்சல் மண்டியது...

சும்மாவே அவனுக்கு அவரைக் கண்டால் பிடிக்காது...

"அவர் சுத்த போர் டாட்.. நம்ம டைமை வேஸ்ட் பண்றார்..."

நிறையமுறை ராமாமிர்தத்திடம் இதைச் சொல்லியிருக்கிறான் சங்கர்...

"ஹீ இஸ் மை பெஸ்ட் பிரண்ட் சங்கர்..."

"ஸோ வாட்..? அதுக்காக உங்களைத்தான் அவர் டிஸ்டர்ப் பண்ணனும்.. என்னையும் எதுக்காக டிஸ்டர்ப் செய்யனும்..?"

"பிரண்டோட மகன்ங்கிற உரிமைதாண்டா..."

"அதுக்கு ஓர் அளவிருக்கு டாடி.. இவர் அதிக உரிமை எடுத்துக்கிறார்..."

பரந்தாமன் எதற்காக அந்த உரிமையை எடுத்துக் கொள்கிறார் என்று ராமாமிர்தத்திற்கு மிக நன்றாகவே தெரியும்.. சங்கருக்கு ஓரளவு தெரியும்...



அது தெரிய வந்ததினாலேயே.. சங்கர் பரந்தாமனை புறக்கணிக்கிறானோ என்ற சந்தேகம் ராமாமிர்தத்தின் மனதில் உண்டு.

சங்கர் எப்படியோ.. ராமாமிர்தம்.. பரந்தாமனின் மனதிலிருந்த அந்த ஆசையை ஆதரித்தார்... சங்கரோ அதை ஜாடையாகக் கூட கேட்க மறுத்தான்...

"ஷோபா என்ஜினியரிங் படிக்கிறா சங்கர்..."

"ஹூ இஸ் ஷி..."

"வாட் இஸ்திஸ் சங்கர்..? ஷி இஸ் பரந்தாமன்ஸ் டாட்டர்..."

"ஓ.. இது எனக்கெப்படித் தெரியும் டாடி..? மொட்டையாக ஷோபான்னு சொல்லாம.. அவ யாருங்கிறதை சொல்லிட்டு.. அதுக்கப்புறம் நீங்க மேட்டரைச் சொல்லியிருக்கனும்.. ஓகே.. லீவ் இட்.. அவ இன்ஜினியரிங் படித்தா எனக்கென்ன டாட்..? அதை எதுக்கு என்னிடம் சொல்கிறீங்க..?"

இப்படிப் பட்டுக் கத்தரிக்கிறவனிடம் எப்படிச் சொல்வார் ராமாமிர்தம்..?

'சங்கர்.. அந்த ஷோபா பரந்தாமனின் சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசு... அவளை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா.. பணம்.. பணத்தோடு சேரும்.... அவன் கம்பெனி நம்ம கம்பெனியோடு சேரும்...'

Optimized by www.ImageOptimizer.net

சொல்லத்தான் ஆசைப்பட்டார் ராமாமிர்தம்.. ஆனால்.. இன்றுவரை அந்த வார்த்தைகளை சங்கரிடம் சொல்ல அவரால் முடியவே இல்லை...

அவரைப் போல மிதவாதியாக இருக்க பரந்தாமன் தயாராக இல்லை... அவர்களின் தொழில் வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற தொழிலதிபனான சங்கரை மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவரின் குறிக்கோளாக இருந்ததால் அவர் தீவிரவாதத்தை கையில் எடுத்தார்...

“ஹாய் சங்கர்... இதுதான் என் மகள் ஷோபா...”

ஒரு சுபயோக சுபதினத்தில்.. சங்கரின் வீட்டுக்கே மகளை அழைத்துக்கொண்டு சென்று அவனுக்கு அறிமுகப் படுத்திவைத்தார்...

அப்போது சங்கர் முக்கியமான பிஸினெஸ் லன்ச்சிற்கு புறப்படும் அவசரத்தில் இருந்தான்.. அதனால் ஷோபாவின் முகத்தைக்கூடப் பார்க்காமல்...

“ஹாய்...” என்று சொல்லிவிட்டு நிற்காமல் போய்விட்டான்...

அவனைப் பார்க்கப் போகும் நினைவில் கவனமாக அலங்கரித்துக்கொண்டு வந்திருந்த ஷோபாவின் முகம் விழுந்து விட்டது..

அதே சமயத்தில்.. கம்பீரமாக அவளைக் கண்டு கொள்ளாமல் போனவனை அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது..



அடுத்தடுத்து பரந்தாமன் அவளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த அனேக சந்தர்ப்பங்களில் சங்கரின் கவனத்தை ஈர்க்க பகீரத பிரயத்தனம் செய்ய ஆரம்பித்தாள் ஷோபா...

பலன்தான் கிடைக்கவில்லை.. கல்லையும்.. மண்ணையும் பார்ப்பதைப் போல.. அவளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் சென்று விடுபவனை அவளால் கவர முடியவில்லை...

இருந்தும் அவள் தன் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தாள்.. சிலசமயம் அவன் அவளிடம் நின்று பேசுவதுண்டு...

அந்த சந்தர்ப்பங்களில் ஷோபா.. மடமடவென்று நிறையப் பேசுவாள்.. லேசான சிரிப்புடன் அதைக் கேட்பவன்.. ஓரிரு வார்த்தைகள் பதிலளிப்பதோடு.. நகர்ந்து விடுவான்..

“உங்களுக்கு பிரண்டுன்னா.. நானும் அவர்கிட்ட பேசனும்னு நினைக்கிறதும்.. அவர் மகள் அபத்தமாக பேசுகிறதை கட்டாயம் காது கொடுத்து கேட்கனும்கிறதும் கொடுமை டாடி...”

“இதெல்லாம் ஒரு கர்ட்டசி சங்கர்...”

“அந்தக் கர்ட்டசி அவங்களுக்கில்லையா...?”

“என்னடா இப்படிக் கேட்டுட்ட..? அவன் உனக்கு ரொம்பவும் மரியாதை கொடுக்கிற வனாச்சே...”

Optimized by www.ImageOptimizer.net

"ப்ச்சு.. அதில் ஒரு குறைச்சலும் இல்லை... என் பிஸி ஷெட்யூலைக் கண்டுக்காம.. மணிக்கணக்கில் என்னிடம் எம்பம் போடுகிறது தான் எனக்குப் பிடிக்கலை..."

இதைத் தடுக்க தன்னால் முடியாது என்பதை ராமாமிர்தம் உணர்ந்தே இருந்தார்..

பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்ற கனவிலிருக்கிற நண்பனிடம் போய் என் மகனிடம் அதிகம் பேசாதே என்று எப்படிச் சொல்வது..?

அதோடு.. அவரால்தான் சங்கரிடம் பேச முடிவதில்லை... நண்பனாவது பேசி.. அவனை சரிக்கட்டி விட்டால் சரிதானே என்ற எண்ணம் அவருக்கு..

"விட்டுத்தள்ளுடா.. அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்..."

"உங்களுக்குத் தெரிந்தது எவ்வளவு டாடி..."

"எதுக்குடா கேட்கிற..?"

"இல்லை.. இப்படி அவரைப் பேச விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கறிங்களே அதனால்தான் கேட்டேன்.."

மகன் கண்டுபிடித்து விட்டானோ என்ற சம்சயத்துடன் அவன் முகத்தை உற்றுப் பார்த்தால்... அதில் ஏதும் இருந்து தொலைக்காது...

மண்டைகாய்ந்து போய் விட்டிருந்த ராமாமிர்தம்... பரந்தாமனைத் தடுப்பதாகவே இல்லை...



அன்றும் அதைப்போல.. அனுமதி கேட்டுவிட்டு.. அதை எதிர்பார்க்காமல் அறைக்குள் வந்த நண்பனின் கையைப் பிடித்து குலுக்கினார் ராமாமிர்தம்...

"வா பரந்தாமா.. பார்த்து ரொம்ப நாளாச்சு..."

அவர் ஒரு பேச்சிற்காக சொல்லிக் கொண்டிருந்த போது..

"நேற்றுத்தானே இவரைப் பார்த்தோம்ப்பா..." என்று விசித்திரமாக தகப்பனைப் பார்த்தான் சங்கர்...

"மாப்பிள்ளை அதிலெல்லாம் கெட்டி ராம்.."

அதற்கும் மெச்சிப் போய் சிரித்தார் பரந்தாமன்...

அசுவராஸ்யமாக கைக்கடிகாரத்தைப் பார்த்தான் சங்கர்...

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டால்.. அடுத்த நொடியில் அறையை விட்டு வெளியேறப் போகிறான் என்று அர்த்தம் என்று புரிந்து வைத்திருந்த ராமாமிர்தம்.. அவசரமாக பரந்தாமனை பேச வைத்தார்...

"என்ன பரந்தாமா.. ரொம்ப பிஸியாய் இருக்க போல.. என்ன விசேசம்..?"

அவருக்குத் தெரியும்.. அந்த விசேசம் எது என்பது..

அதை அவர் அறிந்தால் மட்டும் போதுமா..? சங்கரும் அறிய வேண்டாமா..?

Optimized by www.ImageOptimizer.net

"ஷோபாவோட பர்த்டே பார்ட்டி வரப் போகுது ராம்.. அதுக்கான ஏற்பாட்டில்தான் பிஸியாய் இருக்கேன்..."

"ஓ.. ஹௌ நைஸ்.. ஹௌ நைஸ்..."

ராமாமிர்தம் மகிழ்ந்து போக.. இதில் இந்த அளவுக்கு இவர் மகிழ்ந்து போக என்ன இருக்கிறது என்ற கடுப்புடன் அவர்மீது ஒரு பார்வையை செலுத்தினான் சங்கர்..

"அந்தப் பார்ட்டிக்கு இன்வைட் பண்ண வந்தேன் ராம்.."

"என்னையா..?"

"உன்னைக் கூப்பிட.. போர்டு மீட்டிங் நடக்கிற இடத்துக்கு தேடி வரணுமா..? வீட்டிற்கு வந்து கூப்பிட்டிருப்பேனே..."

"வேற யாரை இன்வைட் பண்ண வந்த ராம்...?"

அரியாப்பிள்ளை போல ராமாமிர்தம் வினவிவைக்க.. சங்கருக்கு பற்றிக் கொண்டு வந்தது...

'இவர் எப்போதிருந்து இப்படி பூடகமாய் பேச கற்றுக் கொண்டார்...?'

பூடகமாய் பேசிய தந்தையின் மேல் கோபம் வருவதற்குப் பதிலாக அவனுக்கு பரந்தாமனின் மேல் கோபம் வந்தது...

அது ஏனென்று அவனுக்குத் தெரியவில்லை...



"இது என்ன கேள்வி ராம்..? நான் என் மாப்பிள்ளையை இன்வைட் பண்ண வந்தேன்டா..."

'மாப்பிள்ளையா..? நானா..? இவருக்கா..? ஓ..நோ..'

சங்கருக்கு ஷோபாவின் மேல் வெறுப்பொன்றும் இல்லை.. அதே சமயம அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளும் விருப்பமும் இல்லை...

இயல்பில்லாத பேச்சும்.. அதிகப்படி அலங்காரமுமாக இருக்கும் அவளிடம் ஒரு வினாடிக்கு மேல் அவனால் பேச முடிந்ததே இல்லை...

'இவ ஏன் இப்படியொரு ஆர்ட்டிபிஷியல் ஜீரோவா இருக்கா..?'

ஷோபாவை சந்திக்க நேரும் ஒவ்வொரு தருணங்களிலும் இந்தக் கேள்வி அவன் மனதில் எழுந்து நிற்கும்...

அப்படிப்பட்ட ஒரு பிரகிருதியுடன் தன் வாழ்வை இணைத்துப் பேசும் காரணத்திற்காகவே அவனுக்கு பரந்தாமனை இன்னமும் பிடிக்காமல் போனது...

"ஐ ஹேவ் நோ டைம் டாடி..."

"த்சு.. இன்வைட் பண்ணுவது பந்தாமன்.. அவனிடம் பேசாம என்னிடம் பதில் சொன்னா என்ன அர்த்தம் சங்கர்...?"

Optimized by www.ImageOptimizer.net

அதில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு.. அது ராமாமிர்தத்திற்கும் தெரியும்.. இருந்தும் அவர்.. அறிந்தும்.. அறியாதவரைப் போல கேட்டுவைத்தார்...

"நீங்கதானே சொல்வீங்க.. உங்களுக்கும்.. உங்க பிரண்டுக்கும் வேவ்லென்த் ஒன்னு போலவே இருக்குன்னு.. அதான் உங்களிடம் சொன்னா.. அவரிடம் சொன்னதைப் போலவே இருக்கும்ன்னு சொன்னேன்.."

ராமாமிர்தம் இந்தப் பதிலைக் கேட்டதும்.. செய்வதறியாதவராக நண்பனை நோக்கினார்.. அவர் ஒன்றும் ராமாமிர்தம் அல்லவே... பரந்தாமன் ஆயிற்றே... இதைப் போல எத்தனையை அவர் பார்த்திருப்பார்.. ?

அவர் சங்கரின் மறுப்பைக் கண்டு கொள்வேனா என்று அடம் பிடித்தவராக.. அவனிடம் நேரே கெஞ்சுதலாக கோரிக்கை வைத்தார்..

"நீங்க கட்டாயம் பங்ஷனுக்கு வரனும் மாப்பிள்ளை.."

'இந்த ஆளுக்கென்ன காது செவிடா.. ?'

சங்கருக்கு கோபம் வந்தது...

"அதைத்தான் டாடியிடம் சொன்னேன் அங்கிள்.. ஐ ஹேவ் நோ டைம்.. என் பர்த்டே பார்ட்டியை அட்டெண்ட் பண்ணவே எனக்கு டைம் கிடையாது.. இதில மத்தவங்க பார்ட்டியை அட்டெண்ட் பண்ண நேரத்துக்கு எங்கே போகிறது.. ?"



"நீங்க அப்படியெல்லாம் சொல்லக்கூடாது மாப்பிள்ளை..."

'இதென்னடா வம்பாப் போச்சு.. நேரமில்லைன்னா.. நேரமில்லைன்னுதானே சொல்ல முடியும்.. ? இந்த மனிதர் என்னடான்னா.. நீ அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுங்கிறாரு.. வேற எப்படித்தான் சொல்லனுமாம்.. ?'

வந்த எரிச்சலில்.. தகப்பனாரின் நண்பரை விட்டுவிட்டு.. தகப்பனையே நேரடியாக முறைத்தான் சங்கர்...

அவர் அசைந்து கொடுப்பதாகவே இல்லை..

'ஒரு வார்த்தையாவது இவர் என்பக்கம் பேசுகிறாரா.. ?'

ராமாமிர்தம் மகனின் பக்கம் பேசவேயில்லை.. பரந்தாமன் வற்புறுத்தி.. வற்புறுத்தி.. சங்கருக்கு தலைவலியை வரவைத்து.. ஒருவழியாக அவனிடம் கட்டாயம் அவர்கள் வீட்டு விருந்திற்கு வருவதாக வாக்குறுதியையும் வரவைத்து விட்டார்...

Optimized by www.ImageOptimizer.net



# 6

உன்னைப் போல ஒருத்தியைத்தான்..
உலகம் முழுதும் தேடினேனா..?

"காத்திடுவாய் நீயென்று...
கைகூப்பி வணங்கி நின்றேன்...
காத்திடவே நீயும் வந்தாய்...
கருணை செய்தாய் பெருமானே...!"

பூஜையறையில் மேகலாவின் குரல் கேட்டது.. அதில் பொதிந்து ததும்பி.. வழிந்து கொண்டிருந்த பக்தியில் நனைந்து போனான் பாலமுரளி...

பூஜையறையின் வாசலில் போய் அவன் நிற்பதற்கும்.. தீபாதாரனைத் தட்டுடன் மேகலா வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது...

"சாமியைக் கும்பிட்டுக்கப்பா..."

மகனைப் பார்த்து ஆதுரமாக சொன்னாள் மேகலா.. தீபாதாரனைத் தட்டின் ஜோதியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்ட மகனின் மேல் அவளின் பார்வை.. படிந்து வருடிக் கொடுத்தது...



'இவன் என் மகன்..!' அவளது நெஞ்சம் பெருமிதத்தில் மூழ்கி கூவியது...

மகன்மீதான கர்வம் என்றும் போல அன்றும் அவள் மனதில் நிறைய.. கற்பூர ஆரத்தித்தட்டை.. கடவுளின் முன் வைத்துவிட்டு.. அந்தப் பெருமையை நிலைக்கச் செய்யுமாறு கைகூப்பி வணங்கி கடவுளிடம் வேண்டிக் கொண்டாள் மேகலா...

"ஐயா..."

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு வாசலுக்குப் போன பாலமுரளி மாநிறத்தில் இருந்தான்.. ஆறடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் இருந்தான்.. அவனின் கருத்த சிகையும்.. அடர்ந்த மீசையும் அவனது ஆண்மை மிகுந்த தோற்றப் பொழிவை அதிகப்படுத்திக் காட்டியது...

"யாரு..?" என்றபடி வாசலுக்குப் போன பாலமுரளியிடம்...

"நான்தானுங்க ஐயா..." என்றான் நாச்சியப்பன்...

"என்ன நாச்சியப்பா..?"

"இன்னைக்கு தோப்பில காய் இறக்கனுமுன்னு சொன்னீங்களேய்யா..."

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"காய் இறக்க ஆள் வந்திருக்குய்யா..."

Optimized by www.ImageOptimizer.net

"அப்படியா..? ஒன்னு செய்யி.. நீ அவங்களை தோப்புக்கு கூட்டிக்கிட்டுப் போயி வேலையை ஆரம்பித்து வைய்யி.. நான் பின்னாடியே வந்துடறேன்..."

"ஆகட்டுங்கய்யா..." நாச்சியப்பன் விரைந்தான்..

உள்ளே போகத் திரும்பிய பாலமுரளி... அடுத்த "ஐயா..." என்ற அழைப்பைக் கேட்டு நின்றான்... வயலில் வேலை செய்யும் மருதமுத்து வந்திருந்தான்..

"என்ன மருதமுத்து..?"

"இன்னைக்கு நாத்து நடவு ஆரம்பிக்குதுங்கய்யா.."

"அதான் தெரியுமே.. நீ நடவு வேலையை ஆரம்பிச்சுரு... பாவியிருக்கிற நாத்தெல்லாம் சரியாப் போகுமில்ல..."

"மிச்சம்.. மிச்சம்ங்கய்யா.. என்னைக்கு நம்ம வயலுக்கு நாத்து பத்தாம போயிருக்கு...? நாம நட்டது போக மிச்சம் மீதியை சுத்துப்பட்டு வயலுக்கு கொடுத்துத்தானேங்க நமக்குப் பழக்கம்.. வாங்கிப் பழக்கமில்லையேய்யா..."

மருதமுத்துவின் வார்த்தைகளில் பெருமை தொனித்தது.. அவனின் பாசத்தின் மீதான பெருமை பாலமுரளியின் மனதில் தோன்றியது..

"தோப்பில காய் இறக்க ஆரம்பிச்சாச்சு மருதமுத்து.. நான் அதைப் பார்த்துட்டு வயல்பக்கம் வர்றேன்.. நீ வேலையை ஆரம்பிச்சுரு..."



மருதமுத்து அகன்றுவிட... பாலமுரளியும் வீட்டுக்குள் நகரப் போனான்...

"ஐயா..."

அழைப்புக்குரல் வந்துவிட்டது.. அகல முடியாமல் இப்போது வந்திருப்பது யாராக இருக்கும் என்ற நினைவில் அவன் திரும்பினான்..

செங்கல் சூளையிலிருந்து... ஆவுடையப்பன் வந்திருந்தான்...

"என்ன ஆவுடையப்பா...?"

"இன்னைக்கு செங்கலை அறுக்கனும் முதலாளி..."

"அறுத்துட்டாப் போச்சு... நீ வேலையை ஆரம்பி... கல்லை எண்ண ஆரம்பிக்கிறதுக்குள்ள நான் வந்திருவேன்..."

ஆவுடையப்பனையும் அனுப்பிவிட்டு.. 'அக்கடா' என்று வயிற்றுக்கு எதையாவது போட அவன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கப் போன சமயத்தில் அடுத்த குரல் அவனை அழைத்துவிட்டது...

"சார்..."

ஹீரோ ஹோண்டாவை நிறுத்தி விட்டு.. சதீஷ் மரியாதையுடன் அவன் முன்னால் வந்து நின்றான்..

"சொல்லுங்க சதீஷ்..."

Optimized by www.ImageOptimizer.net

"கரும்பு மில்லில் இன்னைக்கு ஆடிட்டிங் ஆரம்பிக்குது..."

"நினைவிருக்கு.. எல்லா டாகுமென்டையும் பக்காவா வைச்சிருக்கீங்களா..?"

"தயாரா இருக்கு சார்..."

"ஆடிட் பார்ட்டியை நல்ல முறையில் ரிஸிவ் பண்ணுங்க.. எந்தக் குறையுமில்லாம கவனிச்சுக்கங்க... அவங்க கேட்கிற.. ஃபைலையெல்லாம் உடனுக்குடன் எடுத்துக் கொடுங்க.. நான் வந்துடறேன்..."

"ஓகே சார்..."

சதீஷின் ஹீரோ ஹோண்டா கிளம்பிவிட.. வேறு ஒரு டிவிஎஸ் பிப்டி பால முரளியின் வீட்டு வளாகத்திற்குள் நுழைந்தது..

'இப்போ யாரு...?'

ஜவுளிக்கடையின் கணக்குப் பிள்ளை சுதர்சனம் வந்திருந்தார்...

"என்ன சார்...?"

"லோடு வந்து இறங்கியிருக்குங்க முதலாளி..."

"சாயந்திரம் வந்து பார்க்கிறேன்... நீங்க எத்தனை பண்டல்ன்னு மட்டும் செக் பண்ணி வாங்கி நம்ம கொடவுனில் அடுக்கி வையுங்க..."



அவரையும் அனுப்பி விட்டு.. அவன் உள்ளே போனபோது விசாலாட்சி.. சாப்பாட்டு மேஜையில் அவனுக்கு தட்டை வைத்து விட்டுக் காத்திருந்தாள்..

"பசிக்குதும்மா... சீக்கிரமாய் டிபனைப் போடுங்க..."

வேகத்துடன் கைகழுவி விட்டு வந்து.. அதைவிட வேகத்துடன் இட்லிகளை உள்ளே தள்ளிய மகனைப் பார்த்த மேகலாவுக்கு அவனின் அதிக உழைப்பைக் குறித்த கவலை எழுந்தது...

'இவன் வயசில இருக்கிறவனுக எல்லாம் பெண்டாட்டி... பிள்ளை குட்டின்னு குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கிறானுக... இவன் மட்டும் காலையில இருந்து.. நடுச்சாமம் வரைக்கும்... வேலை.. வேலைன்னு அலையறானே...'

ஒரே நாளில்.. தோப்பிலேயும் காயை இறக்கி... வயலின் நாற்று நடவையும் மேற்பார்வை பார்த்து... செங்கல் சூளையின் அறுக்கப்பட்ட செங்கல்களையும் கணக்கில் எடுத்து... லாரிகளில் ஏற்றி அனுப்பி வைத்து.. ஜவுளிக் கடையில் வந்து இறங்கியிருக்கும் ஜவுளிமூட்டைகளை உடைத்து சரிபார்த்து அடுக்க வைத்து... கரும்பு மில்லுக்கும் ஆஜராகி.. வந்திருக்கும் ஆடிட்டிங் பார்ட்டிகள் கேட்கும் விளக்கத்தையும் கொடுத்து என்று இவன் எப்படி அத்தனை வேலைகளையும் திறமையாக செய்து முடிக்கிறான் என்ற ஆச்சரியம் அவளுக்குள் எழுந்தது...

Optimized by www.ImageOptimizer.net

தண்ணீரைக் குடித்தபடி தாயைப் பார்த்த முரளியின் புருவங்கள் என்னவென்று வினவும் பாவனையில் மேலே உயர்ந்து இறங்கின...

"ஒத்த ஆளா இத்தனை சோலியையும் இழுத்துப் போட்டுக்கிட்டா எப்படிப்பா..?"

"பார்க்கிற சோலியை பார்த்துத்தானே ஆகனும்..?"

"அதுக்காக எம்புட்டு பாரத்தைத்தான் சுமக்கனும்னு வரைமுறை இல்லையா ராஜா..?"

தாயின் ஆதங்கம் மனதைத் தொட.... அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக இதமான சிரிப்பொன்றை உதிர்த்தான் பாலமுரளி...

"இது நம்மளோட சோலிம்மா... இதைச் சுமைன்னு நினைக்கலாமா..? அப்படிப் பார்த்தா அப்பாவும்.. தாத்தாவும்... இதைப் போலத்தானே சுமந்திருப்பாங்க...? அவங்க ரத்தம்மா நானு.. சுமையைக் கண்டு நான் பயப்பட முடியுமா..?"

"உன் தாத்தாவும்.. அப்பாவும்.. தோப்பு துரவோட நிறுத்திக்கிட்டாங்க முரளி.. நீ அதையும் தாண்டி.. செங்கல் சூளை,.. கரும்பு மில்லு.. ஜவுளிக்கடைன்னு இழுத்து விட்டுக்கிட்டியேப்பா..."

"அப்பன்.. பாட்டன் சொத்தில் மட்டும் அரசாண்டா அவனுக்குப் பெயர் ஆம்பளையில்லைம்மா... அவன் பெயரைச் சொல்லுகிறதைப் போல எதையாவது சாதிக்கனும்... அவன்தான் ஆம்பளை..."



பாலமுரளி சாப்பாட்டை முடித்தவனாக எழுந்துக் கொள்ளப் போனான்...

"இன்னும் ரெண்டு இட்லியைச் சாப்பிடுப்பா..."

அவசரமாக அவன் தட்டில் இட்லிகளை வைத்தாள்... மேகலா...

"இதுக்கும் மேலே சாப்பிட்டா வயிறு தாங்குமாம்மா..?"

"எல்லாம் தாங்கும்... இப்பப் போறவன் பொழுது சாயற வேளையில மதியச் சாப்பாட்டுக்கு வர்ற... உன்னைச் சொல்லிக் குத்தமில்லைடா மகனே... அம்மா கையில சாப்பிட்டா அப்படித்தான் இருக்கும்.. இதுவே பெண்டாட்டின்னு ஒருத்தி வந்து அவள் கையில் சாப்பிடுறதா இருந்தா நேரா நேரத்துக்கு நீயாய் ஓடி வந்திருவ இல்ல...?"

இது தினமும் மேகலா பாடும் பல்லவிதான்.. அடுத்து வரப்போகும் அனுபல்லவி எதுவாக இருக்கக்கூடும் என்று அறிந்து வைத்திருந்த பாலமுரளி... பதில் சொல்லாமல் தட்டிலிருந்த இட்லிகளைக் காலி செய்வதில் கவனமாகி விட்டான்...

"அக்கா போன்மேல போனா போடறா தம்பி..."

"எதுக்காம்..? ஏதாவது சீர் செனத்தி செய்யனுமா...?"

Optimized by www.ImageOptimizer.net

"அதை அவ கேட்கிற நிலைமையிலா நீ வைச்சிருக்க..?"

"அப்புறம் என்னவாம்..?"

"அவளோட சின்ன மாமியா அவளைப் போட்டு அனத்துறாளாம்..."

எதற்காக அனத்துகிறாள் என்று பாலமுரளி கேட்கவில்லை.. அவனுக்கே அதற்கான விடை தெரியும்....

"என்னப்பா பேசாம இருக்கிற...?"

"என்னத்தைப் பேசச் சொல்றிங்க.. இதில எனக்கு இஷ்டமில்லைன்னு எத்தனை வாட்டி சொன்னாலும் உங்க மனசில ஏற மாட்டேங்குதே..."

"அப்படிச் சொல்லாதே ராஜா... உன் அக்காவுக்கு உன்னை விட்டா யாரிருக்கா...? அவ மாமியா வீட்டுப் பக்கம் பெண்ணை எடுத்தா அவளுக்கும் அவ புருசன் வீட்டிலே மரியாதை கிடைக்கும்... பிறந்த வீட்டிலேயும் அவளுக்கு கடைசிவரை கவனிப்பு இருக்கும்..."

"எம்மா.. இப்ப என்ன என் அக்காவுக்கு அது வீட்டிலே மரியாதை கிடைக்காம போயிருச்சா..? இல்லை.. அதோட சின்ன மாமியா பொண்ணை நான் கட்டினாத்தான் இந்த வீட்டிலே அதுக்கு கவனிப்பு இருக்கும்... இல்லைன்னா... இல்லாம போயிருமா..? என் அக்காவுக்கு அது வீட்டிலே ஏதாச்சும் ஒரு சின்னக்குறை இருக்குன்னு அது சொல்லிப் பார்க்கட்டும்...



அந்த வீட்டையே உண்டு... இல்லைன்னு பண்ணிட்டு வந்திருவேன்.. அதே போல எனக்கு பெண்டாட்டியாய வருகிறவ என் அக்காவை கவனிக்காம இருந்தான்னு வைய்யுங்க அவளையும் உண்டு இல்லைன்னு பண்ணிருவேன்... அது என் ஒத்தை உடன்பிறப்பும்மா.. அதை நான் விட்டுக் கொடுத்திருவேனா...?"

"அதுக்காக சொல்லலை ராஜா..."

"நீங்க எதுக்காக சொன்னாலும் சரி... இதுக்காகவெல்லாம் நான் எனக்கு இஷ்டமில்லாத கல்யாணத்தை பண்ணிக்க மாட்டேன்..."

"இப்படிச் சொல்லியே காலத்தை கடத்து... உனக்கும் வயசு முப்பத்திஒன்னாகிருச்சு.. உன் கூடப் படிச்சவனெல்லாம் கல்யாணத்தைப் பண்ணி... பிள்ளைகுட்டியை பார்த்துட்டானுக.. நீ மட்டும் இன்னும் இதே வியாக்கினத்தைப் பேசிக்கிட்டே... அசைஞ்சு கொடுக்காம நிற்கிற..."

"வேற என்னத்தை பண்ணச் சொல்றிங்க..? எந்தப் பெண்ணைப் பார்க்கப் போனாலும் உங்களுக்கு பிடிக்க மாட்டேங்குது..."

"எவளாவது உன் அக்காவோட சின்ன மாமியா பெத்த பொண்ணைப் போல இருக்காளாடா..?"

"அப்புறம் எதுக்கு என்னைக் குத்தம் சொல்றிங்க.."

Optimized by www.ImageOptimizer.net

"சரி உனக்குத்தான் உன் அக்காவோட நாத்தனாளைப் பிடிக்கல... மத்த பொண்ணுகளையாவது பிடிக்குதாடா... ?"

"உங்களுக்கு பிடிச்சதா.. ?"

"என்னைவிடு.. கட்டிக்கப் போகிறவன் நீ.. உனக்குப் பிடிச்சிருந்தா நான் மாட்டேன்னா சொல்லப் போறேன்..? என் மனசுக்கு பட்டதைச் சொன்னேன்.. உனக்கு இஷ்டமில்லைங்கிற... அப்ப.. உனக்கு யார்மேல இஷ்டமோ... அவளை கண்ணில் காட்டு.. அவளையே உனக்கு கட்டி வைக்கிறேன்..."

"அப்படியொருத்தி என் கண்ணில் பட்டா... உங்க கண்ணுக்கு காட்டறேன்..."

"எப்படா.. ?"

"தெரியலையே..."

"இந்த வாரக் கடைசியில தென்காசிக்கு போகணும்ப்பா..."

"எதுக்கு...? பொண்ணு பார்க்கவா... ?"

"அதுக்குத்தான்.. நீதான் உன் அக்காவோட நாத்தனா வேண்டாம்கறியே..."

"இந்த வாரக் கடைசியில நான் சென்னைக்கு போகணும்மா..."

"எதுக்குடா.. ?"



"கரும்பு மில்லு சம்பந்தமா சென்னையில ஒரு வேலையிருக்கும்மா..."

"அப்ப.. மறக்காம உன் அக்காவோட சின்ன மாமியா வீட்டுக்கும் ஒரு நடை போயிட்டு வந்துருப்பா..."

"பார்க்கலாம்..."

"அப்படிச் சொல்லாதே... நீ அந்தப் பெண்ணைக் கட்டு.. இல்ல.. கட்டாம போ... அது வேற பிரச்னை... ஆனா மெட்ராஸிக்குப் போனா உன் அக்காவோட சொந்தக்காரங்க வீட்டில கால்வச்சிட்டுத்தான் வரணும்.. அதுதான் அவளுக்கு மரியாதை..."






ஒரு சின்னஞ்சிறு பார்வையிலே..
சிறை பிடித்தாய் என் மனதை...

பாலமுரளியின் அக்காவான பால சரஸ்வதியை திருநெல்வேலியில் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.. அவளது மாமியாரின் கூடப்பிறந்த தங்கையான சுசிலாவை சென்னையில் பரந்தாமனுக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள் அவர்கள் பெற்ற குணக்குன்றான

Optimized by www.ImageOptimizer.net

ஷோபாவை பாலமுரளியின் தலையில் கட்டிவிட வேண்டுமென்று பாலசரஸ்வதியும் எத்தனையோ பிரயத்தனங்களைச் செய்து பார்த்து விட்டாள்...

பாலமுரளி அசைந்து கொடுக்கவே இல்லை...

"ஏய்.. அவளுக்கென்னடா குறைச்சல்..? ஆள் பார்க்க மூக்கும்... முழியுமா.. ரதியைப் போலவே இருக்கா.."

"நீ ரதியைப் பார்த்திருக்கியாக்கா...?"

"ஷோபாவைப் பார்த்திருக்கேனே.. இது போதாதா..?"

"ஆனாலும்.. இது ரொம்பவும் அதிகப்படிக்கா.. உன் சின்ன மாமியாரின் மகள்ங்கிறதுக்காக... யார் கூட வேணும்னாலும் அவளை இணை கூட்டிருவியா..?"

சரஸ்வதிக்கு தம்பியின் பேச்சைக் கேட்டு சிரிப்பு வந்துவிடும்.. அவள் அவனருகில் வந்து.. நாடியைப் பிடித்து கெஞ்சுதலாக கேட்பாள்...

"ஏன்டா.... எவ்வளவு நல்லவன் நீ..?"

"போச்சுடா.. ரொம்ம்ப நல்லவன்னு சொல்லிட்ட.. எதை டின்கட்டப் போகிற உத்தேசத்தில இதைச் சொல்ற...?"

"எனக்காக எம்புட்டோ செஞ்சிருக்கே..."

"இப்பவும் கேளு செய்யறேன்..."



"அதைத்தானேடா நானும் கேட்கிறேன்.. எனக்குப் பணம்.. நகையெல்லாம் வேண்டாம்..."

"அடேங்கப்பா.. உன்னை என்னவோ வெறுங்கையோட விரட்டி விட்டதைப் போலல்ல பேசி வைக்கிற.. வண்டி வண்டியாய் சீர்வரிசையோட... வைர நகைகளோட உன்னை அனுப்பி வைச்சேன்.. மறந்து போயிருச்சா..."

பாலமுரளியும் அப்படித்தான்.. அவனுடைய அப்பா மாணிக்க வாசகத்துடன் காடுகரை.. தோப்பு.. வயல் என்று சென்று பழகியவன் அவன்...

வீட்டுக்குள்ளேயே இருந்து பழக்கப்பட்ட மேகலா தடுமாறிப் போனபோது...

"நான் பார்த்துக்கறேம்மா..." என்று சொன்னவன் அவன்...

அப்போது தோப்பு... வயல் என்று விவசாயம் மட்டுமே அவர்களது குடும்பத் தொழிலாக இருந்தது.. கை கொடுக்க வேலையாள்கள் இருந்தார்கள்.. கணக்கைப் பார்க்க கணக்குப்பிள்ளை இருந்தார்..

இருந்தபோதும்.. பாலமுரளி அதிகாலையிலேயே எழுந்து தோப்புப் பக்கம் போய்விடுவான்.. அங்கே காவல் காக்கும் சின்னான் குடும்பத்துடன் பேசியபடியே தோப்பைச் சுற்றிவிட்டு.. வயல்பக்கம் வருவான்.. அங்கே வேலை நடப்பதை பார்வையிட்டு விட்டு வீட்டுக்கு வரும் போது.. சுள்ளென்று வெயில் அடிக்க ஆரம்பித்திருக்கும்...

Optimized by www.ImageOptimizer.net

"ரொமான்ஸ்டா..."

அவனுடனே பள்ளிக்குச் செல்ல தயாராக கிளம்பி நிற்கும் பதினேழு வயது பாலசரஸ்வதி அவசரப் படுத்துவாள்...

"போறேக்கா..." என்றபடி குளித்து முடித்து இரண்டு இட்லிகளை பிய்த்து வாயில் போட்டுக் கொண்டு.. மோட்டார் சைக்கிளை எடுப்பான்.. தமக்கையை பின்னால் அமர வைத்துக் கொண்டு.. பக்கத்து டவுனிலிருக்கும் பள்ளிக்கு பறந்து விடுவான்...

சாயங்காலம் வந்ததும்.. முகம் கழுவி உடைமாற்றி.. மேகலா கையால் காபி.. பலகாரம் வாங்கி சாப்பிட்டு விட்டு ஓய்வெடுக்க வேண்டிய கொடுப்பினை பாலசரஸ்வதிக்கு மட்டுமே உண்டு...

பாலமுரளி.. அயர்ந்து உட்காரமாட்டான்.. மீண்டும் தோப்பு... வயல் என்று சுற்றி விட்டு வர கிளம்பிச் சென்றுவிடுவான்...

வாரத்தில் ஐந்து நாள்கள் மட்டுமே பள்ளி இருந்ததும்... வாரக் கடைசியான இரண்டு நாள்களில் விடுமுறை என்பதும் அவனுக்கு வசதியாக இருந்தது...

கூடுதலாக காலாண்டு.. அரையாண்டு.. முழுஆண்டு என்று விடுமுறை நாள்கள் வந்து சேர.. அவன் பள்ளியிறுதிவரை எந்த விதத் தடையுமில்லாமல் படித்து முடித்து விட்டான்...



பாலசரஸ்வதியை ப்ளஸ்டூவிற்கு பிறகு வீட்டில் நிறுத்திக் கொள்ள மேகலா முயன்றபோது.. பாலமுரளி அதை வன்மையாக கண்டித்தான்...

"இப்ப எதுக்கு அக்காவோட படிப்பை நிறுத்தறிங்க..?"

"பொம்பளப் புள்ளைக்கு இதுக்கு மேல படிப்பு எதுக்குடா..?"

"பொம்பளப் புள்ளைக்குத்தான் படிப்பு அவசியம்... ஒரு வீட்டின் அச்சாணியே பெண்தான்... அவள் படிப்பறிவோடு இருந்தால் தான் அந்தக் குடும்பம் முன்னேறும்..."

"அவதான் பனிரெண்டாவது வரைக்கும் படிச்சிருக்காளேடா..."

"அது போதுமா..?"

"பின்னே..? இவளை பட்டம் வாங்கவா அனுப்பப் போற...?"

"ஆமாம்..."

பாலமுரளி அதில் உறுதியாக நின்றான்.. பக்கத்து டவுனில் இருக்கும் பெண்கள் கல்லூரியிலேயே பாலசரஸ்வதியை சேர்த்தும் விட்டான்...

"நீ ப்ளஸ் ஒன் படிக்கிற சின்னப் பையன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்கடா முரளி.. நீ எனக்கு தம்பியில்ல.. அண்ணன்...!"

Optimized by www.ImageOptimizer.net

பாலசரஸ்வதி அழுதுவிட்டாள்.. தமக்கையின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் துளிகளை ஆதரவுடன் துடைத்து விட்டான் பாலமுரளி...

“இதுக்குப் போய் ஏன்க்கா அழுகறே..? இது சின்ன விசயம்..”

“இதுவாடா தம்பி சின்ன விசயம்..? எவ்வளவு பெரிய விசயத்தை நீ சாதிச்சிருக்கிற.. நீ மட்டும் இல்லைன்னா.. அப்பா போன பின்னாலே அம்மா என்படிப்பை நிறுத்தி மூலையிலே உட்கார வைச்சிருப்பாங்க...”

மேகலா அதைத்தான் செய்வதாக இருந்தாள்.. ஊருக்குள்ளே பெரிய குடும்பம் என்று பெயர் வாங்கிவிட்டு.. குடும்பத் தலைவன் இல்லாத போது.. வயதுப் பெண்ணை வெளியே விட்டால்.. அந்தக் குடும்பப் பெருமைக்கு குறைவு வந்து விடுமோ என்று பயந்தாள்...

“நீ ஆம்பளைப் பையன்டா.. நீ படிக்க பக்கத்து டவுனுக்குப் போனா ஒன்னுமில்லை.. அதுவே உன் அக்கா போனா சரிவராதுடா..?”

“ஏன் சரிவராது...?”

“இது ஆம்பளையில்லாத குடும்பம்டா முரளி.. வயசுப் பெண்ணை வெளியே அனுப்பிட்டு வயித்துக்குள்ளே நெருப்பைக் கட்டிக்கிட்டு உட்காரச் சொல்றியா..? அவ படிச்சது போதும்டா.. அடுத்த வருச வாக்கிலே என்



தம்பிக்கு அவளை கட்டிக் கொடுத்துட்டு நிம்மதியாய் இருக்கலாம்...”

“என்னது பதினேழுவயசில கல்யாணமா..?” பாலமுரளிக்கு கோபம் வந்துவிட்டது...

“இதுவே அதிகம்டா.. எனக்கு பதினாறு வயசிலேயே கல்யாணம் ஆகிருச்சு...”

“அது உங்க காலம்... இப்ப காலம் மாறிப்போச்சு..”

“என்னை என்னதாண்டா பண்ணச் சொல்ற..?”

“என்னைப் பார்த்தா உங்களுக்கு ஆம்பளையா தெரியலையா..?”

பதினைந்து வயது பாலமுரளி கேட்டபோது மேகலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

தாயின் கண்களுக்கு அவள் பெற்ற பிள்ளைகள் என்றுமே குழந்தைகள்தான்.. அந்த நினைவில்...

“நீ பச்சைப் புள்ளைடா...” என்றாள்...

“ஊஹீம்... பத்தாவது படிக்கிற பிள்ளை... இப்ப உங்க கவலை என்ன..? அக்கா.. பத்திரமாய் ஸ்கூலுக்கு போயிட்டு வரனும்.. அவ்வளவுதானே.. நானும் டவுனுக்குத்தானே படிக்கப் போறேன்..? அக்காவை அதோட ஸ்கூலில் விட்டுட்டு.. நான் என் ஸ்கூலுக்குப் போறேன்.. திரும்பி வரும்போது கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்...”

Optimized by www.ImageOptimizer.net

அவர்கள் வீட்டில் கார் இருந்தது... 'கூட்டு வண்டி' என்று சொல்லப்படும் 'வில் வண்டி..' ஒன்று அலங்காரமாக இருந்தது... மாணிக்கவாசகம் உயிரோடு இருந்தவரை அவர்கள் காரிலும்.. அந்த வில் வண்டியிலுமாகத்தான் பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.. கணவனின் மறைவுக்குப் பின்னால் மேகலா.. அவற்றில் மகள் பள்ளிக்குப் போய் வருவதை ஆட்சேபித்தாள்...

"முரளி.. காலம் கெட்டுகிடக்கு.. உனக்கு கார் ஓட்டற வயசில்லை.. மாட்டு வண்டியை நீ ஓட்டிக்கிட்டு பள்ளிக்கூடம் போய் வர முடியுமா..?"

"புரியலைம்மா..."

"டிரைவரையும்.. வண்டி ஓட்டுகிறவனையும் நம்பி.. என் பொண்ணை நான் வெளியே அனுப்ப மாட்டேன்..."

"என்னை நம்பி அனுப்புவீங்கல்ல..."

பாலமுரளி மோட்டார் சைக்கிளை வெளியில் எடுத்தான்... அதுநாள் வரை உள்ளூரில் சுற்ற மட்டும் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளில்.. பாலசரஸ்வதியை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு பள்ளிக்கு போய்வர ஆரம்பித்தான்...

பாலசரஸ்வதி வெற்றிகரமாக பள்ளியிறுதி வகுப்பை முடித்தாள்... பாலமுரளி ப்ளஸ் ஒன்னில் காலடி வைத்தான்.. பாலசரஸ்வதி கல்லூரியில் சேர்வதற்கு மீண்டும் மேகலா எதிர்ப்பைக் கிளப்ப... அதையும்



முறியடித்து.. பாலசரஸ்வதியை பெண்கள் கல்லூரியில் சேர்த்து விட்டு... பட்டப்படிப்பை படிக்கவைத்தான்..

பாலசரஸ்வதி பட்டம் வாங்கிய போது.. பாலமுரளி.. பட்டப் படிப்பின் முதலாண்டை முடித்திருந்தான்.. இப்போது.. அவனால் காரை ஓட்ட முடிந்திருந்தது.. அதனால்... தாயையும்.. தமக்கையையும் காரில் அழைத்துப் போய் வர ஆரம்பித்திருந்தான்.. அவன் தனியாகப் போகும் போது மட்டும் டிவிஎஸ் அப்பாச்சியில் பறப்பான்.. குடும்பத்துடன் போகும் போது.. புதுக்காரில் போய் வருவான்...

பழைய காரும்.. பழைய மோட்டார் சைக்கிளும் போய்.. புதிதாக டிவிஎஸ் அப்பாச்சியும்.. புதுக்காரும் வீட்டில் குடிபுகுந்தன... இதற்கிடையில் மேகலாவின் தம்பியாகப்பட்ட.. அவளுடைய சித்தப்பாவின் மகனான சிவநேசனின் திருமணமும் நடந்து முடிந்திருந்தது...

"இதுக்குத்தான் படிச்சுப் படிச்சுச் சொன்னேன்..." மேகலா ஆதங்கப்பட்டாள்...

"படிச்சுப் படிச்சு..? நீங்க சொன்னீங்க...? ம்ஹீம்.. எதை யார் சொல்றதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு..." பாலமுரளி தோளைக் குலுக்கினான்..

"உனக்கு என் கவலை புரியதா..?"

"என்னம்மா உங்க கவலை..?"

"உங்க அக்காவை படிக்க வைக்க வேணாம்ன்னு தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. நீதான் கேட்கலை..

Optimized by www.ImageOptimizer.net

இப்ப பாரு.. படிச்சபொண்ணு வேணாம்ன்னு என்தம்பி சொல்லிட்டான்..."

"சொல்லாம எப்படி இருப்பாரு... அவரு ஐந்தாவதைத் தாண்டலை.. ஆனாவுக்கு அடுத்த எழுத்து மட்டும்தான் அவருக்குத் தெரியும்... அவருக்கு போயி அக்காவைக் கொடுக்கணுமுன்னு சொன்னா.. மனுசன் பயந்தடிச்சு ஓடிற மாட்டாரா...?"

"அதான் நீ ஓட்டிட்டயே.." மேகலா மனத்தாங்கலுடன் சொல்ல..

"கண்டுபிடிச்சிட்டாங்க..." என்று தமக்கையின் காதோரமாக ஓதினான் பாலமுரளி...

"ஹ்ஹூம்.. தகப்பனில்லாத பொண்ணு.. அந்நியத்திலே கொடுக்காம சொந்தத்திலே கொடுத்தா அவளுக்கும் ஆதாவிருக்கும்ன்னு நினைச்சேன்..."

மேகலா முணுமுணுத்த போது பாலமுரளிக்கு கோபம் வந்துவிட்டது..

"அதென்ன எடுத்ததுக்கெல்லாம் இதையே சொல்கிறீங்க.. அக்கா தகப்பனில்லாத பெண்தான்.. ஆனால் தம்பியில்லாத பெண்ணில்லை... அதுக்கு தகப்பனுக்கு தகப்பனா நானிருக்கேன்.. அப்பா இருந்திருந்தால் அக்காவுக்கு என்னவெல்லாம் செய்திருப்பாரோ.. அதைவிட பத்துமடங்கு அதிகமா நான் அதுக்குச் செய்வேன்..."



சொன்னதைப் போலவே செய்து காட்டினான் பாலமுரளி...

திருநெல்வேலியிலேயே பெரிய பணக்காரரான கனகராஜின் மகனுக்கு பாலசரஸ்வதியை பேசி முடித்தான்...

"மாப்பிள்ளை பெயர் ராஜ ராஜன்.. இன்ஜினியரிங் படிச்சிருக்கார்.. சொந்தமா அவங்களுக்கு பேக்டரி இருக்கு... அதுக்கு மாப்பிள்ளைதான் எம்டி.."

"ஏண்டா தம்பி.. அந்த கனகராஜ் குடும்பம் பெரிய இடம்ன்னு எல்லாரும் சொல்றாங்களேடா..."

"நாமளும் பெரிய இடம்தான்ம்மா..."

"அவங்களுக்கு இணையா.. நிறக்க சீர் செஞ்சு அனுப்ப நம்மால முடியுமாடா முரளி..."

"முடியும்..."

அவனால் முடிந்தது.. அவனின் சக்தியை அன்றுதான் மேகலா உணர்ந்தாள்.. மாணிக்கவாசகம் இருந்திருந்தால் கூட மகளுக்கு அவ்வளவு சீர் செய்திருக்க மாட்டார்.. அதைவிட பலமடங்கு அதிகமாக சீர்செய்தான் பாலமுரளி...

Optimized by www.ImageOptimizer.net

# 8

பூ வாசம் மனம் மயக்கும்..
உன் நினைவை அது இழுக்கும்..

பரம்பரையாய் இருந்த தோப்பு துரவையும் தாண்டி வியாபாரத்தில் அவன் கால் பதித்தபோது மேகலா பயந்தாள்...

"வேண்டாம்டா மகனே... தராசுத்தட்டுக்கும் நமக்கும் ரொம்ப தூரம்..."

தொட வேண்டும் என்று நினைப்பவன் தொடுவானைக் கூட தொட்டு வருவான்... அஷ்டலட்சுமிகளில் தைரிய லட்சுமி எந்த இடத்தில் இருக்கிறாளோ.. அதே இடத்தில்தான் மற்ற லட்சுமிகளும் வாசம் செய்வார்களாம்...

பாலமுரளி தைரியத்தை தன்வசம் வைத்திருந்தான்.. அவன் தொட்டதெல்லாம் துலங்கியது.. அவன் நினைத்ததை நடத்தியே முடித்தான்...

பட்டப்படிப்பை முடித்ததும்.. முதலில் செங்கல் சூளையில் கால் பதித்தான்.. அதற்கடுத்து டவுனில் ஜவுளிக்கடையை ஆரம்பித்தான்...



'என்னடா இது.. பெரிய வீட்டுப் புள்ள எதையெதையோ செய்ய ஆரம்பிக்குதே...' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போது... அனைவரும் மூக்கின்மீது விரலை வைக்கும் வண்ணம் கரும்புமில்லை ஆரம்பித்து விட்டான்...

மகனின் வெற்றிகளில் மேகலாவுக்கு சந்தோசம் தான்....

ஆனால் உயரே.. உயரே பறக்கும் வேகத்தில் அவன் திருமணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருப்பதைக் கண்டுதான் அவளுக்கு மனம் கொள்ளாத வருத்தமாக இருந்தது...

"ஏண்டா முரளி... ஊருல.. உலகத்திலே.. உன் வயசிலே இருக்கிறவனுக எல்லாம் பெண்டாட்டியைக் கட்டிட்டு.. பிள்ளைகுட்டியை பெத்துக்கிட்டு இருக்கிறப்போ... நீ மட்டும் ஏண்டா இப்படி இருக்கே.."

"அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்லைம்மா..."

இப்படிச் சொல்கிற ஆண்மகனை இப்போதுதான் பார்க்கிறாள் மேகலா... அவளறிந்த ஆண்பிள்ளைகள் எல்லாம்... திருமணவயது வந்தஉடனேயே.. தாயிடம்..

'ஏம்மா.. வீட்டுக்கு விளக்கேற்ற உனக்கு ஒரு மருமக வேண்டாமா..?' என்றுதான் கேட்டு வைப்பார்கள்...

வருகிற மகராசி விளக்கேற்றி வைக்காமல்.. வீட்டிலிருக்கும் மாமியாருடன் சரிமல்லுக்கு நிற்பாள்.. அதெல்லாம் வேறுகதை...

Optimized by www.ImageOptimizer.net

இப்படிப்பட்ட ஜீவன்கள் இருக்கும் உலகில்.. ஒரு பெண்ணுக்கு தாலிகட்டி குடும்பம் நடத்த நேரமில்லை என்று சொல்லும் மகனை.. ஏதோ ஒரு விசித்திரப் பிறவியைப் பார்ப்பதைப் போல வினோதமாக பார்த்து வைத்தாள் அவள்..

"உன் தம்பியை நீதான் என்னு கேட்க மாட்டியா சரசு.."

மகளிடம் அவள் முறையிட்டபோதுதான் அவள் தனது சின்ன மாமியாரின் மகளை... தம்பிக்கு மணம் முடித்து வைக்க நினைத்த தன் அபிலாஷையை வெளிப்படுத்தினாள்...

"அம்மா.. நானோ அந்நியத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கேன்..."

"அதைச்சொல்லு.. உன் மாமன்தான் உன்னைக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டானே..."

வழக்கமான தனது பிலாக்கணத்தை விசாலாட்சி வெளிப்படுத்த.. பால சரஸ்வதி பல்லைக் கடித்தாள்...

'இந்தம்மாவோட ஐந்தாவது படிச்ச தம்பி என்னைக் கை விட்டுட்டான்னு பெயர் கட்டிக்கிட்டே இருக்கிறாங்களே.. இந்தப் பேச்சை இவங்க விடவே மாட்டாங்களா..?'

"அதை விடுங்கம்மா... என் மாமியாரோட தங்கை பொண்ணை நீங்க பார்த்திருக்கீங்களா..?"



"உன் மகனுக்கு காது குத்தறப்போ பாத்திருக்கேன்.. முடியை வெட்டி விட்டுக்கிட்டு.. ஆம்பளையாட்டம்.. பேன்டு சட்டையிலே அலைஞ்சுச்சே.. அந்தப் பொண்ணுதானே..."

'இந்த ஷோபா.. காதுகுத்துக்கு வந்தப்ப ஜீன்ஸ் பேன்டையும்.. டிசர்ட்டையும் அவாய்டு பண்ணியிருக்கலாம்...'

"அது சென்னையில் பிறந்து வளர்ந்த பொண்ணும்மா... அப்படித்தான் இருக்கும்..."

"அப்படி.. இப்படி இருக்கிறதையெல்லாம் அந்தப் பொண்ணு மெட்ராஸோட விட்டுட்டு வரக்கூடாதோ..? திருநெல்வேலிச் சீமையிலேயும் அப்படி இருந்தா நாடு தாங்குமா சரசு...?"

இப்படிக் கேட்கிறவளிடம் அந்தப் பெண்ணை 'தம்பிக்கு கல்யாணம் பண்ணி வை' என்று சொன்னால்... 'தென்காசி பட்டினத்திலேயும் அப்படி இருந்தா வீடு தாங்குமா..?' என்ற கேள்வியை எழுப்புவாள் என்று தோன்ற பாலசரஸ்வதி பேச்சின் போக்கை மாற்றிவிட்டாள்...

சென்னையில் அவளுடைய சின்ன மாமியார் சீரும்.. சிறப்புமாக வாழ்கிறாள்.. அத்தனை சொத்துக்கும் அந்தப் பெண் ஷோபாதான் ஒரே வாரிசு.. அப்படி.. இப்படி இருந்தால்தான் என்ன.. கல்யாணம் பண்ணி மேகலாவின் மருமகளாக அவள் வந்து விட்டால்..

Optimized by www.ImageOptimizer.net

மேகலா அவனை தென்காசிப் பட்டினத்திற்கு ஏற்ற பெண்ணாக மாற்றிவிட மாட்டாளா என்ன..? பாலசரஸ்வதி பாவம்.. மேகலாவின் தம்பிக்கு வாழ்க்கைப்பட முடியாமல் அந்நியத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்.. அவளுடைய சின்ன மாமியாரின் பெண்ணை தம்பி திருமணம் செய்து கொண்டால் அவளுக்கும் புகுந்த வீட்டில் மரியாதையும் பிடிப்பும் அதிகமாக கிடைக்கும்.. பிறந்த வீட்டிலும் கடைசிவரை அவளுக்கு பிடிமானம் இருக்கும்...

மேகலா கரைந்து விட்டாள்.. அதன் விளைவாக.. அதுவரை ஏதாவது ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளச் சொல்லி மகனை வற்புறுத்தியவள்.. சென்னையில் வசிக்கும் ஷோபாவைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி மகனை வற்புறுத்த ஆரம்பித்தாள்...

பாலமுரளி முதலில் அதைக் கேட்டதும் அயர்ந்து விட்டான்... மேகலாவுக்கென்று சில கோட்பாடுகள் உண்டு... அவள் எப்படி ஷோபாவைப் போன்ற பெண்ணொருத்தியை தேர்வு செய்தாள் என்று ஆச்சரியப்பட்டுப் போனான்.. தொடர்ந்து பேசிய மேகலாவின் மனதில் மகளைப்பற்றிய கவலை மலையளவு மண்டியிருப்பதைப் புரிந்து கொண்டவனுக்கு தாய் மனம் புரிந்து விட்டது... வரப்போகும் மனைவியைப் பற்றி நினைக்க நேரமில்லாமல் அவன் அலைந்து கொண்டிருந்தாலும்.. அவனுக்கும் சில கனவுகளும்.. எதிர்பார்ப்புகளும் இருந்தன.. அவற்றில் ஒன்றில் கூட அந்த ஷோபா பொருந்தி வரவில்லை...



"இந்தப் பேச்சை விட்டு விடுங்கம்மா..."

அவன் தீர்மானமாக சொல்லி விட்டபோதும்.. மேகலா அந்தப் பேச்சை விடவில்லை.. சமயம் கிடைக்கும் போதெல்லாம் அதை வலியுறுத்தி மகனிடம் பேசிக் கொண்டுதான் இருந்தாள்...

மேகலா இந்த அளவுக்கு மகனுடன் போராடிக் கொண்டிருக்க.. சென்னையிலிருந்த சுசிலா.. ஆற்றில் ஒரு கால்.. சேற்றில் ஒரு கால் என்ற ரீதியில் மகளுக்கு நாலாபக்கமும் பணக்கார இடங்களில் மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தாள்...

அக்கா மகனுக்கு திருமணம் பேசிய போது பெண்ணின் ஊர் தென்காசியின் அருகிலிருக்கும் 'தேனூத்து' கிராமம் என்று கேள்விப்பட்டு..

"ஏன்க்கா நம்ம ராஜராஜனுக்கு பெண்ணே கிடைக்காதா..? இருந்திருந்து ஒரு பட்டிக்காட்டில போய் பெண்ணெடுக்கப் போகிற..?" என்று ஆதங்கப்பட்டாள்...

"பொண்ணோட குடும்பம் அந்த ஊருக்கே பெரிய குடும்பமாம் சுசி... உங்க மாமா சொன்னாரு..." அவளின் அக்கா அகிலா சொன்னாள்...

"அப்போ சுண்டும்.. நண்டும்மா வீடு பூரா கூட்டமிருக்குன்னு சொல்லு..."

"ஊஹீம்.. அக்கா.. தம்பின்னு இரண்டு பேர்தானாம்.. அப்பா இல்லையாம்.. அம்மா மட்டும்தானாம்..."

Optimized by www.ImageOptimizer.net

சுசிலா பிரயோகித்த முதல் அஸ்திரம் பயனற்றுப் போக.. அவள் அடுத்த அஸ்திரத்தை பிரயோகித்தாள்...

"தகப்பனில்லாத பெண்ணா..? உனக்கெதுக்கு இந்த கவலையிது..?"

"நம்பி இருக்காளில்லையா..?"

"அவன் என்னத்தை செய்து கிழித்து விடப் போகிறான்..? பரம்பரை நிலத்தை விற்று சீர் செய்யணுமிருக்கும்.. இப்படி ஒவ்வொரு செய்முறைக்கும் அவன் சொத்தை விற்றுச் செஞ்சா கடைசியில் என்ன மிச்சம் போகுது..? அவனுக்கு தகப்பனுக்கு தகப்பனா நம்ம ராஜாதான் நிற்க வேண்டிவரும்...."

"அப்படியில்லைன்னு உன் மாமா சொல்கிறாரு சுசீ... அவன் அவங்க அப்பாவை விட ஆயிரம் மடங்கு கெட்டிக்காரனாம்.. பத்தாவது படிக்கிற போதே குடும்ப பொறுப்பை கையில் எடுத்துட்டானாம்.. சொல்வாக்குக்கும்.. வசதிக்கும் ஒரு குறைச்சலு இல்லைன்னு உங்க மாமா சொல்கிறாரு..."

சுசிலாவிடம் இல்லாத ஒரு குணம்... அகிலாவிடம் உண்டு..

அது.. கணவன் சொன்னால் மிகச் சரியாக இருக்கும் என்ற நம்பும் அதீத நம்பிக்கை...

அந்த நம்பிக்கையை உடைத்து காட்ட வேண்டுமென்ற கனவு சுசிலாவுக்கு நிறைய உண்டு..



அதற்காகவே... அவள் ராஜராஜனுக்கு பெண் பார்க்கப் போனபோது.. வேலை மெனக்கெட்டு சென்னையிலிருந்து கிளம்பிவந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்...

"உனக்குத்தான் நம்ம ராஜா மேலே எவ்வளவு பாசம் சுசி..."

அவள் வந்திருக்கும் நோக்கம் புரியாமல் அகிலா மகிழ்ந்து போனாள்.. அவர்கள் பெண் பார்க்க கிளம்பினார்கள்...

தேனூத்து கிராமத்திற்குள் கார்கள் நுழைந்த போதே சுசிலா அசந்து விட்டாள்...

பட்டிக்காடுதானே.. என்ற நினைவோடு வந்த சுசிலாவின் கண்முன்னால்.. அழகான பெரிய வீடுகளோடு.. வரிசையாக இருந்த தெருக்களோடு.. வளமையாக.. நகர்புறத்தின் பணக்காரர்கள் வசிக்கும் பகுதியை நினைவுறுத்தும் விதத்தில் அமைந்திருந்தது அந்தக் கிராமம்...

"இவ்வளவு வசதியா இருக்கே..."

"ஊரைச் சுத்திப் பார்த்தியில்ல... பச்சைப் பசேல்ன்னு தோப்பும்.. வயலுமா இருக்கிற ஊர்.. மூணு போகம் நெல்லடிக்கிறாங்க.. வசதிக்கா குறைவிருக்கப் போகுது...?"

அவர்கள் கிளம்பி வந்த ஆறு கார்களும்.... பாலமுரளியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் கட்டப்

[illegible] நீண்ட அகன்ற... பெரிய வழுவழுப்பான தூண்களை உடைய போர்டிகோவில் வரிசையாக நின்ற பின்னும்.. நிறைய இடம் மீதமிருப்பதை உணர்ந்து கொண்ட சுசிலாவின் கண்களில் முதன்முதலாக [illegible] வந்தது..

அவள் அந்த வீட்டை பார்வையிட்டாள்.. அந்த ஊரில் பாதியாவ அந்த வீடே இருக்கும் என்று அவள் மனம் கணக்கிட்டது..

வாசலின் பிரதானக் கேட்டிலிருந்து.. வீடுவரை.. வழுவழு சிமெண்ட் பாதை போட்டிருந்தாலும்.. வீட்டின் முன்னும் அகன்று நீண்டு.. நாலுகால் மண்டபம் போல.. நான்கு அகன்ற பெரிய தூண்களுடன் தென்பட்ட போர்டிகோவை போன்ற இடம் பூராவும் பளிங்கினால் இழைத்திருந்தார்கள்...

நீண்ட சிமெண்ட் பாதையின் இருபுறமும் தோட்டம் இருந்தது.. அதன் ஓரமாக நீச்சல் குளம் அமைந்திருந்தது.. தோட்டத்தின் மையத்தில் செயற்கை நீரூற்று இருந்தது..

அவர்களின் சென்னை வீட்டை விட பதினைந்து மடங்கு அதிக விஸ்தீரணத்துடன் அமைந்திருந்த அந்த வீட்டின் அரண்மனை போன்ற அமைப்பில் பிரமித்து விட்டாள் சுசிலா..

பெண் பார்க்க முன்புறமிருந்த ஹாலில் அமர்ந்திருந்த போதே அந்த வீட்டின் செல்வச் செழிப்பை



கணக்கில் எடுத்து விட்டாள்.. திருமணம் முடிவாகி.. பாலசரஸ்வதிக்கு செய்யப்பட்ட சீர்வரிசைகளில் அவளது பிரமிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது...

அப்போது ஷோபாவிற்கு பதிமூன்று வயதுதான் இருக்கும்.. இருந்தும்.. இருபது வயதான பாலமுரளியின் மீது அவள் பார்வையை பதித்து வைத்துக் கொண்டாள்...

ஷோபா படிப்பில் கெட்டிக்காரியல்ல.. அதனால்.. படிப்பில் இரண்டு வருடம் இடறி விழுந்து ஒருவழியாக இன்ஜினியரிங் காலேஜில் அடியெடுத்து வைத்தாள்...

பரந்தாமன் வெற்றிகரமான தொழிலதிபராக இருந்தார்.. சென்னையில் அவர் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த போது.. கிராமத்தில் பாலமுரளி.. வெற்றிகரமான இளம் தொழிலதிபனாக மாறியிருந்தான்.. அவனது அடையாளம் வெகுவாக மாறி.. கரும்புமில்.. ஜவுளிக்கடை என்று அவன் வியாபாரத்தில் கால் பதித்தபோது... தன் மனக்கிடக்கையை அகிலாவின் காதில் போட்டு வைத்துவிட்டாள் சுசிலா...

இன்னொரு பக்கம் பரந்தாமனை தூண்டிவிட்டு அவருடைய நண்பரான ராமாமிர்தத்தின் மகன் சங்கருக்கு ஷோபாவை கொடுக்கும் எண்ணத்தை அவர் மனதில் விதைத்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

# 9

[illegible] வந்த கோபம்...
[illegible] மாறுவதென்ன..?

[illegible] சுசீலா...!

அவளது சொந்தக்கார வட்டாரத்தில் பாலமுரளி பெரிய ஆள்.. பரம்பரைப் பணக்காரன்.. தினமும் ஒரு தொழில் ஆரம்பித்து வெற்றிகரமாக அதை நடத்தும் வல்லமையுள்ளவன்.. அவன் ஷோபாவுக்கு கணவனாக வந்தாலும் அவளுக்கு சரிதான்...

அவளது கணவரின் தொழில் வட்டாரத்தில் சங்கர் பெரிய ஆள்.. வெளிநாட்டுக்கு போய் படித்து விட்டு வந்தவன்.. கூடுதலாக.. ஷோபாவுக்கு அவன்மேல் மயக்கம் இருந்தது.. அவன் ஷோபாவுக்கு கணவனாக அமைந்தாலும் நல்லதுதான்...

அவள் இரண்டு பக்கமும் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தாள்.. இரண்டில் எது அமைந்தாலும்... அவளுக்கு சம்மதம்தான்..

என்ன ஒன்று.. அவள் பலமாக முயற்சி செய்து கொண்டிருந்த இரண்டு மாப்பிள்ளைகளுக்குமே ஷோபாவைக் கண்டால் கட்டோடு பிடிக்காது...



அது ஏன் என்றுதான் பாவம் அவளுக்குப் புரியவில்லை...

ஷோபா அழகாக இருந்தாள்.. படிப்பில் மக்கென்றாலும் இன்ஜினியரிங் காலேஜில் கால் பதித்திருந்தாள்.. எல்லாவற்றையும் விட... பரந்தாமனின் சொத்துக்கு அவள் ஒருத்தி மட்டுமே வாரிசு... பணக்காரி..

இப்படிப்பட்ட பெண் தேடினாலும் கிடைக்காது என்பார்கள்.. சங்கருக்கும்.. பாலமுரளிக்கும் தேடாமலே அவள் கிடைத்தும் இருவருமே சொல்லி வைத்ததைப் போல அவளைத் திரும்பிக்கூடப் பார்க்க மறுத்தார்கள்..

இத்தனைக்கும்.. சங்கரும்.. பாலமுரளியும்.. ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் அல்ல...

பாலமுரளி சுசிலாவுக்கு சொந்தக்காரன்.. சங்கர் பரந்தாமனுக்கு நண்பரின் மகன்..

இவனைப் பற்றி அவனுக்கோ.. அவனைப் பற்றி இவனுக்கோ தெரியாதபோது.. எப்படி இரண்டுபேரும் ஒரு மனதாய் ஷோபாவை மறுக்கிறார்கள் என்று சுசிலா மனம் புகைந்தாலும்.. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத லேடி விக்ரமாதித்தனாக முயற்சிகளை தொடர்ந்து கொண்டேயிருந்தாள்...

சென்னையில் நடக்கும் விருந்துகளுக்கு சங்கரை அவள் அழைக்க வைத்து விடுவாள்..

அந்த போல திருநெல்வேலியில் நடக்கும் குடும்ப விழாக்களுக்கு மகனை இழுத்துக் கொண்டு போய்.. [illegible] கண்பார்வையில் படும்படி நிறுத்தி விடுவாள்..

அப்போதும் அப்படித்தான்.. ஷோபாவின் பிறந்தநாள் விருந்துக்கு சங்கரை அழைக்கப் போவதாக கணவர் சொன்னதும் அவள் மகிழ்ந்து போய் விட்டாள்..

"ஷோபா... உன் பர்த்டே டிரஸ்ஸை செலக்ட் பண்ணிட்டியா..?"

"யெஸ் மாம்.."

"எப்பவும் விட இந்த வருச டிரஸ் அழகாய் இருக்கணும் ஷோபா.."

"உனக்குத் தெரியாதா மம்மி.. இந்த வருச பர்த்டே பார்ட்டி சம்திங் ஸ்பெசல் டு மி... ஸோ.. எல்லாத்தையும் பார்த்தும் பார்த்துத்தான் வாங்குவேன்..."

ஷோபா சங்கரின் நினைவில் சொல்லுகிறாள் என்று சசி நினைத்துக் கொண்டாள்...

ஷோபாவோ.. ராதிகாவையும் சேர்த்து மனதில் நினைத்துக் கொண்டுதான் அந்த வார்த்தைகளைக் கூறினாள்..

"லாக்கர்ல இருந்து அந்த புது வைர செட்டை கொண்டு வந்திருங்க.. ஷோபா அதை போட்டுக்கட்டும்..."

"ஆகட்டும் சசி.."



வீடு அந்த விருந்திற்காக தயாரானது.. ஷோபா.. அந்த விருந்தில் ராதிகாவின் பொறாமையைத் தூண்டி விடவேண்டும் என்று தயாரானாள்...

விருந்திற்கு முன் நாளிலும் அவள் மறக்காமல் ராதிகாவுக்கு அந்த விருந்தைப் பற்றி நினைவுறுத்தினாள்..

"ராதிகா.. நாளைக்கு என் பார்த்டே பார்டியிருக்கு.."

"இதையே எத்தனை தரம்டி சொல்லுவ...?"

ராதிகா கேட்டவுன் சுற்றியிருந்தவர்கள் சிரித்துவிட.. ஷோபாவின் முகம் சுருங்கிப் போனது...

சிரித்தவர்கள் பெண்களாக மட்டு மிருந்தால்கூட அவள் அதை பொருட்படுத்தியிருக்க மாட்டாள்.. அவளது வகுப்புத் தோழன்களும் சிரித்து வைத்ததில் அவள் கடுப்பாகிப் போனாள்...

'நீ மறந்திடப் போறியோன்னு நினைச்சேன்...'

"இல்லையில்லை... நான் மறக்கலை... ஆக்சுவலாய் ஷோபா... இதுதான் நான் ஈவினிங் டைமில் கலந்துக்கற முதல் பங்சன்.. உனக்காக என் வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி பெர்மிசன் வாங்கியிருக்கேன்.. கட்டாயம் நான் வருவேன்.. போதுமா..?"

'என்னவோ இது பெரிய விஐபி யைப் போல அலட்டிக்கிறாளே.. இவளை என் வீட்டுக்கு இழுக்க.. நான் என்னவெல்லாம் கேட்க வேண்டியிருக்கு...'

Optimized by www.ImageOptimizer.net

ஹேமா போய் விட்டாள்.. ராதிகா.. மறுநாள் மாலையில் ஹேமாவும் அவளுடன் வருவாளா என்பதை உறுதிசெய்து கொண்டாள்...

"நீயே போகும் போது.. நான் வராம இருப்பேனாடி.."

"எப்படிப் போகலாம்..?"

"ஏன்..? உன் ஸ்கூட்டி இருக்கே... அதிலேயே போகலாமே.."

"அதுவே ஓட்டை ஸ்கூட்டி... வழியிலே அது மக்கர் பண்ணி நின்றுடா என்னடி செய்கிறது..? இவ வேற இருட்டின பின்னாடி பங்சனை வைச்சிருக்கா..."

"என்ன செய்யலாம்..?"

"பேசாம ஆட்டோவில் போயிடலாம்.. அதுதான் பெஸ்ட்.."

"ஓகே.. நான் பஸ் ஸ்டாப்பில் வெயிட் பண்றேன்.. ஆத்திலேயில் என்னை நீ பிக்அப் பண்ணிக்க..."

"அந்தக் கதையே வேணாம்.. நீ வீட்டுக்கு வந்தாத்தான் என் வீட்டிலே என்னை அனுப்பிவைப்பாங்க.."

"இது வேற இருக்கா..?"

"ஆமாம்.. அதனால நேரத்தோட நீ வீட்டுக்கு வந்துசேரு.. இல்லேன்னா.. லேடி ஹிட்லர் என்னை வீட்டுக்கு வெளியிலே காலை வைக்க விட மாட்டாங்க..."

"லேடி ஹிட்லரா..? யாருடி அது..?"



"வேற யாரு..? எல்லாம் என் அருமை அம்மாதான்.."

"அடிப்பாவி.. நீ அம்மாவையும் விட்டு வைக்கலியா..?"

வாய்பொத்தி சிரித்த ஹேமா மறக்காமல் மறுநாள் மாலையில் ராதிகாவை அழைத்துக் கொண்டு போக வந்துவிட்டாள்..

இளம்சிகப்பு வண்ணத்தில் சுடிதார் அணிந்து நின்ற ராதிகாவைப் பார்த்து...

"அசத்தறேடி..." என்றாள்...

"காலாகாலத்தில் வீட்டுக்கு வந்து சேருகிற வழியைப் பாருங்க..." என்று கவலையுடன் சொன்ன ராஜேஸ்வரியிடம்...

"கவலையே படாதீங்கம்மா.. போய் தலையைக் காண்பித்ததும் கிளம்பி வந்து விடுவோம்.." என்று உத்தரவாதம் அளித்துவிட்டு கிளம்பினாள் ராதிகா...

"அதுக்கு ஏண்டி அவ்வளவு தூரம் போகனும்..?" என்றாள் கீதா...

"என்னவோ.. என்னைக்கும் இல்லாம இந்த வருசம் மட்டும் அவ விழுந்து விழுந்து இன்வைட் பண்ணுகிறா.. மறுக்க முடியலைடி..." ராதிகா சொன்னாள்..

"அவளுக்கும் உனக்குமே ஏழாம் பொருத்தம்.. அவ இன்வைட் பண்ணினா நீ ஏண்டி அதுக்கு இம்பார்ட்ன்ட் கொடுக்கிற..." கீதாவுக்கு புரியவில்லை...

Optimized by www.ImageOptimizer.net

"ஏய்.. அவ எனக்கு பிடிக்காதவளாகவே இருந்துட்டுப் போகட்டும்.. அதைப்பத்தி பிரச்னையே இல்லை.. அவ வேண்டாதவளா இருந்தாலும்.. அவளோட [illegible] மேலே மறுக்கக்கூடாது கீதா.. அது [illegible] இல்லை.. கூப்பிட்டா.. எனக்கு போக விருப்பமில்லைன்னாலும்.. அவ கூப்பிட்டதுக்கு மரியாதை கொடுக்கிறதுக்காக ஒரு எட்டு போய்விட்டு வந்துடனும்.. அதுதான் முறை..." நீளமாக விளக்கம் சொன்னாள் ராதிகா...

"அட.. அட.. அடா.. புல்லரிக்குது போ.. எப்படி ராது நீ இப்படியெல்லாம் பேசக் கத்துக்கிட்ட.. இந்தா ஸ்வீட் எடுத்துக்க..."

கீதா ஸ்வீட்டை நீட்ட.. ராதிகாவும்.. ஹேமாவும் புரியாத பார்த்தபடி ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்கள்.

"எதுக்குடி ஸ்வீட்டைக் கொடுக்கிற..?"

"நீயெல்லாம் எதிரிபக்கம் நின்று பேச ஆரம்பிச்சுட்டியே.. இந்த நல்லதோர் ஆரம்பத்தை ஸ்வீட் எடு. கொண்டாடுன்னு கொண்டாட வேணாமா..?"

"போடி [illegible]..." ராதிகா சிரிக்க..

"இவகூடச் சேர்ந்து உனக்கும் வால் வளர்ந்திருச்சுடி..?" என்று சான்றிதழ் வழங்கினாள் ராஜேஸ்வரி..



"பத்திரமா போய்ட்டு வாங்கடி..."

"ஏம்மா.. அவ என்ன லண்டனுக்கா போகிறா..? இந்தா இருக்கிற சைதாப் பேட்டை வரைக்கும் போயிட்டு வரப் போறா.. அதுக்கா இத்தனை தூரத்துக்கு டாட்டா சொல்லீங்க..."

ராஜேஸ்வரியும் கீதாவும் வாதாடிக் கொண்டிருக்க.. ராதிகாவும் ஹேமாவும் கிளம்பி வாசலுக்கு வந்து நின்றார்கள்...

"ஆட்டோ..."

கடந்து போன ஆட்டோ.. அவர்களது கைதட்டலில் நிற்கவும்... வீட்டு வாசலிலேயே ஆட்டோவில் ஏறிக் கொண்டார்கள்...

"வழியில் ஏதாவது கிப்ட் ஷாப் இருந்தால் ஒரு செகண்ட் ஆட்டோவை நிறுத்துங்க சார்..." என்றாள் ராதிகா...

"ஏம்மா.. ஒரு செகண்டில நீங்க வாங்க வேண்டியதை வாங்கிட்டு வந்து விடுவீங்களா.." என்று பதிலுக்கு கேட்டான் ஆட்டோக்காரன்...

"ஏதோ பேச்சுவாக்கில் சொல்கிறதுதான்..." ராதிகா மழுப்பினாள்...

"பொம்பளைக சாமான் வாங்கப் போனா எவ்வளவு நேரமாகும்ன்னு எனக்கும் தெரியும்... அதனால நேரத்தை கடத்தாம சட்டுபுட்டுன்னு வர்றதா இருந்தா நான்

Optimized by www.ImageOptimizer.net

[illegible] இல்லைன்னா ஆட்டோவை கட்பண்ணி [illegible] நான் வேற சவாரியைப் பார்த்துக்கறேன்.. நீங்களும் வேற ஆட்டோவை பிடிச்சுக்கிட்டு போகப் பாருங்க..” ஆட்டோக்காரன் கறாராக பேசினான்...

“ஒரு நிமிஷம் கூட ஆகாது..” உத்திரவாதம் அளித்த ராதிகா.. சொன்னதைப் போலவே ஒரே நிமிடத்தில் திரும்பினாள்...

“எல்லா... வேண்டாதவங்களுக்கு பரிசு வாங்கப் போனீங்களா...” என்று கேட்டு வைத்தான் ஆட்டோக்காரன்..

“சரியாக் கண்டுபிடிச்சுட்டாருடி...” ராதிகாவின் காதைக் கடித்தாள் ஹேமா...

ஷோபாவின் வீட்டிற்கு முன்னால் வெளி நாட்டுக் கார்கள் அணிவகுத்து நிற்க.. அதற்கு மத்தியில் திருஷ்டிப் பொட்டு வைத்ததைப் போல ராதிகா போன ஆட்டோ சென்று நின்றது..

இறங்கி ஆட்டோவுக்கான பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்குள் நுழைய முயன்றபோது... வாசல் கேட்டிலிருந்த செக்யூரிட்டி அவர்களை தடுத்து நிறுத்தினான்..

“நாங்க ஷோபாவோட கிளாஸ்மேட்ஸ்.. அவளோட பர்த்டே பங்சனுக்காக வந்திருக்கோம்...”



ராதிகா விளக்கம் கொடுத்தபோது.. அவர்களை இறக்கி விட்டுப் போன ஆட்டோவை முகச்சுளிப்புடன் பார்த்தான் செக்யூரிட்டி...

“நீங்க இரண்டு பேரும் சின்னம்மாவுக்கு பிரண்ட்ஸா..? நம்பவே முடியலையே...”

அவன் சந்தேகமாக வினவியபோது.. இதற்காகத்தான் ஷோபா அவ்வளவு வற்புறுத்தி ராதிகாவை வீட்டுக்கு அழைத்தாளோ என்று முதன் முதலாக ராதிகாவின் மனதில் தோன்றியது...






மாலையிலே உன் பார்வை
மனதை மயக்கும் காரணமென்ன..?

ஹேமாவுக்கு என்னவோ போல ஆகிவிட்டது...

“இதுக்குத்தாண்டி நான் இவ வீட்டு பங்சனுக்கு வரமாட்டேன்னு சொன்னேன்.. நீ கேட்கலை...”

செக்யூரிட்டிக்கு கேட்டுவிடாமல் மெல்லிய குரலில் சொன்னாள் ஹேமா... ராதிகாவிற்கும் அதே எண்ணம்தான் என்றாலும்.. அவ்வளவு தூரம் வந்துவிட்டு.. வாசலோடு திரும்பிப் போனால் அது ராதிகாவின் இயல்புக்கு அழகில்லையே...

Optimized by www.ImageOptimizer.net

"வேலை செய்கிறவங்களுக்கு என்னடி தெரியும்..? நாமதான் விளக்கமா எடுத்துச் சொல்லணும்..."

பொறுமையாக தோழியை சமாதானப் படுத்திய ராதிகா செக்யூரிட்டியின் முகம் பார்த்தாள்...

"தம்பீ.. நாங்க ஹேமாவோட படிக்கிறவங்க.. அவளோட பர்த்டே பங்சனுக்கு வந்திருக்கோம்.. நீங்க வேணும்னா அவகிட்ட கேட்டுக்கிட்டு வந்து எங்களை அலோவ் பண்ணுங்க.. என்னா.. தெரியாதவங்களை நீங்க உள்ளே விடக்கூடாதில்லையா..? அதுதானே உங்க ட்யூட்டி.. இல்லைன்னா பாவம்.. உங்களுக்கும் வேலை போயிடுமில்ல..."

செக்யூரிட்டியின் அலட்சியத்தையும்.. சந்தேகத்தையும் பொருட்படுத்தாமல் ஒரு வினாடியில் அவனுடைய நிலையை அவனுக்கு உணர்த்தி விட்டாள் ராதிகா..

ஆட்டோவில் வந்ததால் இளப்பமாக நினைத்த செக்யூரிட்டியின் முகம் இருண்டு விட்டது...

'வெல்டன் ராதிகா...' ஹேமா மனதிற்குள் பாராட்டிக் கொண்டாள்...

"சாரிம்மா..." செக்யூரிட்டி கேட்டைத் திறந்துவிட்டான்...

கண்முன்னால் தெரிந்த பங்களாவின் வெளிப்புறத் தோற்றம் பிரம்மாண்டமாகத் தெரிய...

"வாவ்.." என்றாள் ஹேமா...



"இதனால்தான் அவ இத்தனை அலட்டல் அலட்டிக்கிறா போல ஹேமா..."

"ஷ்யூர்.. அதிகபணம்.. அதனால இயல்பாவே அவளுக்கு அந்தக் குணம் வந்திருக்கு.."

"அது நேச்சர்தான்..."

அவர்கள் பேசிக்கொண்டே.. தோட்டத்து புல்வெளியில் கால்வைத்தார்கள்...

செடிகள் தோறும் சீரியல் விளக்குகள் கண் சிமிட்ட.. அந்த செடிகளின் மேலே நீருற்று வழிந்து கொண்டிருக்க.. இங்கும் அங்கும் முயல்கள் ஓடிக் கொண்டிருக்க.. என்று அந்தச் சூழலே வெகு ரம்யமாக இருந்தது...

"பெண்டாஸ்டிக் ஹேமா.. இவளோட குணத்துக்கு இவ கார்டனில் வைத்து ட்ரீட் கொடுப்பான்னு நான் நினைச்சுப் பார்க்கவே இல்லை.."

அந்தச் சூழலை ரசித்தபடி ராதிகா சொன்னதற்கு...

"நானும் நினைத்துப் பார்க்கலை..." என்று உடனடியாக பதில் வந்தது...

ஹேமாவிடம் பேசிக் கொண்டிருந்த ராதிகா... ஆண்குரலில் வந்த பதிலைக் கேட்டு.. புருவம் உயர்த்தினாள்...

'யாராக இருக்கும்..?'

Optimized by www.ImageOptimizer.net

அவர்கள் சற்று முன்பும் பார்த்தார்கள்.. செடிக்கு அந்தப் பக்கமிருந்து குரல் ஒலித்ததால் ராதிகா லேசாக எட்டிப் பார்க்க.. புன்னகையுடன் ஒருவன் வெளிப்பட்டான்..

"வாவ்.. பக்கா ஹேன்ட்சம் மேன்டி..." ஹேமா ராதிகாவின் காதோரம் கிசுகிசுத்தாள்...

'இவ நிஜமாகவும் 'வாவ்' சொல்லி வைக்கிறாளே..'

ராதிகா எதிரே நிற்பவனின் கவர்ச்சிகரமான அழகை நோட்டம் விட்டபடி அவனுக்கு 'ஹாய்' சொல்லலாமா... வேண்டாமா.. என்று யோசித்தாள்...

"ஹாய்.. ஐ ஆம் சங்கர்..."

அவளை முந்திக்கொண்டு அவன் 'ஹாய்' சொல்லியபடி அவளுக்கு கை நீட்டினான்...

'எதுக்கு கையை நீட்டறான்..? இவன் கையை நான் பிடிச்சு குலுக்கணுமா..? அது என்ன தேவைக்காம்...'

ராதிகா நினைத்துக் கொண்டிருந்த போதே...

"ஹாய்.. ஐ ஆம் ஹேமா..." என்றபடி... ராதிகாவிடம் நீட்டிக் கொண்டிருந்த அவனின் கையைப் பிடித்து குலுக்கினாள் ஹேமா...

"ஏன்டி அலையறே..? அவன் உன்னைப்பத்தி என்ன நினைச்சுக்குவான்..?" ராதிகா சத்தமில்லாமல் தோழியை கடிந்து கொண்டாள்...

"என்னடி இது வம்பாப் போச்சு..? அவன்தானே கையை நீட்டினான்..? நீட்டின கையைப் பிடித்து



குலுக்கலைன்னா மனசு வலிக்காதா..?" கிசுகிசுப்பாய் நியாயம் கேட்டாள் ஹேமா..

"யார் மனசு வலிக்கும்..?" அதே குரலில் ராதிகா கேட்க...

"அவன் மனசுக்குத்தான்..." என்றாள் ஹேமா...

"உன் மனசு வலிக்கும்ன்னு சொல்லு..." ராதிகா முறைத்தாள்...

தோழிகளின் பேச்சு வார்த்தையை கையை முன்னால் மடித்துக் கட்டியவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் தென்பட்ட சுவராஸ்யத்தைக் கவனித்ததும்.. பேச்சை நிறுத்தி விட்டாள் ராதிகா...

"ஏன் பேச்சை நிறுத்திட்டிங்க..?" அவன் கரிசனமாக விசாரித்தான்...

ஹேமா எதையோ சொல்ல வாய்திறந்து... ராதிகாவின் கையால் ரகசியக் 'கிள்'ளை வாங்கினாள்...

'ஸ்ஆ... ஒருகிலோ கறியை நகத்தில் எடுத்திருப்பா போல.. இந்தக் கிள்ளு கிள்ளறாளே...'

வலித்த கையை தடவியவாறு ஹேமா வாய் மூடிக்கொள்ள ராதிகா அவனை ஏற இறங்கப் பார்த்தாள்...

அவளது பார்வையைக் கண்டவனின் கண்களில் சுவராஸ்யம் கூடியது.. அவளது செய்கையை அவன் ரசித்தான்...

Optimized by www.ImageOptimizer.net

"பார்லையிட்டு முடிச்சாச்சா..?"

அவன் சிரிப்பாக வினவிய விதத்தில் அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது..

"யார் சார் நீங்க..?" என்று சண்டைக்கு கிளம்பி விட்டாள்..

"சொன்னேனே.. ஐ ஆம் சங்கர்... நீங்கதான்... இன்னும் உங்க பெயரைச் சொல்லலை..."

"உங்ககிட்ட எதுக்காக நான் என் பெயரைச் சொல்லனும்..?"

ராதிகா மூக்கை விடைத்தாள்.. அவனுக்கு அவளின் அந்தக் கோபத்தைக் கண்டு வேடிக்கையாக இருந்தது...

"நான் என் பெயரைச் சொன்னேனே.."

"நான் கேட்டேனா..?"

"இப்போக் கேட்டிங்களே..."

"என்ன கேட்டேன்..."

"யார் சார்.. நீங்கன்னு கேட்கலையா..?"

அவள் எதற்காக அதைக் கேட்டாள்..? அவன் எதற்கும் எதற்கும் இணை கூட்டுகிறான்..? அவளுக்குள் கோபம் கிளர்ந்தது..

"என் சார்.. இது எங்க கிளாஸ் மேட்டோட பர்த்டே பங்சன்.. அதில் கலந்துக்க நாங்க வந்திருக்கிறோம்..



எங்களுக்குள்ள நாங்க ஆயிரம் பேசிக்குவோம்.. நீங்க தேவையில்லாம மூக்கை நுழைச்சா யார் நீங்கன்னு கேட்க மாட்டோமா..?"

"ஓ.. நீங்க கேட்ட யார்... இந்த யாரா..?"

"ஆமாம்.. ஆமாம்.. மத்தபடி.. நீங்க யார்... எவர்ன்னு நாங்க தெரிஞ்சுக்கனும்கிற ஆர்வத்தில அதைக் கேட்கலை..."

"நாங்கன்னு உங்க பிரண்டையும் கூட்டுச் சேர்த்துக்கிட்டா எப்படி..?"

"ஹலோ.. இவ என்னோட பிரண்ட்..."

"யார் இல்லைன்னு சொன்னது..? பட்... ஐ ஆம் ஹேமான்னு எனக்கு இவங்க ஷேக் ஹாண்ட் கொடுத்தாங்களே.. மறந்து போச்சா..?"

அவன் கேலியாக வினவ... இவளை என்ன செய்தால் தேவலாம் என்ற கோபத்தோடு ஹேமாவை முறைத்தாள் ராதிகா...

"அவங்களை ஏங்க முறைக்கறிங்க..?"

அதற்கும் சங்கர் பரிந்து கொண்டு வர.. அவளின் கோபம் அதிகரித்தது...

"இப்ப உங்களுக்கு என்னதான் வேணும்..?"

"உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கனும்.."

"அதை நீங்க தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறிங்க..?"

Optimized by www.ImageOptimizer.net

"தெரியுமில்ல.. அதைத் தெரிஞ்சுக்கிட்டு நான் ஒன்றும் செய்ய முடியாதுன்னு தெரியுதில்ல.. அப்புறம் எதுக்காக இந்தக் கேள்வி..? உங்க பெயரைக் கேட்டா சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே.."

"அதெல்லாம் சொல்ல முடியாது..."

"ஏன் சொல்ல முடியாது.."

"எனக்குப் பிரியமில்லை..."

"ஆனா எனக்குப் பிரியமாச்சே..."

"என்னது.."

அவள் அவனை நேருக்குநேர் பார்த்து முறைத்தாள்.. அவன் சிரித்தபடி கைகளை உயர்த்தினான்...

"பஸ்.. பஸ்.. எதுக்கு இந்த கோபம்..? நீங்க ஷோபாவோட கிளாஸ் மேட்ஸ்தான்.. பிரண்ட்ஸ் இல்லைன்னு எனக்கு நல்லாவே தெரியுது..."

"வாட்..?"

எப்படி அவன் இதைக் கண்டுபிடித்தான் என்ற நினைவில் ராதிகாவின் விழிகள் ஆச்சரியத்தில் மிதந்தன..

"எதுக்கு இத்தனை ஆச்சரியம்..? நீங்க அவளோட கிளாஸ்மேட்ஸ்ன்னுதான் சொன்னிங்க... மறந்தும் அவளோட பிரண்ட்ஸ்ன்னு சொல்லலையே.. அதை வைத்துத்தான் சொன்னேன்... அதோடு..."



அவன் முடிக்காமல் நிறுத்த.. அவனின் புத்திசாலித்தனமான யூகத்தில் வியந்து போயிருந்த ராதிகாவிற்கு அதற்கு மேலும் அவன் என்ன நினைத்தான் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் துளிர்த்தது...

"அதோடு.. அவளுடைய குணத்துக்கு கார்டனில் வைத்து ட்ரீட் கொடுப்பான்னு நினைத்தும் பார்க்கலைன்னு சொன்னீங்களே... அந்த இடத்தில்தான் நீங்களும்.. நானும் ஒரு மனதாகிறோம்.."

'என்னடா இது.. இப்பவும் இவன் எதற்கோ.. எதையோ இணை கூட்டிச் சொல்லி வைக்கிறான்...' ராதிகா முகம் சிவந்தாள்...

அவளது முகச் சிகப்பை ரசித்தபடி அவன் பேச்சைத் தொடர்ந்தான்...

"உங்களுக்கு தோட்டமும்... இந்தச் சூழ்நிலையும் ரொம்பப் பிடிக்கும் போல இருக்கு.. பட்.. ஷோபாவுக்கு இதையெல்லாம் ரசிக்கத் தெரியாது..."

அது உண்மைதான் என்றாலும்.. அவனிடம் அதை ஒப்புக்கொள்ளும் மனமின்றி...

"அப்படியெல்லாம் இல்லையே..." என்று மறுத்தாள் ராதிகா...

"இப்பக்கூட கார்டனில்தானே பங்சனை அரேன்ஜ் பண்ணியிருக்கா..?" என்று கேட்கவும் செய்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

"...இதைச் சொல்கிறீங்களா... ஹா.. ஹா..." என்று சிரித்தான் [illegible]..

"எதுக்குச் சிரிக்கறீங்க..?" ராதிகாவுக்கு புரியவில்லை..

"இந்த ஜோவனை அவன் சொல்லியிருக்க மாட்டான்.. அவனோட பேரண்ட்ஸ் சொல்லியிருப்பாங்க.."

"அதை எப்படி நீங்க நிச்சயமாய் சொல்கிறிங்க..?"

அவன் மர்மப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தான்..

வாசல் பக்கம் அவன் வரவுக்காக காத்திருந்த பார்த்தாவும்.. சசிலாவும் அவன் அங்கே நிற்பதைக் கண்டதும் விரைந்தோடி வந்தார்கள்...

அவன் தனிமையில் நின்றிருந்தாலோ.. இல்லை.. வேற ஆணுடன் பேசிக் கொண்டிருந்தாலோ அவர்கள் அந்த அளவுக்கு கதி கலங்கிப் போயிருக்க மாட்டார்கள்..

ஒரு பெண்ணுடன் அவன் வெகு சகஜமாக பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு அவர்களின் அடிவயிறு கலங்கி விட்டது..

அதிலிருந்து அவனை தடுத்தாட் கொள்வதற்காக அவர்கள் விரைந்து ஓடிவந்தார்கள்...

"யாருடி அந்தப் பொண்ணு..."

"தெரியலையே.."

"இந்த ஷோபாக்கழுதை எங்கே போனா..."



அந்த ஷோபாக்கழுதை அப்போதுதான் தன் ஒப்பனைகளை முடிந்துவிட்டு.. ஒயிலாக தோட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள்...



## 11



**அந்தியிலே உந்தன் முகம்...**
**ரகசியங்களைச் சொல்லுதடி...**

எல்லோரும் காத்திருப்பார்கள் என்று ஷோபாவுக்கு மிக நன்றாகவே தெரியும்.. இருந்தும் அவள் தாமதமாகவே வீட்டிலிருந்து வெளிப்பட்டாள்...

அனைவரும் அவளுக்காக காத்திருக்க.. விழா நாயகியாய் அவர்கள் முன்னிலையில் பிரவேசிக்க வேண்டும் என்பது அவளது திட்டம்...

அன்றைய நாள் அவளுடையது.. அந்த விழாவும் அவளுக்கானது.. அவள் வரவை மற்றவர்கள் எதிர்பார்த்து காத்திருக்க.. அவள் மகாராணியைப் போல அவர்கள் மத்தியிலே தோன்ற வேண்டும்...

அவள் பார்த்த இந்திப்படங்களில் இப்படித்தான் வந்தது...

Optimized by www.ImageOptimizer.net

எல்லோரும் ஹாலில் கூடியிருப்பார்கள்.. கதாநாயகி மாடியிலிருந்து வெளிப்படுவாள்.. அனைவரது கண்களும் மாடிப்படிகளை நோக்கியிருக்கும்... அவள் ஒயிலாக.. பார்வையைச் சுழற்றி எல்லோரையும் பார்த்த வண்ணம் படிகளில் இறங்குவாள்.. அவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்து அவளை வரவேற்பார்கள்...

அந்தக் கதாநாயகியைப் போலத்தான் இதுவரை ஷோபா செய்து வந்தாள்.. அந்த வருடம் மட்டும் அது மாறி.. ஹாலில் விழா நடக்காமல் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தது...

அதில் ஷோபாவுக்கு சில சங்கடங்கள் இருந்தன..

முதலாவதாக அவளுக்கு தோட்டம் என்றாலே பிடிக்காது...

டிஸ்கோதே போன்றவைகளை விரும்புகிறவளுக்கு இயற்கையின் அழகு எப்படிப் பிடிக்கும்..?

பகலிலேயே தோட்டத்துப் பக்கம் வராதவளை.. இரவில் வரச்சொன்னால் அவளுக்கு எப்படியிருக்கும்..? அதுவும் அன்று அவளது பிறந்தநாள்... தோட்டத்தின் அழகை ரசிப்பவர்கள் அவளது வைர நகைகளின் ஒளியை ரசிப்பார்களா..?

மூன்றாவதாக... அங்கே முயல் குட்டிகள் வேறு இங்கும் அங்குமாக ஓடிக் கொண்டிருந்தன...



ஷோபாவுக்கு வளர்ப்புப் பிராணியாக நாயை மட்டுமே பிடிக்கும்... அதுவும் நாய் வளர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் தான்...

'ஹேய்... எங்க வீட்டில்.. வளர்க்கிற நாய் உசத்தி ரகம்டி.. எனக்காக டாடி.. வரவழைச்சது...'

ஷோபாவுக்கு நாயும் ஒரு பெருமைக்குரிய பொருள்தான்... மற்றபடி அந்த நாயை தொட்டுக்கூடப் பார்க்க மாட்டாள்...

இத்தனை சங்கடங்கள் இருந்தும்.. அவள் தோட்டத்தில் விழாநடத்துவதை ஆட்சேபிக்காமல் இருந்ததிற்கான ஒரே காரணம்... சங்கர்..!

அவனுக்கு இயற்கையை பிடிக்கும்.. இலை.. தழை.. செடி கொடிகளைப் பிடிக்கும் என்ற காரணத்திற்காக மட்டுமே அவள் தோட்டத்தில் விழா நடப்பதை பொறுத்துக் கொண்டாள்...

மற்றபடி.. தோட்டத்தில் அந்த விழா நடைபெறுவதில் ஷோபாவுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை...

அவள் மெதுவாக அன்னம் போல நடக்கிறோமென்ற நினைவில் ஆமைபோல ஊர்ந்து வந்து கொண்டிருக்க.. பரந்தாமனும்.. சுசிலாவும்.. அடித்துப் பிடித்துக் கொண்டு சங்கரை நோக்கி ஓடி வந்தார்கள்...

"யாருடி அந்தப் பொண்ணு..?"

Optimized by www.ImageOptimizer.net

“தெரியலையே.. மாப்பிள்ளைக்கு தெரிஞ்ச பொண்ணோ..?”

“அவனை எதுக்குடீ இங்கே கூப்பிட்டுக்கிட்டு வந்தாரு..?”

“என்னைக் கேட்டா..? அவரைப் போய் கேளுங்க..”

“இந்த ஷோபாவுக்கு அறிவே இல்லை...”

எப்போதும் மகளைத் திட்டியறியாதவர்.. அவளது பிறந்த நாளில் போய் மகளைத் திட்டி வைத்தார்...

அந்த அளவுக்கு அவருக்கு சங்கரின் மேல் ஈடுபாடு இருப்பதை உணர்ந்ததினால்.. சுசிலாவும் அவரைக் கண்டிக்காமல் மௌனித்தாள்...

“வாங்க மாப்பிள்ளை.. வாங்க.. வந்து ரொம்ப நேரமாச்சா..?”

சங்கரை வரவேற்றுக் கொண்டே.. ராதிகாவை முறைத்தார் பரந்தாமன்...

‘இவர் எதுக்கு என்னை முறைக்கிறார்..?’

புரியாமல் ராதிகா ஹேமாவைப் பார்க்க.. அவள் உதட்டைப் பிதுக்கி.. கைகளை விரித்து தோளைக் குலுக்கினாள்...

“இப்போதுதான் வந்தேன்...”

அது நேரம்வரை கண்களில் சிரிப்போடு அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தவன் முகத்தில் ஒரு கனிப்பு ஏற்படுவதை வியப்புடன் உணர்ந்தாள் ராதிகா...



“உங்களுக்காக ஷோபா காத்துக்கிட்டு இருக்கா மாப்பிள்ளை...”

சுசிலா வெகு பவ்யத்துடன் கூறினாள்.. அவளது பார்வை ராதிகாவை அளவிட்டுக் கொண்டிருந்தது.. ராதிகாவின் எளிமையான.. இயல்பான தோற்றம் அவளது பயத்தை விரட்டியடிக்க.. அவள் ‘அப்பாடா...’ என்று நிம்மதிப் பெருமூச்சை விட்டாள்...

அதேசமயம்.. அந்த எளிமையிலும்.. அதீதமான அழகோடு ராதிகா இருந்தது சுசிலாவை பாதித்தது...

‘இந்த ஷோபா என்னதான் செய்கிறா...’

வீட்டுப்பக்கம் திரும்பிப் பார்த்தாள்... ஆமை நடைபோட்டு வந்து கொண்டிருந்த ஷோபாவைக் கண்டதும் அவளது நிம்மதி அதிகமானது...

‘வந்துட்டா.. இனி பயமில்லை...’

“அதோ.. ஷோபா வருகிறாளே...”

சங்கரின் கவனத்தை திருப்ப அவள் சொன்ன வார்த்தைகளை அவன் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை...

ஷோபா வருகிறாளா என்று பார்க்காமல்.. அவன் அலட்சியத்துடன் செடிகளுக்கு மத்தியில் பீறிட்டுக் கொண்டிருந்த செயற்கை நீரூற்றைப் பார்த்துக் கொண்டிருக்க... ஷோபா அவர்களைப் பார்த்து விட்டாள்..

‘சங்கர்...!’

Optimized by www.ImageOptimizer.net

அவன் விழிகள் மின்னிய அதே நேரத்தில்... சங்கரின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராதிகாவை பார்த்து விட்டாள்.. பரவசம் மறைந்து.. அவள் விழிகளில் கலவரம் படிந்தது..

அவள் போட்டு வைத்த திட்டமே.. சங்கரும்.. அவளும் அருகருகே நிற்க வேண்டும்.. அதைப் பார்த்து ராதிகா பொறாமைப்பட வேண்டும் என்பதுதான்...

இப்போது என்னடா வென்றால்.. ராதிகாவின் அருகே சங்கர் நின்றுகொண்டிருக்கிறான்.. ஷோபா அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்...

'இவருக்கு மட்டும்.. எல்லாமே தானாகவே நடந்துவிடுமோ..?'

அவள் அன்னம் போல நடக்க வேண்டும் என்பதை மறந்து.. ஆமை வேகத்தை விட்டுவிட்டு.. வேகமாக நடைபோட்டாள்...

"ஹாய் சங்கர்..." அவளுக்கு மூச்சிரைத்தது...

"ஹாய்.. இதோ இருக்கிற வீட்டிலிருந்து வருவதற்கா இப்படி ஒலிம்பிக் பந்தயத்திலே ஓடி வந்ததைப் போல மூச்சிரைக்கிற..? மெதுவாய் வர வேண்டியதுதானே..."

சங்கர் நிதானமாக கேட்டான்.. கிடைத்தது வாய்ப்பென்று ஷோபாவிற்கு பதிலாக பரந்தாமன் பதில் சொன்னார்...



"அவ மெதுவாகத்தான் வந்திருப்பா.. உங்களைப் பார்த்திருப்பா.. அதுக்குப் பின்னாலேயும் அவளாலே மெதுவாக நடந்து வர முடியுமா மாப்பிள்ளை..? உங்களைப் பார்த்த சந்தோசத்தில் ஓடி வந்திருப்பா.. ஆம் ஐ கரெக்ட் ஷோபா..?"

"அப்சல்யூட்லி கரெக்ட் டாடி..."

தந்தை மகளின் பேச்சு வார்த்தையிலிருந்து.. சங்கரின் மீதான அவர்களின் ஈடுபாட்டை தெள்ளத் தெளிவாக புரிந்துகொண்டாள் ராதிகா...

அவள் முன்னால் அந்தப் பேச்சு வார்த்தை நடந்ததில் ஷோபாவுக்கு மனதுக்குள் வருத்தம்.. அதைவிட.. அவள் முன்னாலேயே சங்கர் பாராமுகம் காட்டியதில் அதைவிட வருத்தம்...

'இவ என்னைப்பத்தி என்ன நினைப்பா..?'

அவள் மனதிற்குள் குமைந்து கொண்டிருந்த போது.. சங்கர் அவனது பாராமுகத்தை கைவிட்டு அவள் முகம் பார்த்தான்...

அவள் சந்தோசப் பட்டுப் போனாள்..

"நான் மட்டும்தான் இங்கே நிற்கிறேனா ஷோபா.. உன் பிரண்ட்ஸீம் உனக்காக வந்து இங்கே நின்றுக்கிட்டு இருக்காங்களே.. அவங்களை நீ பார்க்கலையா..?"

அவன் அவள் சந்தோசத்தில் வெந்நீரை ஊற்றி வைக்க.. அவள் திணறிப் போனாள்...

Optimized by www.ImageOptimizer.net

'அப்பாடி.. இதுக சென்டும் மாப்பிள்ளைக்கு பிரண்டில்லை.. ஷோபாவுக்குத்தான் பிரண்டுக போல...'

பரந்தாமனும்.. சுசிலாவும்.. கண்களால் நிம்மதியை பரிமாறிக் கொண்டார்கள்...

"உங்களைப் பார்த்த பின்னால் மத்தவங்க அவ கண்ணில் படுவாங்களா மாப்பிள்ளை..? ஆம் ஐ கரெக்ட் ஷோபா..?"

பரந்தாமன் மகளுக்கு கை கொடுக்க...

"அப்சல்யூட்லி கரெக்ட் டாடி..." என்று அவளும் தயங்காமல் அந்த உதவிக்கரத்தை பற்றிக் கொண்டாள்..

"இதுவரை பார்க்கலை... இப்போ பார்த்தாச்-சில்லையா..?"

சங்கர் விடாமல் அதிலேயே நின்றதை.. ஷோபாவும்.. அவளைப் பெற்றவர்களும் மனதிற்குள் குறித்துக் கொண்டார்கள்...

'இது நல்லதுக்கில்லையே...' என்று சுசிலாவும்..

'ஷோபா எதுக்காக.. இது போல அவளை டாமினேட் பண்ணக்கூடிய பிரண்ட்ஸ்களை இன்வைட் பண்ணினா..' என்று பரந்தாமனும் ஒரே நேரத்தில் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்கள்...

இருந்த போதிலும்.. அவர்களுக்கும் வேறு வழியிருக்கவில்லை... வந்த விருந்தினரை வரவேற்கா-விட்டால் சங்கர் அவர்களைப் பற்றி என்ன நினைப்பான்..?



அதுவும்.. அவர்களது தவறை அவன் சுட்டிக் காட்டிய பின்னாலும் அவர்கள் சும்மா இருந்தால் அது நன்றாக இருக்குமா..?

ஆதலால் வரவழைத்துக் கொண்ட முக மலர்ச்சியுடன்...

"ஹாய் ராதிகா... ஹாய் ஹேமா..." என்றாள் ஷோபா..

ராதிகாவைப் பார்த்த சங்கரின் பார்வையில் ஏதோ செய்தி இருந்தது.. அது என்னவாக இருக்கும் என்று யோசித்த ராதிகாவிற்கு நொடிப் பொழுதில் அது புரிந்து போனது...

ஷோபா அவளது பெயரைச் சொல்லி அழைத்ததில்... அவளது பெயர் அவனுக்குத் தெரிந்து விட்டதாம்...

அவளது கண்கள் அந்தச் செய்தியைப் புரிந்து கொண்டசிரிப்பைக் காட்ட.. அவன் கண்களில் மின்னலடித்தன...

சுபாவத்திலேயே சூட்சுமப்புத்தி அதிகமாக உள்ள சுசிலா இந்தப் பார்வைப் பரிமாற்றத்தைக் கண்டுபிடித்து விட்டாள்...

'ஊஹீம்.. இந்த டிராக்கே சரியில்லை...'

மனதில் நினைத்தபோதும் அதை மறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துடன் அவள் வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக் கொள்ள முயன்று கொண்டிருந்த போது.. அந்தக் கார் வந்து நின்றது...

Optimized by www.ImageOptimizer.net

கலகம் கலைந்தவர்களாக அவர்கள் திரும்பிப் பார்க்க பாலமுரளி காரிலிருந்து இறங்கினான்...

'பால முரளியா..!' சுசிலாவினால் நம்பவே முடியவில்லை...

அவளும் திருநெல்வேலிக்குப் போகும் போதெல்லாம் அவனுடன் பேச்சுக் கொடுக்க முயன்று தோற்றுப் போயிருக்கிறாள்...

அவனுக்கு நின்று பேச நேரமிருக்காது.. ஒரு வார்த்தைபேசுவதற்குள் அவனது செல்போன் மணியொலித்து விடும். அகன்று விடுவான்...

அவன் ஷோபாவின் பிறந்தநாள் அன்று அவர்களின் வீட்டுக்கு வந்திருக்கிறானா..?

"உன் அக்கா மருமகளோட தம்பி போல இருக்கே சுசி..?"

"அவர்தான்.."

"இன்னைக்கு ஷோபாவின் பர்த்டேக்கு அவரை இன்வைட் பண்ணியிருந்தியா என்ன..?"

"அவருக்கு இதுக்கெல்லாம் நேரமிருக்கா..? வேற வேலையாய் வந்திருப்பார்..."

சுசிலா சங்கரை மறந்து பாலமுரளியை வரவேற்க விரைந்தாள்





# 12



## மாலையிலே நீ விதைத்த...
## மயக்கம் என்னைக் கொல்லுதடி...

பரந்தாமனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... அன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக சங்கரைத்-தான் அவர் நினைத்துக் கொண்டடிருக்கிறார்.. அந்த நேரத்திலே திடிரென்று வருகை தந்திருக்கும் பாலமுரளியின் வருகையை அவர் ரசிக்கவில்லை...

அதை அவரால் வாய் திறந்து சொல்ல முடியாது.. சுசிலா அவரை ஒருவழி பண்ணி விடுவாள்...

சங்கருக்கு இணையான பணக்காரன்தான் பாலமுரளி... இன்னும் சொல்லப் போனால்.. சங்கரை விடவும் பணக்காரன்.. இருந்தாலும்.. அவன் கிராமத்தில் நிலை கொண்டிருந்தான்...

சென்னை வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட ஷோபாவினால் கிராமத்தில் குப்பை கொட்ட முடியுமா என்ற நினைவு அவருக்கு...

சுசிலாவிடம் சொன்னால்.. இது ஒரு பேச்சா என்று கேட்பாள் என்பதினால்.. சுசிலாவிடம் இதைப்பற்றி அவர் சொன்னதே இல்லை...

Optimized by www.ImageOptimizer.net

பாலமுரளியை வரவேற்க சுசிலா சென்றுவிட... சங்கரின் பக்கத்தில் நிற்க வேண்டும் என்பதற்காக... அவர் அங்கிருந்து நகரவில்லை...

"யார்.. அவர்..?" சங்கர் விசாரித்தான்...

"சுசிலாவின் சிநேகிதன்... குற்றாலம் பக்கத்தில் தேனூர்ங்கிற கிராமத்தில இருக்கார்..."

"ஓ..."

அதற்குள் சுசிலா பாலமுரளியை வரவேற்று அங்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டாள்...

"வணக்கம்.. மாமா..." என்றவனிடம்..

"வாங்க மாப்பிள்ளை..." என்று சொல்லாமல் பரந்தாமனால் இருக்க முடியுமா..?

அப்படி இருந்து விட்டால்.. சுசிலாதான் அவரை சும்மா விட்டு விடுவாளா..? எனவே அதைச் சொல்லி வைத்தார்..

தோட்டத்தை வியப்புடன் பார்த்த பாலமுரளி...

"இது கல்யாண வீட்டைப் போல இருக்கே.. உங்க பொண்ணுக்கு கல்யாணமா..? அக்கா எனக்கு சொல்லவே இல்லியே.." என்று கேட்டுவைத்தான்..

ராதிகா சிரிப்பை அடக்கிக் கொள்ள படாதபாடு பட்டுக்கொண்டிருக்க.. ஹேமா வாய்விட்டுச் சிரித்தே விட்டாள்..



அப்போதுதான் அவர்களைப் பார்த்தான் பாலமுரளி...

சிரிப்பை அடக்க முயன்றபடி நின்று கொண்டிருந்த ராதிகாவின் உருவம் அவன் மனதில் பதிய.. மீண்டும் பார்த்தான்...

பார்த்த பார்வையை விலக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை...

இதுவரை இதுபோன்ற நூதன உணர்வுகளுக்கு அவன் ஆட்பட்டதில்லை... எந்தப் பெண்ணும் அவன் மனதில் இதுபோன்ற சில்லென்ற குளிர் உணர்வை ஏற்படுத்தியதில்லை..

பரந்தாமனோ.. அவனது கேள்வியால் கொதிப்படைந்திருந்தார்...

'பட்டிக்காடு...' பரந்தாமன் பல்லைக்கடிக்க.. சுசிலா தர்மசங்கடமடைந்தாள்.. பாலமுரளி அப்படிக் கேட்டிருக்ககூடாது.. என்றாலும் அவனுடைய ஊரில் இதுபோன்ற விருந்துகள் நடைபெற்றதில்லையே..

"இன்னைக்கு ஷோபாவோட பர்த்டே.." அவள் விளக்கம் சொன்னாள்..

"ஓ.. பிறந்தநாளா..?" பாலமுரளியின் சந்தேகம் விலகியது..

"அதுக்காகத்தான் பார்ட்டி அரேன்ஜ் பண்ணியிருக்கோம்.."

Optimized by www.ImageOptimizer.net

"என்ன.. அக்கா இது..? எங்களுக்கும்தான் பிறந்தநாள் வருது.. அன்னைக்கு வடைபாயசத்தோடு சாப்பிடுவோம்.. கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணுவோம்.. பக்கத்து எங்க வேலைகளைப் பார்க்கப் போயிடுவோம்.. இப்படியா.. கல்யாணத்தைப் போல ஊரைக் கூட்டுவோம்..?"

ராதிகாவிற்கு ஆச்சரியமாகி விட்டது...

அவள் சொன்ன வார்த்தைகளை அப்படியே அவனும் சொல்கிறானே...

'பார்.. இவன்..'

அவள்.. அவனைப் பார்த்த பார்வையில் சிநேகமிருக்க.. பாலமுரளிக்கு மனதில் மழைச்சாரல் அடித்தது...

'எதுக்கு இப்படிப் பார்க்கிறா..?'

அவளது பார்வைக்கான காரணத்தைப் பற்றி அவனுக்கென்ன தெரியும்..?

சங்கருக்கு.. பாலமுரளியும்.. ராதிகாவும் பார்த்துக் கொண்டது பிடிக்கவில்லை.. அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. பரந்தாமன் மனதுக்குள் பதட்டப்பட்டார்...

"நேத்து கிராமத்திலிருக்கிறவருக்கு இது மாதிரி பங்சனில் கலந்துக்க நேரமிருக்காது.. ஆனா.. எனக்கு நேரமிருக்கும்.. இல்லையா அங்கிள்..?"

அவன் குத்தலாக பரந்தாமனிடம் கேட்டபோது.. அவரால் பதில் சொல்ல முடியவில்லை...



எங்கே.. சங்கர் கிளம்பிப் போய் விடுவானோ என்ற பதட்டத்தில்...

"மாப்பிள்ளையை கூப்பிட்டு ஷோபா.. கேக் வெட்டணும்.." என்று சொல்லி வைத்தார்...

"நான் எதுக்கு கேக் வெட்டணும்..?" சங்கர் புருவங்களை உயர்த்தினான்...

மீண்டும் ஹேமா சிரித்து வைக்க.. ஷோபாவுக்குள் கோபஅலை பரவியது..

அவள் நினைத்தது என்ன..? இங்கே நடந்து கொண்டிருப்பது என்ன..? ராதிகாவின் முன்னால் தன் உயரத்தைக் காட்ட அவள் விரும்பினால் இங்கே எல்லாமே தலைகீழாய் நடந்து கொண்டிருக்கிறதே...

"அப்படியில்லை மாப்பிள்ளை... ஷோபா கேக் வெட்டிட்டான்னா விருந்தை ஆரம்பிச்சிரலாமே..." பரந்தாமன் வழிந்தார்...

"அதுக்கு நான் எதுக்கு அங்கிள்..?" சங்கர் கேட்டான்..

எதற்கென்று அவர் சொல்லுவார்..?

'என் மகள் கேக் வெட்டுவாள்.. நீ பக்கத்தில் நின்று கைதட்ட வேண்டும்.. அவள் கேக்கை வெட்டியதும் உனக்கு ஊட்டுவாள்.. நீ அவளுக்கு ஊட்ட வேண்டும்.. நாங்கள் எல்லோரும் அதை சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கை தட்ட வேண்டும்..' என்று அவரால் சொல்லவா முடியும்..?

Optimized by www.ImageOptimizer.net

[illegible] பரிந்து கொள்ளாத மாக்காளாய் அவன் இருக்கு வைக்கிறானே என்ற வருத்தம் மேலிட்டது அவருக்கு..

ஷோபா கேக் வெட்டினாள்.. சுற்றியிருந்தவர்கள் கை தட்டினார்கள்.. தள்ளி நின்று கொண்டிருந்த சங்கருக்கு கேக்கை கொடுக்க முடியாமல் பரந்தாமனுக்கு கேக்கை கொடுத்தாள் ஷோபா.. சங்கரோ.. தோட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த முயல்களை ரசித்துக் கொண்டிருந்தான்.. அந்தச் சூழல் அவன் மன எரிச்சலைத் தணித்தது..

அந்தச் சூழலில் கரைப்பட்ட சங்கர்...

"யாராவது பாடலாமே.." என்றான்..

"நீங்களே பாட வேண்டியதுதானே..." ஹேமா கேட்டாள்..

"அதுக்கப்புறம் நீங்க ஓட வேண்டியதுதான்.. பரவாயில்லையா..?" சங்கர் மிரட்ட..

"வேண்டவே வேண்டாம்.." என்றாள் ராதிகா...

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே.. தோட்டத்தின் மையத்திலிருந்து.. பாடல் கிளம்பி விட்டது..

*"ஒரு பெண்ணைப் பார்த்து*
*நிலவைப் பார்த்தேன்...*
*நிலவில் ஒளியில்லை..*
*அவள் கண்ணைப் பார்த்து..*



*மலரைப் பார்த்தேன்..*
*மலரில் அழகில்லை..."*

யாரென்று அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. பாலமுரளி வெகு இயல்பாக... பாடிக் கொண்டிருந்தான்...

ராதிகாவின் விழிகளில் ஆச்சரியம் ததும்பியது.. அவனது செயல்கள் எல்லாமே வெகு இயல்பாக இருந்ததில் அவள் வசீகரிக்கப்பட்டாள்...

'யார்.. இவன்..?' என்ற கேள்வி அவள் மனதில் மறுபடியும் தோன்றியது...

அவளின் பார்வையை அவனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. அவள் புன்னகையுடன் அவன் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள்...

*"அவள் இல்லாமல் நானில்லை..*
*நானில்லாமல் அவளில்லை..*
*லல.. லல்லலாலா.. லல்லலாலா..*
*லல்லலாலா..."*

ராதிகாவின் முகத்தில் தெரிந்த ஒளிர்வை ரசித்தபடி பாடிக் கொண்டிருந்தான் பாலமுரளி...

அவன் அவனுடைய தாயின் கட்டளைக்காக.. சகோதரியின் உறவினர் வீட்டுக்கு நலம் விசாரித்துப் போவதற்காக வந்திருந்தான்... வந்த இடத்தில் இப்படியொரு அழகான பெண்ணை... அதைவிட அந்த அழகை உணராமல் இயல்பாக இருந்த பெண்ணைச்

Optimized by www.ImageOptimizer.net

சந்திப்பான் என்று அவன் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை.

எத்தனையோ ஊர்களில் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறான்... அவனது உறவினர் வட்டாரத்திலேயே ராதிகாவை விடவும் அழகான பெண்கள் பலருண்டு.. அவர்களிடம் இல்லாத ஏதோவொரு வசீகரம் ராதிகாவிடம் இருந்தது.. முதல் பார்வையிலேயே பாலமுரளியை அவள் வசீகரித்தாள்..

எங்கிருந்தோ கிளம்பி வரும் ஆசைகளால்.. எண்ணத்தில் ஏற்படும் ஓசைகளைப் பற்றி யாரால்தான் கணித்துக்கூற முடியும்..?

அவளைப் பார்க்கும் போது.. அவளின் சிரிப்பில் தெறித்து விழும் வசீகரத்தின் துளிகளில் நனைந்து சிலிர்த்துப் போனான் பாலமுரளி...

ஏன் அவன் இந்தநாளில் இங்கு வந்தான்..? அவளைப் போன்ற ஒரு பெண்ணைச் சந்திப்பானென்ற நினைவோடா வந்தான்..? இல்லையே...

'இது எப்படி நடந்தது..?' அவனால் அனுமானிக்கவே முடியவில்லை... இதுதான் கடவுளின் கட்டளையா..? அப்படியில்லையென்றால் அவளை விட்டுப் பார்வையை நீக்க முடியாமல் அவன் திகைத்துப் போவது எதனால்..? அவளின் சிரிப்பில் அவள் பின்னே அவன் மனம் போவது எதனால்..?



"கொடிமின்னல் போல்...
அவள் சிரிப்பு...
மானோ.. மீனோ..
என்னென்பேன்...
குளிர் ஓடை போல...
துடிப்பு..."

அவன் பாடலில் ராதிகாவின் மனம் துடிக்க ஆரம்பித்தது... அவளின் இயல்பான சிரிப்பு அவள் இதழ்களிலே உறைந்து போக.. அவனது பார்வையைத் தாங்க முடியாதவளாக அவள் தொய்ந்து நின்றாள்...

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?'

என்னவென்று சொல்லத் தெரியாத இதமான இன்ப உணர்வுகளின் இம்சைக்கு ஆட்பட்டாள் ராதிகா...

"என்னோடு தன்னைச் சேர்த்தாள்..
தன்னோடு என்னைச் சேர்த்தாள்
இன்று காதல் ஏக்கம் தந்தாள்... சென்றாள்..
நாளை.. என் செய்வாளோ..."

பாடல் முடிந்தபோது... கைதட்டல் ஓசை காதைப் பிளந்தது... தன்னையறியாமல் ராதிகாவும் ஆர்ப்பரித்து கைதட்டினால்...

சங்கருக்கு அவளின் அந்தச் செய்கையைப் பிடிக்கவில்லை... அதிலும் அவனால் பாடமுடியாது என்று ராதிகாவின் முன்னால் அவன் சொல்லிக் கொண்டிருந்த போது பாலமுரளி பாடி வைத்ததில் சுத்தமாக அவனுக்கு

Optimized by www.ImageOptimizer.net

உடன்பாடு இல்லை.. அதை ராதிகா ரசித்துக் கேட்டதில் அவனுக்கும் எரிச்சல் மூண்டிருந்தது...

"ம்ம்.. ராது.. நீ நல்லாப் பாடுவதானே.. நீயும் பாடேன்.." ஷோபா எடுத்துக்கொடுத்தாள்...

பாலமுரளியே அவ்வளவு இயல்பாக பாடிய போது... தான் மறுத்து வைத்தால் நன்றாக இருக்காது என்ற நினைவில் ராதிகாவும் பாட ஆரம்பித்தாள்...

"நாளை இந்த வேளை பார்த்து..
ஓடி வா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை..
சென்று வா நிலா...
தென்றலே..! என் தனிமை கண்டு
நின்று போய் விடு...."

அவளது பாடலில் சுற்றியிருந்தவர்களின் பேச்சு நின்றுதான் போய் விட்டது... அவளது இனிமையான கானம் அந்தச் சூழலின் ரம்யத்தை இன்னமும் அதிகமாக்குவதை சங்கரும் உணர்ந்தான்.. பாலமுரளியும் உணர்ந்தான்.. கூடவே ஷோபாவும் உணர்ந்து வயிறு எரிந்தாள்...

"வண்ண வெளியின் வாசலில்
என் தேவன் தோன்றினான்...
எண்ணமென்னும் மேடையில்
பொன்மாலை சூடினான்...



கன்னியழகைக் காணவே
அவன் கலைஞனாகிறான்...
பெண்மையே உன் மென்மை கண்டு
கவிஞனாகிறான்... கவிஞனாகிறான்.."

அவளது பாடலைக் கேட்டு யார் கவிஞனும்.. கலைஞனுமாக ஆகிப் போனார்களோ.. இல்லையோ.. பாலமுரளியும்.. சங்கரும் அப்படி ஆகிப்போனார்கள்..

வெளிநாட்டில் படித்த சங்கருக்கு.. தமிழ்நாட்டுப் பாரம்பர்யத்தின்மீது மிகுந்த மரியாதையும்... ஈர்ப்பும் உண்டு... அவன் கண்ட மேலை நாட்டு நாகரிகத்தின் மறுபக்கம் அவனை அச்சுறுத்தியது.. மணந்தால்.. தமிழ் நாட்டுப் பாரம்பர்யத்தைப் பிரதிபலிக்கும் பெண்ணைத்தான் மணக்க வேண்டும் என்ற தீவிரமான முடிவுடன் அவன் இருந்தான்...

செயற்கை வெளிச்சத்தில்.. கம்யூட்டர்களின் மத்தியில்.. நுனிநாக்கு ஆங்கிலமும்.. பட்டுக் கொள்ளாத நாகரிகப் பேச்சுமாக நாள் பூராவும் இருந்துவிட்டு வீடு திரும்புகிறவனுக்கு கதவு திறந்துவிட.. மல்லிகை பூ மணத்துடன்.. கண்களில் காதலுடன்.. முகம் பூராவும் பிரியத்துடன் இருக்கும் மனைவியை அவன் தேடிக் கொண்டிருந்தான்...

அவனது எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்ததைப் போல அவன் எதிரே ராதிகா பாடிக் கொண்டிருந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

இவள்தான் அவன் தேடிய பெண் என்று அவன் பரவசப் பட்டுப் போனான்.. இவள் தமிழ்பெண்ணின் அடையாளம் என்று அவனுக்குத் தோன்றியது.. அவள் பாடிக் கொண்டிருந்த விதத்தில் வெளிப்பட்ட நாணம் அவனை வசீகரித்தது.. யாரையும் பார்க்காமல் நிலம் பார்த்துப் பாடிய அவளின் பாங்கு அவனை ஈர்த்தது...

"சொல்ல நினைத்த வார்த்தைகள்...
சொல்லாமல் போவதேன்...?
சொல்லவந்த வேளையில்..
சொல்லாத நாணமேன்..?
மன்னன் நடந்த பாதையில்..
என் கால்கள் செல்வதேன்..?
மங்கையே.. என் கண்கள் இன்று
மயக்கம் கொள்வதேன்..?
மயக்கம் கொள்வதேன்..?"

பாடியபடியே விழிகளை உயர்த்தியவளின் பார்வையை பாலமுரளியின் பார்வை சந்தித்தது.. அவள் கண்கள் படபடக்க... பார்வையை விலக்கிக் கொண்ட விதத்தில்.. பாலமுரளியின் கண்களில் மின்னல் வந்தது..



## 13

### பொன்மாலைப் பொழுதினிலே.. புதுராகம் பாடிவந்தாய்...

'இதற்காகவா இத்தனை விரயமும்..?' என்று நொந்து போனாள் ஷோபா..

காணாததைக் கண்டவர்களைப் போல.. சங்கரும்.. பாலமுரளியும் ராதிகாவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க.. விழா நாயகி அவளா.. இல்லை ராதிகாவா..? என்ற சந்தேகமே அவளுக்கு வந்து விட்டது...

இப்படி நடக்கக் கூடும் என்று அவள் கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை...

ராதிகா நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவள்.. அவளிடம் போய்.. சென்னை மாநகரில் இருக்கும் கோடிஸ்வரனான சங்கரும்.. தேனூத்து கிராமத்தில் இருக்கும்.. கோடிஸ்வரனான பாலமுரளியும்.. ஜொள்ளு விடுவார்கள் என்று அவள் கனவா கண்டாள்...?

'இவகிட்ட என்ன இருக்குன்னு இவங்க இரண்டு பேரும் இந்த வழி வழிஞ்சு... இந்த இடத்தையே கழுவி விடறாங்க...?'

Optimized by www.ImageOptimizer.net

அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை...

அழகாக.. வடிவமைக்கப்பட்ட பிரத்யேக பிறந்தநாள் விழாவிற்கான உடையை அவள் அணிந்திருந்தாள்.. ஆங்காங்கே கற்கள் மின்ன.. அந்த உடை அவளது அழகை அதிகப் படுத்திக் காட்டிக் கொண்டிருந்தது...

வங்கிப் பெட்டகத்தில் இருந்த வைர நகைகளை அந்த விழாவிற்காகவே பரந்தாமன் எடுத்து வந்திருந்தார்...

அதை அணிந்திருந்த ஷோபா.. திரும்பும் போதெல்லாம் அந்த வைரங்கள் ஒளிர்ந்து.. அவளை தேவதை போல தோன்ற வைத்துக் கொண்டிருந்தன...

அந்த விழாவிற்காக வீட்டுக்கே வரவழைக்கப்பட்ட ஒப்பனைப் பெண்கள்.. அவளுக்கு பார்த்துப் பார்த்து.. ஒப்பனை செய்திருந்தார்கள்.. ஒப்பனை செய்யப்பட்டதைப் போலவே இல்லாமல்.. கெட்டிக்காரத்தனமாக ஒப்பனை செய்வது எப்படி என்பதில் அவர்கள் தேர்ச்சி பெற்றர்களாக இருந்தார்கள்..

அவர்களது ஒப்பனையில்.. ஷோபா.. பேரழகியாக தோற்றமளித்தாள்...

அவளை விட்டுவிட்டு.. சாதாரணமான ஒப்பனையும்.. மெல்லிய செயினும்.. காட்டன் சுடிதாருமாக இருக்கும் ராதிகாவிடம் அந்த சங்கரும்.. பாலமுரளியும் என்னத்தைக் கண்டுவிட்டார்கள் என்ற விவரம் பிடிபடாமல் மண்டைகாய்ந்து போனாள் ஷோபா...



ஒருவழியாக ராதிகா பாடி முடித்ததும்.. விருந்து ஆரம்பித்தது... பஃபே முறையான விருந்தில்.. கையில் தட்டுக்களுடன் ஒரு பூச்செடியின் பக்கமாக ஒதுங்கி நின்று தங்களுக்குள் பேசியபடி ஹேமாவும்.. ராதிகாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்...

அவர்களைப் போலவே.. கையில் தட்டுடன் சங்கர் அருகில் வந்தான்...

“உங்க பாட்டு நல்லா இருந்தது...” என்று ராதிகாவிடம் சொன்னான்..

“தேங்க்ஸ்..” அழகாக சிரித்தாள் ராதிகா...

“ஆக்சுவலா.. இந்த பார்ட்டிக்கு வந்தாகனுமே என்ற தலைவலியோடுதான் வந்தேன்.. உங்க பாட்டு என் தலைவலியையும் விரட்டிருச்சு.. இந்த பார்ட்டியையும் மறக்க முடியாததாக ஆக்கிடுச்சு...”

அதுவரை.. முகத்தில் புன்னகையுடன் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ராதிகா முகம் மாறினாள்...

‘இது பாட்டை மட்டும் ரசிக்கிற பேச்சாத் தெரியலையே... பேச்சு டிராக் மாறுதே...’

ஹேமா வேறு அவளை குறும்புப் பார்வை பார்த்து வைக்க.. அவளை கண்களால் அதட்டினாள் ராதிகா...

கையில் தட்டுடன் அவன் ராதிகாவைத்தான் தேடிப் போவான் என்று கண்டு வைத்திருந்த

Optimized by www.ImageOptimizer.net

ஷோபா.. பரந்தாமனுக்கு மட்டும் புரியுமாறு லேசாக தொண்டையைச் செருமினாள்...

வந்திருந்த விருந்தினர்களிடம் பேசிக் கொண்டிருந்த பரந்தாமன் நாசுக்காக அவர்களிடமிருந்து கழன்று மகளின் அருகே வந்து...

“என்னம்மா..?” என்று ரகசியக் குரலில் கேட்டார்..

“அங்கே பாருங்க...”

ஷோபா சுட்டிக் காட்டிய திசையில்.. சங்கர் ராதிகாவுடன் பேசிக் கொண்டிருக்க.. பரந்தாமனுக்கு 'பக்'கென்று ஆகிவிட்டது...

ஏற்கனவே ராதிகாவின் பாடலை சங்கர் ரசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு வயிறு கலங்கிப் போய் இருந்தார் அவர்...

இப்போது இந்தக் காட்சியும் சேர்ந்து கொள்ள.. அவரது ரத்த அழுத்தம் எகிறியது...

“யாரும்மா இந்தப் பொண்ணுக...?”

“என் கிளாஸ் மேட்ஸ்தான் டாடி..”

“நமக்கு ஈக்குவல் இல்லை போல...”

“யெஸ் டாடி...”

“அப்புறமும் எதுக்காக இவங்களை இந்த பங்ஷனுக்கு இன்வைட் பண்ணின...?”



“அது வேற கதை டாடி... இப்படி கதை மாறும்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை...”

“சங்கர் அந்தப் பெண்ணை ஆர்வமாக பார்க்கிறான்...”

“ஐ நோ...”

“என்ன செய்யலாம்..?”

“இப்போதைக்கு சங்கரை நீங்க திசை திருப்புங்க.. அதுக்குள்ள நான் அவங்களை மூட்டைகட்டி அனுப்பி வச்சிடறேன்...”

“முதலில் அதைச்செய்...”

பரந்தாமன்... சங்கரை நோக்கிப் போனார்.. சுவாரஸ்யமாக ராதிகாவிடம் பேசிக் கொண்டிருந்த சங்கரிடம்...

“எக்ஸ்யூஸ்மி மாப்பிள்ளை...” என்று பவ்யமாக சொன்னார்...

“யெஸ்...” அமர்த்தலாக அவரைப் பார்த்தான் சங்கர்...

‘இதுகொன்னும் குறைச்சலில்லை.. என் மகளைப் பார்க்க வாடான்னா.. வந்த இடத்தில் என்மக கூடப் படிக்கிறவங்களை பார்த்துக்கிட்டு... மிதப்பலான பார்வை என்ன வேண்டிக்கிடக்கு..’

“எனக்கும்.. ராமாமிர்தத்திற்கும் பொதுவான பிரண்ட் ஒருத்தர் வந்திருக்கார்.. நீங்க வந்திருக்கிறதைச்

Optimized by www.ImageOptimizer.net

சொன்னேன்.. உங்க கூடப்பேச பிரியப்படறார்.. ஒரு செகண்ட் வந்துட்டுப் போக முடியுமா..?"

வேறு வழியின்றி பரந்தாமனைப் பின்பற்றிப் போன சங்கரால் ஒரு நொடியில் திரும்ப முடியவில்லை...

பரந்தாமன் அறிமுகப் படுத்தி வைத்த அந்த நபர்.. ராமலிங்கத்திற்கு மிகவும் வேண்டியவராக இருந்தார்.. ஒருமணி நேரமானாலும் அவர் பேச்சை நிறுத்தவே மாட்டார் என்று தோன்ற.. விடுபட வழி தெரியாமல் பொறுமையை இழுத்துப் பிடித்தபடி பேசிக் கொண்டிருந்தான் சங்கர்...

இங்கே சங்கர் அகன்ற அடுத்த நொடியில் ராதிகாவிடம் விரைந்தாள் ஷோபா...

அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்த ராதிகாவும்.. ஹேமாவும் அவளைப் பார்த்து.. கடமைக்கு சிரித்து வைத்தார்கள்...

"தேங்க்யு ராதிகா.. தேங்க்யு ஹேமா.. என் இன்வைட்டை ரெஸ்பான்ஸ் பண்ணி என் பங்சனில் கலந்துக்கிட்டதுமில்லாம ராதிகா பாட்டுப்பாடி அசத்திட்டா..."

"இட்ஸ் ஆல்ரைட் ஷோபா.. நேரமாச்சு.. நாங்க கிளம்பறும்..."

ராதிகா இதைத்தான் சொல்வாள் என்று ஷோபாவிற்கு நன்றாகவே தெரியும்.. அதிகநேரம் இருக்க



மாட்டேன் என்ற நிபந்தனையுடன் வந்தவள்.. அவ்வளவு நேரம் அங்கே நின்றதே பெரியவிசயம்...

ஷோபாவின் கவலை என்னவென்றால்.. இந்த விடைபெறுதலை சங்கரின் முன்னால் ராதிகா சொல்லி வைத்தால்.. அவளை போகும் வழியில் வீட்டில் விடுகிறேன் பேர்வழியென்று அவன் கிளம்பி விடுவானே என்பதுதான்...

அந்த நேரத்தில் ஆட்டோவும் உடனே கிடைக்காது..

அவனது உதவியை மறுத்து ராதிகா வெளியே போய் ஆட்டோவுக்கு நின்றாலும்.. மீண்டும் சங்கரின் கண்களில் பட்டுத் தொலைத்து விடும் அபாயம் இருந்ததால்.. என்ன செய்வது என்று ஏகத்துக்கும் கவலைப் பட்டாள் ஷோபா...

அவள் சுற்று முற்றும் பார்த்த போது... சுசிலாவிடம் பாலமுரளி விடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்தது... அவளுக்கு ஒரு வழி தோன்றியது...

அவசரமாக பாலமுரளியிடம் சென்று...

"எக்ஸ்யூஸ் மி..." என்றாள்...

"என்னங்க..?" என்றான் அவன்...

"நீங்க கிளம்பிட்டிங்க போல..."

"ஆமாம்.. காலாகாலத்தில் ஹோட்டல் ரூமுக்குப் போய் ஒரு தூக்கம் போட்டாத்தான் நாளைக்கு வேலைகளை சீக்கிரம் முடிச்சிட்டு ஊரைப் பார்க்க போக முடியும்..."

Optimized by www.ImageOptimizer.net

"நான் இந்தக் கதையையெல்லாம் கேட்டேனா..." என்றிருந்தது அவளுக்கு..

"இல்லை.. என் பிரண்ட்ஸ் அவங்க வீட்டுக்குப் போகணும்.. அவங்க தனியாய் ஆட்டோவில வந்தாங்க.. இப்ப லேட்டாகிருச்சு.."

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க...?"

"நீங்க போகும் வழியில் அவங்களை டிராப் பண்ணிவிட முடியுமா..?"

"யாரைச் சொல்றீங்க..."

"அதோ.. அவங்களைத்தான் சொல்கிறேன்..."

ஷோபா கைகாட்டிய திசையில் ராதிகா நின்று கொண்டிருக்க... பழம் நழுவி பாலில் விழுந்து... அதுவும் நழுவி வாயில் விழுந்ததைப் போல ஆனது பாலமுரளிக்கு...

ராதிகா பாடி முடித்தவுடன் அவளைப் பாராட்ட வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்... அதற்கு வழியின்றி சங்கர் ராதிகாவிடம் விடாமல் கடலை போட்டு அடைகாத்துக் கொண்டிருக்க... பாலமுரளியும்.. அவன் இப்போது போவான்... அப்போது போவான் என்று காத்துக் காத்து.. பொறுமையிழந்து போனவனாக.. கிளம்பி விட்டான்...

ஷோபாவின் வகுப்புத் தோழி என்ற விவரம் ஒன்று போதுமே... தேனுத்துக்கு போவதற்கு முன்னால்...



ராதிகாவைப் பற்றிய அனைத்து புள்ளி விவரங்களையும் அவன் அறிந்து விடலாமே...

அந்த எண்ணத்துடன் சுசிலாவிடம் விடைபெற்றுக் கொண்டிருந்த போது.. ஷோபா வந்து உதவி கேட்கவும்.. இவளின் தோழி... இவளைப் போலத்தானே இருப்பாங்க... என்ற நினைவில் அலட்சியமாக அவன் பார்த்து வைத்த திசையில் ராதிகா நின்றிருந்தால்... அவனுக்கு எப்படி இருக்கும்..?

"அதுக்கென்னங்க... அவங்களை வரச் சொல்லுங்க.." என்று உடனடியாகச் சொல்லிவிட்டான்...

ஷோபா அதைத்தான் எதிர்பார்த்தாள்... என்னதான்.. சங்கரும்.. பாலமுரளியும் சமதையான கோடிஸ்வரர்கள் என்றாலும்.. பரந்தாமனைப் போலவே.. பாலமுரளி கிராமத்துக்காரன்தானே என்ற நினைவு அவளுக்கு...

அதனால்.. கல்யாணக் கனவுகளில் சங்கருக்கு முதலிடத்தைக் கொடுத்து.. பாலமுரளியை அடுத்த இடத்தில்தான் அவள் வைத்திருந்தாள்...

சங்கர் கைநழுவிப் போனால்.. அப்போது பாலமுரளியைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவளுக்கு...

பாலமுரளி அவள் கையிலிருக்கும் நெய்.. அவனை இப்போது விட்டாலும்.. பின்னால் பிடித்துக் கொள்ளலாம்.. சங்கரோ இப்போதுதான் உரையூற்றி வைத்திருக்கும் பால்... அது தயிராகி.. வெண்ணையெடுத்து.. அதை

Optimized by www.ImageOptimizer.net

நெய்யாக்கி என்று அறிந்தடுத்து ஆயிரம் வேலைகளை அவள் செய்ய வேண்டியிருந்தது...

அதற்கு அவளுக்கு அவகாசம் வேண்டும்... அது நடந்து முடிவு அவளுக்கு சாதகமாக இருந்தால்.. அவள் திருமதி சங்கர்... பாதகமாக அமைந்தால்... அவள் திருமதி பாலமுரளி.

இந்த நினைவில் அவள் அப்படியே தாயைக் கொண்டிருந்தாள்...

இப்போதைக்கு ராதிகாவை அங்கிருந்து கிளப்புவதற்கு பாலமுரளியின் தலையில் அவளைக் கட்டி விடுவதுதான் சிறந்த வழியென்று ஷோபாவுக்கு தோன்றிவிட்டது...

## 14



காற்றினிலே மிதந்து வந்த..
கானத்தினை நான் கேட்டேன்...

"ராதிகா... நீ இந்த நேரத்தில் ஆட்டோவைத் தேடி சிரமப்பட வேணாம்... இவர் என் ரிலேடிவ்.. உங்களை உங்க வீடுகளில் டிராப் பண்ணிட்டு போகிறேன்னு சொல்லியிருக்கார்.. ஸோ.. நீங்க இரண்டு பேரும்... இவர் காரிலேயே வீட்டுக்கு போயிரலாம்..."



ஷோபா சொல்லியபோது.. அதை மறுக்கத்தான் நினைத்தாள் ராதிகா... ஆனால் அவள் கைகாட்டிய திசையில் பாலமுரளி நின்றிருந்ததைப் பார்த்தபின்பு.. அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை..

அது ஏனென்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் அவளைக் கட்டிப்போட்டு விட்ட வித்தைக்கான காரணம் என்னவாக இருக்கும் என்பதை அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அவளுடைய சிந்தனைகளைப் போல... அவனது சிந்தனைகளும் இருப்பதினாலா... அல்லது.. அவளைப் போலவே அவனும் பழைய பாடல்களை ரசித்துப் பாடுகிறவன் என்பதினாலா.. எதுதான் அது என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை.. அவள் மனம் எதனாலோ அவனிடம் நிலை கொண்டுவிட்டது... அவனின் அருகாமையை அவள் மிகவும் விரும்பினாள்...

ராதிகா மறுப்பாள் என்று நினைத்துக் கொண்டிருந்த ஹேமாவிற்கு அவளது சம்மதமான. தலையசைவு ஆச்சரியத்தைத் தந்தது...

"என்னடி..." அவளின் காதோரமாக கேட்டாள் ஹேமா...

"அவரைப் பார்த்தால் ஜென்டில் மேனைப் போல இருக்கு ஹேமா... நம்பி அவர் காரில் ஏறலாம்..." மெலிதான குரலில் பதில் சொன்னாள் ராதிகா...

"நம்ம கூடப் பேசிக்கிட்டு இருந்த சங்கரும் ஜென்டில் மேன்தான்..."

Optimized by www.ImageOptimizer.net

"[illegible] சொன்னேன்.. ?"

"நான் அவனை [illegible] கார் இருக்கு..."

"அவங்கிட்டேயும் கார் இருக்கு..."

"இருக்கட்டுமே.. இப்ப நீ என்னதான் சொல்ல வர்ற..?"

"அவளை தம்பியும் காரில் ஏறலாமுன்னு சொல்ல வந்தேன்..."

"ஹேமா..."

ராதிகாவின் குரல் கண்டிப்புடன் ஒலிக்க... தூரத்தில் அவர்களுக்கு முதுகு காட்டி யாருடனோ பேசிக் கொண்டிருந்த சங்கரை ஏக்கத்துடன் பார்த்தபடி.. ராதிகாவின் பின்னால் நடந்தாள் ஹேமா...

பாலமுரளி காரின் பின்பக்க கதவை ராதிகாவிற்காக திறந்து விட.. ஹேமாவும்.. ராதிகாவும் காரில் ஏறிக் கொண்டார்கள்.. கார் கிளம்பியது.. ஷோபா.. நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்...

"பாடினாள் ஒரு பாட்டு..
பால்நிலாவினில் நேற்று...
ஓடினேன் அதைக்கேட்டு..
தேடினேன் வலைபோட்டு...
பூங்குயில் அவள் யாரோ..
பொன்மயில் அவள் பேரோ..."

அவனது காரில் பாடல் ஒலிக்க.. ஆரம்பித்தது...



"சாருக்கு பழைய பாட்டுன்னா ரொம்ப இஷ்டம் போல..." என்றாள் ஹேமா...

"உங்களுக்கு இஷ்டமில்லையா...?"

முன் பக்கத்தில் பொருத்தப் பட்டிருந்த கண்ணாடி வழியாக ராதிகாவைப் பார்த்தபடி ஹேமாவிடம் கேட்டான் பாலமுரளி...

"ஊஹீம்.. அதெல்லாம் பாட்டி காலத்துப் பாட்டுசார்... அதைப் போய் யார் இஷ்டப் படுவாங்க...?"

"உங்க பிரண்ட் இஷ்டப் பட்டிருக்காங்களே..."

"இவளுக்கு பழைய பாட்டுன்னா பித்து சார்.. அது ஏன்னுதான் தெரியல..."

"ஏன்னா... அது எவர்கிரின்... என்றும் பசுமையான ராகம்..." இதைக் கேட்ட ஹேமா ஆச்சரியத்துடன்... "அட!" என்றாள்...

"என்னங்க திட்ட ஆரம்பிக்கிறிங்க...?"

"ஐயையோ.. நான் உங்களைச் சொல்லலை சார்.."

"நம்ப முயற்சி பண்றேன்..."

"அட..! நான் சொன்ன 'அட..' அது இல்லை சார்.. இது வேற 'அட..'..."

"இன்னும் எத்தனை அட போடுவீங்க..."

"ஐயோ சார்.. இவளும் பழைய பாடல்களை எவர்கிரின் பசுமையான ராகம்ன்னுதான் சொல்லுவா.."

Optimized by www.ImageOptimizer.net

"அப்படியா..."

பாலமுரளி... கண்ணாடி வழியாக ராதிகாவை ஊன்றிப் பார்த்தான்... அவள் அதை உணராதவளாக.. ஹேமாவின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்... ஹேமா கையை உதறியவாறு அலறினாள்...

"ஏடு- பிசாசே.. கை வலிக்குதுடி..."

"என்னங்க.. என்ன ஆச்சு...?"

"இவ என் கையை கிள்ளுகிறா சார்..."

"அவங்களைப் பார்த்தா சாது போலத் தெரியுது.. அவங்களைப் போய் இப்படிச் சொல்கிறீங்களே..."

"இவளா சாது..? அப்படியெல்லாம் தப்புக் கணக்கு போட்டு விடாதீங்க சார்.. இவ ஜில்லாக் கேடி..."

இதைக் கேட்டதும்.. ராதிகாவிற்கு வெட்கம் வந்து விட்டது..

'இவன் என்னைப் பற்றி என்ன நினைச்சுக்குவான்..?'

"ஏய்.. சும்மா இரு..." ஹேமாவை அதட்டினாள்...

"யாரு..? நீ... என்னை சும்மாயிருக்கச் சொல்ற.. எல்லாம் நேரம்டி... தினத்துக்கு ஒரு கிலோ சதையை கிள்ளியெடுக்கிறா.. இவ கையை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்க மாட்டாளாம்.. என்னை சும்மா இருக்கச் சொல்வாளாம்.. நீங்களே இந்த நியாயத்தைக் கேளுங்கசார்..."



"உங்களை வாயை வைத்துக்கிட்டு சும்மாயிருக்கச் சொல்கிறாங்களோ என்னவோ..."

"ஆனாலும்.. நீங்க அநியாயத்துக்கு இவளை சப்போர்ட் பண்றீங்க சார்.. உங்ககிட்ட நியாயம் கேட்டேன் பாருங்க... என்னைச் சொல்லனும்.."

"தப்பா எடுத்துக்காதீங்க.. உங்க பிரண்ட் அமைதியா வர்றாங்க.. அவங்களைப் பார்த்தா.. பாட மட்டும் தான் வாயைத் திறப்பாங்க போல இருக்கு..."

பாலமுரளி சொல்லியதைக் கேட்ட ஹேமா விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்...

"ராதிகா... நீ வாயைத்திறக்கவே மாட்டாயாம் டி.. சாருக்கு உன்னைப்பத்தி தெரியலை.. சார்... இவ வாயைத் திறந்தா அணுகுண்டுதான்... விவரம் தெரியாம இவளுக்கு அமைதியான. பொண்ணுன்னு சர்டிபிகேட் கொடுத்துக்கிட்டு இருக்கீங்க... இவபேச ஆரம்பிச்சா நீங்க இல்ல.. உங்க கிராமமே தாங்காது..."

'இவளா வாயாடி..?' பாலமுரளியால் நம்ப முடியவில்லை...

அமைதியாக.. அடக்க ஒடுக்கமாக.. முகத்தில் நாணம் பரவ.. ஜன்னல் வழி வேடிக்கை பார்த்துக் கொண்டு வரும் இந்த மென்மையான பெண்.. வாயைத் திறந்தால் மூடவே மாட்டாளாமே.. உண்மையாகவா..?

ஹேமாவின் வீடு முதலில் வந்தது...

Optimized by www.ImageOptimizer.net

"வீட்டுக்கு வந்திட்டுப் போ ராதிகா..."

"இன்னொரு நாள் வரேண்டி..."

"நான் மட்டும் உன் வீட்டுக்கு வந்து உன்னைக் கூப்பிட்டுப் போகணும்.. நீ வரக்கூடாதா..?"

ஹேமா கோபம் கொள்ள.. தர்மசங்கடத்துடன் பாலமுரளியைப் பார்த்தாள் ராதிகா...

ஹேமாவின் வீட்டிற்குள் அவர்கள் இருவரும் சேர்ந்து சென்று திரும்பி வந்தால் நன்றாக இருக்குமா..?

"நான் காரில் வெயிட் பண்றேன்.. நீங்க போயிட்டு வாங்க..."

அவளது சங்கடத்தை உணர்ந்தவனாக பாலமுரளி கூறினான்.. ஒரு விடுதலை உணர்வுடன்.. காரை விட்டு இறங்கி ஹேமாவின் வீட்டிற்குள் போனாள் ராதிகா...

அவள் விழிகளில் தெரிந்த நன்றியுணர்வில் பாலமுரளியின் மனதில் இதம் பரவியது...

அவள் வரும்வரை.. சந்தடியில்லாத சாலையை வேடிக்கை பார்த்தபடி காரில் காத்திருந்தான் அவன்...

"ஸாரி.. நேரமாகிருச்சா..." அவள் அவசரமாக திரும்பிவந்தாள்...

"அப்படி நான் சொன்னேனா..?" அவன் காரைக் கிளப்பினான்...



அவனும்.. அவளும் மட்டும் காரில் இருக்க.. அதுவரை அப்படி அறிமுகமில்லாத ஆடவனுடன் பயணித்தறியாத ராதிகாவுக்கு என்னவோ போல இருந்தது.. அதேசமயம்.. அந்தப் பயணம் அவளுக்கு பிடித்தமானதாகவும்.. என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்வாகவும் இருந்தது...

இருவரும் பேசிக் கொள்ளவில்லை.. வார்த்தைகள் தேவையற்ற மௌனத்தின் போர்வை அவர்களைச் சுற்றிப் போர்த்தியிருந்தது...

"மௌனமே காதலாய்..
ஒரு வார்த்தை பேசவேண்டும்..
நாணமே ஜாடையாய்..
ஒரு பாடல் பாட வேண்டும்..."

அழகான பாடலில் அவர்களின் மௌனம் அதிகமானதாக ஆனது...

"ஷோபாவோட கிளாஸ் மேட்ன்னா... நீங்க என்ஜினியரிங் ஃபைனல் இயர் படிக்கறிங்களா..?" அவன் மௌனத்தை கலைத்தான்...

"வேற படிச்சா.. அவளோட கிளாஸ்மேட்டாய் இருக்க முடியாதே சார்...", ராதிகா தன் வழக்கப்படி பதில் சொல்லிவிட்டாள்...

பாலமுரளிக்கு.. பேசியது அவள்தானா என்று பெருத்த ஆச்சரியமாகப் போய்விட்டது...

Optimized by www.ImageOptimizer.net

ஷோபா எதற்காக அப்படி விழுந்து விழுந்து சிரித்தாள் என்று இப்போது அவனுக்கு புரிந்தது...

"தெரியாம கேட்டுட்டேங்க.." அவன் சிரித்தான்...

"ஸாரிப்.. தெரிஞ்சேதான் கேட்டிங்க..."

"தெரிஞ்சே கேட்டேனா..? நானா..?"

"ஆமா.. நீங்கதான் கேட்டிங்க.. நீங்க கேட்காமல்.. வேற யார் கேட்டது..? அதோ அங்கே பிளாட்பாரத்தில் நடந்து போகிறாரே.. அவரா வந்து கேட்டார்..?"

"ஓகே.. நான்தான் கேட்டேன்.. ஒப்புக்கிறேன்... எதைத் தெரிந்து கேட்டேன்கிறீங்க..."

"ஷோபா என்ன படிக்கிறா.. எந்த இயர்ல படிக்கிறாங்கிற விவரம் உங்களுக்குத் தெரியுமா.. தெரியாதா..?"

"தெரியும்.."

"அதைத் தெரிந்துக்கிட்டேதான் கேட்டிங்கன்னு நான் சொன்னேன்..."

"ஓ.."

"நீங்க விக்ரமின் ரசிகனா..?"

"நான் படம் பார்ப்பேன்.. குறிப்பாய் யாரோட ரசிகன்னும் என்னைச் சொல்லிக்க மாட்டேன்..."

"அப்புறம் எதுக்கு சார் 'ஓ..' போட்டிங்க..?"

மீண்டும் 'ஓ...' போட வாயைத் திறந்தவன்.. கடைசி விநாடியில் வாயை மூடிக் கொண்டான்...



தேனுத்தில் அவன் முன்னால் நின்று பேசக்கூட யாரும் பயப்படுவார்கள் என்ற நினைவு அவனுக்கு வந்தது... அவனும் யாருடனும் அதிகமாகப் பேசியதில்லை.. பேச்சு நேரத்தை விழுங்கும் என்ற எண்ணமுடையவன் அவன்...

அவனை வாயைத் திறந்து ஒரு ஒற்றை எழுத்தைச் சொல்ல முடியாமல் ஒரு பெண் வாயை மூட வைக்கிறாள் என்றால் இதை என்னவென்று சொல்வது..?

"ஷோபா உங்க பிரண்டா.."

"கிளாஸ் மேட்..."

"நினைத்தேன்.. அவளுக்கும் உங்களுக்கும் ஏழாம் பொருத்தமாச்சே.. நீங்க இரண்டு பேரும் பிரண்ட்ஸா இருக்க முடியாதுன்னு நினைச்சேன்..."

"இன்னும் என்னவெல்லாம் நினைச்சீங்க..?"

பின்சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டு சட்டமாக கேள்வி கேட்டவளை திரும்பிப் பார்த்தான் பாலமுரளி...

என் மனதில் என்னென்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறேன்.. அதைச் சொல்லவா என்று கேட்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது...

லேசாக சிரித்தபடி.. காரை அவள் வீட்டின் முன்னால் நிறுத்தினான்.. அவள் இறங்காமல்...

"நீங்களும் இறங்குங்க சார்.." என்றாள்...

"நான் எதுக்குங்க..?" அவன் தயங்கினான்...

Optimized by www.ImageOptimizer.net

“சார்.. அது ஜோமாவின் வீடு.. இது நைட்நேரம்... அங்கே அவனை விட்டுவிட்டு நீங்களும் நானும் சேர்ந்து வெளியே வாறும்.. நான் அப்படியெல்லாம் தெரியாதவங்களோடு பகலிலேயே வெளியே போய் வந்ததில்லை.. நைட்டுன்னா சொல்லவே வேணாம்.. அதனால சங்கடப் பட்டேன்.. இது என்வீடு சார்...

“இங்கே மட்டும் உங்களுக்கு சங்கடமாக இருக்காதா..?”

“எப்படி இருக்கும்..? எப்படியும் நீங்க வந்து காரில் இறக்கி விட்டுட்டுப் போகிறதை என்வீட்டில் சொல்லத்தான் போகிறேன்.. அது இன்னார்ன்னு அவங்களுக்கு காட்ட வேணாமா..?”

அவளின் பேச்சு.. அவனுக்கு ஆச்சரியத்தையும்.. அவள்பிலான மரியாதையையும் அதிகப் படுத்தியது...

அதற்கு மேலும் வழக்கடிக்காமல் அவன் காரை விட்டு இறங்கினான்.. அவள் வீட்டைப் பார்த்தான்... முன்புறம் ஒரு கார் நிற்குமளவிற்கு சிறிய போர்டிகோவுடன்.. அடக்கமாக.. அழகாக அமைந்திருந்தது வீடு...

தேனூத்திலிருக்கும் அவன் வீட்டு போர்டிகோவின் பத்தின் ஒரு பங்கு அளவில் தான் அந்த வீடு இருக்கும் என்று நினைத்தவாறே வீட்டுப் படியேறினான் பாலமுரளி...



# 15

எங்கோ ஓர் பறவை பாடிச்சென்றது
என்மனதில் உன்நினைவை அதுவிதைத்து சென்றது...

இரவு உணவுக்கு முன்னதான அரட்டையில் ராதிகாவின் வீடு இருந்தபோது.. அழைப்பு மணி அலறியது...

“நியூஸ் சேனலை ஏண்டி மாத்தின..?” என்று மனைவியைக் கடிந்து கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி வாசல் பக்கம் பார்த்தார்...

“யாருன்னு பாரு ராஜி...”

“ஒரு சீரியல் பார்க்க வழியில்ல.. இதில வாசலில் வந்திருக்கிறது யாருன்னு மட்டும் நான் பார்த்து வரணுமா..? உட்கார்ந்தா.. மத்தவங்களை வேலை ஏவுற நேரத்திலே உங்க அப்பாவையே அந்த வேலையைச் செய்யச் சொல்லு..”

“சீரியல் பார்த்தா உலக அறிவு வளருமாடி...?”

“வீட்டுக்குள்ளே நாலு சுவருக்குள்ளே கிடக்கறவ.. உலக அறிவை வைச்சு என்ன செய்யப் போறா..? காலையில எழுந்திருச்சதிலிருந்து மாடா உழைக்கிறேன்..

அக்கடான்னு உட்கார முடியறது இந்த நேரம்தான்.. அதில ஒரு சினிமாவப் பார்க்க இந்தவீட்டில் வழியிருக்கா..?”

மீண்டும் அழைப்புமணி அலறியது.. கிருஷ்ணமூர்த்தி மகனைப் பார்த்தார்..

“அப்பா.. எனக்கு ஹோம் வொர்க் இருக்கு.. என்னால கதவைத் திறக்கப் போக முடியாது...”

அவர் வாயைத் திறக்கு முன்னால் மறுத்தான் சுந்தர்...

“என்டா.. நான் இன்னும் சொல்லவே இல்லையே..”

“அதைத்தானே சொல்ல வந்தீங்க... ?”

இப்படி முன்ஜாக்கிரதை முத்தண்ணாவாக பதில் சொல்கிறவனை என்ன செய்வது என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போது.. அழைப்பு மணியை மூன்றாம் முறையாக அழுத்தினாள் ராதிகா...

“வீட்டில் யாரும் இல்லையோ.. என்னவோ..” பாலமுரளி கூறினான்...

“ஏன் அப்படிக் கேட்கறிங்க...”

“கதவைத் திறக்க யாரும் வரலையே...”

“அதனாலே இப்படியொரு முடிவுக்கு வந்திட்டிங்களா..? நீங்க வேற... காலிங்பெல் அடிச்சவுடனே கதவைத்திறக்க ஆள் வரலைன்னா.. வீட்டிலே எல்லாரும் இருக்காங்கன்னு அர்த்தம்...”



இப்படியொரு வியாக்கினத்தை இதற்கு முன்னால் அவன் கேட்டதில்லை.. அவளை விசித்திரமாகப் பார்த்தான் அவன்...

அதேசமயம் வீட்டுக்குள்ளே கிருஷ்ணமூர்த்தி மகளைக் கெஞ்சுதலாகப் பார்த்தான்...

“கீதா... என் செல்லமில்ல...”

“இல்லப்பா..”

இப்படிச் சொல்கிறவளிடம் எப்படி கதவைத் திறக்கச் சொல்வது.. ?

“ஹீம்.. பெண்டாட்டி பிள்ளைகன்னு இருந்து என்ன பிரயோஜனம்.. ? ஒரு வேலையில் கை கொடுக்க ஆளில்லை...”

“ஆமாண்டா சுந்தர்... உன் அப்பா மலையை வெட்டியெடுக்கப் போகிறாரு.. அவளுக்கு கை கொடுக்க ஆளில்லாம போச்சு.. இந்தா இருக்கிற கதவுக்குப் போய் அதை திறந்து விட முடியலை.. அதுக்கே இத்தனை பேச்சுன்னா.. நாள் முழுக்க நடந்துக்கிட்டே இருக்கிறவளுக்கு எத்தனை பேச்சு வரும்.. ?”

அழைப்பு மணி நான்காவது முறையாக அலறியது...

“இது ஒன்னு...” சுந்தர் கோபமானான்...

“ஹோம் வொர்க் பண்றேனில்ல.. ஏய் கீதா.. நீ போய் கதவைத் திறக்கக் கூடாதா.. ?”

Optimized by www.ImageOptimizer.net

"என்டா எனக்கு மட்டும் வேலையில்லையா..?"

இப்படிக் கேட்ட கீதா நகங்களுக்கு சாயம் பூசிக் கொண்டிருந்தாள்...

"வீடா இது..." சுந்தர் வேகமாக புத்தகத்தை மூடினான்...

அதே வேகத்தோடு எழுந்து சென்று கதவைத் திறக்கப் போகிறான் என்று அபிலாஷை கொண்டார் கிருஷ்ணமூர்த்தி...

அவன் சாவதானமாக அவரின் கையிலிருந்த டிவியின் ரிமோட்டை கைப்பற்றி கிரிக்கெட் சேனலுக்கு மாற்றினான்...

"டேய்.. என்னடா செய்கிற..?"

"பார்த்தாத் தெரியல.. கிரிக்கெட் பார்க்கிறேன்..."

"அப்ப நீ கதவைத் திறக்கப் போகலையா..?"

"அது என்ன தேவைக்கு..? இந்த வீட்டில நான் மட்டுமா இருக்கேன்..."

அழைப்பு மணி ஐந்தாவது முறையாக அலற.. ராஜேஸ்வரி எழுந்து கொண்டாள்.. அவள் கதவைத்தான் திறக்கப் போகிறாள் என்று கிருஷ்ணமூர்த்தி நினைக்க.. சமையலறைப் பக்கம் சென்றாள்...

"என்ன ராஜி.. இப்படிச் செய்கிற...?"



"வேற என்னத்தைச் செய்கிறது..? இந்த வீடுதான் நம்மளைக ராஜ்யம் கட்டி ஆள்கிற வீடாப்போச்சே.. ஒன்னு நீங்க நியுஸ் சேனலைப் பார்ப்பீங்க.. இல்லைன்னா.. உங்க மகன் கிரிக்கெட் சேனலைப் பார்ப்பான்.. எனக்குத்தான் பிடிச்ச சீரியலைப் பார்க்க முடியில்லாம போயிருச்சே..."

"ம்ஹும்.. உனக்கு உன் பிரச்னை..."

அழைப்பு மணி ஆறாவது முறையாக அலற... ராஜேஸ்வரி மகளை அனல்பார்வை பார்த்தாள்...

"ஏன்டி.. காலிஸ்பெல் சத்தம் காதில விழுகலை...? எழுந்து போயி கதவைத் திறக்கிறதுக்கு என்ன வந்துச்சு..? என்னடா.. பொழுது விழுந்ததுக்கு அப்புறமாய் அக்கா வீட்டை விட்டு வெளியே போயிருக்காளே... அவ பத்திரமாய் திரும்பி வரணுமேன்னு கவலை இல்லை.. நெயில் பாலிஷை போட்டுக்கிட்டு இருக்கா.. போடி.. போய் கதவைத்திற.. அவதான் வந்திருப்பா..."

"உங்களுக்கு இவனைக் கண்ணுக்குத் தெரியாது.. நான் மட்டும்தான் தெரிவேன்..."

முணுமுணுத்தாலும்... கீதா உடனே எழுந்து நெயில் பாலிஷை ஏறக்கட்டி விட்டு கதவைத்திறக்கச் சென்றாள்..

கிருஷ்ணமூர்த்திக்கு மனம் தாளவில்லை... அவரும்தான் அவ்வளவு நேரமாக.. பெண்டாட்டி பிள்ளைகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்... யாரும் அசைந்து கொடுக்கவில்லை...

Optimized by www.ImageOptimizer.net

அதுவே... ராஜேஸ்வரி ஒரு அதட்டலைப் போட்டதும்.. வேலை வேகமாய் நடக்கிறதே...

'எப்படி..?' யோசனையுடன் மனைவியைப் பார்க்க... அவள்...

'எப்படி..?... என்று பதில் பார்வை கித்தாய்ப்பாக பார்த்து வைத்தாள்...

'ம்ஹீம்... இந்த லட்சணத்தில் இந்தவீடு ஆம்பளைக ராஜ்யம் கட்டிய வீடாம்...'

அவருக்கு டிவியில் செய்திகளைப் பார்க்கும் சுவாரஸ்யமே அற்றுப் போய்விட்டது.. பேசாமல் வீடு திரும்பும் மகனையாவது பார்க்கலாமே என்று வாசல்பக்கம் திரும்பிப் பார்த்தார்...

"ஆறாவது தடவையா காலிங்பெல் அடிச்சிட்டிங்க.. இந்தத் தடவையாவது கதவு திறக்குமா.. திறக்காதா..?"

பாலமுரளி சந்தேகத்துடன் கேட்டுக் கொண்டிருந்த போது... கதவு திறந்து விட்டது...

"அப்பாடா.. ஒருவழியாய் சொர்க்க வாசல் திறந்திருச்சுங்க..."

அவன் தன்னையறியாமல் சொல்லிவிட.. கதவு திறந்த கீதா அவனை ஏற இறங்கப் பார்த்தாள்...

'வாட் எ ஹேண்ட்சம் மேன்...'

அவள் மனதில் ஓடியதை படித்து விட்ட ராதிகா பல்லைக்கடித்தாள்...



"யாருடி இவரு..?" வழியை மறித்துக் கொண்டு கீதா கேள்வி கேட்க...

"முதலில் வழியை விடுடி..." என்று அதட்டினாள் ராதிகா...

"என்னடி.. பிரண்டோட பெர்த்டே பங்சனுக்கு போகிறேன்னு கதையளந்துட்டுப் போன... இப்பப் பார்த்தால்.. ஹீரோவோட வந்து நிற்கிற.. என்னடி.. என்ன விசயம்..? காதலா..?"

பாலமுரளியின் முன்னால் இப்படிக் கேட்டு வைக்கிறாளே... என்று ஆகிவிட்டது ராதிகாவிற்கு...

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. பேச்சைப் பாரு பேச்சை.. காலிங் பெல்லை அடிச்சா கதவைத்திறக்கிறதுக்கு என்ன..? அதுக்கு அறிவில்ல.. கண்டதையும் யோசிக்க மட்டும் அறிவிருக்கு..."

"எதுக்குடி இப்ப கோபப் படறே..."

"நீ பேசற பேச்சுக்கு கோபப் படாம கொஞ்சமா முடியும்..? வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காரேன்னு பார்க்கிறேன்.. இல்லைன்னா நடக்கிறதே வேற..."

ராதிகா வெடுவெடுத்தபடி.. கீதாவை முறைக்க.. அவள் வெற்றிகரமாக பின் வாங்கினாள்...

"இது யார்..? உங்க தங்கையா..?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க..."

Optimized by www.ImageOptimizer.net

"அப்படின்னா.. இவங்க உங்க தங்கையில்லையா..?"

"என் அம்மா வயிற்றிலே.. எனக்கப்புறமாய் இவ வந்து பிறந்திருக்கிறா.. அதனாலே என் தங்கைன்னு சொல்லித்தானே தொலைக்கனும்.."

ராதிகாவின் விளக்கத்தைக் கேட்டவனின் விழிகளில் சிரிப்புப் படர்ந்தது... அதுவரை அவளை மட்டுமே ரசித்துக் கொண்டிருந்தவன்.. அவளது பேச்சையும் ரசிக்க ஆரம்பித்தான்...

"உள்ளே வாங்க சார்.. அப்பா.. அப்பா..."

அந்த வீட்டின் ராஜ்யத்தை உண்மையிலேயே யார்தான் ஆள்கிறார்கள் என்பதைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்த கிருஷ்ணமூர்த்தி மகளுடன் வந்த புதியவனைக் கண்டதும் சிந்தனையைக் கலைத்தார்...

"ஏம்மா வேட்டு..? யார் இவரு..?"

"என் பிரண்டோட ரிலேடிவ்ப்பா... உட்காருங்க சார்.."

ராதிகா உபசரித்துக் கொண்டிருந்த போது.. சமையலறையை விட்டு...

"ஏண்டி வேட்டு..." என்று அதட்டியபடி வெளியே வந்த ராஜேஸ்வரி.. பாலமுரளியைக் கண்டதும்.. புருவங்களைச் சுருக்கினாள்...

கிருஷ்ணமூர்த்தியைப் போல வெளிப்படையாக யார் என்று கேட்காமல் அவள் விழிகளால் மகளை அதட்ட...



"என் பிரண்டோட ரிலேடிவ்ம்மா..." என்று கிருஷ்ணமூர்த்தியிடம் சொன்னதையே சொன்னாள் ராதிகா...

"ஓஹோ... சாருக்கு இந்தப் பக்கம் என்ன வேலைம்மா..?"

கிருஷ்ணமூர்த்தி விசாரணைக் கமிசனை ஆரம்பிக்க.. கிரிக்கெட்டை மறந்து.. அந்த விசாரணைக் கமிசனை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான் சுந்தர்... ராதிகாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது.. அவன்தலையில் ஒரு குட்டை வைத்தாள்...

"ஸ்ஆ.. வலிக்குதுக்கா... ஏன் என்னைக் குட்டின..?" அவன் முணுமுணுப்பாய் சண்டைக்கு வந்தான்...

"வேடிக்கை பார்க்கிறயா..?"

"வேற என்ன செய்யச் சொல்ற..? சின்னக் கவுண்டர் துண்டை உதறி தோளில் போட்டுட்டா.. இனி பஞ்சாயத்தை ஆரம்பிக்காம விடமாட்டார்.. இந்த சவுண்டில என்னால ஹோம் வொர்க் பண்ண முடியுமா... இல்லை... கிரிக்கெட்டைத்தான் பார்க்க முடியுமா..? ஸோ.. என்னாலே வேடிக்கைதான் பார்க்க முடியும்..."

"அப்பா..."

"என்ன ராது..?"

Optimized by www.ImageOptimizer.net

"அவருக்கு நிதம் பக்கம் என்ன வேலைன்னு- நானே உங்களுக்குத் தெரியணும்..?"

"ஆமம்மா..."

"அவரோட காரில் என்னையும்.. நேஹாவையும் கூட்டிட்டுக்கிட்டு வந்து.. அவரவர் வீட்டில் விட்டு வேலைக்காக நம்வீட்டுப் பக்கம் தெரியாத்தனமாய் அவர் வந்து தொலைச்சிட்டார்... போதுமா..?"

மகளை பாதுகாப்பாய் காரில் கொண்டு வந்து விட்டவன் என்று அறிந்து கொண்ட ராஜேஸ்வரி நிம்மதியாக காபியை கலக்கப் போனாள்...

"எம்மா.. நீ போகும் போது ஆட்டோவில்தானே போன..?" கிருஷ்ணமூர்த்தி தாடையைத் தடவியவாறு கேட்க...

"நம்ம நாட்டாமை பஞ்சாயத்தை முடிக்கவே மாட்டேன்னு இப்படி அடம் பிடிக்கிறாரே கீதா.." என்று கீதாவின் காதுகளில் முணுமுணுத்தான் சுந்தர்...

பாலமுரளிக்கு அந்தக் குடும்பத்தை மிகவும் பிடித்து விட்டது.. அவன் வளர்ந்த குடும்பச் சூழல் முற்றிலும் வேறானது.. இது அதிலிருந்து வேறுபட்டு நின்றது...



## 16

**அந்தரங்கம் அறியாமல்.. ஆருயிரே..! நீ அலைக்கழித்தாய்...**

பாலமுரளியின் அம்மாவான மேகலா... கணவரின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசினதில்லை.. அவனும்... அவனுடைய அக்காவான பால சரஸ்வதியும்... மாணிக்கவாசகத்தின் முன்னால் உட்காரக்கூட தயங்குவார்கள்.. இதில் அவருடன் சகஜமாய் எப்படிப் பேசுவார்கள்..?

ஆதலால்... அவர்களின் தேவைகள் அனைத்தையும்.. மேகலாவின் காதுகளில் போட்டு விடுவார்கள்... அவள் பக்குவமாக.. கணவரின் மனநிலையையும்.. சூழ்நிலையையும் அறிந்து.. மாலை நேரக் காபியின் போதோ.. இரவு நேர உணவின் போதோ.. பிள்ளைகளின் தேவைகளை கணவரிடம் எடுத்துரைப்பாள்...

"என்னங்க..."

"சொல்லு... மேகலா..."

"நம்ம முரளிக்கு மோட்டார் சைக்கிள் வேணுமாம்.."

"பத்து வயசில மோட்டார் சைக்கிள் ஓட்டமுடியுமா..?"

"முடியாதுதான்..."

"அதனால.. அவனுக்கு பழைய சைக்கிளை தூக்கிப் போட்டுட்டு புது சைக்கிளை வாங்கித்தரேன்..."

"என்னங்க..."

"இன்னும் என்னம்மா.. ?"

"நம்ம சரகவோட பள்ளிக்கூடத்திலே ஆண்டு விழா வருதாம்..."

"வரட்டுமே..."

"இவள அதில ஆடச்சொல்லி அவங்க டீச்சரம்மா சொல்றாங்களாம்..."

"நம்ம குடும்பத்துக்கு ஆடுகிறதெல்லாம் சரிப்பட்டு வராது மேகலா..."

"ஆமாங்க..."

"அதனால.. ஏதாவது பாட்டுப் பாடச் சொல்லு... வேணும்ன்னா.. பாட்டுச் சொல்லித்தர ஆள் ஏற்பாடு பண்ணித்தரேன்.. வீட்டுக்கே வந்து சொல்லித்தருவாங்க.."

"அது சரிங்க..."

உண்மையில்.. பாலமுரளி புது சைக்கிள்தான் கேட்டான்... பாலசரஸ்வதி.. பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டாள்...



அவை இரண்டையும் வேறாக மாற்றிச் சொல்லி.. தேவையானதை பிள்ளைகளுக்குப் பெற்றுத் தந்த சாதுர்யம் மேகலாவுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று...

அந்த ஊரின் பெருந்தனக்காரரான மாணிக்க–வாசகத்திடம் சில குண இயல்புகள் இருந்தன.. அதில் ஒன்று.. பெற்ற பிள்ளைகளை கண்டிப்பாக வளர்ப்பது... இரண்டாவது.. குடும்பத்தினரை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது...

அதனால்.. எந்தத் தேவையானலும்.. அதற்கு எதிர் தேவையைச் சொல்லி... தேவையானதை பெற்றுக் கொள்ளும் சாமர்த்தியம் மேகலாவிடம் இருந்தது...

பின்னாளில் அதை... பாலமுரளியும்.. பாலசரஸ்வதியும்...

"அம்மா.. அந்தக் காலத்திலேயே... 'மாத்தி யோசி..' ரகமாச்சே..." என்று தங்களுக்குள் பேசி சிரித்துக் கொள்வார்கள்...

அப்படிப்பட்ட குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தவனுக்கு... அதற்கு நேர் எதிரான குடும்பச் சூழ்நிலையைப் பார்த்ததும் சுவராஸ்யம் ஏற்பட்டது..

தாடையைத் தடவியபடி கேள்வி கேட்ட கிருஷ்ணமூர்த்திக்கு ராதிகா என்ன பதில் சொல்லப் போகிறாள் என்ற ரீதியில் அவன் அவளைப் பார்த்து வைக்க...

Optimized by www.ImageOptimizer.net

"பார்த்தியாக்கா.. நான் வேடிக்கை பார்க்கிறதுக்கு என்கூட சண்டைக்கு வந்தியே.. இப்பப்பாரு.. உன்னை டிராப் பண்ண வந்தவரே.. வந்த வேலையை மறந்துட்டு.. நம்ம அப்பாவோட பஞ்சாயத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சுட்டார்..." என்று அவள் காதோரமாக முணுமுணுத்தான் சுந்தர்...

ராதிகாவுக்கும் அதே கோபம் தான்.. பாலமுரளியின் கண்களில் தென்பட்ட சுவாரஸ்யத்தை அவளும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்...

"ஏன் சார்... உங்களுக்கு என்நிலைமையைப் பார்த்தா எப்படி இருக்கு..?" அவன்கூட சண்டைக்குப் போனாள்...

"இப்ப எதுக்காகம்மா.. இவர்கூட சண்டைக்குப் போகிற...?"

"வேற என்னப்பா செய்றது..? நியாயமாப் பார்த்தா.. உங்ககூடத்தான் நான் சண்டை போடனும்.. அது முடியுதா..? அதனாலேதான் இவர்கூடயாவது சண்டை போடலாமேன்னு... சண்டைக்குப் போகிறேன்..."

"கேள்வி கேட்டா பதிலைச் சொல்லு... அதை விட்டுட்டு சண்டை போடனும்கிற அவசியம் என்ன..?"

கிருஷ்ணமூர்த்தி அடுத்த கேள்வியைக் கேட்க...

"நியாயம்தானே..." என்றாள் கீதா...



பாலமுரளியைப் போன்ற கம்பீரமான ஆண்மகனுடன்.. தனியாக காரில் வரும் வாய்ப்பு ராதிகாவுக்கு மட்டும் கிடைத்திருக்கிறதே என்ற பொறாமையுணர்வு அவள் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது...

"உனக்கெதுக்கு இத்தனை காண்டு..?" சுந்தர் சந்தேகமாக கீதாவைப் பார்த்து விழித்தான்...

"எய்ய்... எனக்கொன்னும் யார் மேலயும் காண்டு இல்லை.. இவ போகும் போது.. ஆட்டோவிலதானே போனா..? வரும்போது மட்டும் எப்படி காரில் வந்து இறங்குறா..?"

"ஓ.. உனக்கு இந்த காண்டா..?"

"போடா போ.. அப்பா கேட்கிற கேள்வியில நியாயம் இருக்கு.. நான் எப்பவும் நியாயத்தின் பக்கம்தான் நிப்பேன்..."

"எப்போதிருந்து..?"

"எப்பவும் நான் அப்படித்தான்.. நீங்க கேள்வி கேளுங்கப்பா.. நான் உங்க சப்போர்ட்தான்..."

"ஆமாமாம்.. நம்ம அப்பா என்னவோ நீங்களும் வெல்லலாம் ஒரு கோடிங்கிற மாதிரி கேள்வி ஒன்னைக் கேட்டுட்டார்.. அக்கா பதில் சொன்னதும்.. பணம்.. கொட்டோ.. கொட்டுன்னு கொட்டப் போகுது.. போடி.. போ..."

Optimized by www.ImageOptimizer.net

"அப்போ நீயென்ன இவளுக்கு சப்போர்ட்டா…?"

"ஆமாம்னுதான் வைச்சுக்கயேன்.."

"அப்பாதான் ஜெயிப்பார்.."

"அக்காதான் ஜெயிக்கும்…"

"என்ன பெட்..?"

"ஹண்ட்ரெட் ருபீஸ்…"

கணநேரத்தில் அங்கே 'ஆடுகளம்' உருவாக.. சண்டைக் கோழியும்.. சண்டைச் சேவலும் முறைத்துக் கொள்வதைப் போல.. கீதாவும்.. சுந்தரும் முறைத்துக் கொண்டார்கள்..

பாலமுரளிக்கு சிரிக்க வேண்டும் போல இருந்தது.. வெறும் சுவாரஸ்யமான பார்வைக்கே முறைத்துக் கொண்டிருக்கும் ராதிகாவைப் பார்த்ததும் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.. அவள் அதையும் கவனித்து விட்டு முறைப்பை அதிகமாக்கினாள்..

"என்ன இங்கே சத்தம்..?"

சமையலறையிலிருந்து காபிக் கோப்பையுடன் வெளிப்பட்ட ராஜேஸ்வரி சின்ன மகளையும்.. மகனையும் அதட்டினாள்…

"ஒன்னுமில்லேம்மா.. அப்பா ஒரு கேள்வி கேட்டா… இந்த ராதிகா அதுக்குப் பதில் சொல்லனுமா.. வேணாமா..?" கீதா கேட்டாள்..



"சரியாப் போச்சு போ.. நாட்டாண்மைக்கே ஒரு நாட்டாண்மையா..?"

சுந்தரின் கேள்வியைத்தான் அப்போது மனதில் கேட்டுக்கொண்டிருந்தார் கிருஷ்ணமூர்த்தி…

எப்போது அவர் விசாரணைக் கமிசனை போட்டாலும் இறுதித் தீர்ப்பை வழங்குவது ராஜேஸ்வரியாகவே இருப்பதன் மர்மம் என்னவாக இருக்கக்கூடும் என்று இதுவரை அவருக்கு புலப்படவே இல்லை…

யாரை அவர் கேள்வி கேட்டாலும்.. பதில் கிடைப்பது ராஜேஸ்வரிக்குத்தான் என்றால்… அவர் கேள்விக்குத்தான் என்ன அர்த்தம் இருக்கிறது..?

குடும்ப உறுப்பினர்களை ஆட்டுவிக்கும் நூலின் கயிறு அவரிடம் இல்லாமல் மனைவியின் கைக்கு எந்த நொடியில் இடம் மாறியது என்பதை அவரால் அனுமானிக்கவே முடிவதில்லை…

"அவர் கேள்வி கேட்பது ஒருபக்கமிருக்கட்டும்.. முதலில் வீட்டுக்கு வந்த விருந்தாளியை உட்காரச் சொல்லனுமா.. வேண்டாமா..? அந்த அறிவு கூடவா இங்கே யாருக்கும் இல்லாமப் போச்சு..? இதைக்கூட நான் வந்துதான் சொல்லனுமா..?" ராஜேஸ்வரி வெடித்தாள்…

"எங்கேம்மா..? அப்பாதான் என்னோடு இவரையும் சேர்த்து நிற்க வைத்து கேள்விமேல.. கேள்வியாய்

Optimized by www.ImageOptimizer.net

கேட்டுக்கிட்டே இருக்காரே... அப்புறம் எங்கே அவரை நான் உட்காரச் சொல்கிறதாம்..." ராதிகா குறைபட்டுக் கொண்டாள்...

"இந்த கீதா என்ன பண்றா..?"

"பெட்டடிக்கிட்டு இருக்காம்மா..."

"அது எதுக்காம்..?"

"ஜெயிக்கிறது.. அப்பாவா.. இல்லை நானான்னு பெட் கட்டுகிறாளாம்..." என்றாள் ராதிகா... சின்ன மகளை எரிப்பதைப் போலப் பார்த்தபடி

"நீங்க உட்காருங்க தம்பி..." என்றாள் ராஜேஸ்வரி...

'அப்பாடி.. ஒருவழியாய் உட்காரச் சொன்னாங்களே...'

நின்று.. நின்று கால் வலித்துப்போன பாலமுரளி சந்தோசமாக அமர்ந்து கொண்டான்...

"காபி சாப்பிடுங்க தம்பி..." ராஜேஸ்வரி காபி கப்பை நீட்டினாள் பாலமுரளி காபிக்கப்பை வாங்கி.. காபியை உறிஞ்ச ஆரம்பிக்க...

"தம்பிக்கு எந்த ஊரு..?" என்று ராஜேஸ்வரி கேள்வியை ஆரம்பித்தாள்...

"அது ரஜினிகாந்த் நடித்த படம்மா..." கீதா ஆர்வமாய் குறுக்கே பேச... அவளை முறைத்தாள் ராஜேஸ்வரி...

"உன்னைக் கேட்டேனா..?"



கீதா வாயை மூடிக் கொண்டாள்...

"நீங்க சொல்லுங்க தம்பி..." ராஜேஸ்வரி பாலமுரளியின் பக்கம் திரும்பினாள்...

"குற்றாலம் பக்கம்.. தேனூத்துங்கிற கிராமங்க..."

"அப்படிங்களா.. தம்பி அங்கே என்ன செய்யிறிங்க..?"

"அது இருக்கு நிறைய தொழில்ங்க.. தோப்பு வயல் செங்கல் சூளை... கரும்பு மில்.. ஜவுளிக்கடைன்னு அது அனுமார்வாலைப் போல நீண்டுக்கிட்டு போகும்ங்க..."

சாதாரணமாகப் பதில் கூறியவனை வியப்புடன் ஏற இறங்கப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி...

அவர்கள் வீட்டு வரவேற்பறையில் சுவாதீனமாக அமர்ந்து ராஜேஸ்வரி கொடுத்த காபியை மறுக்காமல் வாங்கிக் குடித்துக் கொண்டிருப்பவனின் உயரம் அவரை திகைப்பில் ஆழ்த்தியது...

'யாருன்னு இப்போது தெரியுதா..? இந்த உயரத்தைத்தான் உட்கார விடாம நிற்க வைச்சுக்கிட்டு உங்க மகளை கேள்வி கேட்டுக்கிட்டு இருந்தீங்க...'

ராஜேஸ்வரியின் பார்வை அவரைச் சுட்டது... அதன் தகிப்பிற்கு பழக்கப்பட்டிருந்தாலும்... எப்போதும் போலவே.. இப்போதும் அவர் தாங்க மாட்டாமல் நெளிந்தார்..

"நீங்க... ராதிகாவோட பிரண்டுக்கு உறவு முறைங்களா..?"

Optimized by www.ImageOptimizer.net

"ஆமாங்க.. என் அக்காவைத்தான்.. ஷோபாவோட பெரியம்மா மகனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கோம்..."

"ஓ... அப்போ.. அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற உறவு முறைன்னு சொல்லுங்க..."

ராஜேஸ்வரியின் இந்தக் கேள்வியினை பாலமுரளியும் ரசிக்கவில்லை.. ராதிகாவும் ரசிக்கவில்லை..

எனவே பாலமுரளி அதற்கு பதில் சொல்வதைத் தவிர்த்து மௌனமாக சிரித்து வைத்தான்...

"ராதிகாவை வீட்டில் டிராப் பண்ணி விடறேன்னு நீங்க சொன்னீங்களா..?"

ராஜேஸ்வரி இயல்பாக கேட்பதைப் போலக் கேட்டுவைக்க.. அவளின் புத்தி கூர்மையில் ஆச்சரியப் பட்டுப் போனான் பாலமுரளி...

கிருஷ்ணமூர்த்தி நேரடியாக கேட்ட கேள்விக்கான பதிலை மறைமுகமாய் அவன் வாயிலிருந்து வரவழைக்க முனையும் ராஜேஸ்வரியின் சூட்சுமம் நிறைந்த சாதுர்யம் அவனைக் கவர்ந்தது...



# 17

ராத்திரி நேரத்து ரகசியக் கனவினில்
உன்முகம் கண்டு உறக்கத்தை தொலைத்தேன்...

அந்தக் கேள்வி... கிருஷ்ணமூர்த்தியின் கேள்வியை விட ஆழம் நிறைந்தது.. வெளியே கேட்பதற்கு மேம்போக்காய் தோன்றினாலும்.. பல அர்த்தங்கங்களை உள்ளடக்கியது...

நீ யார்...? எந்த ஊர்..? என்ன செய்கிறாய்..? உனக்கும் என் மகளின் தோழிக்கும் என்ன சம்பந்தம்...? இந்த இரவு நேரத்தில் என் மகளை... உன்காரில் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாயே.. உன் காரில் ஏறச் சொல்லி நீதான் சொன்னாயா..? இல்லை என் மகளே உன் காரில் ஏறிவந்தாளா...?

இத்தனை கேள்விகளையும் உள்ளடக்கிய கேள்வியை அவனை உட்கார வைத்து.. இதமாக உபசரித்து... கையில் காபிக் கப்பையும் கொடுத்து.. அவன் காபியை பருகிக் கொண்டிருக்கும் போது கேட்டு வைக்கும் அவளின் சாமர்த்தியம் அவனை மனதிற்குள் 'சபாஷ்' போட வைத்தது...

Optimized by www.ImageOptimizer.net

ராதிகாவின் முகம் சிவந்து போனது...

தாயின் கேள்வியின் உட்பொருளை உணர்ந்து கொள்ளாமலிருக்கும் அளவிற்கு அவள் முட்டாளில்லை...

அவன் என்ன நினைப்பான் என்ற நினைவில் அவள் நொந்து போனாள் ஆனாலும் அவளால் எதுவும் செய்ய முடியாது...

அது அவளின் குடும்பம்... இரவு வேளையில் தனியாக ஒரு அந்நிய ஆணுடன் காரில் வந்து இறங்கியிருக்கிறாள்.. இது போல ஒன்றை இதற்கு முன்னால் அவளோ.. கீதாவே செய்ததில்லை... அதை அவர்களது பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள்...

அப்படியிருக்கும்போது... முதல் முறையாக அதைச் செய்திருக்கும் ராதிகா... இதுபோன்ற விசாரணைகளை எதிர் கொண்டு.. பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்...

அவளுக்கு என்ன வென்றால்.. இந்த விசாரணைக் கமிசனை அவனிடம் மட்டும் அவர்கள் வைத்துக் கொண்டால் ஆகாதா என்பது தான்...

அவனை அனுப்பி வைத்துவிட்டு.. அவளை நிற்க வைத்துக் கேள்வி கேட்டால்.. அவள் பதில் சொல்ல மாட்டாளா..? அதை விட்டுவிட்டு.. அவனை உட்கார வைத்து.. கையில் காபிக் கப்பையும் கொடுத்து... அவன் குடித்துக் கொண்டிருக்கும் போதே.. விவரங்களை தொண்டையிலிருந்து தோண்டி எடுக்க வேண்டுமா..?



ராஜேஸ்வரி ராதிகாவின் முகச்சிவப்பையும்.. முகச் சுளிப்பையும் கண்டு கொள்ளவே இல்லை...

என்னவோ காலம் காலமாய் பால முரளியுடன் பழகியவளைப் போல அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

பாலமுரளி காலி காபிக் கப்பை எதிரிலிருந்த டீபாயின் மேல் வைத்துவிட்டு... இயல்பாக நிமிர்ந்து அமர்ந்து புன்னகைத்தான்...

"ராதிகாவை நான் டிராப் பண்ணிவிடறேன்னு சொல்லவும் இல்ல.. அவங்களும் என் காரில் லிப்ட் கேட்டு வரவும் இல்ல.. ஷோபா.. அதுதான்.. ராதிகாவோட ஃப்ரெண்டு.. அவதான் என்கிட்ட இவங்களையும்.. இவங்க ஃப்ரெண்டையும் வீட்டில் டிராப் பண்ணி விடுங்கன்னு கேட்டுக்கிட்டா.. இருட்டின பின்னாலே இவங்களை ஆட்டோவில் தனியாய் அனுப்பனுமேன்னு கவலைப்பட்டா.. வயசுப்பெண்களாச்சே.. சரி.. போகிற வழிதானே.. பாதுகாப்பாய் காரில் கூப்பிட்டுக்கிட்டுப் போய் இறக்கிவிட்டுட்டுப் போகலாமேன்னு நானும் ஓகேன்னு சொல்லிட்டேன்..."

எப்படி ராஜேஸ்வரியின் புத்தி கூர்மையை முரளிக்கு பிடித்துப் போய் விட்டதோ.. அதைப்போல... முரளியின் புத்தி கூர்மையும் ராஜேஸ்வரிக்குப் பிடித்துப் போய் விட்டது...

Optimized by www.ImageOptimizer.net

எனக்கும் உங்கள் மகளுக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை.. என் காரில் அவளை ஏறச் சொல்லி நானும் சொல்லவில்லை.. என்கூட வருவதாக அவளும் சொல்லவில்லை.. இது இரவு நேரம்.. அவளும் அவள் தோழியும் வயதுப் பெண்கள்.. நான் விருந்து முடிந்து நான் தங்கியிருந்த இடத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தேன்.. போகும் வழியில் இவர்கள் இருவரையும் இறக்கிவிட்டுப் போக முடியுமா? என்று என் உறவுக்காரப் பெண் கேட்டாள்... இரவு நேர ஆட்டோப் பயணத்தை இவர்கள் மேற்கொள்ள வேண்டாமே என்று நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன்.. மற்றபடி.. இந்த கார் பயணத்தின் பின்னணியில் எந்தவித நோக்கமுமில்லை...

பாலமுரளியின் பதில் இத்தனை விவரங்களையும் உள்ளடக்கியதாக இருக்க.. ராஜேஸ்வரி முகம் மலர்ந்து போனாள்...

"தம்பி ரொம்ப யதார்த்தமா பேசறிங்க..."

"நாங்க கிராமத்துக்காரங்க.. எங்க ஊரில வயசுப் பொண்ணுக ராத்திரி நேரத்தில் தனியாய் வந்தா.. அது மாட்டு வண்டியாய் இருந்தாலும் சரி.. காராக இருந்தாலும் சரி... நிறுத்தி அவங்களை ஏற்றிக் கொண்டு போய் அவங்க வீட்டில விட்டுவிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்போம்.. அந்தப் பழக்கம்.. இன்னைக்கும் வந்துருச்சு.. மத்தபடி உங்களையெல்லாம் பார்த்ததிலே ரொம்ப சந்தோசம்... குற்றாலம் பக்கம் வந்தா எங்க ஊருப்பக்கமும் வந்துட்டுப் போங்க.. எங்க அம்மா சந்தோசப்படுவாங்க..."



இப்போதும் அவன் சந்தோசப்படுவான் என்று கூறாமல் அவனுடைய அம்மா சந்தோசப்படுவாள் என்று கூறிய அவனுடைய சாதுர்யத்தைக் கண்டு ராஜேஸ்வரியின் முகம் இன்னும் அதிகமாக விகசித்தது...

அவனுடன் பேசுவதை அவள் விரும்பினாள்.. இவ்வளவு பெரிய கோடிஸ்வரன்.. எந்தவித பந்தாவுமில்லாமல்.. அவர்கள் வீட்டு வரவேற்பறையில் அமர்ந்து எளிமையாக பேசிப் பழகுவதை அவளால் நம்பவே முடியவில்லை...

"குற்றாலம் பக்கம் வரனும்னு ரொம்பநாளா நானும் நினைச்சுக்கிட்டுத்தான் இருக்கேன் தம்பி..."

கணவரைப் பார்த்தபடி அவள் சொல்ல.. எதற்கு தன் அதை அவரைப் பார்த்தபடி சொல்கிறாள்.. என்று அவர் யோசித்தார்...

'எழுமிச்சைப் பழத்தை என் தலையில் தேய்த்து அருவியில் காட்ட வைக்கனும்ன்னு நினைச்சிருந்தாளோ..'

அவளது நினைவின் ஓட்டத்தை அவரால் கணிக்க முடிந்தது.. இதைத்தான் நினைத்தாயா என்று கேட்கத்தான் பாவம்.. அவரால் முடியவில்லை...

'ஆமாம்' என்ற பதில் வந்து விட்டால்.. அவர் கட்டிக்காக்கும் கௌரவத்திற்கு பங்கம் வந்து விடாதா..?

அதனால் வாய்மூடி மௌனியாகி விட்டார்... தானால்.. கீதாவும் சுந்தரும் அப்படி மௌனியாகி

Optimized by www.ImageOptimizer.net

விடுவார்களா..? அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்து பொங்கிச் சிரித்து வைத்தார்கள்..

"சென்னையில இருக்கிற தண்ணிப் பஞ்சத்துக்கு குற்றால அருவிப்பக்கம் வந்து.. குளிர்ச்சியாய் கண்குளிர அந்த அருவித் தண்ணியை கண்ணாலேயாவது பார்த்துட்டு வரணும்னு ரொம்ப நாளா ஆசைதான் தம்பி.. எங்கே.. நினைப்பையெல்லாம் செயல்ல காட்ட முடியுதா..?"

"ஏன் முடியாது..?"

"நீங்க வேற.. இந்த வீட்டிலே இருக்கிற ஐந்து ஜீவனும் ஐந்து திசையை பார்த்துக்கிட்டு இருக்கும்.. இதில எல்லாத்தையும் ஒன்று சேர்த்து ஒரு இடத்துக்கு கூப்பிட்டுக்கிட்டு போகிறதுக்குப் பதிலா.. மலையைக் கட்டி இழுத்துரலாம் தம்பி..."

ராஜேஸ்வரி சொன்ன விதத்தை ரசித்துச் சிரித்தான் பாலமுரளி...

'வந்தவரின் முன்னாலே.. வீட்டாரின் குணாதிசியத்தை இவங்க படம் பிடிச்சுக்காட்டனுமா..?' ராதிகா மனதுக்குள் வெகுண்டாள்...

அந்த கோபத்தில் ராஜேஸ்வரியுடன் மோதினாள்..

"எம்மா இருக்கிறது நான்கு திசை... இதில ஐந்தாவதா ஒரு திசையை நீங்க உருவாக்கின எப்படிம்மா..?"



"அப்படியாம்மா..? இந்த தென்மேற்கு.. வடகிழக்குன்னு எல்லாம் சொல்வாங்களே.. அதெல்லாம் திசையில சேர்த்தியில்லையா..?"

ராஜேஸ்வரி மடக்க... பாலமுரளியின் முன்னால் தன் புத்திசாலித்தனம் குறைந்து போனதில் ராதிகாவிற்குள் கோபம் எழுந்தது...

அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் அவள் தந்தையை மௌனப் பார்வை பார்க்க...

'அவ அப்படித்தான் மகளே...' என்று கிருஷ்ணமூர்த்தி மகளை தன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஆறுதல் பார்வை பார்த்தார்...

"எப்படியோ.. ஐந்து திசையும் ஒன்னாச் சேர்ந்தா எனக்குத் தகவல் சொல்லிட்டு கிளம்பி வாங்க... நான் எங்க ஊருப்பக்கமெல்லாம் சுற்றிக் காட்டறேன்..."

பாலமுரளி எழுந்து நின்று கை கூப்பினான்.. கிருஷ்ணமூர்த்திக்கு ஒருவழியாய் அவன் கிளம்பி விட்டதில் ஏக சந்தோசம்.. அந்த சந்தோசத்தில் வாசலுக்கே போய் அவனை வழியனுப்பி விட்டு வந்தார்...

"எம்மா.. வந்தவங்க முன்னாலே இப்படியா என் இமேஜை டேமேஜ் பண்ணுவிங்க..."

அவன் போகும் வரை பல்லைக்கடித்துக் கொண்டு பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்திருந்த ராதிகா.. பொறுமையிழந்தவளாக வெடித்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

அவளின் அணை உடைந்த கோபத்தை ராஜேஸ்வரி லட்சியமே பண்ணவில்லை... இதைப் போல எத்தனையைப் பார்த்திருப்பேன் என்பதைப் போல ஒரு பார்வையை பார்த்து வைத்தாள்..

"எதுக்குடி இப்ப... குழம்பில போட்ட மீனாட்டம் இந்தத் துள்ளு துள்ளறே... ?"

"அம்மா கடுப்பைக் கிளப்பாதீங்க.. ஒருத்தர் ஐயோ பாவமேன்னு பரிதாபப்பட்டு வீட்டில் கொண்டு வந்து விட வந்தா.. இப்படியா பிஹேவ் பண்ணுவீங்க... ?"

"அதை என் கிட்டச் சொல்லாதே... உன் அப்பாகிட்டச் சொல்லு... அவர்தான் இங்கிதமில்லாம.. வந்தவரை உட்காரச் சொல்லனும்கிற நாகரிகம் கூட இல்லாம... அவரை நிற்க வைச்சுக்கிட்டே.. அவர் முன்னாலே உன்னைக் கேள்வி கேட்டாரு..."

'எடுத்துக் கொடுக்கிறாளே...'

அப்போது தான் மகளுடன் கூட்டணி அமைந்திருந்த கிருஷ்ணமூர்த்தி.. அந்தக் கூட்டணி உடைந்து விடுமோ என்ற மனக்கிலேசத்துக்கு ஆளானார்...

"அவரைச் சொல்கிறீங்களே... நீங்க மட்டும் என்னவாம்.. அப்பா அவரை நிற்க வைத்து என்கிட்டக் கேட்ட கேள்வியை... அவரை உட்கார வைத்து.. கையில காபிக் கப்பையும் கொடுத்து.. அவர்கிட்டயே நீங்க கேட்டிங்க.. தானிக்கு பேரு ஏமி... ?"



"என்னது.. ?"

"தானிக்கு பேரு ஏமின்னேன்.."

"ஏண்டி சீதா.. இவ என்னவோ சொல்றாளே.. அதுக்குப் பெயர் என்னடி.. ?"

"அதைத்தான் சொல்றாம்மா..."

"அப்படின்னா.. ?"

"அம்மா.. தானிக்கு பேரு ஏமின்னா... அதுக்குப் பெயர் என்னன்னு அர்த்தம்.. அதைத்தான் இவ தெலுங்கில சொல்றா.."

"இப்படிப் பேச எங்கேடி கத்துக்கிட்டா.. ?"

"இவ கூட தெலுங்குக்காரப் பொண்ணு ஒன்னு படிக்குதாம்.."

"அட்லன்னா..."

"அப்படின்னா... ?"

"அப்படியான்னு அர்த்தம்... இவளுக்குத்தான் தெலுங்குக்காரங்க சிநேகிதமா இருப்பாங்களா... எனக்கு இருக்க மாட்டாங்களா..? மூணாம் வீட்டு கோகிலா ஆந்திராக்காரப் பொண்ணுதான்... உன் அக்கா பேசினா... நான் பேச மாட்டேனா..? யாருகிட்ட.. ?"

"அம்மா.. இப்ப எதுக்கு பேச்சை மாத்தறிங்க... நீங்க செய்தது சரியில்லை... அதை ஒப்புக்குங்க..."

Optimized by www.ImageOptimizer.net

"அசந்தும் பல்லைக் கழட்டி விடுவேன்... ஆளைப்பாரு.. என்டி... இருட்டின பின்னாலே பக்கத்துக்குப் போகிறேன்னு போனவ.. யாரோ ஒருத்தன் கூட காரில வந்து இறங்கிற.. அதை என்ன ஏதுன்னு விசாரிக்கலைன்னா.. அவங்க பெத்தவங்களாடி..? அது குடும்பமாடி..? நாங்க அப்படித்தான் இருப்போம்.. நாங்க விசாரிக்கிற அளவுக்கு நீ என் வைச்சுக்கற..?"

கேள்வி கேட்ட மகளிடம் பதில் கேள்வி கேட்டு விட்டு ராஜேஸ்வரி கோபத்துடன் உள்ளே போய்விட... 'நாங்க...' என்று அவரையும் மனைவி கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் கிருஷ்ணமூர்த்தி.. அவசரமாக கட்சி மாறினார்...



## 18



*என் ராத்திரித் தூக்கத்தை*
*நீயேன் தின்றாய்...?*

குளியலறையிலிருந்து வெளியே வந்த பாலமுரளி... கைலிக்கும்.. கையில்லாத பனியனுக்கும் மாறினான்.. அறைக்கதவு தட்டப்பட.. திறந்தான்..

"சார்.. பால்..." ரூம்பாய் நின்றிருந்தான்...



"தேங்க்ஸ்... நீ போ..." அவனை அனுப்பி விட்டு.. [illegible]ரோடு கட்டிலில் சாய்ந்த வாக்கில் அமர்ந்து டிவியை பார்த்த வண்ணம் பாலை அருந்த ஆரம்பித்தான்..

சற்றுமுன் ராதிகாவின் வீட்டில் குடித்த காபியின் நினைவு அவனுக்கு வந்தது...

'ஜாலியான குடும்பம்...'

மாணிக்கவாசகம் உயிரோடு இருந்த காலத்தில் கூட இப்படி அவர்கள் குடும்பத்தில் சேர்ந்து பேசி சிரித்ததில்லை... அவர் போன பின்பு கேட்கவே வேண்டாம்...

மூச்சை முட்டும் வேலைகளில் பாலமுரளியும்.. முடிவேயில்லாத சோகத்தில் மேகலாவும்.. எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் பால சரஸ்வதியும் மூழ்கி விட்டார்கள்..

அதிலிருந்து மீண்டு கொஞ்சம் இயல்பு நிலைக்கு குடும்பம் வந்த போது.. பாலசரஸ்வதி திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்குப் போய்விட்டாள்.. பாலமுரளி பணத்தை துரத்த ஆரம்பித்து விட்டான்.. மேகலா கோவில்களில் உள்ள தெய்வங்களிடம் குறைகளை பகிர்ந்து கொண்டு.. மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முயலாமல் தனக்கென்று ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டுவிட்டாள்..

இப்படி ஆளுக்கொரு திசையில் பயணிப்பவர்களுடன் இருப்பவனுக்கு.. மனதிலிருப்பதை

Optimized by www.ImageOptimizer.net

அப்படியே பேசிவிடும் குடும்பத்தைக் கண்டால் ஆச்சரியமாகத்தானே இருக்கும்..?

'இந்த வீட்டிலிருக்கிற ஐந்து பேரும் ஐந்து திசைகளில் பார்ப்பாங்க தம்பி...'

ராஜேஸ்வரியின் குரல் அவன் காதுகளில் ஒலித்தது...

'நாங்க மூணு பேரும்.. மூணு திசைகளிலே இருக்கிறோம். இது உங்களுக்குத் தெரியுமா..?'

பாலமுரளி விளக்கையும்.. டிவியையும் அணைத்து விட்டு கண்களை மூடினான்.. மூடின கண்களுக்குள் ராதிகாவின் முகம் தெரிந்தது.. உறக்கம் வராமல் புரண்டு படுத்தான்...

**'சொல்ல நினைத்த வார்த்தைகள்<br>சொல்லாமல் போனதேன்...?'**

அவளின் பாடல் நினைவுக்கு வந்தது...

'உனக்கு மட்டுமா இந்த துன்பம்..? எனக்கும்தான்..'

ராதிகாவின் அழகைப் புகழ நினைத்தான்.. அதைச் சொல்லவில்லை... அவளின் துறுதுறுப்பை வியக்க நினைத்தான்... அதைச் சொல்லவில்லை... அவளைப் பிடித்திருப்பதை உணர்த்த நினைத்தான்... அதையும் சொல்லவில்லை...



சொல்ல நினைக்கும் வார்த்தைகளை.. பெண்களால் மட்டுமே சொல்ல முடியாமல் போவதில்லை... ஆண்களுக்கும் அதே நிலைதான்...

உறக்கமின்றி அவன் எழுந்து.. பால்கனிக் கதவைத் திறந்தான்.. சில்லென்ற கடல்காற்று அவன் உடலைத் தழுவியது...

அதே நேரத்தில்.. ராதிகாவின் வீட்டில் அவளும் உறக்கத்தோடு போராடிக் கொண்டிருந்தாள்...

'யார் அவன்..?'

அவளுக்கு அவன் பெயர் தெரியும்... ஊர் தெரியும்... ஆனாலும் அவள் மனதில் அந்தக் கேள்வி எழுந்து நின்றது...

'இத்தனை நாளாய் எங்கிருந்தான்..?'

அவள் கனவிலும் நினைக்கவில்லையே... வேண்டா வெறுப்பாகத்தானே ஷோபா வீட்டுக்குப் போனாள்.. அங்கே இப்படியொரு ஆண்மகனை சந்திப்போம் என்று நினைத்தா பார்த்தாள்...?

**'இன்று காதல் ஏக்கம் தந்தாள்... சென்றாள்...<br>நாளை என் செய்வாளோ....'**

இந்தப் பாட்டிற்கு அவனால் இப்படியொரு உயிர் கொடுக்க முடியும் என்று அன்றுதான் அவள் உணர்ந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

மறுநாள் காலேஜில் அவனைப் பார்த்த ஹேமா புருவங்களை சுருக்கி ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தாள்...

"அடச்சீ.. அப்படிப் பார்த்து வைக்காதே.." ராதிகா அதட்டினாள்...

"நான் பார்த்தா கசக்கும்.. அந்த பாலமுரளி பார்த்தால் மட்டும் இனிக்குமாக்கும்..." ஹேமா நொடித்தாள்...

"ஏய்.. தேவையில்லாம பேசாதேடி... உன்கிட்ட அப்படி வந்து நான் சொன்னேனா..?"

"சொன்னால் தானா..? நீ பார்க்கும் பார்வையிலேயே அது தெரிஞ்சதே..."

முதல்நாள் இரவில் அவனைச் சந்தித்த நொடிகளை மனம் அசைபோட ஆரம்பிக்க.. இனிய உணர்வென்று மனதில் எழுவதை உணர்ந்தாள் ராதிகா...

"நீ ரொம்பத்தான் கண்டே..."

"கண்டதால்தான் சொல்கிறேன்..."

"போடி... போய் படிக்கிற வேலையைப் பாரு..."

"நீ அவனை நினைக்கிற வேலையைப் பார்க்கப் போகிறியாக்கும்..?"

ஹேமாவின் கேள்வியில் முகம் சிவந்தாள் ராதிகா... அதை விசித்திரமாக பார்த்தாள் ஹேமா...



"ஒன்னுதாண்டி இடிக்குது..."

"ஒன்னா..? உனக்கு ஓராயிரம் இடிக்குமே..."

"இப்போ ஒன்னே ஒன்னுதான் இடிக்கவைக்குது.."

"என்னவாம்..?"

"அவனே பட்டிக்காட்டு பண்ணையாராய் இருக்கிறான்... அவனுக்கு முன்னாலேயே நம்ம 'தல'யப் போல செம ஹேண்ட்சம்மா ஒருத்தன் வந்து நம்ம முன்னாலே நின்னான்..."

"தலயா...?"

"ம்ம்... 'தல' தான்.. 'தல'யப்பத்தி நீ கேள்விப்பட்டதில்ல.."

"நீயே கேள்விப்பட்டிருக்கிறப்போ.. நான் கேள்விப்பட்டிருக்க மாட்டேனா..? ஆனா அந்த சங்கரைப் போய் அஜித் ரேன்ஜ்க்கு நீ பேசறதுதான் ஆச்சரியமாயிருக்கு..."

"அவன் அஜித்தை விடவும் அழகாயிருந்தான்..."

"எனக்கொன்னும் அப்படித் தோணல..."

"அதுதான் ஏண்டி..?"

'ஏன்..?'

அது ராதிகாவிற்கும் புரியவில்லை.. முதல்நாள் விருந்தின் போது அவர்களிடம் முதன்முதலாக அறிமுகமாகி ஆர்வம் காட்டிப் பேசியது சங்கர்தான்..

Optimized by www.ImageOptimizer.net

அவனை விட்டுவிட்டு.. பாலமுரளியின் பின்னால் ஏன் மனம் போகிறதென்று அவளுக்கே புதிராக இருந்தது...

"நாமளே சிட்டியில பிறந்து வளர்ந்தவங்க..."

"அதுக்கென்ன..."

"நமக்கெல்லாம் பட்டிக்காடு தோதுப்படுமா ராதிகா.. ?"

"இப்ப எதுக்காக உன்னோடு என்னையும் சேர்த்து கூட்டணி போடற.. ?"

"ஒரு பிரண்ட்ஷிப்புதான் ராதும்மா..."

"ஒரு ஷிப்பும் வேண்டாம்.. எதில கூட்டணி போடறதுங்கிற விவஸ்தையே உனக்கில்லையா.. ?"

"பேச்சுக்குத்தாண்டி..."

"பேச்சுக்கு கூட இதில கூட்டணி சேராதே..."

"விடுடி.. விடுடி.. இது ஒரு பேச்சா.. ?"

"தெரியுதில்ல... பேச்சை விடு.. இனிப் பேசாதே.."

"உனக்கெதுக்கு இவ்வளவு கோபம் வருது... ?"

திரும்பவும்... ஏன் என்ற கேள்வி துரத்த.. ராதிகா மௌனமானாள்... அவளது இயல்பிற்கு பொருத்தமில்லாத மௌனத்தில் அவள் தன்னை பொருத்திக் கொண்டதில் ஹேமா வியப்புற்றாள்...

'இவ எதுக்கு இப்படி பேசாம இருக்கா.. ?'



தூரத்தில் ஷோபாவின் கார் தெரிந்தது... சாலையோரச் செடிகளின்மீது பார்வையைப் பதித்திருந்த ராதிகாவின் கையை மெதுவாக கிள்ளினாள் ஹேமா... அவள் கவனம் கலைந்தாள்...

"என்னடி... ?"

"ஷோபா வருகிறா..."

"வரட்டுமே... ஷோபாதானே வருகிறா... ? என்னவோ எலிசபெத் மகாராணி வருகிறதைப் போல இப்படியொரு பில்ட் அப்பைக் கொடுக்கிற..."

ஷோபா.. காரிலிருந்து வெளிப்பட்டு நடந்து வந்த தோரணையைக் கண்ட ஹேமா...

"அவ அப்படித்தாண்டி பில்ட் அப் கொடுத்துக்கிட்டு இருப்பா..." என்றாள்..

ராதிகா அசுவராஸ்யமாக ஹேமா வரும் திசையைப் பார்த்தாள்.. அவள் பார்வையைச் சந்தித்த ஷோபாவின் விழிகளில் அலட்சியம் நிறைந்திருந்தது...

'நேத்து என் வீட்டையும்.. வசதியையும் பார்த்துட்டா இல்ல.. அதான் 'ஆ'ன்னு என்னைப் பார்க்கிறா... இப்பத் தெரிஞ்சிருக்குமே.. இந்த ஷோபா யாருன்னு... இனிமே என்கிட்ட ஆட்டம் காட்டாம அடங்கிப் போயிருவா...'

ஷோபாவின் கணிப்பு பொய்த்தது... ராதிகா அடங்கிப் போகவில்லை... ஷோபாவின் பார்வையை தன்னைவிட அதிக அலட்சியமான பார்வையுடன் எதிர்கொண்டாள் ராதிகா...

Optimized by www.ImageOptimizer.net

அதைக் கண்ட ஷோபாவின் கண்களில் யோசனை வந்தது...

'இன்னுமா இவள் திமிர் அடங்கலை.. ?'

அவள் ராதிகாவை கண்டு கொள்ளாமல் அவளருகில் அமர்ந்திருந்த மற்ற தோழிகளிடம் பேச ஆரம்பித்தாள்...

"என்னடி இவ இப்படிச் செய்கிறா.. ?" என்றாள் ஹேமா..

"எப்படிச் செய்கிறா.. ?"

"நம்மளை கண்டுக்கவே மாட்டேங்கிறா..."

"எதுக்கு கண்டுக்கணும்.. ?"

"ஏண்டி.. நேத்து இவதானே வருந்தி வருந்தி நம்மள இவ வீட்டு பர்த்டே பார்ட்டிக்கு இன்வைட் பண்ணினா.. ?"

"ஆமா.. பண்ணினா..."

"நாமளும் போனமா.. இல்லையா.. ?"

"போனோம்..."

"இவளோட ரிலேடிவ் காரில நம்மள திருப்பி அனுப்பி வைச்சாளா இல்லையா.. ?"

"ஆமா... அனுப்பி வைச்சா.."

"அப்படியிருந்தவ.. இப்படி யாரோ மாதிரி பார்த்துக் கிட்டுப் போறாளே... இதுக்கு என்னடி அர்த்தம்... ?"



"மேடம் பெரிய ரேன்ஜில் இருக்கிறவங்களாம்... அவங்க நம்மள இன்வைட் பண்ணினதே பெரிய விஷயமாம்.. அதைப்பத்தி நினைச்சுக்கூட அவங்க பார்க்க மாட்டாங்களாம்... அப்படியிருக்கப்ப... அதைப்பத்தி பேசுவாங்களா.. ?"

"அவ இப்படியா நினைக்கிறா.. ?"

"வேற எப்படி நினைப்பா.. ? எனக்கு அவ நினைப்பைப் பத்தித் தெரியாதா... ?"

ராதிகாவின் உதடுகளில் அலட்சியப் புன் முறுவல் தெரிந்தது... அவளும் ஹேமாவும் ஷோபாவை ஜாடையாக பார்த்தபடி ரகசியம் பேசியதில் ஷோபா பாதிப்பிற்கு உள்ளானாள்...



## 19



உன் பார்வைபோல் ஒருபார்வையை
வேறு யாரிடமும் நான் பார்த்ததில்லை...

'என்னடி இது... இவங்க இரண்டு பேரும் என் ரேன்ஜைப் பார்த்து அசந்து போயிருவாங்கன்னு நினைத்தா... இவளுக உனக்கெல்லாம் ஒரு கணக்கான்னு அப்படிப் பார்த்து வைக்கிறாங்களே...' ஷோபா முகம் மாறினாள்...

"நான் ஷோபா... நேற்றைக்கு பார்த்தே பங்சனுக்கு வரமுடியலை நீ ஆம் ஸாரி... டாடி மம்மி கூட வேற ஒரு புரோக்ராமுக்கு நான் போக வேண்டியிருந்தது..." வருத்தம்... தெரிவித்தாள் திவ்யா...

"இட்ஸ் ஆல்ரைட்... உனக்கு ஆயிரம் புரோக்ராம் இருக்கும்... நீயென்ன வெட்டியாகவே இருந்திருக்கப் போகிற... ? உன்னால எப்படி வரமுடியும்... ?"

இதைச் சொல்லியபடி ராதிகாவை ஷோபா ஜாடையாக பார்க்க ஹேமா பல்லைக்கடித்தாள்...

"ஏய்.. இவ நம்மளத்தான் சொல்கிறாடி..."

"எனக்கும் தெரியுது..."

"எவ்வளவு கொழுப்புன்னு பார்த்தியா..."

"இவளப்பத்தி இன்னைக்குத்தான் புதுசா உனக்குத் தெரியுமா... ?"

"தெரிஞ்சிருந்தும் எதுக்காகடி.. இவ வீட்டு பங்சனுக்கெல்லாம் போகனும்.. ?"

"கூப்பிட்டா... போனோம்..."

"இப்ப என்ன பேச்சு பேசறான்னு கேட்டியா.."

"இவ எவ்வளவு தூரத்துக்குத்தான் போவான்னு பார்ப்போமே..."

தான் பேசிய பேச்சில் ராதிகா காயப்பட்டுப் போவாள் என்று எதிர்பார்த்திருந்த ஷோபா ஏமாந்து போனாள்...



அவள் ஒருத்தி அங்கே நின்று கொண்டிருக்கிறாள் என்ற உணர்வே இல்லாததைப் போன்ற பாவனையுடன்.. ராதிகாவும்... ஹேமாவும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்...

'என்ன... ஒரு ரியாக்ஷனையும் காணோமே....'

ராதிகாவைத் தோற்கடிக்கும் முயற்சியில் ஷோபாவின் ரத்த அழுத்தம் எகிற ஆரம்பிக்க.. அவள் சோர்ந்து போனாள்...

'இதுக்கொரு முடிவேயில்லையா... ?'

அவளுடைய வீட்டின் பிரம்மாண்டத்தையும்.. அவளது பிறந்தநாள் விழாவின் பட்டோடபத்தையும்.. அவள் அணிந்திருந்த வைர நகைகளையும்... அவள் வீட்டு விருந்திற்கு வந்திருந்த கார்களின் எண்ணிக்கையையும்.. பார்த்த பின்புமா.. ராதிகா அதே பழைய அலட்சியத்தை கடைபிடிக்கிறாள்.. ?

"பங்சன் எப்படி இருந்தது ஷோபி... ?"

"கிராண்டாய் இருந்தது திவ்யா.."

"என்னாலேயும் வரமுடியலை ஷோபா..."

"இட்ஸ் ஆல்ரைட் ஷீலா..."

"எனக்கும் வரனுமுன்னு ஆசைதான்.. பட்.. கிளம்பும் போது கெஸ்ட் வந்துட்டாங்க ஷோபா..."

"உன்னை நான் எதிர்பார்த்தேன் லாவண்யா..."

Optimized by www.ImageOptimizer.net

"எனக்கும் உன் பர்த்டே பங்சனின் நினைவுதான்.. இந்தத் தடவை கார்டனில் வைத்திருக்கிறதாய் சொன்னேயில்லையா... எப்படித்தான் இருந்ததுன்னு வந்து பார்த்திருக்கலாம்..."

"ஏன்.. வந்திருந்தவங்க உன்னிடம் அதைப்பத்தி சொல்லவே இல்லைய...?"

ராதிகாவும்.. ஹேமாவும் சொல்லியிருப்பார்கள் என்ற நினைவில் கேட்டாள் ஷோபா...

"இல்லையே..."

மற்றவர்கள் விழி விரிக்கவும் அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... ராதிகாவின் திமிரை நினைத்து மனதிற்குள் வெகுண்டாள்...

"யாரு வந்திருந்தது ஷோபா...?"

ஷீலா கேட்டதும்.. எப்படி ராதிகாவின் பெயரைச் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள் ஷோபா...

அவளது தவிப்பை ரசித்துப் பார்த்த ஹேமாவிற்கு குளுகுளுவென்று இருந்தது...

"அப்படியே இஞ்சி தின்ன குரங்கைப் போலவே இருக்கிறாடி..." என்றாள்...

அதற்குள் ராதிகாவைத் திரும்பிப் பார்த்த திவ்யா...

"ராதிகாவும்.. ஹேமாவும் வந்திருப்பாங்களே..." என்று சொல்லி விட்டாள்...



"ஃபிட்..? ராது.. சொல்லு... நேற்று இவளோட பர்த்டே பார்ட்டி எப்படியிருந்தது..?"

மற்றவர்கள் விசாரிக்க ஆரம்பிக்கவும்.. ஷோபா கோபமான பார்வையொன்றை ராதிகாவின் மீது செலுத்தி விட்டு அவள் என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தாள்...

"கிடைச்சது சான்ஸ் ராது.. பூந்து விளையாடு..." ராதிகாவின் காதோரமாக கிசுகிசுத்தாள் ஹேமா...

ராதிகா அவர்கள் பக்கம் திரும்பி அமர்ந்தாள்.. இதுவரை அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று அவளுக்குத் தெரியாததைப் போல...

"என்னடி...?" என்று கேட்டு வைத்தாள்...

"நேத்து... நீயும் ஹேமாவும்... ஷோபாவோட பர்த்டே பங்சனுக்குப் போயிருந்தீங்கள்ல...?"

"ஏண்டி.. நேத்துக் காலையிலேயிருந்து.. நைட் வரைக்கும் முக்கியமான வேலைகளை ஆயிரம் இருந்துச்சு... அதையெல்லாம் விட்டுட்டு.. இதைப் போயி கேட்கறிங்களே... நான் என்னத்தைச் சொல்ல..? ம்ஹீம்.."

கேட்டவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள... ஷோபாவிற்கு முகத்தில் அடித்ததைப் போல இருந்தது...

"அப்ப.. இவ வீட்டு பங்சனுக்கு நீங்க போகலையா..?"

Optimized by www.ImageOptimizer.net

“ச்சு... அதையேன்டி கேட்கிற... இவ காலில் விழுகாத குறையாய் கெஞ்சினாளேன்னு.. எங்க வீட்டில் நான் காலில் விழுகாத குறையாய் அம்மாப்பாகிட்ட கெஞ்சி பெர்மிசன் வாங்க வேண்டியதாப் போச்சு திவ்யா...”

“ஓ.. உனக்கு கஷ்டமாயிருச்சா...”

“பின்னே.. இருக்காதா..? எங்க வீட்டிலேயெல்லாம் இருட்டின பின்னாலே வெளியே அனுப்ப மாட்டாங்க...”

“எங்க வீட்டிலேயும் அந்தப் பழக்கம் உண்டு ராதிகா..”

“வெரிகுட்... அப்ப என் நிலைமை எப்படியிருந்திருக்கும்ன்னு உனக்கே புரிஞ்சிருக்கும்...”

“ஷ்யூர்... ஷ்யூர்...”

“அப்பவும் நான் இவகிட்டச் சொல்றேன்.. எனக்கு இந்த பார்ட்டி கீர்ட்டியெல்லாம் பிடிக்காது.. என்னை டிஸ்டர்ப் பண்ணாதே... என் வீட்டில் பெர்மிசன் வாங்கறது கஷ்டம்ன்னு.. இவ கேட்டால் தானே...”

அந்த திவ்யா நாசுக்கும்... நாகரிகமும் மிகுந்தவள்.. மிகத் தன்மையான குணம் கொண்டபெண்.. அவள் அதிருப்தியோடு ஷோபாவைப் பார்த்தாள்...

“வாட் இஸ் திஸ் ஷோபா..? மத்தவங்க டிரபிளை நீ புரிந்துக்க வேணாமா..? உன் வீட்டு பங்சனுக்கு வர முடியாதவங்களை நீ ஏன் கஷ்டப்படுத்தின...?”

ஒரு நொடியில் ஷோபாவின் வீட்டு பிறந்தநாள் விழாவின் பிரம்மாண்டம் மறக்கப்பட்டு... அதற்கு வர



முடியாத ராதிகாவை ஷோபா வற்புறுத்தி அழைத்தது மட்டுமே பிரதானமாய் மாறி நிற்க... அந்தச் சூழலை சமாளிக்க முடியாமல் திகைத்துப் போனாள் ஷோபா...

இப்படி.. ஒரு பேச்சின் போக்கையே ராதிகா திசை திருப்பி விடுவாள் என்று கொஞ்சம்கூட அவள் நினைத்துப் பார்க்கவில்லை...

‘டேன்ஜரஸ் கேர்ள்...’

அந்த அபாயகரமான ராதிகாவோ... அழகான தனது கண்களை உருட்டி... உருட்டி... தோழிகளிடம் கதை பேசிக் கொண்டிருந்தாள்...

“அம்மா ரொம்பத் திட்டினாங்க ஷீலா... அதையும் தாண்டி.. அவங்க கிட்டேபெர்மிசன் வாங்கறதுக்குள்ள போதும்.. போதும்ன்னு ஆகிருச்சு...”

“பாவம்டி நீ... பேசாம இவ வீட்டு பங்சனை அவாய்டு பண்ணியிருக்க வேண்டியது தானே...”

ஷீலா சொல்லியதில் ஷோபா மனதில் அடி வாங்கினாள்...

“பண்ணியிருப்பேன்.. ஆனா.. நான் வேண்டும்ன்னே இவ இன்வைட்டை அவாய்டு பண்ணிட்டேன்னு இவ சொன்னாலும்.. சொல்லிடுவா...”

ராதிகா அவள் பங்குக்கு... எரியும் தீயில் எண்ணையை ஊற்றினாள்...

Optimized by www.ImageOptimizer.net

“ஆமாமாம்.. அதுவும் உண்மைதான்.. இவ அப்படிச் சொல்கிற ஆள்தான்...”

மற்றவர்கள் ஆமோதிக்க... ஷோபா நொந்து.. நாலகிப் போனாள்...

“அதனாலதான்.. நானும் ஹேமாவும் போனோம்...”

சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னாள் ராதிகா...

அதுவரை தோழிகளிடம் மாற்றி மாற்றி பாட்டு வாங்கியிருந்த ஷோபா... அதற்கு மேலாவது ராதிகா அவள் வீட்டு விருந்தைப் பற்றிச் சொல்வாள் என்று எதிர்பார்த்து காத்திருந்தாள்...

அவளும் சொன்னாள்.. ஷோபாவின் வீட்டு விருந்தைப் பற்றிச் சொல்லாமல்.. அந்த விருந்தில்... அவள் பாடியதைப் பற்றிச் சொன்னாள்...

“நான் பேசாமல்தான் இருந்தேண்டி.. இந்த ஹேமாதான் பாடு... பாடுன்னு கிளப்பி விட்டுட்டா...”

“இட்ஸ் வெரி நைஸ்... என்னபாட்டுப் பாடினடி..?”

திவ்யா ஆர்வமாய் கேட்க.. ராதிகா அந்தப் பாட்டைப் பாடிக் காட்டினாள்...

“வாவ்...”

“பெண்டாஸ்டிக்...”



“மார்வலெஸ்...”

ராதிகாவின் பாட்டுக்கு பாராட்டுக்கள் குவிந்தன.. ஷோபா அதற்கு மேலேயும் அங்கே நிற்க முடியாதவளாய்.. ஓய்வறையைப் பார்த்து போய் விட்டாள்...

“கிழிச்சுட்ட டீ...”

அன்று முழுவதும் ஹேமா... ராதிகாவை சிலாகித்துக் கொண்டிருந்தாள்...

“பின்னே.. அவளுக்கு நான் யாருன்னு காட்ட வேணாமா..? நானும் போனாப் போகுதுன்னுதான் பார்த்தேன்.. இவ திட்டம் போட்டே என்னைக் கிராஸ் பண்ணிக்கிட்டு இரந்தா சும்மா விடுவேனா..? யாருகிட்ட இவ வேலையைக் காட்டறா..?”

“அதுதானே...”

“ஆனானப்பட்ட லேடி ஹிட்லருக்கே நான் அல்வா கொடுக்கிற ஆளு... இவளெல்லாம் எனக்கு ஈக்குவலாடி..?”

“நிச்சயமாய் இல்ல..”

“இவ வீட்டு வசதிவாய்ப்பை நாம பார்க்கனுமுன்னு நம்மை அழைச்சாளா...?”

“நம்மைன்னு உன்னோடு என்னையும் கூட்டுச் சேர்த்துக்காதேடி..”

“அப்ப மட்டும் கூட்டுச் சேர்ந்த..?”

Optimized by www.ImageOptimizer.net

"அப்ப மட்டும் நீ அப்ஜெக்ட் பண்ணின...?"

"இதெல்லாம் கூட்டுச் சேர்ந்திடாதே.. நீ விவரமான ஆளுடி..."

"அதை நீ சொல்கிறயா..? அவ உன்னைத்தான் கார்னர் பண்ணினா.. என்னையில்லை..."

"அதான்.. பாரேன்.. இவ வீட்டுக்கு நான் போகணுமாம்... அப்புறமாய் என்னவோ பத்திரிக்கை ரிப்போர்ட்டர் மாதிரி.. இவவீட்டு பங்சனைப் பத்தி காலேஜ் பூராவும் சொல்லணுமாம்.. நினைப்புத்தாண்டி இவளுக்கு..."

இதைக் கேட்ட ஹேமா சிரித்தாள்...

"எதுக்குடி இப்ப சிரிச்சு வைக்கிற...?" ராதிகா கோபமானாள்...

"இல்ல... உன்னைப் போய் அவளுக்கு கொள்கை பரப்புச் செயலாளராய் அவ நினைச்சிருக்காளேன்னு நினைச்சேன்.. சிரிப்பு வந்திருச்சு..."

ராதிகாவும் இப்போது ஹேமாவுடன் சேர்ந்து சிரித்தாள்...

"என்னமாய் பிளான் பண்ணியிருக்கான்னு பாரு..."

"என்ன பிளான் பண்ணி என்ன பண்ண..? இவ அந்த சங்கர்பின்னாலே நாய்குட்டியைப் போல அலைஞ்சா.. அவன்.. அவளைப் பார்க்காம.. உன்னைத்தான் பார்த்துக்கிட்டு இருந்தான்..."



ஹேமாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும்.. ராதிகாவின் சிரிப்பு ஸ்விட்ச் போட்டதைப் போல நின்று விட்டது...

## 20

**உன் ஒற்றைப் பார்வையில்**
**இற்று விழுந்தது என்மனம்...**

ஷோபா... காலை டிபனை நாசுக்காக மொக்கிக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு வேண்டியதை பரிமாறியபடி சிந்தனையில் இருந்தாள் சுசிலா.. அதை ஜாடையாக பார்த்தபடி சாப்பிட அமர்ந்தார் பரந்தாமன்...

மனைவியின் எண்ண வோட்டத்தை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

ஷோபாவின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தின் போது.. அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி எதுவும் நடக்காத ஏமாற்றம் அவள் நெஞ்சில் படிந்திருப்பதை அறிந்தும். அறியாதவரைப் போல அவர் சாப்பிட ஆரம்பித்தார்...

அவரும் தான் என்ன செய்வார்..?

இரவும்.. பகலும் சுசிலா புலம்பும் புலம்பல்களைக் கேட்டுக் கேட்டு.. அவரது காது ஜவ்வு... இப்போதோ.. அப்போதோ என்று கிழிபடும் நிலையில் இருந்தது...

Optimized by www.ImageOptimizer.net

"என்னங்க இப்படி ஆகிருச்சு...?"

"எதைச் சொல்றே சுசிலா...?"

"உங்க பிரண்டோட மகன் வந்தால் ஷோபாவைப் பார்த்து மயங்கிடுவான்னு சொன்னீங்க... ஒன்னையும் காணோம்..."

"நீ கூடத்தான்.. உன் அக்கா மருமகளோட தம்பி வந்து நம்ம மகளைப் பெண் கேட்பான்னு சொன்ன.. அதுமட்டும் நடந்திருச்சா...?"

"என்னங்க.. நீங்க... புரியாம பேசறிங்க... பாலமுரளி என் அக்காவுக்கு சொந்தக்காரன்.. எப்பவும் அவன் நம்ம கையைவிட்டுப் போகமாட்டான்..."

சுசிலா நிச்சயமான குரலில் பேச... அவளைப் போல தன்னால் நிச்சயமாய் பேச முடியவில்லையே என்று மனதிற்குள் குமைந்து போனார் பரந்தாமன்...

சங்கரைப் பற்றி அவரால் அவ்வளவு நிச்சயமாக பேசிவிட முடியாது... அவனைப் பெற்ற தந்தையான ராமாமிர்தமே நிச்சயமாக பேசிவிட முடியாது எனும்போது அவரால் மட்டும் அது முடிந்து விடுமா...?

"எனக்குத் தெரியாதா சுசி...?"

"அதனாலேதான் சொல்கிறேன்... ஒன்று சங்கருக்கு ஷோபாவை பேசி முடிங்க... இல்லைன்னா... பாலமுரளிக்காவது பேச ஆரம்பிக்கலாம்..."

"அவன் பட்டிக்காட்டில் இருக்கிறானே சுசி..."



"பட்டிக்காட்டில் இருந்தாலும்... கோடிஸ்வரனாய் இருக்கிறான்... அதை நினைவில் வைச்சுக்கங்க... இன்னும் சொல்லப்போனா... சங்கரைவிட பாலமுரளிதான் பணக்காரன்..."

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவ... ஆனா நம்ம ஷோபாவுக்கு சங்கரைத்தானே பிடிச்சிருக்கு..?"

"அதைப் பார்த்தா முடியுமா..? அப்படி நினைக்கிறவர் சங்கரை கை நழுவ விடாம பார்த்துக்க வேண்டியதுதானே..."

எங்கே போய் அவனைப் பார்த்துக் கொள்வது..?

பேசாமல் ஒரு இரும்புச் சங்கிலியை எடுத்துக் கொண்டு போய் அவனைக் கட்டி பிணைத்து... அதன் பின்னால் அவனைப் பார்த்துக் கொண்டால்தான் உண்டு என்ற நிலைமையில் பரந்தாமன் என்ன செய்வார்...?

அவரால் சுசிலாவிற்கு சமாதானம் சொல்லவும் முடியவில்லை... அதேசமயம் அவளின் பயத்தை அலட்சியம் பண்ணவும் முடியவில்லை...

அதனால் கூடுமானவரை மௌன விரதத்தை கடைபிடித்தார்...

அன்றும் அதே போல... சுசிலாவின் சஞ்சலமான பார்வையை சந்திப்பதை தவிர்த்து சாப்பாட்டில் கவனமாக இருந்தவர்...

Optimized by www.ImageOptimizer.net

"என்னங்க..." என்ற சுசிலாவின் பரவச அழைப்பில் தன் காதுகளையே நம்ப முடியாமல் ஆச்சரியத்துடன் மனைவியை பார்த்தார்...

வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த அவளது விழிகள் மின்னின...

"சங்கர் வருகிறான்ங்க..."

"என்னது..."

பரந்தாமனும்.. ஷோபாவும் ஒருமித்த குரலில் கேட்டபடி வாசலைப் பார்த்தார்கள்...

அங்கே சங்கர் வந்து கொண்டிருந்தான்...

"நான் சொல்லலை..? நம்ம ஷோபாவை பெர்த்டே பங்சனில் பார்த்தா சங்கர் மயங்கிடுவான்னு.. நான் சொன்னதைப் போலவே நடந்திருச்சு...", சுசிலா மகிழ்ந்து போனாள்...

அவள் எப்போது அப்படிச் சொன்னாள் என்று யோசித்த பரந்தாமனுக்கு... அது யோசனைக்கான நேரமல்ல என்பது புத்தியில் உறைக்க... அவசரமாக எழுந்து வாசலுக்கு விரைத்தார்...

தன் ஒப்பனை குறித்த கவலையில் ஆழ்ந்தாள் ஷோபா... அவன் வரும் விவரம் அவளுக்குத் தெரியாது.. தெரிந்திருந்தால்... அதிகாலையிலேயே எழுந்து.. ஒப்பனையை ஆரம்பித்திருப்பாள்...



ஒருதரம் கண்ணாடியைப் பார்த்தால் தேவலை என்று அவளுக்குத் தோன்றியது...

அதற்கு வழியின்றி... ஹாலில் இருந்து...

"ஷோபா..." என்று பரந்தாமன் அழைக்கும் குரல் ஒலித்தது...

"வெல் டாட்.." ஷோபா ஹாலுக்கு விரைந்தாள்...

"என்ன பெண்ணம்மா நீ...? சங்கர் உன்னைப் பார்க்கத்தான் வந்தாராம்.. நீ என்னன்னா... அவரை உடனே வந்து பார்க்காம மெதுவா ஆடி.. அசைஞ்சு வர்றே..." பரந்தாமன் கடிந்து கொண்டார்...

"நான் ஷோபாவைப் பார்க்க வந்தேன் அங்கிள்..."

சங்கர் கூறிய இந்த வார்த்தைகளில் அவர் இறக்கை முளைத்தவர்... வானில் பறந்து கொண்டிருந்தார்...

சுசிலாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்...

அன்று மாலை லேடிஸ் கிளப்பில்... அந்த மிஸஸ் [illegible]னாரின் முன்னால்... மற்ற பெண்மணிகளிடம்.. சங்கர் ஷோபாவைப் பார்க்கவென்று தன் வேலைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு வந்து நின்ற விவரத்தை சொல்லி [illegible] கனவில் இருந்தாள் அவள்...

'அப்ப அந்த செல்வியோட முகம் போகிற போக்கைப் பார்க்கனும்...' அவள் மனதில் ஆசை தோன்றியது...

Optimized by www.ImageOptimizer.net

"என்னைப் பார்க்க வந்திங்களா..?" ஷோபா விழி விரியக் கேட்கிறேன் பேர்வழியென்று கண்களை உருட்டி விழித்தாள்...

அதைப் பார்த்த பரந்தாமனே பயந்து விட்டார்.. அப்படி விழித்துப் பார்க்கக் கூடாதென்று மகளிடம் சொல்லி வைக்க வேண்டுமென்று மனதில் குறித்துக் கொண்டார்...

சங்கருக்கு திடசித்தம் போல... பரந்தாமனைப் போல ஷோபா பார்த்த பார்வையில் அவன் பயந்து விடவில்லை...

"ஷ்யூர்... உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்... காலேஜீக்கு கிளம்பிட்டயா..?" என்று நிதானமாகக் கேட்டான்...

"இன்னைக்கு காலேஜ் கட்டடிச்சா ஒன்னும் தப்பில்லை... நான் நாளைக்கே காலேஜ் போய்க்கறேன்.. வாங்க... கார்டனில் போய் பேசலாம்..." ஷோபா பரபரத்தாள்...

"நோ.. நோ.. காலேஜையெல்லாம் கட்டடிக்கக் கூடாது.. அதோடு... எனக்கு காலையிலே முக்கியமான அர்ஜன்ட்வொர்க்ஸ் இருக்கு.. ஸோ.. நாம ஈவினிங் மீட் பண்ணலாம்..."



"இப்போ என் காரில் வருகிறயா..? நான் உன்னை [illegible]யில் டிராப் பண்றேன்... போகும் போதே நாம [illegible] பேச வேண்டியிருக்கு..."

"பட்... என்னோட காரில்தான் நான் காலேஜ் [illegible] வழக்கம்..."

"அது எதுக்கு உனக்கு..? ஈவினிங் உன்னை [illegible]யில் வந்து நான் பிக்–அப் பண்ணிக்கறேன்..."

[illegible]மாலையில் அவனைச் சந்திக்கு முன்னால்... [illegible] பார்லருக்கு போய் வந்து விடலாம் என்ற [illegible]வோடு இருந்த ஷோபாவிற்கு என்ன [illegible]வதென்றே தெரியவில்லை...

"அப்படியே நாம வெளியில் போய் விட்டு வரலாம்..." என்று அவன் ஆசைகாட்டிய போது... அவளால் மறுக்க [illegible]வில்லை...

ஷோபா... அவளுடைய காரை விட்டுவிட்டு... [illegible]ன் காரில் ஏறிக்கொண்டாள்...

போகும்போது நாம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது என்று சொன்ன சங்கர்... அந்த நினைவே இல்லாதவனைப் போல மௌனமாக... காரை ஓட்டிக் கொண்டிருந்தான்...

'இதுதான் இவன் என்கூட பேசுகிற லட்சணமா..?'

ஷோபா... ஏமாற்ற மடைந்தாள்... காலேஜ் வாசலில் அவள் இறங்கி உள்ளே போக முயன்றபோது.. சங்கரும் அவள் கூடவே சேர்ந்து இறங்கி உள்ளே நடந்து வந்தான்...

"என்ன..?"

"உன் காலேஜைப் பார்க்கலாம்ன்னுதான்... வேற ஒன்றுமில்லை..."

ஷோபா அதை நம்பத்தயாராக இல்லை... சங்கரின் பார்வை கடந்து போன பெண்களின் மத்தியில் யாரையோ தேடித் துழாவியது திடிரென்று அவன் கண்கள் மின்னியதைப் பார்த்த ஷோபாவின் மனதில் பயம் பிறாண்டியது...

'யாரைப் பார்க்கிறான்..?'

"ஹாய்..." சங்கர் உற்சாகமாய் கையாட்ட...

"ஹாய்... நீங்களா...?" என்று அருகில் வந்தாள் ஹேமா...

அவள் கூடவே வந்த ராதிகாவின் மேல் சங்கரின் ஆர்வப்பார்வை படிவதை உணர்ந்த ஷோபாவிற்கு.. எதற்காக.. காலையிலேயே... அவளைத் தேடிக் கொண்டு சங்கர் வந்தான் என்பதற்கான காரணம் பிடிபட்டு விட்டது...



## 21

என்முன்னாலிருந்த மக்கள்கூட்டத்தில்..
உன்னை மட்டுமே என்கண்கள் தேடின...

"யாருடி..." என்றபடி திரும்பிப் பார்த்த ராதிகாவின் முகத்தில் சங்கடம் நிலவியது...

'இவனா...' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அந்த உதடுகளின்மீது சங்கரின் பார்வை ஆசையாகப் படிவதைக் கண்டதும் அவள் முகம் கன்றி விட்டது...

ஷோபாவின் பிறந்தநாள் விருந்தின் போது அவன்.. அவளையே சுற்றிச்சுற்றி வந்ததை அவளும் பார்த்துதான் இருந்தாள்...

இருந்தும் அவளுக்கு ஏனோ... அவன்மீது ஆர்வம் ஏற்படவில்லை.. அது எதனால் என்று தெளிவாக அவளால் சொல்லவும் முடியவில்லை...

பார்ப்பவர்களையெல்லாம் ஆர்வமாக பார்த்து விட முடியுமா? அதே சமயம்... யாரோ ஒருவரின்மீது ஆர்வம் ஏற்பட்டு விட்டால் அதை தடுத்து விடத்தான் முடியுமா..?

Optimized by www.ImageOptimizer.net

பாலமுரளியின் மீது ராதிகாவுக்கு ஏற்பட்ட ஈர்ப்பு... சங்கரின் மீது ஏற்படவில்லை என்பது மட்டும் நிதரிசனமான உண்மை...

ஹேமாவுடன் சேர்ந்து வந்தவள்... அவள் சங்கருடன் பேச நின்றதும் நகர முடியாமல் சேர்ந்து நின்றாள்...

“ஹாய் ராதிகா... எப்படியிருக்கீங்க..?” என்ற அவனின் கேள்விக்கு... நாகரிகம் கருதி.. தவிர்க்க முடியாமல்...

“ஐ ஆம் ஃபைன்... நீங்க எப்படியிருக்கீங்க...” என்று பதிலும் சொல்லி விட்டாள்...

ஷோபா கூட நிற்பதை சங்கர் மறந்து விட்டானோ என்ற சந்தேகம் ஏற்படும் அளவிற்கு.. சங்கர் ஷோபாவை கண்டு கொள்ளாமல் ராதிகாவிடம் பேச ஆரம்பித்து விட்டான்...

ராதிகாவுடன் அவனுக்கு பதில் சொல்லியபடி.. வகுப்புக்கு செல்லும் பாதையையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்...

சங்கர் ராதிகாவுடன் பேசப்பேச... ஹேமா.. ஷோபாவை ரகசியப் பார்வை பார்த்த வண்ணம் ஏளனப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள்...

அவள் மனதில் என்ன ஓடிக்கொண்டிருக்கிறது என்று ஷோபாக்கு புரியாதா..?



‘பார்... நீ வட்டமடிக்கும் ஆண்மகன்.. உன்னை விட்டுவிட்டு... ராதிகாவைச் சுற்றிக் கொண்டிருக்கிறான்...’

ஷோபாவால் ஹேமாவின் அந்தப் பார்வையை சகித்துக் கொள்ள முடியவில்லை... அவளது உயரம் அவளது காலடியில் சரிவதை திகிலுடன் உணர்ந்தவளுக்கு அதைத் தடுக்கும் வழிவகை தெரியவில்லை...

ராதிகா அவளுக்கு எத்தனையோ தோல்விகளைத் தந்திருக்கிறாள்.. அவையெல்லாம் சின்னச் சின்னத் தோல்விகள்.. அவற்றையே தாங்கிக் கொள்ள முடியாமல் தடுமாறியவளுக்கு... இந்தத் தோல்வியை எதிர்கொள்ள முடியாது என்று தோன்றி விட்டது...

காலேஜின் பிரதான வாசலுக்கும்.. உள்ளே இருந்த காலேஜ் கட்டிடத்திற்கும் இடையே இருந்த நீண்டு... அகன்ற சிமிண்ட் பாதையின் இருபக்கமும் பூச்செடிகள் அடர்ந்திருந்தன...

அந்த பூச்செடிகளின் மத்தியில் நின்றிருந்த ராதிகாவைப் பார்த்த சங்கர்...

“பூவுக்கும் உங்களுக்கும் வித்தியாசமே தெரியலைங்க...” என்றான்...

ராதிகா அலுப்பாக உணர்ந்தாள்... முடியாமல் நீண்டு கொண்டிருந்த உரையாடலில் அவள் சலிப்படைந்திருந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

ஷோபாவின் முகத்தில் பொறாமையின் கனல் அப்பட்டமாகத் தெரிந்தது... ராதிகாவிற்கு அதில் சம்மதமில்லை...

அவளுக்கு ஷோபாவை பிடிக்காது தான்.. அதற்காக அவளைச் சீண்டுவதற்காக சங்கரிடம் பேசுவது என்பது அவளது இயல்புக்கு மாறான ஒன்று..

சங்கரும்தாம் இப்படி ஷோபாவுடன் வந்து விட்டு.. ராதிகாவை இழுத்துப் பிடித்து பேசிக் கொண்டிருக்கலாமா..?

அவள் மனதில் கோப அலை எழுந்தது...

'பூவும்... நானும் ஒன்றாமா...?'

அவள் நிமிர்ந்து சங்கரின் முகத்தை கூர்மையாக பார்த்தாள்...

"ஆதிகாலத்தில் இருந்து இப்ப வரைக்கும் ஆண்களின் அப்ரோச் இப்படித்தான் இருக்குது... எங்களைப் பார்த்தால் உங்களுக்கு பூவாய் தோன்றும்.. தென்றலாய் தோன்றும்.. இப்படி பெண்களை வர்ணித்தா அவங்க சந்தோசப் படுவாங்கன்னு நீங்கள்ளாக ஒரு தப்புக் கணக்கு போட்டுக்கிட்டு.. அதை விட்டு வெளியே வராம.. வட்ட மடிச்சுக்கிட்டு இருக்கீங்க..."

ராதிகாவின் காட்டமான பேச்சைக் கேட்டு சங்கர் துணுக்குற்றான்... அவன்முகம் மாறிவிட்டது...



"நான் தப்பா ஏதும் சொல்லிட்டேனா.. ராதிகா.."

"சரியாவும் சொல்லலை சார்..."

"ஐ ஆம் சங்கர்..."

"எனக்கு சார்தான்.. பெண்கள் பூவாக இருந்த காலம் மலையேறிவிட்டது... அவங்க புயலாய் மாறி வெகு காலமாகிருச்சு... இன்னும் நீங்க பூவிலேயே நிக்கறீங்களே..."

"யு ஆர் ஸோ பியூட்டி புல்... அழகை ரசித்தால்... அது தப்பா...?"

சங்கர் இப்படி வெளிப்படையாக ராதிகாவை அழகியென்று சொல்லி வைப்பானென்று ஷோபாவும் எதிர்பார்க்கவில்லை.. ராதிகாவும் எதிர் பார்க்கவில்லை...

ஹேமாவின் ஏளனப் புன்னகை இன்னும் அதிகமானது...

"ஐ யோ பாவம்..."

ஷோபாவின் காதுபட.. அவள் சொல்லி வைத்தாள்... ஷோபாவிற்கு எங்கே கொண்டு போய் முகத்தை வைத்துக் கொள்வதென்றே தெரியவில்லை...

ராதிகாவிற்கோ தாங்கவில்லை... அவள் இளம் வயதுப் பெண்தான்... இருந்தும் சங்கரைப் போன்ற ஒரு கவர்ச்சிகரமான அழகுடன் இருக்கும் கோடிஸ்வர ஆணின் வாயிலிருந்து இப்படிப் பட்ட வார்த்தைகள்

Optimized by www.ImageOptimizer.net

வெளிவருவதில் அவளுக்கு ஏனோ விருப்பமில்லாமல் இருந்தது...

இரண்டு தினங்களுக்கு முன்னால்... அவள் இப்படி இருந்ததில்லை...

'ஏய்ய்.. அவன் என்னை சைட் அடிக்கிறானோன்னு தோணுதுப்பா...' ஹேமாவிடம் தனிமையில் இப்படிச் சொல்லிச் சிரித்திருக்கக் கூடியவள்தான்...

எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது என்று அவளுக்குத்தான் தெரியவில்லையே...

"சார் ப்ளீஸ்.. நான் கிளாஸிக்குப் போகனும்.."

"நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலையே..."

"அழகை ரசித்தால் தப்பில்லை சார்.. ஆனால்.. அது உயிருள்ள ஜீவனாக இருந்தால்... அந்த ரசிப்பை வெளியே சொல்வதற்கு முன் ஒன்றுக்கு பத்து தடவை யோசித்துச் சொல்லனும்..."

அதற்கு மேல் அங்கே நிற்காமல் ராதிகா வகுப்பறையை நோக்கி விரைந்து விட்டாள்...

ஷோபாவுக்கு அதிலும் எரிச்சல்தான்...

'இவபெரிய பாக்காத் பேரழகி... இவ அழகில மயங்கினா வெளியே சொல்லக்கூடாது... இந்த சங்கர்தான் ஆகட்டும்.. அவளிடம் இந்த அளவுக்கு வழிய



வேண்டுமா..? என்கூட வந்துவிட்டு அவளிடம் வழிந்து மூக்குடைபட்டு என் மானத்தை வாங்குகிறானே...'

ராதிகாவிடம் அவன் பேசிய வார்த்தைகளை ஷோபாவிடம் அவன் பேசினால் எப்படியிருந்திருக்கும்.. என்று யோசிக்காமல் அவளால் இருக்க முடியவில்லை...

சந்தோசப்பட்டுப் போயிருப்பாள்.. கால்கள் தரையில் பாவாமல் அந்தரத்தில் மிதந்திருப்பாள்.. இறக்கையில்லாமல் வானத்தில் பறந்திருப்பாள்..

'எனக்கென்ன குறை...? இவனுக்கு பக்கத்தில் நிற்கும் நான் கண்ணுக்குத் தெரியவில்லையா..?'

அவளுக்கு ஏக்கமாக இருந்தது...

'கடைசியில் போயும்.. போயும்.. இந்த ராதிகாவைச் சந்திக்க என்னை பகடைக்காயாய் யூஸ் பண்ணிட்டானே'

அவளுக்கு மனம் தாங்கவில்லை...

அருகில் நிற்கும் அவளை விட்டுவிட்டு.. ராதிகா போன திசையையே வெறித்துக் கொண்டு நிற்கும் சங்கரை என்ன செய்தால் தேவலாம்.. என்ற கொலைவெறி அவளுக்குள் மூண்டது...

"போனாப் போகிறா விடுங்க சார்.. எங்கே போய்விடப் போகிறா..." ஹேமா புன்னகைத்தாள்...

"கோபமா போறாங்களே..." சங்கரின் குரலில் தவிப்பிருந்தது...

Optimized by www.ImageOptimizer.net

"அவ ஒரு ரக சார்... திடீர்னு கோபப்படுவா.. எதுக்கு கோபப்படுகிறோமுன்னு அவளுக்கே தெரியாது.." மறைமுகமாக சங்கருக்கு ஆறுதல் சொன்னாள் ஹேமா...

"என்மேல என்ன தப்பு..?" ஆதங்கத்துடன் கேட்டான் சங்கர்...

"ஒருதப்புமில்லை... அவகிட்ட நான் கேட்கிறேன் சார்..." என்று ஹேமா சொன்னாள்...

"நிஜமாகவா..." ஆவலுடன் சங்கர் கேட்டான்...

"நிஜமாகத்தான்..." அடித்துச் சொன்னாள் ஹேமா...

"அப்போ... ஈவினிங் நான் வருகிறபோது.. என்ன ஆச்சன்னு என்னிடம் சொல்கிறீங்களா...?"

ஹேமாவிடம் சங்கர் சொல்லிக் கொண்டிருந்த போதுதான்.. அவன் எதற்காக ஷோபாவை தன் காரில் அழைத்துக் கொண்டு வந்தான் என்ற சூட்சுமம் முழுதாக ஷோபாவுக்கு விளங்கியது...

'ஓ... இதுக்குத்தான் ஈவினிங் மீட் பண்ணலாம்ன்னு எனக்கு ஆசை காட்டினானா...'

எப்படி ஏமாந்திருக்கிறோம் என்ற நினைவில் அவளுக்கு வெட்கமாக இருந்தது..

சின்னக்குழந்தைக்கு சாக்லெட் ஆசையைக் காட்டி நினைத்ததை சாதித்துக் கொள்வதைப் போல... ஷோபாவுக்கு... சங்கருடன் வெளியே சுற்றலாம்



என்ற ஆசையைக் காட்டி.. அவன் நினைத்ததை சாதித்திருக்கிறான்..

'என் கார் வேண்டாமாம்.. ஈவினிங் என்னை பிக்–அப் பண்ணிக்க இவன் வருவானாம்.. நான் இங்கே இருந்தால் தானே ஈவினிங் என்னை பிக்கப் பண்ணிக் கொள்கிறேன் பேர்வழின்னு இவன் வந்து நிற்பான்... அப்படி பிக்–அப் பண்ணிக்கிற சாக்கில்தானே ராதிகாவை மீட் பண்ணபிளான் போட்டிருக்கான்.. நான் இல்லைன்னா இவன் எப்படி வருவான்..?'

எப்படியும் ஷோபாவை அவன் வெளியே அழைத்துக் கொண்டு போகப் போவதில்லை.. மாலையில் வந்தாலும்.. ராதிகாவுடன் கடலை போட்டுவிட்டு.. ஷோபாவிடம் ஏதையாவது சாக்குப் போக்கை சொல்லி வீட்டில் கொண்டு போய் விடத்தான் போகிறான்..

'என்னைப் பார்த்தால் இவனுக்கு எப்படியிருக்கிறது..?'

அவளை ஏமாளியாக நினைத்து விட்டானே... என்று நெஞ்சம் கொதித்து விட்டாள் ஷோபா...

"அப்படியா.. ஈவினிங்கும் நீங்க வருவீங்களா..?" ஹேமா ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"ம்ம்.. வருவேன்..." சங்கர் உறுதியான குரலில் சொன்னான்...

"அப்போச்சரி... ஈவினிங் பார்க்கலாம்..." ஹேமா சிட்டாகப் பறந்து விட்டாள்...

Optimized by www.ImageOptimizer.net

அவன் போனதும் சங்கர் கைக்கடிகாரத்தைப் பார்க்க..

'இவ்வளவு நேரமாய் இவனுக்கு இதைப் பார்க்கணுமுன்னு தோணலையா... அவளுக போனவுடன் கரெக்டா வாட்சைப் பார்க்கிறானே... இப்பத்தான் இவனுக்கு நேரமாச்சுன்னு உறைச்சுச்சா...' ஷோபா பல்லைக் கடித்தாள்...

இதோ இப்போ வாயைத்திறக்கப் போகிறான்.. ஷோபா... ரொம்ப லேட்டாகிருச்சு... 'பை...' ன்னு சொல்லப் போகிறான்.. என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவன் வாய் திறந்தான்...

"ஷோபா.. எனக்கு ரொம்ப லேட்டாகிருச்சு.. பை... ஈவினிங் பார்க்கலாம்..." அவள் முகம் பார்க்காமல் சொன்னான் சங்கர்...

அந்த செய்கையில் ஷோபாவின் முகம் பயங்கரமாக மாறியது...

"பட்... ஈவினிங் என்னை நீங்க பார்க்க வரமுடியாதே சங்கர்..."

அவசாமாக முகத்தை அமைதியாக வைத்துக் கொண்டு நிதானமாக சங்கரின் முகத்தை ஊன்றிப் பார்த்தபடி சொன்னாள் ஷோபா...

"ஏன்..?"

சங்கர் புருவங்களை உயர்த்தி அவள் முகத்தைப் பார்த்தான்..





## 22



**என் நினைவில் நீயிருப்பதை என்றுதான் நீ உணர்வாய்..?**

அதுவரை அவள் முகத்தைப் பார்க்காதவன்.. அப்போது மட்டும் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தது.. அவள் இதயத்தில் தைத்தது...

வலிதாங்காமல் அவளுக்கு லேசாக... மிக லேசாக... கண்கள் கலங்கி விட்டன... கணநேரத்தில் கண்களை சிமிட்டி... அவன் அதைக் கண்டு விடாமல் அவள் மறைத்து விட்டாள்....

அவள் ஷோபா...!

இன்னொருவனின் முன்னால்.. என்னதான் அவனைக் கைபிடிக்க அவள் பகீரதப் பிரயத்தனங்களை செய்து கொண்டிருந்தாலும்... அவள் கண்கலங்கி நிற்பதா...?

ஒருபோதும் அவள் அதைச் செய்ய மாட்டாள்...

"ஏன்னா... நான் காலேஜில் இருக்க மாட்டேன்..." அவள் சிரித்தபடி பேசினாள்...

Optimized by www.ImageOptimizer.net

"காலேஜில் இல்லாம எங்கே போகப் போகிற...?" எரிச்சல் பட்டான் சங்கர்...

"வீட்டுக்குப் போகப் போகிறேன்..." அவள் விளையாட்டாய் பேசுவதைப் போல பேசிக் கொண்டிருந்தாள்...

"இப்பத்தான் காலேஜ் வாசலிலே வந்து இறங்கியிருக்கிற... உடனே வீட்டுக்குப் போகப் போறியா..? இதுதான் நீ படிக்கிற லட்சணமா..?" அவளை மட்டம் தட்டினான் சங்கர்...

'ஆமடா.. நீ ஜொள்ளு விடுகிறதுக்கு பாலம் போடத்தான் நான் காலேஜீக்கு வருகிறேன்... அதுக்கு வேற ஆளைப் பாரு...'

"அப்படித்தான்னு வைத்துக்கங்களேன்.. எனக்கு ஒரே தலைவலி... ரெஸ்ட் எடுக்கனும்... அதுக்கு வீட்டுக்குப் போயாகனும்.." அவள் கொஞ்சலான குரலில் சொன்னாள்....

"அதுக்கு வீட்டுக்குப் போகனுமா என்ன..? காலேஜ் கான்டினில் ஒரு காபியையும்.. டேப் லெட்டையும் வாங்கி விழுங்கி விட்டு கிளாஸ் ரூமுக்குப் போக வேண்டியது தானே..." வழி சொல்லிக் கொடுத்தான் சங்கர்...

'ஆக.. அந்தக் காபியைக் கூட.. காலேஜ் கேண்டினில்தான் நான் வாங்கிக் குடிச்சுக்கனும்... நீ வெளியே கூப்பிட்டுக்கிட்டுப் போய் வாங்கிக் கொடுக்க



...ட்ட... பலே தில்லாலங்கடி ஐடியா வெல்லாம் ...டுக்கறியே மச்சான்..! நான் காலேஜ் கேண்டின்ல காபியை வாங்கிக் குடிச்சுட்டு.. சாயந்திரம் வரைக்கும் தலைவலியோட உனக்காக காத்திருக்கனும்... நீ வந்து என்னை நடுவில நிற்க வைச்சுக்கிட்டு.. அவகிட்ட கடலை போட்டு முடிப்ப... அதுக்குப் பின்னாலே நான் என் வீட்டைப் பார்த்துப் போகனும்... நீ உன் ரூட்டைப் பார்த்துப் போவ.. நினைப்புத்தாண்டா உனக்கு..'

"நோ சங்கர்... தலைவலி வந்தா வீட்டுக்கு வந்து படுன்னு டாடி கண்டிப்பா சொல்லியிருக்கார்.. ஸோ.. நான் வீட்டுக்குப் போயாகனும்.. ஐ ஆம் ஸாரி.. ஈவினிங் நான் உங்களை மீட் பண்ண முடியாது..."

ஷோபா வருத்தம் தெரிவிக்க..

'நான் கேட்டேனா...' என்று பல்லைக் கடித்தான் சங்கர்...

என்னவோ... அவளுடன் அந்த மாலை நேரத்தைக் கழிக்க அவன் ஆவலோடு காத்திருப்பதைப் போலவும்.. அவளால் முடியாது என்று அவள் வருத்தம் தெரிவிப்பதைப் போலவும் அவள் பேசிவைத்த விதத்தில் அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"இட்ஸ் ஆல்ரைட் ஷோபா.. உடம்பைப் பார்த்துக் கோள்..."

அதற்கு மேல் அங்கே நிற்காமல்... 'எனக்கென்ன...' என்று அவன் கிளம்பி விட.. அவள் புருவம் உயர்த்தினாள்...

Optimized by www.ImageOptimizer.net

"என்ன சங்கர்.. என்னை அம்போன்னு விட்டுட்டு போறீங்க...?"

அவளை கைவிட்டு அவன் போவதைப் போல அவள் வினவிவைக்க.. அவன் அவளை முறைத்தான்...

"வேற என்ன செய்யச் சொல்கிற...?"

"என்னை வீட்டில் கொண்டு போய் விட வேண்டாமா..? உங்க கடமையை நீங்க மறக்கலாமா..?"

"பேத்தாதே... என் கடமை எதுன்னு எனக்குத் தெரியும்... நீ உன் வீட்டுக்குப் போகனும்ன்னா கால்டாக்ஸியை பிடிச்சுப்போ..."

"எனக்குன்னு டாடி.. மூணு கார் வாங்கிக் கொடுத்திருக்கார் சங்கர்.. அதில் ஒன்னில் கூட இன்னைக்கு நான் ஏறலை... ஏன்னு உங்களுக்கு நினைவிருக்கா...?"

ஷோபா குத்தலாக கேட்டாள்.. சங்கருக்கு அது புரிந்தது.. அவளை அவன்தான் தன்காரில் வரும்படி வற்புறுத்தி அழைத்து வந்தான்...

'அதற்காக..?'

வந்த நோக்கம் நிறைவேறாததில் அவனே எரிச்சலுடன் இருந்தான்... ராதிகாவின் கோபம் அவனை பாதித்திருந்தது...



ஆசை ஆசையாக அவளைப் பார்க்க வந்தவன்.. அவளது கோபத்தின் பின்னணி எதுவென்று புரியாமல் திகைத்திருந்தான்...

"என் டயத்தை வேஸ்ட் பண்ணாதே ஷோபா... ஐ ஹேவ் சம் அர்ஜன்ட் வொர்க்..."

'ஓஹோ..'

"உடனே நான் ஆபிஸ் போயாகனும்..."

'இதுவரை உனக்கு அது நினைவில் இல்லையா...'

"ஸோ... நீ வீட்டுக்குப் போகிறதுன்னா உன் டாடிக்கு போன் பண்ணி கார் அனுப்பச் சொல்லிப் போ..."

'அது எனக்குத் தெரியாதா...?'

"இல்லை.. நீ ஈவினிங் வரைக்கும் மேனேஜ் பண்ணிக்குவேன்னா.. எனக்கு ஈவினிங் போன்பண்ணு..."

'நான் என்ன கேணச்சியா...?'

"ஸோ... பை..!"

'கிளம்பு.. கிளம்பு...'

"என்ன முடிவு பண்ணியிருக்க..?"

'இனி உன்னை நம்பி என்காரை வீட்டில் விட்டுவிட்டு வரக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கேன்...'

சங்கர் எதிர்பார்ப்புடன் ஷோபாவின் முகம் பார்க்க... இன்னும் அவன் மீதான அவளின் ஆர்வத்தில் அவனுக்கு

Optimized by www.ImageOptimizer.net

எத்தனை நம்பிக்கை என்று கசப்புடன் நினைத்துக் கொண்டாள் ஷோபா...

"நான் கால் டாக்ஸியில் வீட்டுக்குப் போய்க்குவேன் சங்கர்... நீங்க கிளம்புங்க...."

"டேக் கேர்..."

"தேங்க் யூ..."

இதையாவது சொன்னானே என்ற நினைவில் பரந்தாமனுக்கு போன் பண்ணி காரை அனுப்பச் சொன்னாள் ஷோபா...

"என்னம்மா ஆச்சு...?"

"ஒரே தலைவலி டாடி..."

"ச்சு... உன்கிட்ட இது ஒன்னு இருக்கு ஷோபா... எதுக்கெடுத்தாலும் தலைவலிதானா...? இருந்திருந்து சங்கருடன் சேர்ந்து இப்போதுதான் முதன் முதலாய் வெளியே போகிற... இப்பவும் தலைவலின்னா அவன் உன்னைப் பத்தி என்ன நினைச்சுக்குவான்...?"

"ஒன்றும் நினைத்துக்க மாட்டார்... நீங்க முதலில் காரை அனுப்புங்க..."

'இவர் ஒருத்தர் நேரம் காலம் தெரியாம பேசி வைப்பார்...'

ஷோபாவுக்கு உண்மையிலேயே தலைவலி வந்து விட்டது...



மாலையில் அவள் காலேஜில் இல்லாமல் போனால்... சங்கரும் காலேஜிக்கு வரமாட்டான் என்ற நம்பிக்கையோடு அதுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் ஷோபா...

அவளுக்குத் தெரியாது... மாலையில் கட்டாயம் சங்கர் வருவான் என்பது...

சங்கர் காலேஜ் வாசலில் காரின்மீது சாய்ந்து... நின்றபடி காத்திருந்தான்.. தூரத்தில் ஹேமாவும்.. ராதிகாவும் வந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவன் கண்கள் மின்னின... ராதிகா அவனை கண்டு கொள்ளாமல் கடந்து சென்றுவிட... ஹேமா அவனருகில் வந்தாள்...

"இன்னும் அவங்க கோபம் தீரலையா..?" சங்கரின் முகத்தில் ஏமாற்றம் நிலவியது...

"அதுக்காக இப்படி முகத்தை தொங்கப் போட்டுக்கனுமா..? சிரிங்க சார்... உங்க முகத்துக்கு சிரிப்புத்தான் ஷீட் ஆடுது..."

"என்ன சொன்னாங்க...?"

"எதைப் பற்றி..?"

"காலையில் நான் சொன்னதைப் பற்றி..."

"அவ ஏதோ வியாக்கினம் சொன்னா... அதை விடுங்க சார்... இப்ப உங்களுக்கு என்னதான் பிரச்னை..?"

Optimized by www.ImageOptimizer.net

ஹேமா நேரடியாக விசயத்துக்கு வந்தாள்... சங்கரின் முகத்தில் வியப்பு வந்தது... அவன் இந்த நேரடிப் பேச்சு வார்த்தையை எதிர்பார்த்திருக்கவில்லை...

"அப்படின்னா... ?"

"உங்களுக்கா புரியாது..? என்சார்... ஷோபா இன்னைக்கு கிளாஸிக்கு வரலை... தலைவலின்னு வீட்டுக்குப் போயிட்டா.. ஆனா டாண்ணு நீங்க ஈவினிங் டயத்தில கரெக்டா வந்து நிற்கறீங்க... நீங்க ஷோபாவுக்காக வரலைங்கிறது இதிலிருந்தே தெரியுது.."

"அவளுக்காக நான் வருகிறேன்னு யார் சொன்னது...?"

"அப்போ யாருக்காக வருகிறீங்க...?"

ஹேமா மடக்கிவிட... சங்கர் பலமாகச் சிரித்தான்...

"எதுக்கு சார் இந்த வில்லன் சிரிப்பு..? நீங்க ராதிகாவுக்காகத்தானே வருகிறீங்க...?"

"யெஸ்..." அவன் உண்மையை சொல்லிவிட்டான்...

"நினைச்சேன்... இது ஷோபாவுக்குத் தெரியுமா..?"

"தெரியாது..."

"சொல்லிராதீங்க... ராதிகாவை கொன்றே போட்டு விடுவாள்..."

"என்னைத்தாண்டி ராதிகாவை நெருங்க யாராலும் முடியாது..."



"தோடா... இன்னும் அவகிட்ட நீங்க எதையும் சொல்லலை... அதுக்குள்ள இந்தப் பேச்சா...?"

"ஹேமா ஐ நீட் யுவர் ஹெல்ப்..."

"செஞ்சுட்டாப் போச்சு..."

"நான் ராதிகாவை மீட்பண்ணி பேசணும்..."

"இங்கே முடியாது..."

"எனக்கும் அதுதெரியுது... வேற எங்கே மீட் பண்றதுன்னுதான் தெரியலை..."

"வெள்ளிக்கிழமைகளில் அவ கோவிலுக்குப் போவா..."

"எந்தக் கோவில்..."

"அவ ஏரியாவில இருக்கிற பெருமாள் கோவில்..."

"அப்புறம்..?"

"ஞாயிற்றுக்கிழமைகளில் லைப்ரரிக்குப் போவா..."

"அதுவும் அவ ஏரியாவில இருக்கிற லைப்ரரியா..?"

"எப்படிக் கரெக்டா கண்டு பிடிச்சீங்க...?"

"இதைக் கண்டுபிடிக்க.. ஷெர்லக்ஸ் ஹோமா வேணும்..? அதான் தெரியுதே..."

"அப்புறம் பார்க்குக்குப் போவா.. அதுவும் அவ ஏரியாவில் இருக்கிற பார்க்குன்னு உங்களுக்கு சொல்லவே வேண்டியதில்லை..."

Optimized by www.ImageOptimizer.net

ஹேமாவும்.. சங்கரும் சேர்ந்து சிரித்தார்கள்... சங்கரின் மனதில் ஹேமாவின் மீது ஓர்விதமான தோழமை உணர்வு தோன்றியது....

"தேங்க்ஸ்..." உண்மையான நன்றியுணர்வுடன் சொன்னான்...

"தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்... இதில என் சுயநலமும் இருக்கு..." அவள் கண்சிமிட்டினாள்...

"என்ன..?" அவன் கேள்வியாகப் பார்த்தான்...

"எங்க அம்மா அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்வாங்க..."

"எந்த ஒரு நல்ல காரியத்தையும் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே ஸ்வீட் சாப்பிடணுமுன்னு சொன்னாங்களா..?"

"ஊஹீம்... ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தா.. தன்பிள்ளை தானே வளருமாம்..."

"இதிலிருந்து தாங்கள் சொல்ல வருவது என்னவோ..?"

"மத்தவங்க காதலுக்கு ஹெல்ப் பண்ணினா.. என் காதல் தானாய் வளரும்..."

"நீங்க காதலிக்கிறீங்களா..? யாரைக் காதலிக்கிறிங்க..." சங்கர் வியப்புடன் கேட்டபோது.. 'உன்னைத்தான்...' என்று மனதில் சொல்லிக் கொண்டாள் ஹேமா...



# 23



## ஆழ்கடலாய் என்மனது...
## அதன் அந்தரங்கம் அறிவாயோ..?

'நல்லா ஏமாந்திருப்பான்...'

ஷோபா மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டாள்...

பூனை கண்ணை மூடிவிட்டால் பூலோகம் இருண்டு விடும் என்பது மாதிரியான சந்தோசம் அது... அவளுக்கு அது புரியவில்லை... அவள் காலேஜில் இல்லாவிட்டால் சங்கரால் எப்படி ராதிகாவை பார்க்க முடியும் என்பது அவளது எண்ணமாக இருந்தது...

'வரட்டும்.. இனி இதைப்போல காரணத்தைச் சொல்லிக் கொண்டு வந்தால் ஏமாந்து விடக்கூடாது..'

அவள் மனது தீர்மானம் போட்டு அவளது ஒப்புதலுடன் ஏக மனதாக அதை நிறைவேற்றியது...

'என்னை காலேஜில் பார்க்க வருகிற சாக்கில்தானே அவளைப் பார்ப்பான்..?'

ஊசி முனையளவு இடைவெளி கிடைத்தால் கூட.. உள்ளே நுழைந்து விடும் வல்லமை படைத்த சங்கரைப் பற்றி அறியாதவளாய் ஷோபா மனதிற்குள் கலுவிக் கொண்டாள்...

Optimized by www.ImageOptimizer.net

அவள் எதிர்பார்த்ததைப் போல மறுநாள் சங்கர் வரவில்லை... மறுநாள் மட்டுமில்லை... அதற்கடுத்த நாள்களிலும் அவன் வராமல் போகவும்...

'என் குணம் தெரிஞ்சதும் அடங்கிட்டான் போல...' என்று மிதப்பாக நினைத்துக் கெண்டாள்...

சங்கராவது... அடங்குகிறதாவது.. ?

பரந்தாமனிடம் இதைப்பற்றி அவள் பேசியிருந்தால் அவர் அவனது குணாபிசேத்தைப் பற்றி பிட்டுப்பிட்டு வைத்திருப்பார்... ஷோபா அதைச் செய்யவில்லை...

என்னதான் பெற்ற அப்பாவாக இருந்த போதிலும்.. அவரிடம் தான் விரும்பும் ஆண் வேறொரு பெண்ணிடம் பேச விரும்பி... அதற்காக அவளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றான் என்பதைச் சொல்வதற்கு அவளுக்கு தயக்கமாக இருந்தது...

தோல்வியை ஒப்புக் கொள்வதில்தான் எத்தனை சங்கடங்கள்.. ?

"என்ன ஷோபா... சங்கரை இந்தப் பக்கமே காணோம்.. ?"

என்னவோ தினமும் அவன் வந்து ஷோபாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்ததைப் போலவும்... இடையில் சில நாள்கள் அவன் வராமல் போனதால் ஏனென்று கேட்பதைப் போலவும்... பரந்தாமன் கேட்டு வைக்க ஷோபா கடுப்பானாள்...



"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும் டாடி.. ?"

"ம்ஹீம்... இதுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும் போதே அதை தக்க வைத்துக் கொள்ளணும்கிறது..."

"நீங்க எதைச் சொல்கிறீங்க.. ?"

"உனக்கு அது தெரியாதா.. ? வராதவன் வந்து.. உன்னைக் காலேஜிலேயே டிராப் பண்றேன்னு வருந்தி வருந்தி அழைத்துக்கிட்டு போகிறான்.. நீ என்னடான்னா.. தலைவலிக்குதுன்னு அவனுக்கு டாட்டா சொல்லிட்டு உடனேயே வீட்டுக்கு வந்து சேருகிற... இப்படியிருந்தா எப்படி ஷோபா.. ?"

'அவன் எதுக்காக என்னை வருந்தி வருந்தி அழைத்துக்கிட்டுப் போனான்னு உங்களுக்குத் தெரிஞ்சா... ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகிருவீங்க... டாடி...'

ஷோபா நினைத்ததை வெளியில் சொல்லாமல் காலேஜிற்கு கிளம்பி விட்டாள்...

எதற்கும் இருக்கட்டுமென்று ராதிகாவைப் பின் தொடர்ந்து சென்று அவளை சங்கர் சந்திக்க முயல்கிறானா என்று கண்காணித்தாள்...

சங்கர்தான் ராதிகாவை சந்திக்காமல் ஹேமாவை சந்தித்துக் கொண்டிருந்தானே...

ராதிகா முகத்திலடித்ததைப் போல பேசியதும் விலகி விட்டான் என்ற நிச்சயத்துடன் ஷோபா

Optimized by www.ImageOptimizer.net

நிம்மதியான போது... ஹேமாவிடம் வேண்டிய விபரங்களை சேகரித்து விட்ட சங்கர்.. ராதிகாவை பின்தொடர ஆரம்பித்திருந்தான்...

கோவிலின் படிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்ட ராதிகா பக்திப்பரவசத்துடன் கோவில் பிராகாரத்தில் பிரவேசித்தாள்... மாலை நேரத்தில் கோவிலில் நிலவிய மங்களகரமான சூழ்நிலை அவள் மனதிற்கு இதத்தைத் தந்தது.. கோபுரங்களில் கூடுகட்டியிருந்த புறாக்களின் சிறகொலியில் தலை நிமிர்ந்து.. அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்தாள்...

'கோபுரத்தின் மாடங்களில்..
கூடுகட்டி வாழ்கின்ற...
புறாக்களை நின்று பார்க்க..
பொழுதுண்டோ எந்தனுக்கு...'

அவள் மனம் அவசரக் கவிதையைச் சொன்னது.. அவளுக்கு கோவில் பிடிக்கும்.. அங்கே கொலுவிருக்கும் தெய்வத்தையும் பிடிக்கும்... கோபுரத்தில் கூடு கட்டியிருக்கும் புறாக்களைப் பார்க்கப் பிடிக்கும்... கோவிலுக்குள் ஒலிக்கும் தெய்வீக இசை ததும்பும் பாடல்களைக் கேட்கப் பிடிக்கும்...

பட்டுப் பாவாடை.. சட்டை அணிந்திருந்த இரண்டு சிறுமிகள்... கொலுசு சத்தத்துடன் அவளைக் கடந்து ஓடினார்கள்...



கணுக்காலை மறைக்கும் பாவாடையை லேசாக தூக்கிப் பிடித்தபடி அவர்கள் ஓடிய விதம் ராதிகாவை ரசிக்க வைத்தது...

"ஏய் மாலு... பார்த்துடி.. கீழே விழுந்து வைக்கப் போற..." ஒரு பெண்மணி உரத்த குரலில் எச்சரித்தாள்...

அந்தச் சிறுமிகளில் ஒருத்தியின் அம்மாவாக இருப்பாள் என்று ராதிகா யூகித்தாள்...

இரட்டைப் பின்னலில் வளைவாக மல்லிகைச் சரம் சூடியிருந்த அந்த இரண்டு சிறுமிகளில் யார் மாலுவாக இருப்பார்கள் என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போது.. ஒருத்தி திரும்பி...

"போம்மா... உங்களுக்கு வேற வேலையில்லை..." என்றாள்..

இதைப் போலத்தானே தானும் சொல்வோம் என்ற நினைவில் ராதிகாவின் உதடுகளில் இளநகை அரும்பியது...

கடந்து போன குழந்தைப் பிராயத்திற்கு திரும்ப முடியுமா என்ற அவள் ஏக்கப்பட்டுப் போனாள்...

சந்நிதியின் முன்னால் நின்று பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு.. கற்பூர ஆரத்தியை தொட்டு வணங்கி குங்குமத்தைப் பெற்றுக் கொண்டாள்...

மாலை நேரத்தின் குளுமையை ரசித்தபடி கோவிலை வலம் வந்து கொண்டிருந்த போது.. ஒரு திருப்பத்தில் யாரோ அவளை...

Optimized by www.ImageOptimizer.net

"ராதிகா..." என்று அழைத்தார்கள்...

'யார்..?' அவள் திரும்பிப் பார்த்தாள்... திகைத்தாள்...

"என்ன அப்படிப் பார்க்கறிங்க..?" என்ற கேள்வியோடு சங்கர் அவளருகே வந்தான்...

ராதிகாவின் விழிகள் அவசரமாக.. சுற்றுப் புறத்தை துழாவின... தெரிந்தவர்கள் யாராவது பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று கவலை கொண்டாள் அவள்...

"உங்களுக்கு என்ன வேணும்..?" அவள் நிற்காமல் நடந்தாள்...

"உங்க கூடப் பேசனும்..." அவன் கூடவே நடந்தான்...

"என்கூடப் பேச என்ன இருக்கு..?"

"நிறைய இருக்கு..."

"எனக்கு ஒன்னுமில்ல..."

"என்னால அப்படிச் சொல்ல முடியலையே..."

"அது உங்க பிரச்னை..."

"இருக்கட்டுமே.. அது உங்க சம்பந்தப்பட்ட பிரச்சனையாச்சே..."

"எனக்கு அதைப்பத்தி கவலையில்லை..."

"அதெப்படிங்க.. நீங்க அப்படிச் சொல்ல முடியும்..? என்பிரச்னை தீரனுமுன்னா உங்களிடம் பேசித்தானே ஆகனும்..?"



அவன் பார்வையை சுழல விட்டபடி வேகமாக நடந்தாள்.. அடுத்த திருப்பத்தில் அவன் வேகம் கூட்டி.. அவள் வழியை மறித்தான்... அவள் பதறிவிட்டாள்...

"என்ன இது..? யாராவது பார்த்து விடப் போறாங்க..."

"அப்ப நின்று பேசுங்க..."

"வம்பு பண்றிங்களா...?"

"நிச்சயமாய் இல்லை.. எனக்கு உங்களிடம் பேசியாகனும்..."

அவன் பிடிவாதமாக கைகளை ஆட்டி ஆட்டிப் பேசிய விதத்தில் ராதிகாவின் கண்கள் கலங்கிவிட்டன... அதைப் பார்த்த சங்கர் வேகம் தணித்தான்...

"இப்ப நான் என்ன பண்ணிட்டேன்னு கண் கலங்கறிங்க..? உங்க கையைப் பிடித்தா இழுத்தேன்..."

"ஸ்ஸ்... இது கோவில்..."

அவன் என்னவோ பேசத்தகாத வார்த்தைகளை பேசிவிட்டதைப் போல் அவள் ஆட்சேபிக்க.. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தான்...

"இப்ப நான் என்னங்க சொல்லிட்டேன்..."

"பாருங்க.. உங்களுக்கு உங்க பேச்சு சாதாரண மானதாக இருக்கலாம்... எனக்கு அப்படியில்லை..."

Optimized by www.ImageOptimizer.net

"ஓகே.. ஓகே.. இனிமேல் அதுபோல் பேசவில்லை... போதுமா...?"

"இப்ப பேசுகிறதையே தப்புன்னு சொல்கிறேன்... இனிமேலயும் பேசப் போகிறிங்களா..? அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"யாரைப் பார்க்கிறதுன்னு நீங்களே சொல்லிட்டா தேவலை..."

"அதுக்கு எதுக்குங்க ஆளைத் தேடி நீங்க அலையனும்... இருக்கவே இருக்கிறா ஷோபா... உங்களுக்கு அவதான் சரி..."

இப்படிச் சொல்லிவிட்டு விரையப் போன ராதிகாவின் முன்னால் கைநீட்டி தடுத்தான் சங்கர்... அவன் முகம்.. கடுமையாக மாறியிருந்தது...

"அதை நீங்க சொல்லக்கூடாது... நான்தான் முடிவு பண்ணனும்..."

"நீங்க என்ன வேணும்னாலும் பண்ணிக்கங்க... என்னை மட்டும் வழியை மறைக்காதீங்க... வழியை விடுங்க... நான் வீட்டுக்குப் போகனும்.. அம்மா தேடுவாங்க..."

"ராதிகா...! என் மனசில என்ன இருக்குன்னு புரிஞ்சுக்கவே மாட்டிங்களா...?"

"அது என்ன தேவைக்கு சார்..? நான் இன்ஜினியரிங் தான் படிக்கிறேன்.. சைக்காலஜி



படிக்கவில்லை... உங்க மனசில் புகுந்து ஆராய்ச்சி பண்ணும் உத்தேசமெல்லாம் எனக்கு இல்லை..."

"நீங்க வேணும்னே அடம் பிடிக்கறீங்க...."

"புரிந்தால் சரி..."

அவர்கள் மட்டுமே நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி... கும்பலாய் சில பெண்கள் வரவும்.. சங்கர் விலகி நின்றான்.. சட்டென்று அந்தக் கும்பலில் ஐக்கியமாகி.. அவர்களுடன் பேசியபடியே கோவிலை விட்டு வெளியே நடந்தாள் ராதிகா... கோவில் வாசலில் பாலமுரளி நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் அவள் முகத்தில் வெளிச்சம் பரவியது... அவன் முகத்திலோ இருள் பரவியிருந்தது....

அவனுடன் பேச ஆவலுடன் ராதிகா வாய்திறந்த போது... அவன் இறுக்கமான முகத்துடன்... அவளைப் பாராததைப் போல... காரில் ஏறிச் சென்று விட்டான்...

கார்போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவின் கலங்கின கண்கள் மேலும் கலங்கின...

அன்று இரவு... அவள் தூங்க வெகு நேரமானது...

அடர்ந்திருந்த வேப்ப மரத்தின் கிளைகளில் அமர்ந்திருந்த பறவைகள் கூட சத்தமில்லாமல் கூவிக் கொண்டிருந்தன.. அந்த லைப்ரரி முழுவதும் ஆள்கள் நடமாடிக் கொண்டிருந்த போதும்.. அமைதி விரவிப் படர்ந்து

Optimized by www.ImageOptimizer.net

வியாபித்திருந்தது.. ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்திருந்த வேப்ப மரத்தின் இலைகள் குளிர்ச்சியைப் பரப்பிக் கொண்டிருந்தன... வேப்ப மரத்தின் குயில் பாடுவதைக் கேட்டபடி... அந்த லைப்பரிக்குள் நுழைந்தாள் ராதிகா...

அவளுக்குப் பழக்கமான நூலகர்... லேசாக புன்னகைத்தார்... பதிலுக்கு புன்னகைத்துவிட்டு... அவர் முன்னாலிருந்த பதிவேட்டில் கையொப்பம் இட்டாள்.. நூலக அலமாரிகளைச் சுற்றி வலம் வந்து அவளுக்கு தேவைப்பட்ட புத்தகத்தைத் தேடத் தொடங்கினாள்...

‘இதோ இருக்கே...’

அலமாரியின் இந்தப் பக்கமிருந்து அவள் புத்தகத்தை உருவியபோது... அந்தப் பக்கம் ஒருகை அதை இழுத்துப் பிடித்திருந்தது... ராதிகா பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தாள்.. ஊஹூம்... புத்தகத்தை அசைக்கக் கூட முடியவில்லை...

விட்டுக் கொடுக்கச் சொல்லி... வாய் விட்டே கேட்டு விடலாம் என்ற முடிவோடு... அவள் குனிந்து பார்த்த போது... அலமாரியின் அந்தப் பக்கமாக நின்று கொண்டிருந்த சங்கர் புன்னகைத்தான்...

‘இவனா...’

ராதிகா புத்தகத்தை விட்டுவிட்டு... முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவன் புத்தகத்துடன் அலமாரியைச் சுற்றி.. அவளருகில் வந்து நின்றான்...



“இந்தாங்க... உங்க புத்தகம்...” அவளிடம் நீட்டினான்...

“வேண்டாம்...” முகம் இறுக அவள் மறுத்தாள்...

“ஏன் வேண்டாம்..? இதற்காகத்தானே இவ்வளவு நேரமும் என்கூட மல்லுக்கு நின்றீங்க...?”

அவன் குரலில் சிரிப்பிருந்தது... அவள் முகத்தில் கடுப்பிருந்தது...





## 24

**யார் மனதில் யாரோ...**
**யார்தான் அதை அறிவாரோ..?**

ராதிகா கோவிலில் செய்ததைப் போலவே.. இங்கும் பார்வையை தன்னைச் சுற்றிப்படற விட்டாள்... ஏறக்குறைய அனைவருமே படிப்பில் ஆழ்ந்திருப்பதைப் போல தென்பட்டாலும்... அதில் ஒரு சிலரின் பார்வை அவள் மேல் படர்ந்திருப்பதை அவளால் உணர முடிந்தது...

அது இயல்பான ரசிகர் கூட்டம்.. ராதிகா அந்த லைப்ரரிக்கு வரும் நாளில்... கண நேரம் அவள் பார்வையை சந்தித்து விட்டால் என்னவோ இமயத்தை

Optimized by www.ImageOptimizer.net

தொட்டு.. வெற்றிக் கொடியை நாட்டி விட்டதைப் போல சட்டைக் காலரை தூக்கி விட்டுக் கொள்ளும் கூட்டம்...

"ஏய்ய்.. அவ என்னை பார்த்துட்டாடா..."

"என்னையும்தான் பார்த்தா..."

"உன்னைப் பார்த்த பார்வை வேற.. என்னைப் பார்த்த பார்வை வேற..."

"எனக்கு அது தெரியாதாடா மச்சான்... உன்னை பாசமலர் பார்வை பார்த்தா... என்னை காதல் கோட்டை பார்வை பார்த்தா..."

"இது நான் சொல்ல வேண்டிய டயலாக்குடா..."

"டேய்.. டேய்.. நீ அவளுக்கு சீர் கொடுத்து அனுப்புற முறைடா..."

தங்களுக்குள் அவர்கள் இப்படி வழக்கடித்துக் கொள்வதை ஒருநாள் ராதிகா கேட்க நேரிட்டது... ஆனாலும்... அவள் அதை கண்டு கொள்ளவில்லை... இதற்காகவெல்லாம் பயந்து வீட்டுக்குள் சிறையிருக்க ஆரம்பித்தால்... பெண்கள்... வாசல்படியைத் தாண்டி வெளியே வரவே முடியாது என்ற எண்ணம் அவளுக்கு...

எதற்கு வம்பு என்று அதற்குப் பின்னால் அவள் தற்செயலாய்கூட யாரையும் பார்த்து வைப்பதில்லை...

யதார்த்தமாக பார்த்து வைத்தால்கூட அவர்கள் அந்தப் பார்வையை வைத்து... அது பாசமலர் பார்வையா...



இல்லை... காதல் கோட்டை பார்வையா என்று பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்ததால்... இவள் கல்லையும்... மண்ணையும் பார்ப்பதைப் போல.. அவர்களையும் பார்த்து விட்டு.. தேவையான புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவாள்...

கீதாவிடம் இதைப்பற்றி அவள் பகிர்ந்து கொண்ட போது....

"எண்டி இப்படிப் பண்றே..? அம்மாவே பார்த்து நடத்துக்க... பார்த்து நடந்துக்கன்னு அடிக்கடி சொல்றபோது.. நீ அவங்களை பார்க்க மாட்டேன்னு அடம் பிடிச்சால் எப்படிடீ..?" என்று நியாயம் கேட்டாள்...

"ஏய்ய்.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர் சொல்ற டயலாக்குக்கு அர்த்தமே வேற.. வீட்டை விட்டு வெளியே போனா நாலும் நடக்கும்.. அதை எதிர்பார்த்து... அதை எப்படி அவாய்டு பண்றதுன்னு பார்த்து நடந்துக்கனும்கிறது தான் அதோட அர்த்தம்..."

"இது ஏதோ பழைய பாட்டைப் போல இருக்கே..."

"லேடி ஹிட்லர் இப்போச் சொல்கிறதைத்தான்.. அப்போதிருந்து பழைய பாட்டுக்களில் சொல்லிக்கிட்டு இருக்காங்க..."

"ஆக அத்தனை அட்வைஸ் பாட்டும்.. பொண்ணுக்குத்தான்.. ஆணுக்கு இல்லைங்கிற..."

கீதாவின் கேள்வியில் ராதிகாவுக்கு சிரிப்புத்தான் வந்தது..

"பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்கிறதில நீ கில்லாடி டீ..."

"பின்னே..? நீயே சொல்லேன்..." என்ற கீதா...

"புருசன் வீட்டில் வாழப் போற பெண்ணே...
தங்கச்சி கண்ணே...
சில புத்திமதிகள் சொல்கிறேன் கேளு முன்னே.."

என்று பாடிக் காட்டினாள்...

"போதும்டி..."

"இதையே.. பெண்டாட்டிகூட வாழப் போகிற புருசனுக்கு புத்திமதியைச் சொல்லியிருக்காங்களா ராது..?"

"நாமள்லாம் தங்கம்டி... அது தெரிஞ்சுதான் சொல்லலை..."

"என்னவோ போடி.. நாளைக்கு நீ லைப்ரரிக்கு போகிற போது என்னையும் மறக்காம கூப்பிட்டுக் கிட்டுப் போ...."

"அது எதுக்குடி...?"

"நெல்லுக்கு இறைக்கிற தண்ணியில கொஞ்சம் புல்லுக்குப் பாயட்டுமே.. உன்னைப் பார்க்கிற பார்வையில கொஞ்சம் என்னையும் பார்க்கட்டுமே..."

"அடிதாண்டி வாங்கப் போகிற.. ப்ளஸ்டு படிக்கிறவ பேசற பேச்சாடி இது..?"



"நான்தாண்டி பேசணும்... எதிர்த்த வீட்டுப் பாட்டியா வந்து இப்படிப் பேச முடியும்...?"

"இதை அப்படியே நம்ம வீட்டு லேடி ஹிட்லர் காதில போட்டு வைக்கவா...?"

"நீ செய்தாலும் செய்வேடி.. லேடி ஹிட்லர்கிட்ட பேச்சு வாங்க என்னால் ஆகாது... நீயே லைப்ரரிக்குப் போ..."

"அஃது... அந்த பயம் இருக்கட்டும்..."

அப்படிப்பட்ட பார்வையாளர்களின் பார்வை தன்னை மொய்த்துக் கொண்டிருக்கும் என்ற நிச்சயமான ஜாக்கிரதை உணர்வுடன் ராதிகா... சங்கரை முறைத்தாள்...

"இது எங்க ஏரியா..."

"எனக்கும் தெரியுங்க..."

"என்ன தெரியும்...?"

"கரையைத் தாண்டாத அலைகள்ங்கிறதைப் போல.. நீங்களும் ஏரியா தாண்டா சமர்த்துப் பொண்ணுன்னு எனக்கு நல்லாவே தெரியும்..."

இப்படிச் சொன்னவனின் முகத்தை ஊடுறிவிப் பார்த்தாள் ராதிகா... அவன் சொன்னதன் பின்னணியிலிருந்த பொருள் அவளுக்குத் தெள்ளத் தெளிவாக புரிந்தது...

Optimized by www.ImageOptimizer.net

அவன் அவளைப் பற்றிய அனைத்து விபரங்களையும் சேகரித்திருக்கிறான்... அவள் போகுமிடமெல்லாம் பின் தொடர ஆரம்பித்திருக்கிறான் என்பதே அது..

"நீங்க பெரிய பிஸினெஸ் மேன்னு ஷோபா பீலா விட்டுக்கிட்டு இருந்தாளே.. அதெல்லாம் பொய்யா..?"

லைப்ரரியின் அமைதியை நினைவில் கொண்டு.. அடிக்குரலில் கிசுகிசுப்பாக வினவினாள்...

"ஷோபா பீலா விடுகிறவள்தான்.. பட்.. என்னைப் பற்றி அவள் சொன்னதில் பீலா எதுவுமில்லை... உண்மைதான்..."

"அப்புறமும் எதுக்காக சார் வெட்டியா பெண்கள் பின்னாலே சுற்றிக்கிட்டு இருக்கீங்க...?"

"ஒரு சின்னத் திருத்தம்... நான் பெண்கள் பின்னாலே சுற்றலை... ஒரே ஒரு பெண்ணின் பின்னால்தான் சுத்தறேன்.."

"அதுதான் ஏன்..?"

"ஏன்னா... ஐ லவ் ஹெர்..."

சங்கர் சொல்லியே விட்டான்... ராதிகா அதிர்ந்து விட்டாள்.. அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை... பட்டென்று புத்தகத்தை மறந்து லைப்ரரியை விட்டு வெளியேறினாள்...



புயலைப் போல வெளியே வந்தவள்.. வேப்ப மரத்துக்கு அடியில் நின்று கொண்டிருந்தவனின் மீது மோதிவிட்டு... அவசரமாக...

"ஸாரி..." என்றபடி தலையை நிமிர்ந்து பார்த்தாள்...

கண்கள் இடுங்க.. அவளையே கூர்மையாகப் பார்த்தபடி... பாலமுரளி நின்று கொண்டிருந்தான்...

'நீங்களா..?!' ஆனந்தத்துடன் சொல்லப் போன ராதிகாவின் தொண்டையில் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன...

வார்த்தைகளைத் தேடி அவள் திணறிக் கொண்டிருக்கையில் அவன் வேப்ப மரத்துக்கடியில் நின்றிருந்த காரில் ஏறி.. போயே... போய் விட்டான்... ராதிகா விக்கித்துப் போய் நின்று விட்டாள்...

"ராதிகா..."

அவளது முதுகிற்குப் பின்னால் சங்கரின் குரல் கேட்டது... ராதிகா ஓட்டமும்.. நடையுமாக வீட்டை நோக்கிப் பறந்தாள்...

"ஊய்..."

குழந்தைகளுக்கான சறுக்கு பாதையில் சறுக்கிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கூவினான்...

ராதிகா அவனைப் பார்த்தபடி.. புல்வெளியின் மையத்திலிருந்த சாய்வான சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்து.. முழங்கால்களை கட்டிக் கொண்டு... முகத்தை அதில் பதித்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

அவள் மனதில்... பாலமுரளியின் கோபமுகம் மட்டுமே நிறைவடிக் கொண்டிருந்தது...

'என்மேல் அவனுக்கென்ன கோபம்..?'

இந்தக் கேள்வியே.. இரவும் பகலும்... அவள் மனதை பிறாண்டிக் கொண்டிருந்தது...

அவனுடன் தனிப்பட்ட முறையில் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை... ஒரு பின்மாலையும்... முன்னிரவும் கலந்த.. இதமான இரவின் ஆரம்பத்தில்.. அவனைச் சந்தித்தாள்... அவன் அவளின் வீடுவரை அவளுக்கு துணையாக வந்தான்... அதைத் தவிர அவர்களுக்கு மத்தியில் என்ன சொந்தம் இருக்கிறது..?

அவன் யாரோ... அவள் யாரோ...

ஆனாலும்.. அவனது கோபமுகம் அவளை இந்த அளவுக்கு பாடாய் படுத்துகிறதே...

அவளது இதயத்தை வேதனை பிழிந்தெடுத்தது... சொல்லத் தெரியாத துயரத்துடன்... அவள் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

'பிள்ளைப் பிராயம் என்பது எத்தனை இனிமையான தருணம்...' அவள் பெருமூச்சு விட்டாள்...

திரும்பவும் குழந்தையாகி விட வேண்டும்.. அப்போது... இதுபோன்ற ஊமைத் துயரங்கள் மனதில் சுமையாக ஏறி அமராது இல்லையா...?



அவளுக்கு தனிமை வேண்டியிருந்தது.. இதுபோன்ற புலம்பல்களை மனதில் புலம்பிக் கொள்ள தனிமை அவளுக்கு அவசியமாக தேவைப்பட்டது... அதை வீட்டினர் அவளுக்கு கொடுக்கவில்லை...

"என்னடி... காபியை கையில வைச்சுக்கிட்டு.. பித்து பிடிச்சவளைப் போல அதைக் குடிக்காம வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கியே... என்ன விசயம்..? எந்தப் பிசாசு உன்னைப் பிடிச்சுக்கிட்டு ஆட்டுது...?"

ராஜேஸ்வரி அதட்டிய போது... உலுக்கி விட்டதைப் போல தன்னுணர்விற்கு மீண்டவளுக்கு...

'காதல் பிசாசு...' என்று சொல்லத் தோன்றியது...

எந்த அடிப்படையில் அவள் அதைச் சொல்லுவாள்..? அவளுக்கும் பாலமுரளிக்கும் இடையே... சில பார்வைகள் உணர்த்திய உணர்வுகளைத் தவிர.. வேறு எதுவும் இல்லையே...

"ஒன்றுமில்லைம்மா..."

"ஒன்றுமில்லாததிற்கு நீ இப்படி உட்காருகிற ஆள் இல்லையே..."

சந்தேகத்துடன் பார்த்த ராஜேஸ்வரியிட மிருந்து தப்பித்து வாசல் பக்கம் போனால்...

"உனக்கு என்னக்கா ஆச்சு..?" என்று கேட்டான் சந்தர்...

Optimized by www.ImageOptimizer.net

"ஏண்டா.. ?"

"இந்த பத்து நாளா... என் பேனா.. பத்திரமா என்கிட்டயே இருக்குதே.. ஆர் யு ஆல்ரைட்.. ?"

"ஏண்டா... உன் பேனா தொலையாம இருந்தா.. எனக்கு ஏதோ ஆகிருச்சுன்னு அர்த்தமாகிடுமா... ?"

"இல்லையா பின்னே... ? நீ நார்மலாய் இருந்தா.. என் பேனாவை கை வைக்காம இருக்க மாட்டயே..."

"இன்னைக்கு கை வைச்சிட்டாப் போச்சு..."

சொன்னவள் அதைச் செய்ய மறந்து.. சிலையாக அமர்ந்து விட.. அவளை விசித்திரமாக பார்த்தபடி உதட்டைப் பிதுக்கினான் சுந்தர்...

"என்னடா... ராதிகா இப்படி உட்கார்ந்திருக்கா.. ?"

"அக்காவுக்கு உடம்பு சரியில்லை போலப்பா..."

"ராது... டாக்டர்கிட்டப் போகலாமா... ?"

"அது எதுக்குப்பா... ?"

"உனக்கு உடம்பு சரியில்லையேம்மா..."

"அப்படி நான் சொன்னேனா.. ?"

"நீ சொன்னால்தானா.. ? பார்த்தாலே தெரியுதே..."

'என்னத்தை தெரியுது...'

அலுப்புடன் அங்கிருந்து அகன்று.. இவர்கள் கண்ணில் பட்டால்தானே பிரச்னை.. என்று மொட்டை



மாடிக்குச் சென்றால்... அங்கே கையில் புத்தகத்துடன் படிக்கிறேன் பேர்வழியென்று... எதிர் வீட்டு மாடியைப் பார்த்துப் கொண்டிருந்த கீதாவின் கண்களில் பட்டு விட்டாள்...

"ஏண்டி... உன் வழியில் நான் வருகிறேனா.. ? என் வழியில் நீ ஏன் கிராஸ் பண்ற.. ?"

"எதைடி சொல்கிற.. ?"

அசுவராய்மாய் கேட்டுவிட்டு.. மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து அமர்ந்து... வானத்தை வெறித்தவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கீதா...

'இவளுக்கு என்ன ஆச்சு.. ?'

வீட்டிலிருந்த மற்றவர்களின் கவலை.. அவள் மனதிலும் எதிரொலித்தது...

வழக்கமான ராதிகாவாக இருந்தால்... இந்நேரத்திற்கு.. எதிர்வீட்டு தடியனும்... எதிர் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருப்பாளே...

'நினைச்சேண்டி.. இதுதான் நீ படிக்கிற லட்சணமா... ? இரு.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர்கிட்ட போட்டுக் கொடுக்கிறேன்...' என்று மிரட்டியிருப்பாளே...

அதை விட்டுவிட்டு.. கல்லுக்குண்டைப் போல நிற்கும் எதிர் வீட்டு தடியனைப் பார்க்காமல்... வானத்தில்

Optimized by www.ImageOptimizer.net

தெரிகிற.. வெண்பஞ்சு மேகப்பொதியைப் பார்க்கிறான் என்றால்.. நம்ப முடியவில்லையே...

"ராதிகா.. ஆர் யு ஆல்ரைட்..."

'இவரும் கேட்டு விட்டாளா...'

அந்தக் கேள்விகள் துரத்திய துரத்தலில் இருந்து தப்பிக்க.. தனிமையை தேடித்தான் ராதிகா... அந்தப் பூங்காவிற்கு வந்திருந்தாள்...

# 25

அந்தரங்கம் அறிந்திருந்தால்..
புன்னகையை சிந்தியிருப்பாய்...

அவள் தேடிய தனிமை கிடைத்தவுடன்.. அதில் தன்னைப் புதைத்துக் கொண்டு தனிமையில் அமர்ந்து விட்டாள் ராதிகா...

அவள் முன்னாலிருந்த நடைபாதையில் நடந்து கொண்டிருந்த முதியவர்கள் அவள் பார்வையில் பதியவில்லை... சற்றுத்தள்ளி அமர்ந்திருந்த இளஞ்ஜோடிகளின் சரஸ நடவடிக்கைகள் அவள் கவனத்தை ஈர்க்கவில்லை.. ஓடிப்பிடித்து



விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளால் கூட அவளின் தனிமைக்குள் நுழைய முடியவில்லை...

கலைக்க முடியாத.. அவள் கலைக்க விரும்பாத... தனிமைக்குள் அவள் நுழைந்திருந்த போது... அதைக் கலைத்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டதைப் போல... அவளருகே வந்து அமர்ந்தான் சங்கர்...

"ஹாய்..."

அவள் தனிமைத்தவம் கலைந்தவளாய் நெற்றிக் கண்ணைத் திறந்து அவனைப் பார்த்தாள்.. அவன் அசரவில்லை... மாறாத புன்சிரிப்புடன் அவளது கோபாக்னி ஸ்பரிசிக்காதவனாக அவளைப் பார்த்தான்...

"குட் ஈவினிங்..."

அவள் பதில் சொல்லவில்லை... உனக்கெல்லாம் ஒரு கணக்கா... என்பதைப் போல... அலட்சியமாக முகத்தை திருப்பிக்கொண்டு.. இயல்பாக அமர்ந்தாள்...

"குட்மார்னிங் சொன்னா... பதிலுக்கு குட்மார்னிங் சொல்லணும்..."

'உனக்கெல்லாம் அதைச் சொல்ல முடியாது...'

"நான் ஒன்றும் வில்லனில்லை ராதிகா..."

'நீ என் ஹீரோவுமில்லை...'

"நான் என்ன சொல்லிட்டேன்..?"

Optimized by www.ImageOptimizer.net

‘காதலைச் சொல்லித் தொலைத்து விட்டாய்...’

“ஐ லவ் யுன்னு சொன்னேன்... அது ஒரு தப்பா..?”

‘பின்னே.. இல்லையா..?’

“ராதிகா.. எனக்கு உங்களைப் பிடிக்கும்...”

‘எனக்கு உன்னைப் பிடிக்க வேணாமா...?’

“என்மேல் உங்களுக்கு வெறுப்பில்லை... எனக்கு அது நிச்சயமாய் தெரியும்...”

‘விருப்பமும் இல்லை... அது உனக்குத் தெரியுமா..?’

“எனக்கென்ன குறை ராதிகா..?”

‘இதை நீ வந்து என்னிடம் கேட்கிறாயே... அதுதான் குறை...’

“உங்கப்போல பெண் வேண்டும்ன்னு ரொம்ப நாளா தேடிக்கிட்டு இருந்தேன் தெரியுமா...”

‘நான் உன்னை தேடவில்லை...’

ராதிகாவிற்கு அழ வேண்டும் போல இருந்தது... சங்கர் நல்லவன்... கண்ணியமானவன்... அவனே சொல்வதைப் போல... குறைகள் இல்லாதவன்... நிறைகளை மட்டுமே உடையவன்...

அவளுக்கு அவன் எட்டாக்கனி...! ஷோபாவைப் போன்ற ஒரு பரம்பரைப் பணக்காரியை புறக்கணித்து... அவளது காதலை வேண்டி நிற்பவன்... அதற்காக...



அவனது உயரத்தை மறந்து.. ஏதோ கல்லூரி மாணவனைப் போல... அவள் போகுமிடமெல்லாம் நிழல் போலத் தொடர்ந்து... பின்னால் சுற்றிக் கொண்டிருப்பவன்...

அவள் மட்டும் சரியென்று ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும்... அவன் நிச்சயமாய் அவனது பெற்றோருடன் வந்து அவளது பெற்றோரிடம் அவளைப் பெண் கேட்பான்...

அவளால் ஏன் அதைச் சொல்ல முடியவில்லை..? ஏது அவளைத் தடுத்துக் கொண்டிருக்கிறது..?

அந்த ‘எது...’ எதுவென்று அவளது அந்தரங்க மனம் அறியும்... எந்தவித ஆதாரமும் இல்லாத போதும்... அவனது பார்வைகள் சிந்திய தருணங்களை அவள் பத்திரமாக... பொக்கிசம் போல... அதில் சேகரித்திருந்தாள்...

எந்தவித அடிப்படையும் இல்லாத போதும்... ஏதோ.. ஒன்று.. அவன் மீதான அவளது உணர்வுகளை உறுதி செய்ய... அவளது அந்தரங்க மனதில் அழுது கொண்டிருந்தாள்...

ராதிகா பெருமூச்சுடன் சங்கரை நிமிர்ந்து பார்த்தாள்...

“நீங்க ஜெண்டில் மேன் சங்கர்...”

காதலிக்கும் பெண்ணின் வாயிலிருந்து... ‘கண்ணியவான்’ பட்டத்தை வாங்க எந்தக் காதலனும் விரும்புவதில்லை...

Optimized by www.ImageOptimizer.net

அவன் நெற்றியில் சிந்தனை கோடுகளை வரைந்தது...

"நான் உங்களைக் காதலிக்கிறவன் ராதிகா..."

"என்னை உங்களுக்கு எத்தனை நாள்களாய் தெரியும் சங்கர்..? இந்த பதினைந்து நாள்களுக்குள்.. காதல் தோன்றி வளர்ந்து மரமாகி விடுமா..?"

"உண்மையான காதலுக்கு ஒரு நொடி போதும் ராதிகா..."

அவள் மனதிலிருப்பதை அறிந்தவனைப் போல அவன் சொல்லிவைக்க... பாலமுரளியின் மீது எந்த நொடியில் அவள் மனதில் காதல் துளிர்த்தது என்று அறியாதவளாய் தவித்துக் கொண்டிருந்த அவள் அதிர்ந்து போனாள்...

அந்த ஒரு நொடிப் பொழுதில் உருமாறிப் போனவள் எப்படி அவனிடம் அதை உணர்த்தப் போகிறாள்..?

தன்னில் மூழ்கி... அவள் தவித்துக் கொண்டிருந்த போது... சங்கரின் குரல் ஆதரவாய் அவள் காதுகளில் ஒலித்தது...

"எதற்காக இந்த தவிப்பு ராதிகா..?"

அவள் கண்களில் நீர் மலக அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவள் பார்வையில் எதையோ சொல்லத் துடிக்கும்.. துடிப்பு... அலை பாய்ந்தது...



'சொல்லி விடலாமா..? இவனிடம் சொல்லி விடலாமா..?'

என்னவென்று சொல்லுவாள்..? உன்னைப் பார்த்த அதே பொழுதில் அவனையும் நான் பார்த்தேன்.. உன்னால் ஈர்க்க முடியாத என் மனதை அவன் ஈர்த்து விட்டான்... என்று அவளால் சொல்ல முடியுமா..?

'எப்படிச் சொல்வேனடி..?'

அவள் காதுகளில் கண்ணதாசனின் பாடல் ஒலித்தது....

அவள் பெண்மையின் இயலாமையோடு மௌனமாக பார்வையை விலக்கிக் கொண்டாள்... தரையில் பார்வையை பதித்து அமர்ந்திருந்தவளின் பெருமூச்சைக் கண்டு... சங்கரின் புருவங்கள் முடிச்சிட்டன...

"என் காதலில் சந்தேகமா ராதிகா..."

"த்ச்சு..."

அவளது அதிருப்தியான ஒற்றைச் சொல்லில் அவன் முகம் மலர்ந்தது...

"அப்புறம் என்ன..?"

"வேண்டாம் சங்கர்... எனக்கு உங்கள் மேல் காதலில்லை..."

ராதிகாவின் வார்த்தைகளைக் கேட்ட அவன் முகம் சுருங்கினான்... ஆனாலும் சமாளித்துக் கொண்டவனாக தோள் குலுக்கினான்...

Optimized by www.ImageOptimizer.net

"வெறுப்பும் இல்லையே ராதிகா..."

"சங்கர்..."

"நான் வெயிட் பண்றேன்.. உங்க காதலுக்காக..."

"அதுதான் ஏன்...? உங்க டயத்தை நீங்க வேஸ்ட் பண்ணாதீங்க... எனக்குப் படிக்கணும்..."

"படிங்க..."

"வேலைக்குப் போகனும்..."

"என் கம்பெனியிலேயே ஆயிரம் வேலை உங்களுக்காக காத்திருக்குது.. என்ன வேலை வேணும்..? என் கம்பெனிகளில் ஒன்றுக்கு உங்களை 'எம்டி'யாக்கவா..?"

அவனது பிடிவாதத்தில்.. அவளுக்கு இயல்பான கோபம் துளிர்த்தது...

"என்ன சார்.. உங்க பணப்பெருமையை என்கிட்டக் காட்டறிங்களா..?"

"இல்லவே இல்லை..."

"எனக்கு விலை வைக்கறிங்களா..?"

"சீச்சி... என்ன பேச்சு இது ராதிகா..."

சங்கரின் கை முஷ்டிகள் இறுகுவதைப் பார்த்த ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

'அதிகமாய் பேசிட்டேனோ...'



அவன் பார்த்த கோபப் பார்வை 'ஆமாம்' என்றது..

"உங்களை என் மனசில் உயர்த்தியான இடத்தில் வைத்திருக்கேன் ராதிகா... உங்க வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வரலாமா..?"

"ஐ ஆம் ஸாரி..."

குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் ராதிகா...

"உங்க மனதில் பயம் இருக்குன்னு நினைக்கிறேன்.. என்னடா... இவன் நம்மளை விட பெரிய பணக்காரனாய் இருக்கிறானே.. நம்ம கிட்ட காதலைச் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறானோன்னு நீங்க நினைக்கறிங்க... அது இல்லைன்னு புரூவ் பண்றேன்..."

'இவன் வேற... நான் இருக்கிற மனநிலையை புரிஞ்சுக்காம ஏதோதோ பேசி வைப்பான்...'

"எதுக்குங்க உங்ககிட்ட காதலைச் சொல்லி.. உங்களை கலவரப் படுத்தனும்...?"

'அப்பாடா.. இப்பவாவது இதை நீ புரிஞ்சுக்கிட்டயே.. நீ எங்கிருந்தாலும்.. வாழ்க நண்பா...'

அவள் நிம்மதியாக... கற்பனையில்... மணவறையில் அமர்ந்து முகம் தெரியாத யாரோ ஒரு பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டுக் கொண்டிருந்த சங்கரின் மீது.. மானசீகமாக மலர்களைத் தூவி மனதுக்குள் வாழ்த்திக் கொண்டிருந்த போது...

Optimized by www.ImageOptimizer.net

"உங்க பேரண்ட்ஸ்கிட்ட இதைச் சொல்லிடறேன்.." என்று அணு குண்டைத் தூக்கிப் போட்டான் அவன்...

'அடப்பாவி...' ராதிகா மனதுக்குள் அலறியே விட்டாள்...

"என் பேரண்ட்ஸ் கிட்ட என்னத்தை சொல்லப் போறிங்க...?"

அவள் இப்போதுதான் கலவரமாக ஆனாள்... அதை உணராதவனாக அவன் தீர்க்கமாக பேசிக் கொண்டே போனான்...

"உங்கமேல எனக்கிருக்கிற காதலைச் சொல்லப் போகிறேன்... உங்களைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு சொல்லப் போகிறேன்..."

"கடவுளே..! ஏன்சார் இப்படிப் பேசறிங்க..."

"தேவைதாங்க எனக்கு... ஒருத்தியை காதலிச்சு... அவகிட்ட காதல் சொன்னா அதுக்கும் அலருகிறீங்க... சரி.. நேரடியாக அவளைப் பெத்தவங்ககிட்டேயே கல்யாணத்தை பேசிடறேன்னு சொன்னா... அதுவும் தப்புங்கறீங்க.. விளையாடறிங்களா..?"

"நான்.. உங்ககிட்ட விளையாடறேனா..? ஏன் சார் சொல்ல மாட்டிங்க... நீங்கதான் என் வாழ்க்கையில விளையாடிக்கிட்டு இருக்கீங்க..."

"நான் ப்ளேபாய் இல்லைங்க... அதை உங்களுக்கு புரிய பண்ணாம நான் விடமாட்டேன்..."



அவன் போய்விட்டான்... இவன் என்னத்தை செய்து தொலைக்கப் போகிறானோ.. என்று தலைமேல் கைவைத்து இடிந்து போய் அமர்ந்து விட்டாள் ராதிகா...

அவள் எதிரில் யாரோ நிற்பதைப்போல உள்ளுணர்வு அறிவுறுத்த பார்வையை உயர்த்தியவளின் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

அவளை உறுத்துப் பார்த்தபடி.. பாலமுரளி நின்றிருந்தான்...

"நீங்களா..?" விழிகள் பளபளக்க ராதிகா எழுந்து நின்றாள்...

"ஏன் எழுந்திருக்கிறீங்க...? அவன் பக்கத்திலேதான் உட்காருவீங்களா..? என் பக்கத்தில் உட்கார மாட்டிங்களா..."

அவன் குத்தலாக வினவியபடி சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்தான்.. அவள் மனதில் அதிர்வை வாங்கினாள்..

'நீயா இப்படிப் பேசுகிறது...?'

நம்ப முடியாமல் பார்த்தபடி அவனருகே அமர்ந்தவளை சொந்தமற்ற பார்வை பார்த்தான் முரளி...

"ரொம்ப நேரமாக பேசிக்கிட்டு இருந்தீங்களே.. என்ன..? காதலா..?"

ராதிகாவின் விழிகள் கூர்மையாகின.. அவள் உடலில் விறைப்பு வந்தது... அவளது நிமிர்வு அவளிடம் திரும்பி விட...

Optimized by www.ImageOptimizer.net

"அது உங்களுக்குத் தேவையில்லாத விசயம் சார்.." என்றாள்...

அவன் முகம் பயங்கரமாக மாறியது.. கண்கள் சிவக்க.. அவளை முறைத்தவன்.. நொடிப் பொழுதில் முகபாவனையை மாற்றிக் கொண்டு சத்தமாக சிரித்தான்..

"ஆமாமாம்.. அது எனக்குத் தேவையில்லாதது தான்.. அதிலெல்லாம் சென்னைப் பொண்ணுக கெட்டிக்காரங்களாச்சே... உங்களுக்கு வெளிநாட்டில் படிச்ச... கோட்டும்.. சூட்டுமாய்.. வெள்ளைக்காரனைப் போல இருக்கிறவனைத்தானே பிடிக்கும்.. என்னைப் போல பட்டிக்காட்டு இளிச்சவாயனை எப்படிப் பிடிக்கும்..?"

'இவன் என்ன சொல்கிறான்..?'

ராதிகாவிற்கு ஏதோ புரிவதைப்போல இருந்தது.. அதுவரை சொந்தமில்லாமல் பேசிக்கொண்டிருந்த பாலமுரளி.. கோபத்தில்... அவன் மனதை சொல்லி விட்டதை புரிந்து கொண்டவளுக்கு இதயம் படபடத்தது..

'உன்னையா எனக்குப் பிடிக்காது..? உன்னைத் தவிர வேறு யாரையும் எனக்குப் பிடிக்காது... இதை நீயேன் உணராமல் போனாய்...?'

இமைக்காமல் அவனையே நோக்கியவளின் பார்வையில் என்ன கண்டானோ.. அவன் மரியாதையை காற்றில் பறக்க விட்டான்...



"என்னடி பார்க்கிற..? இப்படி பார்த்துப் பார்த்துத்தானே என்னை கிறுக்குப் பிடிக்க வைச்ச..? ஊருக்குப் போகாமல் உன் பின்னாலேயே சுற்றினேன்டி.. இந்த பதினைஞ்சு நாளும்.. பொழுதுவிடிஞ்சு பொழுது போகிற வரைக்கும்... நீயிருக்கிற இடத்துப் பக்கம்தானே வட்டம் அடிச்சேன்..? கடைசியில் அவன் பின்னாலே போயிட்டயேடி..."

அவன் பேசிய பேச்சில் ராதிகாவிற்கு மூச்சே அடைத்துவிட்டது...



## 26



*ராத்திரி கனவின் நாயகன் நீ - என்ற ரகசியம் தெரியாத வில்லனும் நீ...*

கண்கள் விரிய... பிரமிப்புடன் பாலமுரளியின் முகத்தையே பார்த்தபடி அசைவற்று அமர்ந்து விட்டாள் ராதிகா...

இப்படியெல்லாம்கூட ஒரு ஆண்மகனால் பேச முடியும் என்று அது நாள்வரை அவளுக்குத் தெரியாது...

மரியாதையான பார்வைகளுக்கும்.. வார்த்தைகளுக்கும் பழக்கப்பட்டவள் அவள்.. அவளை 'வாடி... போடி...'

என்று எந்த ஆண்மகனும் அழைத்துக் கேட்டறியாதவள் அவள்...

அப்படிப்பட்டவளைப் பார்த்து... ஆயிரம் 'டி' போட்டான் பாலமுரளி...

'எந்த உரிமையில் இவன் இப்படிப் பேசுகிறான்...' அவள் நெஞ்சம் கொதித்தாள்...

அவளது அதிர்ந்து போன பார்வையை அவன் லட்சியமே பண்ணவில்லை...

"என் தாத்துக்கு செய்யக் கூடாத வேலைகளையெல்லாம் உனக்காக நான் செய்தேண்டி... ரோட்டோர ரோமியோவைப் போல... உன் தெரு முக்கில் காத்திருந்தேண்டி... காரை விட்டு விட்டு... உன் பின்னால் நடந்தேண்டி.. ஒரு தடவை கூட என்னை நீ திரும்பிப் பார்க்கலையே... அதுவே.. அவன் காரைப் போட்டுக்கிட்டு உன் காலேஜீக்குள்ளேயே வந்து நின்னதும்.. 'ஈ'ன்னு சிரிச்சுக்கிட்டு... அவன அப்படிப் பார்த்தியே... அப்பவே உன் புத்தி என்னன்னு எனக்கு புரிஞ்சு போச்சுடி..."

அவளை அவன் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தான் என்று அவளது புத்திக்கு உறைத்த போதே... அவளுக்காக அவன் தெரு முனையில் காத்துக்கிடந்திருக்கிறான் என்ற செய்தியும் சேர்ந்து உறைக்க.. அவனைப் பார்க்காமல் போய் விட்டோமே என்று பரிதவித்தாள் ராதிகா...

'உன்னைப் பார்த்து தொலைக்காத என்னை நீ என்ன திட்டினாலும் கேட்டுக்க வேண்டியது தான்...



அவனைப் பார்க்கிறதுக்கு முன்னாலே உன்னை நான் பார்த்திருந்தால்... இந்த வினை எனக்கு வந்திருக்காதே...'

"கோவில்ல வைச்சு.. தெய்வ சந்நிதானத்தில் என் காதலை உன்கிட்ட சொல்லிடணும்னு தேடி வந்தேண்டி.. பார்த்தேனே... அங்கேயும் அவனை உன்கூடப் பார்த்தேனே... அது கோவில்ங்கிறதையும் மறந்து என்னமாய் சரஸம் பண்ணினீங்கடி... அவன் வழியை மறைக்கிறான்.. நீ சிணுங்கறே.. அவன் கையை நீட்டறான்.. நீ செல்லமாய் முறைக்கிற... அப்படியே சினிமாப் படம் காட்டிட்டேங்களேடி.. அப்பவே எனக்கு மனசு வெறுத்துப் போச்சுடி..."

'இவன் கோவிலுக்குள் வந்திருந்தானா..?'

"லைப்ரரியில வைச்சாவது உன்னை என்னன்னு கேட்டுப்புடணும்னு வந்தேண்டி.. அங்கேயும் எனக்கு முந்தி அவன் வந்து நின்னுட்டானே... சும்மா சொல்லக்கூடாதுடி... சத்தமே வராம.. கிசுகிசுப்பா நீங்க ரெண்டு பேரும் கொஞ்சிக்கிட்டிங்களே... அதை லைப்ரரியே வேடிக்கை பார்த்துச்சேடி... தூத்தேறி... அக்கம்.. பக்கம் பார்க்காம அப்படி என்னடி ரகசியப் பேச்சு வேண்டிக்கிடக்கு..?"

'அடப்பாவி... நீயே அதை ரகசியப் பேச்சுன்னு சொல்கிறியே... அப்புறம் எப்படி.. அதை கொஞ்சல் பேச்சுன்னு நீயாய் ஒரு முடிவுக்கு வந்த...? அவனைத் திட்டினாலும்.. அது ரகசியப் பேச்சாத்தானேடா இருக்கும்..?'

Optimized by www.ImageOptimizer.net

"நான் ஒரு கிறுக்கன்டி.. காதல்கிறுக்கன்.. உன்மேல பைத்தியம் பிடிச்சுப் போனதால என்நிலைமையை மறந்து.. உன் பின்னாலே சுத்திக்கிட்டிருக்க கேணயன்.. இவ்வளவுக்குப் பின்னாலேயும்.. கடைசியா என் மனசை உன்கிட்ட சொல்லப்புடலாமுன்னு நினைச்சேன் பாரு.. என்னைப் போல பைத்தியக்காரன் எவன் இருப்பான்டி..?"

'என் சாமி... நானில்லையா...? இரண்டு வாரமா.. என்வீட்டு ஆளுக.. எனக்கு வேப்பிலை அடிக்காத குறையாய் விசாரிச்சுக்கிட்டு இருக்காங்க.. அது தெரியுமா உனக்கு..? என்னவோ உனக்கு மட்டும்தான் பித்துப் பிடித்ததைப் போல பேசுகிறாயே... எனக்கும்தான் பித்துப் பிடிச்சிருக்கு.. உன்னால் மட்டுமா... அதை என்னிடம் சொல்ல முடியல..? என்னாலேயும்தான் உன்னிடம் சொல்ல முடியல.. விதிடா மச்சான்...'

ராதிகா விதியை நொந்து கொள்ள... அதை அறியாமல் பாலமுரளியும் விதியின் மேல்தான் பழியைப் போட்டான்...

"என்னவோ திருவாரூர் தேரைப்போல... ஆடி அசைஞ்சுக்கிட்டு பார்க்குக்கு வந்த... உன் பின்னாலேயே தொடுத்துக்கிட்டு நானும் வந்தேன்.. விதியைப் பாரு... இங்கேயும் அவன் உன் பக்கத்திலே உட்கார்ந்து காதல் வசனம் பேச... நான் அதை தள்ளி நின்னு வேடிக்கை பார்க்கனும்ன்னு என் தலையில எழுதி வைச்சிருக்கு.."



'உனக்கு மட்டுமா எழுதிவைச்சிருக்கு..? எனக்கும் சேர்த்துத்தான் எழுதி வைச்சிருக்கு...'

"இப்ப எனக்கு ஒன்னே ஒன்னுதான் தெரியனும்டி.."

'என்ன..?' என்பதைப் போல ராதிகா அவனைப் பார்க்க... அவன் முகத்தில்... கேட்டது கிடைக்காத கோபம் படர்ந்தது...

"நீதான் ஒரு முடிவோட இருந்திருக்கிறயே... அப்புறமும் ஏன்டி என்னை அந்தப் பார்வை பார்த்த...?"

'கடவுளே...' கண்மூடித்திறந்த ராதிகா...

"போதும்.. இதுக்கு மேலே பேசாதீங்க..." என்றாள்...

"ஓ.. அவன் பேசினா இனிக்கும்.. நான் பேசினா கசக்குமாக்கும்.." அவன் குரூரமாக சிரித்தான்...

அவளும்தான் எத்தனை வார்த்தைகளை பொறுத்துக் கொள்வாள்...?

ஆயிரம்தான் அவன்மேல் அவளுக்கு எண்ணமிருந்தாலும்... இருவரும் ஒரே... ஒருதடவைதான் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்... வெறும் பார்வை பரிமாற்றங்களை வைத்து ஒருவன் இந்த அளவுக்கு உரிமையெடுத்துக் கொண்டு அவளை இழிவு படுத்திப் பேசலாமா...?

அந்த கோபத்தில் அவள்...

"ஆமாம்.. அப்படித்தான்..." என்று சொல்லிவிட்டாள்...

Optimized by www.ImageOptimizer.net

அவளது சிரிப்பு நின்றுவிட்டது... கண்கள் இடுங்க... அவளையே இமைக்காமல் அவன் பார்த்த பார்வையில் அவளது உயிர் ஆடியது...

"அப்படியேதானா...? நினைச்சேன்... உனக்கு என்னைவிட அவனைத்தான் பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும்.. வெள்ளைத் தோலாய் இருக்கிறானில்ல... அந்த மயக்கம் உனக்கு... இது திராவிட நிறம்டி... மாநிறம்ன்னா உனக்கு அத்தனை இளக்காரமா...?"

ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டு வேறுதிசையில் பார்த்தாள்... கம்பீரமே வடிவாக அமைந்திருந்தவனின் உருவம் அவளை மயக்கியது... ஒரு ரோமானிய சிற்பத்தைப் போல... செதுக்கி வைத்ததைப் போன்ற வடிவமைப்புடன் இருந்தவனின் மார்பில் சாய்ந்து கொள்ள அவள் மனம் ஏங்கியது...

அதை உணராதவனாக... அவன் அவளால் புறக்கணிக்கப்பட்டு விட்டதான நினைவில் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருந்தான்...

"நானும் பணக்காரன்தாண்டி... பரம்பரையாய் பெரிய வீட்டுக்காரன்... ஆனா... உனக்கு நான் வேண்டாம்... பட்டிக்காட்டில் இருக்கிறேனில்ல... அது உனக்கு குறைவாய் போயிருச்சு... அவன் சென்னையில இருக்கான்.. பத்தாக்குறைக்கு.. வெளிநாட்டுப் பக்கம் பறந்துக்கிட்டே இருப்பான்... உனக்கு அந்தப் பகட்டு தேவைப் பட்டுருச்சுடி..."



அமைதியான மனம் வருடும் பாடல்களை... இதமான பௌர்ணமி நிலவின் ஒளியில்... மொட்டை மாடியில் அமர்ந்து... தனிமையில் கேட்டு ரசிக்கும் ராதிகா... அவனது கொடுமையான வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள சிரமப்பட்டாள்...

"ஏமாந்துட்டேண்டி... என்னடா.. இந்தப் பொண்ணு நிலவைப்பத்தி பாட்டுப்பாடறாளேன்னு நினைச்சுட்டேன்.. நீ அந்த நிலவையே பிடிக்க ஆசைப்படற பேராசைக்காரின்னு எனக்கு தெரியாம போயிருச்சு..."

விட்டால்... அவன் அன்று முழுவதும் நிறுத்தாமல் இசைபாடிக் கொண்டிருப்பான் என்று ராதிகாவுக்கு புரிந்து விட்டது...

மாலை மயங்கி இருள் சூழ ஆரம்பித்து விட்டது... பூங்காவில் மனிதர் நடமாட்டம் குறையத் தொடங்கியது.. ராஜேஸ்வரி தேட ஆரம்பித்து விடுவாள் என்ற நினைவில் ராதிகா எழுந்து கொள்ளப் போனாள்...

"எங்கே... எழுந்திருக்கப் பார்க்கிற..?"

அவன் சட்டென்று அவள் கையைப் பிடித்து விட்டான்... ராதிகா வெலவெலத்து விட்டாள்... இருள் போர்வை அவர்களைச் சுற்றி மூடியிருக்க... சந்தடியில்லாத பூங்காவில்... அவர்களை யாரும் பார்க்கவில்லை...

"கையை விடுங்க..."

முதன் முதலாக... ஒரு ஆணின் ஸ்பரிசம் பட்டதில் மின்சாரம் பாய்ந்தவளாக... அவள் நடுக்கத்துடன் கையை

Optimized by www.ImageOptimizer.net

உருவிக் கொள்ளமுயன்றாள்... அவன் பிடி இறுகியது... அவளால் கையை உருவிக்கொள்ள முடியவில்லை...

"விட முடியாது... என்ன பண்ணுவ...?" அவன் குரலில் சவால் இருந்தது...

என்ன பண்ணுவாள்...? அவளால் என்ன பண்ண முடியும்...?

அவள் பெண்... பிடிக்காதவனின் சிறு தொடுகையைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல்... போராடி தற்காத்துக் கொள்ள அவளால் முடியும்... அவனோ... அவளுக்குப் பிடித்தவன்... அவளை பெண்ணென்று முதன் முதலாக உணர வைத்தான்.. அவனை அவளுக்கு பிடித்து தொலைக்கிறது... அவன் தொட்டால் அவளது உடல் அனலில் பட்ட மெழுகாய் உருகிக் கரைந்து அவனுடன் சேரத் தவிக்கிறது... அவனுடன் அவளால் சேரத்தான் முடியும்... எப்படி போராட முடியும்...?

இருந்தும் அவள் போராடினாள்... பிடித்தவனின் பிடியிலிருந்து விலக மனமும்... உடலும் விரும்பாத போது... போராடி என்ன பயன்...?

பாலமுரளி மிக எளிதாக அவளை தன் கரங்களுக்குள் சிறை பிடித்தான்...

அவளது கையைப் பிடித்திருந்த கரங்கள் அவளை சுண்டியிழுக்க.. அவள் அவன் மார்பில் மோதி... தடுமாறி கீழே விழப் போனாள்... அவளை விழுந்து விடாமல் சுற்றி



அணைத்து அவனுடன் அவன் கரங்கள் இறுக்கிக் கொண்டன... அவள் மேனி முழுவதும் அவன் மேல் படர்ந்திருக்க.. ராதிகாவின் மனதில் சூறாவளிக் காற்று சுழன்றடிக்க ஆரம்பித்தது... கண்ணுக்குத் தெரியாத சுழலில் சிக்கி... மூச்சுத் திணற ஆரம்பித்த அந்த நொடியில் போராட்டத்தை அவள் மறந்து போனாள்... போராட அவள் மறந்து போனாள்...

ராதிகாவின் முதுகின் மீது படர்ந்திருந்த பாலமுரளியின் கைகள் பரவி முன்னேற ஆரம்பித்த போது... அவள் கிளர்ச்சியுற்று மயங்கி நின்றாள்... பாலமுரளி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்... ஆவேசத்தோடு அவள் இதழ்களில் அழுத்தமான முத்தத்தை பதித்தே விட்டான்...

ராதிகா தொய்ந்து அவன்மீது சரிந்தாள்... அவனது ஆவேச அணைப்பில் சிக்குண்டாள்... பதினைந்து தினங்களாக அடக்கிவைத்திருந்த கோபத்தையும்... ஏக்கத்தையும்... தாகத்தையும்... பால்முரளி அவள்மேல் பிரயோகித்துக் கொண்டிருந்தான்...

அவள் முகம் முழுவதும் படர்ந்த முத்தங்களின் ஈரம் படர்ந்து கொண்டிருப்பதை அவளுக்கு அறிவுறுத்தியும்.. அதைத் தடுக்க வழியின்றி செயலற்றுப் போனாள் ராதிகா...

அவனது இறுக்கமான அணைப்பு மேலும் இறுகிக் கொண்டிருக்க எழும்புகள் நொறுங்குமளவிற்கு இன்ப

அவஸ்தைக்கு ஆளானாள் ராதிகா... ஆணின் ஆக்ரமிப்பு உணர்த்திய இனம் புரியா உணர்வுகளின் ஆக்ரமிப்பில் அவள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த போது... பேச்சுக் குரல்கள் அவர்களுக்கு வெகு அருகாமையில் கேட்டன..

"அப்ப அந்த வீட்டை நீங்க சொன்ன விலைக்கே பேசி முடிச்சுடலாங்கறிங்க..."

"முடியுமா... ?"

"கொஞ்சம் முன்னே பின்னே வரும்..."

"பரவாயில்லை..."

"அப்ப சரி.. நான் நாளைக்கே பேசி முடிச்சிடறேன்.. நம்ம கமிசன் தொகையை மறந்துராதீங்க..."

"அதை மறப்பேனாய்யா.. மறந்தால் நீயும் விட்டு விடுவியா.."

யாரோ இருவர் பேசியபடி அவர்களை சமீபிக்க.. சட்டென்று பாலமுரளி அவளை விட்டு விட்டான்.. ஒரு நொடி தடுமாறி நின்றாலும்.. மறுநொடியில் தன்னுணர்விற்கு மீண்டு விட்ட ராதிகா.. அங்கே நிற்காமல் சிட்டாகப் பறந்து விட்டாள்...

பேசியவர்கள் பாலமுரளியைக் கடந்து போனார்கள் அவளைத் தொட்ட நினைவுகள் தந்த சுகத்தில் பாலமுரளி அங்கிருந்து வெளியேற மனமில்லாதவனாக... அங்கேயே அமர்ந்து விட்டான்...



சற்றுமுன் உணர்ந்த... அவளின் உடலின் மென்மை அவன் உடலை சூடேற்றியது.. அவன் தொட்டவுடன் அவள் உடலில் ஏற்பட்ட நடுக்கத்தை உணர்ந்த அந்த நொடிகளை விட்டு பிரிய மனமில்லாமல் அதிலேயே நிலை கொள்ள விரும்பினான் பாலமுரளி...

அவனின் கோபத்தைக் காட்ட நினைத்தவன்... கோபத்தை காட்டி விட்ட நினைவில் அவன் உதடுகளில் புன்னகை அரும்பியது...

துடித்த அவளது இதழ்களைத் தொட்ட தனது இதழ்களை விரல்களால் வருடிக் கொண்டவனுக்குள் அவளை விட்டுவிடக் கூடாதென்ற வெறிகிளர்ந்து எழுந்தது...

'என்ன நடந்தாலும் சரி.. அவ என்னுடையவளா ஆகனும்...'

அவன் மனம் சூளுரைத்தது...

Optimized by www.ImageOptimizer.net

## 27

**உன்கைவிரல்கள் பட்டபோது..**
**காற்றோடு நான் கலந்தேன்...**

அன்றைய இரவில் ராதிகா உறக்கத்தை தொலைத்தாள்...

நடந்து முடிந்த நிகழ்வை நினைத்தபோது... அவளுக்குள் பேரதிர்வு எழுந்தது... இன்னமும்கூட அவன் தொட்டுவிட்டதை அவளால் நம்பவே முடியவில்லை...

கலைந்த தலையுடன்... முகமெல்லாம் சிவக்க... ஓட்டமும்.. நடையுமாக அவள் வீட்டு வாசலை மிதித்த போது... வாசலில் நடை பயின்று கொண்டிருந்த கீதா புருவங்களை உயர்த்தினாள்...

"என்னடி இப்படி ஓடி வருகிற...?"

கீதா சூட்சுமப் புத்தி கொண்டவள் என்ற நினைவில் ராதிகா மனதிற்குள் சுதாரித்துக் கொண்டாள்... வேக மூச்சுக்களையெடுத்து தன்னை சமனப்படுத்திக் கொள்ள அவளுக்கு ஒரிரு நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டன..

"எப்படி ஓடி வருகிறேன்...?"



"என்னவோ.. பேய் துரத்துகிறதைப் போல ஓடி வருகிற..."

பேய்தான் துரத்துகிறது என்ற நினைவில் ராதிகாவின் முகத்தில் மென்மை பரவியது...

அந்தப்பேய் அவளுக்கு பிடித்தபேய் என்று சொன்னால் கீதா என்ன சொல்வாள் என்ற நினைவில் புன்னகைத்தாள் ராதிகா...

'அலறி விடுவா...'

"என்டி இப்படிச் சிரிச்சு வைக்கிற..?" கீதா அவளை வினோதமாக பார்த்தாள்...

"எப்படிச் சிரிச்சு வைக்கிறேன்...?"

"ஒரு மார்க்கமாய் சிரிச்சு வைக்கிறடி ராதிகா..."

"இந்த மார்க்கமெல்லாம் உனக்குத்தான் வரும்.. எனக்கு வராது..."

"இந்தக் கதையெல்லாம் என்கிட்ட விடாதே.. கொஞ்சநாளாகவே நீ ஒருமார்க்கமாகத்தான் இருக்கிற... நான் கவனிக்கலைன்னு நினைக்காதே..."

"திரும்பவும் இவ ஒருமார்க்கத்தை ஆரம்பிச்சிட்டயா...? கீதா.. பேசாம நீ இதைப்பத்தி பி.எச்.டி பண்ணிரேன்.."

"பார்க்கலாம்..."

"அதுக்கு முதல்ல ப்ளஸ் டூவை முடிக்கிற வழியைப் பாரு... எதிர்த்தவீட்டு தடியனைப் பார்க்காதே..."

Optimized by www.ImageOptimizer.net

"அவனெல்லாம் ஒரு ஆளாடி... ?"

"அப்புறம் எதுக்கு அவனைப் பார்க்கிற... ?"

"அவனை ஒன்னும் நான் பார்க்கல... அவன் என்னைப் பார்ப்பான்.. அதை நான் அவனுக்குத் தெரியாமல் பார்த்து வைச்சுக்குவேன்..."

"அது எதுக்குடி..."

"என் ரேன்ஜ் என்னன்னு எனக்குத் தெரிய வேணாமா... ?"

"இதில் என்ன ரேன்ஜ் வேண்டிக்கிடக்கு..."

"போ... ராது... இந்த வயசில.. நாலுபேர் நம்மள சைட் அடிச்சாத்தான் நமக்கு மதிப்பு..."

இப்படிப்பட்ட வியாக்கினத்தை இவள் ராஜேஸ்வரியின் முன்னால் சொல்லி வைத்தால் என்ன ஆகும் என்ற நினைவில் மீண்டும் சிரித்தாள் ராதிகா...

"பல்லைக் கழட்டி கையில கொடுத்துருவேன்.. ஏண்டி... படிக்கிற படிப்பில உன் ரேங்க் என்னன்னு பாருடின்னா.. நீ பக்கத்து வீட்டுக்காரன் பார்வையிலே உன் ரேன்ஜ் என்னன்னு பார்க்கறியா.. ? ஊஹீம்.. உனக்கு இந்த வீடு சரிப்படாது.. என்னங்க... மதுரைக்குப் பக்கத்திலே ஒரு ஆசிரம ஸ்கூல் இருக்கில்ல... அங்கே இவளை சேர்த்து... ஹாஸ்டலில் போட்டு விடுங்க... அப்பத்தான் இவ வழிக்கு வருவா..."



ராதிகாவின் மனதில் ராஜேஸ்வரியின் பிம்பம் சுத்திக் கொண்டிருப்பதை அறியாதவளாக...

"வரவர... ஏண்டி... இப்படி உனக்குள் நீயாய் பேசி சிரிச்சுக்கிட்டு இருக்க..." என்று வினவினாள் கீதா...

"இல்லை... நீ சொன்னதை அப்படியே நம்ம வீட்டு லேடி ஹிட்லர் கிட்டச் சொன்னால் எப்படியிருக்கும்னு நினைச்சுப் பார்த்தேன்.. சிரிப்பு வந்தது..."

"அடிப்பாவி... கூடப் பிறந்தவளுக்கு எதிராகவே சதி செய்யத் துணிஞ்சிட்டயா... ? உனக்கு நான் என்னடி கெடுதல் பண்ணினேன்.. ?"

"இப்படியெல்லாம் நியாயம் கேட்டால்... நிஜமாகவே லேடி ஹிட்லர்கிட்ட உன்னைப் பத்தி போட்டுக் கொடுத்து... பற்ற வைச்சிடுவேன்.. எப்படி வசதி... ?"

"இப்ப நான் என்னதாண்டி செய்யனும்.. ?"

"அடங்குடி..."

ராதிகா வாயில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தபடி... வாசல்படியில் ஏறப் போனாள்...

"ராதிகா..." என்று அழைத்தாள் கீதா...

எரிச்சலுடன் திரும்பினாள்... ராதிகா...

"உன்னைத் துரத்தற பேய் யாருடி... ?" கீதா கண்சிமிட்டவும் ராதிகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

"ஏண்டி.. நீ அடங்கவே மாட்டியா... ? இப்ப உனக்கு என்ன தெரியனும்... ?"

Optimized by www.ImageOptimizer.net

"உன்னைத் தூக்கற பேய் யாருன்னு தெரியணும்..."

"ம்ம்... மோகினிப் பேய்..! போதுமா..."

"ஊஹூம்... போதவே போதாது... மோகினிப் பேய் ஆண்களைத்தான் தூக்கும்.. நீ பெண்ணாச்சே..."

"இது... காட்டான் பேய்..."

பாலமுரளி சொன்ன பட்டிக்காட்டானின் நினைவில் சொல்லி விட்டு வீட்டுக்குள் போய்விட்டாள் ராதிகா...

இரவு கண்மூடிப் படுத்தபோது... அந்த பட்டிக்காட்டானின் முரட்டுக் கரங்கள் அவள்மேல் பரவிப் படர்ந்தன.. அவள் கிளர்ந்து விழித்தாள்... அவனது ஆண்மை ததும்பிய மார்பில் ஒன்றிய அனுபவத்தில் அவள் உடல் சிலிர்த்தது...

*'அம்மம்மா... கேளடி தோழி...*
*நிலாவினில் நின்றொரு நாழி..*
*சொல்லாலே உரைத்தது பாதி...*
*சொல்லாமல் அறிந்தது மீதி...*
*அம்மம்மா....'*

ராஜேஸ்வரிக்கு பிடித்தமான பாடல்... அவளுடன் சேர்ந்து ராதிகாவும் அடிக்கடி ரசிக்கும் பாடல்...

அதுநாள்வரை புரியாத பாடலின் வரிகளை அன்று புரிந்து உணர்ந்தாள் ராதிகா... அதுநாள்வரை அவள் வாயடித்த எதுவுமே இல்லாமல் புரிதான புதிரொன்றை அறிந்து கொள்ளும் முயற்சியின் முதல் படியில் கால்



வைத்த அனுபவத்தில் அவள் இன்ப அதிர்வை அடைந்திருந்தாள்...

*'பிஞ்சாக நானிருந்தேனே..*
*பெண்ணாக மாற்றி விட்டானே..*
*அஞ்சாமல் அணைத்து விட்டானே...'*

பாலமுரளியின் அஞ்சாமையில் அவளது நெஞ்சம் நிலைகொண்டு விம்மித் தணிந்தது... அவன் மீதான காதல் அலைகடலைப் போல பொங்கி எழுந்தது.. அவன் அவளை குற்றம் சாட்டியதெல்லாம் மறைந்து.. மறந்து போய்.. அவன் செய்த குற்றம் மட்டுமே நினைவில் நின்றது...

'எவ்வளவு தைரியம்...'

இதை நினைக்கும் போது அவள் நெஞ்சம் ஏன் கற்கண்டாக இனிக்கிறது என்ற விந்தை மட்டும் அவளுக்குப் புரியவே இல்லை..

மறுநாள் தெரு முனையைத் தாண்டும் போது... என்றும் இல்லாத வகையில் அவளது விழிகள் அவனைத் தேடித் துழாவி... ஏமாந்தன...

அவளது தேடுதல் யாருக்காக என்று அறியாதவர்களாக... அங்கே நின்றிருந்த மற்றவர்கள் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்க... அதற்கு மேலும் தேட முடியாமல் ராதிகா ஸ்கூட்டியின் வேகம் கூட்டிப் பறந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

காலேஜில் ஹேமா... ஷோபாவைப் பற்றி எதையோ சொல்லிச் சிரிக்க.. ராதிகா அதைக் கவனிக்காமல் புல்வெளியின் புல்களைக் கிள்ளிக் கொண்டிருந்தாள்...

"என்னடி ஆச்சு..." என்று புருவம் உயர்த்தியவளிடம்...

"தலைவலி..." என்று பொய் சொன்னாள்...

"அது ஷோபாவுக்குத்தானே வரும்..? அவளுக்கு தலைவலியை வர வைக்கிற உனக்கே இன்னைக்கு தலைவலி வந்திருச்சா.. இதைப்பாருங்கடி..."

ஹேமா மற்றவர்களை அழைக்க.. அவர்கள் ஆரவாரித்துச் சிரித்தார்கள்... அடுத்து அவர்களின் பேச்சில் டிவி ஷோக்களும்... சினிமாக்களும் அடிபட ஆரம்பிக்க... ராதிகா.. மெல்ல.. மெல்ல அந்தப் பேச்சில் கலந்து கொள்ள ஆரம்பித்தாள்...

"எப்பொழுதும் உன் அலப்பறையில்ன்னு ஒரு பிளாக்கில பார்த்தேன்... சிரித்து சிரித்து வயிறு புண்ணாகிப் போச்சு..."

"இது ஏதோ சினிமாப் படத்தோட டைட்டில் மாதிரி இருக்கே..."

"ஆமாமாம்.. முப்பொழுதும் உன் கற்பனையில்ன்னு... ஒரு சினிமா வந்ததே..."

"தோடா.. அதை வைச்சு... இந்த அலம்பலா..? ஆமாம்... அலப்பறை பண்ணியது யாராம்...?"



"நம்ம நானும்... நீயும்.. கோகுல் நாத்தாம்..."

"அவரை ஏண்டி வம்புக்கு இழுக்கிறாங்க...? அவர் பாட்டுக்கு அவருண்டு.. அவர் கோட்டுண்டுன்னு.. எப்பவும் தனிவழியில் ராஜநடை போட்டு.. போய்கிட்டு இருக்கார்.. இவங்களை அவர் என்ன பண்ணினாராம்...?"

"அவரைப் பற்றிய சின்னச்சின்ன விமரிசனங்கள் நிறைய... அதைச் சிரிக்க சிரிக்க கொடுத்திருக்காங்க..."

"மத்தவங்களைப் பற்றி கேலி பண்ணினா... அது சிரிப்புத்தான்..."

"விடேண்டி... அவரே மீடியாவில் இருக்கார்.. அவரும் இதைப் போல மற்றவங்களை கிண்டல் கேலியில் விமரிசனம் செய்கிறவர்தானே..."

"அப்புறம் வேற என்ன படிச்சே..."

"நம்ம தலயோட புதுப்படத்தில் மொத்தம் 89 கொலைகள் வருதாம் அதில் 78ஐ நம்ம தலயே பண்ணியிருக்காராம்..."

"ரமணா விஜயகாந்தைவிட.. புள்ளி விவரம் தர்றதில் எக்ஸ்பர்ட்டா இருக்கிறாங்களே..."

"கூகுளில் இருக்கிறவங்க எல்லாம் பண்ணுவாங்க.."

"அதைச் சொல்லு... எதைத் தேடினாலும்... அடுத்த நொடியில் பத்து ஆப்சன்களை கொடுத்து.. இதுவா.. இதுவான்னு கேட்கிறதில கூகுளுக்கு நிகர் கூகுள்தான்..."

Optimized by www.ImageOptimizer.net

ராதிகா பாலமுரளியை மறந்து போனாள்... இரவுகளில் அவனது நினைவு வருகிற போதெல்லாம் பாடங்களை எடுத்து வைத்து படிக்க ஆரம்பித்து விடுவாள்... அதில் வெற்றியும் கண்டாள்...

பார்க்கிற்கு... கோவிலுக்கு... லைப்ரரிக்கு என்று போகும் போதெல்லாம் அவளது கண்கள் அவனைத் தேடும்.. அவன் தென்படவே இல்லை...

'இவ்வளவுதானா நீ...' அவள் ஏமாற்றமடைந்தாள்.. விட்டுச்செல்கிறவன்... ஏன் அவளைத் தொட்டுச் சென்றான் என்ற கோபம் அவளுக்குள் எழுந்தது...

இனம் புரியாத உணர்வுகளை அவளுக்குள் விதைத்து விட்டுச் சென்றவனின் எண்ணம் எதுவாக இருக்கும் என்று அவளால் அனுமானிக்கவே முடியவில்லை...

அவனை நேரில் பார்த்து உண்மையை உணர்த்தி விட அவள் மனம் துடித்தது... ஆனால்.. அவனைத்தான் அவளால் பார்க்கவே முடியவில்லையே...

எங்கேயோ... குற்றாலத்துக்கு பக்கத்தில்... தேனூத்து கிராமத்தில் இருப்பவனை எப்படி அவள் தேடிக் கண்டு பிடிப்பது..?

ஷோபாவிடம் கேட்க அவளால் முடியுமா...?

அவன் ஷோபாவுக்கு உறவினன்... ஆனால் ஷோபாவிடம் பாலமுரளியைப் பற்றிக் கேட்க ராதிகாவால்



முடியாது எனும் போது.. அதனால் அவளுக்கு என்ன ஆகப்போகிறது...?

தினமும் அவள் கண்முன்னால் ஷோபா வந்து போய் கொண்டிருந்தாள்... பாலமுரளியின் இருப்பிடமும்.. முகவரியும் அறிந்தவள் அவள் என்ற நினைவில் ராதிகாவின் இதயம் துடிக்கும்... அவன் எங்கேயிருக்கிறான் என்ற கேள்வி வாய்வரை வந்து விடும்... அவற்றை உள்ளே தள்ளி... வாயை இறுக மூடி வாய்பூட்டு போட்டுக் கொள்வாள் ராதிகா...

அவளுக்கு ஷோபாவின் குணம் தெரியும்... நிச்சயமாய் அவள் ராதிகாவின் காதலுக்கு உதவப் போவதில்லை... அதற்கு மாறாக ராதிகா பாலமுரளியின் மேல் ஆர்வம் கொண்டு... அவனை தேடி அலைவதாக காலேஜிற்குள் கதையைப் பரப்பி விடுவாள்... அவள்தான் இப்படியொரு வாய்ப்பிற்காக.. எப்போது... எப்போது... என்று காத்துக்கிடக்கிறாளே...

ராதிகா தனி மனுஷியில்லை... அவள் கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தின் ஒரு அங்கம்... அவளது சின்னத் தவறுகூட அந்தக் குடும்பத்தின் ஒட்டு மொத்த அமைதியையும்... நிம்மதியையும் குலைத்து விடும்...

கட்டுக்கோப்பான மத்திய தர குடும்பங்களில்... காதல் என்பது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது...

ராதிகா கத்தி முனையில் நின்றாள்... அந்தக் கத்தியின் கூர்மை அவளைக் கிழித்தால் அவளால்

Optimized by www.ImageOptimizer.net

தாங்கிக் கொள்ள முடியும்... அது அவளையும் தாண்டி.. அவள் குடும்பத்தை கிழித்து விடுமே... அதை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்...?

அவள் அந்தரங்கத்தில் தன் காதலை புதைத்தாள்...

## 28

**அவளோடு நானிருந்த...**
**அந்த மணித்துளிகள் போதும்...**

ஆற்றங்கரையின் மணலினில் கால் புதைய நடந்து கொண்டிருந்தான் பாலமுரளி... நதிநீரின் அலைகள் சிறுசிறு வளைவுகளாக கரையில் மோதித் திரும்பும் போது உண்டான நீர் குமிழிகளில் அவன் மனம் லேசாக மறுத்தது... நதிநீரின் நுரையினில் பாதம் படிய நின்றவனுக்கு... அந்த முன்னிரவுப் பொழுதில்... பூங்காவின் இருளில் அவன் பாதம்மீது பட்ட அவள் பாதத்தின் மென்மை நினைவுக்கு வந்தது...

முன்னிரவிற்கும் அவனுக்குமான சம்பந்தத்தின் ஆணிவேரை அவனால் அடையாளம் காண முடியவில்லை...

அவளை அவன் முதன் முதலாக சந்தித்ததும் முன்னிரவுப் பொழுதில்தான்...



அவளை முதன்முதலில் அவன் தொட்டு முத்தமிட்டதும் ஒரு முன்னிரவுப் பொழுதில்தான்...

அவளைப் பற்றிய நினைவுகள் அசுர வேகத்தில் சுழன்றெழுந்து அவனை ஆக்ரமிப்பதை அவனால் தடுக்க முடியவில்லை...

பாதி இரவுகளில்... கனவில் அவளுடன் கலப்பதான நினைவில் அவன் உடலில் பரவசம் ஊற்றாகப் பெருகிப் படர்கிறது... அந்த சந்தோசத்தில் கண் விழிப்பவனின் கைப்பிடியில் அவள் இருக்காமல் தலையணை இருக்கும் போது... மீதி இரவுகள் நரகமாகக் கழிகின்றன...

அவளை சிறையெடுக்காமல் சென்னையை விட்டு திரும்பக் கூடாது என்ற உறுதியுடன்தான் அவன் இருந்தான்... அன்று அவளைத் தொட்டுத் தழுவிய நினைவுகளுடன்.. மறுநாளிலிருந்து... எவ்வாறெல்லாம் அவளை முற்றுகையிட வேண்டும் என்ற வியூகங்களை அவன் வகுத்துக் கொண்டிருந்தபோது... அவனது செல்போன் அலறியது...

"முரளி..." மேகலாவின் குரலில் சோர்வும்... அவனைத் தேடும் பதட்டமும் இருந்தது...

தீனமாக ஒலித்த அந்தக்குரலில்... அவன் உடலில் இருந்த காதல் கிளர்ச்சியுணர்வுகள் பறந்தோட.. அவன் பதட்டமாக எழுந்து அமர்ந்தான்...

"அம்மா...! என்னம்மா ஆச்சு..? ஏன் இப்படிப் பேசறிங்க..."

Optimized by www.ImageOptimizer.net

"எனக்கு நெஞ்சு வலிக்குதுடா தம்பி..."

அந்த நொடியில் தன்னை அம்பாளனவனாக உணர்ந்தான் முரளி..

அவனைப் பெற்ற தாய்... மரண பயத்துடன் அவனை அழைக்கிறாள்... அவளுக்கு கணவனில்லை... மகளும் அருகில்லை... அவளுடைய வாழ்க்கையின் ஆதாரம் அவளுடைய பிள்ளைதான்... பாதுகாக்க வேண்டிய முரளியோ நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறான்... இருந்தபோதும் அந்தத்தாய் அந்த அவலக் குரலை அவனிடம் தான் எழுப்புகிறாள்..

பதினைந்து தினங்களாக கடமையை மறந்து காதலில் மூழ்கி விட்ட தன்னைத்தானே நொந்து கொண்டான் பாலமுரளி...

"பயப்படாதீங்கம்மா... நான் உடனே புறப்பட்டுவர்றேன்.."

"நீ வருகிற வரைக்கும் நான் பிழைத்திருப்பேனாடா முரளி..."

"உங்களுக்கு ஒன்னும் ஆகாதும்மா... நானிருக்கேன்.. கடவுள் இருக்கார்... அவர் நம்மைக் கைவிடமாட்டார்..."

"எனக்கு ஒன்னும் இல்லைடா தம்பி... உங்க அப்பா போனபின்னாலே... எனக்கு என்ன இருக்கு..? நீயும்.. உன் அக்காவும் தான் இருக்கீங்க... உங்களுக்காக இருந்தேன்டா தம்பி... அக்காவுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி அவள வாழவைச்சிட்ட... உன் கல்யாணத்தையும்



கண்டுப்பிட்டா போதும்டா முரளி... என் ஜீவன் இருக்குமடா..?"

திக்கித் திணறி மேகலா பேசுவதைக் கேட்கச் சகிக்கவில்லை முரளிக்கு... அவன் போனை அணைத்து விட்டான்... உடனடியாக அவனது மேனேஜரை போனில் அழைத்தான்...

"சதீஷ்..."

"சார்..." தூக்கக் கலக்கத்துடன் குரல் கேட்டது..

"உடனே எங்க வீட்டுக்கு ஆம்புலன்ஸ் அனுப்பிடுங்க... அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்..." காட்டுத் தீயின் வேகத்துடன் பேசினான் பாலமுரளி...

"என்ன சார் சொல்கிறீங்க..." தூக்கம் கலைந்த சதீஷின் குரலில் பரபரப்பிருந்தது...

பரபரவென்று அவனுக்கு ஆணைகளை பிறப்பித்து விட்டு தென்காசியிலிருந்த மருத்துவமனையை தொடர்பு கொண்டு மேகலாவின் உடல்நிலையைப் பற்றிக் கூறி.. ஆம்புலன்ஸிற்கு ஏற்பாடு பண்ணி விட்டு.. புயல் வேகத்தில் ஹோட்டல் ரூமை காலி செய்துவிட்டு காரில் பாய்ந்தான் பாலமுரளி..

கார் விரைந்து கொண்டிருக்க.. ஆங்காங்கே காரை நிறுத்தி போனில் சதீஷை அழைத்தான் பாலமுரளி...

Optimized by www.ImageOptimizer.net

மேகலாவின் உடல்நிலையைப் பற்றி விசாரித்துக் கொண்டே... விடிவதற்குள் தென்காசியை அடைந்து விட்டான்...

"சரியான நேரத்தில் கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டீங்க... கொஞ்ச லேட்டாகியிருந்தாலும்... உயிர் பிழைக்கிறது கஷ்டம்தான்..."

டாக்டர் சொன்னபோது முரளி இடிந்தே போய் விட்டான்...

மேகலா மட்டும் அவனுக்கு போன் பண்ணாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்...?

அவசர சிகிச்சைப் பிரிவில்... மாத்திரையின் உதவியுடன் கண்மூடிப் படுத்திருந்தவளின் சோர்ந்த முகத்தைக் கண்டவனின் கண்களில் கண்ணீர் பெருகியது...

"அம்மா..."

அவளது கையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு... அவள் பக்கத்தில் அமர்ந்து விட்டான் பாலமுரளி...

அன்னைக்கும்... பிள்ளைகளுக்குமான சொந்தம் ஆத்மார்த்தமானதல்லவா...? பெற்ற பிள்ளையின் ஸ்பரிசத்தை உணராத தாய் உண்டா...?

மகனின் ஸ்பரிசத்தில் கண் விழித்தாள் மேகலா..



"முரளி... வந்துட்டியாடா மகனே..." அவன் கண்களில் ஜீவன் திரும்ப ஆரம்பித்தது...

"வந்துட்டேன்ம்மா..." குற்ற உணர்வுடன் சொன்னான் பாலமுரளி...

"கடைசியா உன்கிட்டப் பேசணும்னு தோணிருச்சுடா தம்பி..." தழுதழுத்தாள் மேகலா...

"அப்படிச் சொல்லாதீங்கம்மா..." அவள் வாயை இறுக மூடினான் பாலமுரளி...

"போனதும் திரும்பிருவேன்னு சொல்லிட்டுப் போனயே.. ஏண்டா முரளி அத்தனை நாளா அங்கேயே தங்கிட்ட...?"

இந்தக் கேள்விக்கு அவன் என்ன பதிலைச் சொல்லுவான்...?

பெண் என்னும் மாயப்பிசாசு என்னைப் பிடித்து ஆட்டி விட்டதம்மா என்றா சொல்ல முடியும்...?

தாயை.. தமக்கையை... தொழில்களை.. ஊரை.. உறவை.. அவனது உயரத்தை என்று அனைத்தையும் மறக்க வைத்து... ஒரு பெண் அவனை அவள் பின்னால் சுற்றி வர வைத்திருந்தாள் என்ற உண்மையைச் சொன்னால் அந்த தாய் மனம் தாங்குமா..?

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லைங்களா தம்பி... பார்த்துட்டுப் போக வந்தோம்..."

Optimized by www.ImageOptimizer.net

ஊரே திரண்டு வந்தது... மேகலாவின் உடல் நிலையைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தது... அந்த நெருக்கடியான நேரத்தில் அவன் தாயின் அருகில் இல்லாமல் போனதற்கு ஆயிரம் காரணங்களை.. அதுவே சொல்லியது...

"தம்பிக்கு ஆயிரம் வேலை இருக்கும்... ஏதாச்சும் புதுசாய் தொழில் ஆரம்பிக்க திட்டம் தீட்டியிருப்பாங்க... இல்லைன்னா.. ஒவ்வொரு நிமிசத்தையும் அளந்து செலவளிக்கும் தம்பி.. அத்தனை நாளா சென்னையில இருந்திருப்பாங்களா...?"

"அதைச் சொல்லுமய்யா.. பணம் காசுக்கு பஞ்சமில்லாத குடும்பத்தில பிறந்த பெரிய மனுசனில்ல... நம்மதம்பி... அவர் காசு பணத்தை கணக்குப் பார்க்காம செலவளிப்பாரு.. நேரத்தை மட்டும் வீணாக்கவே மாட்டாரே... அந்தக் கணக்கில நம்ம தம்பி மன்னனில்ல... என்னய்யா நான் சொல்றது..?"

எதிரே இருப்பவர் அதை இல்லையென்றா சொல்வார்..?

"அதானே..." என்று அவர் ஆமோதித்தாள்...

அவன் அந்த ஊருக்கு பெரிய மனிதன்... இளம் வயதில் பல உயரங்களை தொட்டவன்.. அந்த ஊருக்கே பெருமை தேடித்தந்தவன்... அவன் காரணமில்லாமல் சென்னையில் முகாமிட்டிருக்க மாட்டான் என்றே அனைவரும் நினைத்தார்கள்...



ஆனால்.. அவன் கூடப்பிறந்த பாலசரஸ்வதி மட்டும்.. அப்படி நினைக்கவில்லை...

"அந்தப் பெண் யாரு முரளி...?"

"அக்கா..."

"டேய்.. நான் உன் வயசைத் தாண்டி வந்தவ.. பெண்ணாகப் பிறந்ததாலே இருபது வயதைத் தாண்டியதுமே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அனுப்பி வைச்சிட்ட.. நானும் ரெண்டு பிள்ளைகளுக்கு தாயாகிட்டேன்... எனக்கு விவரம் ஜாஸ்தி... அம்மாவையும்.. ஊர்க்காரங்களையும் தான் உன்னால் ஏமாற்ற முடியும்.. என்னை ஏமாற்ற முடியாது.. சொல்லு.. யாரு அந்தப் பொண்ணு...?"

பொறுப்பான அக்காவாக தம்பியை குறுக்கு விசாரணை செய்தாள் பாலசரஸ்வதி.. அவன் முகம் இறுகியது... ராதிகாவைப் பற்றிய விவரங்களை பாலசரஸ்வதியுடன் பகிர்ந்து கொள்ள அவன் விரும்பவில்லை...

"நீ புத்திசாலிதான்.. ஒப்புக்கிறேன்.. அதுக்காக எதையெதையோ கற்பனை பண்ணிக்காதே..."

"டேய்.. நீ ஷோபா வீட்டுக்குப் போனப்ப.. மறுநாளே ஊருக்கு கிளம்பப் போகிறதா சொல்லியிருக்க..."

"ஆமாம்.. அது ஒரு பெரிய குத்தமா..?"

"அப்புறமும் ஏண்டா.. ரெண்டு வாரத்துக்கு அங்கேயே டேரா போட்ட..?"

Optimized by www.ImageOptimizer.net

"இங்கே பார்... எனக்கு கரும்பு மில்லில் ஆயிரத்தெட்டு பிரச்னைகள் இருக்கு.. அதைச் சொன்னால் உனக்குப் புரியுமா..? ஒரேநாளில் சரி பண்ணிப் புடலாம்ன்னு நான் போனேன்... போன இடத்தில் வேலை முடியல.. வாரக் கணக்கில வேலை இழுவையாய் இழுத்திருச்சு... என்ன பண்ணச் சொல்ற...?"

தம்பி காட்டிய கண்டிப்பில் பால சரஸ்வதி பின்னடைந்து விட்டாள்... அவளுக்கு கரும்பு மில்லையும் தெரியாது.. அது பற்றிய கணக்கு வழக்கையும் தெரியாது.. அப்படியிருக்கையில் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அவள் தம்பியுடன் மோத முடியும்..?

"அப்புறம் என் சின்ன மாமியா அப்படிச் சொன்னாங்களே..."

"நான் பார்க்கிற வேலைகளையெல்லாம் உன் சின்ன மாமியாரிடம் ஒப்பிக்கனும்னு எனக்கென்ன தலையெழுத்தா..?"

"டேய்.. அவங்க என் சின்ன மாமியாடா.."

"உனக்குத்தான் சின்ன மாமியா.. எனக்கில்லை.."

அந்தப் பேச்சில் பாலசரஸ்வதி அடங்கி விட்டாள்.. அதுவரை சந்தேகப்படும் படியான எந்த காதல் விவரங்களிலும் பாலமுரளி சிக்கிக் கொண்டதாக சரித்திரம் சொல்லாததால்.. அவள் ஷோபா சொன்ன வார்த்தைகளை... பெரிது படுத்தவில்லை..



"அண்ணி... உங்க தம்பி எங்க வீட்டு பார்ட்டிக்கு வந்திருந்தப்போ என் பிரண்டு ஒருத்தியை மீட் பண்ணினார்..."

சாதிகாவை பாலமுரளியுடன் அனுப்பி வைத்தும் விட்டு... அதைப் பற்றி பாலசரஸ்வதியின் காதினில் போட்டும் வைக்கும் திறமை ஷோபாவிற்கு மட்டுமே சொந்தமானது...

அதுவரை அதுபோன்ற விவரங்களை தம்பியைப் பற்றிய விவரங்களாக கேட்டறியாத பாலசரஸ்வதி... ஆச்சரியப்பட்டுப் போனாள்...

"மீட் பண்ணினாருன்னா.. என்ன ஷோபா அர்த்தம்..?"

"அவ என் கிளாஸ் மேட் அண்ணி.. பங்சனுக்கு வந்திருந்தா.. உங்க தம்பிக்கு இன்ட்ரொடியூஸ் பண்ணி வச்சேன்.. ஹலோன்னு சொல்லிட்டுப் போயிடுவாருன்னு பார்த்தா.. அந்தப் பொண்ணு பின்னாலேயே பார்ட்டி முடிகிற வரைக்கும் சுற்றினார்.. போதாக்குறைக்கு.. நைட் நேரத்தில அவளைக் காரில் கொண்டு போய் வீட்டில் விடுகிறேன்னு கூடவே கூப்பிட்டுக்கிட்டும் போயிட்டார்..."

மறந்தும்.. ஹேமாவையும் சேர்த்துத்தான் பாலமுரளி கூப்பிட்டுக் கொண்டு போனான் என்பதை அவள் சொல்லவில்லை...

Optimized by www.ImageOptimizer.net

"ஓ..." பாலசாஸ்வதியின் குரலில் தோன்றிய யோசனையில் ஷோபாவின் மனதில் சந்தோசம் ஊற்றெடுத்தது...

"அண்ணி.. அந்தப் பொண்ணு மிடில் கிளாஸ் பொண்ணு... இதையும் நீங்க நினைவில் வைச்சுக்கங்க.."

"அப்படியா...?"

"அவகூடல்லாம் நான் சமதையா பேசிப் பழக மாட்டேன்.. அண்ணி... என் திக் பிரண்ட்ஸை இன்வைட் பண்ணின இடத்தில இவ இருந்தா... என்னையும் கூப்பிட மாட்டயான்னு ஏக்கமாய் கேட்டா.. நீயும் வான்னு ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன் அண்ணி... நிஜமாகவே வந்து தொலைச்சிட்டா.. வந்தவளுக்கு திரும்பிப் போக முடியலையாம்... வரும்போது பஸ்ஸில் வந்துட்டேன்.. திரும்பிப்போக ஆட்டோவை ஏற்பாடு பண்ணிக் கொடுன்னு என்னை டிஸ்டர்ப் பண்ண ஆரம்பிச்சுட்டா.. தலையெழுத்தேன்னு.. எங்க வீட்டு கார் டிரைவரைக் கூப்பிட்டு அவளை டிராப் பண்ணச் சொன்னா.. உங்க தம்பி முந்திக்கிட்டு தான் கொண்டு போய் விடறேன்னு சொல்லிட்டார்..."





# 29



**காத்திருந்த காலங்களை... காதலனே! நீ அறிவாயா...?"**

ஷோபா கதை பிணைவதில் கெட்டிக்காரி.. அவள் சிறந்த கதைசொல்லி...! அதை உணராத பாலசரஸ்வதி.. குறுக்கிடாமல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்... தம்பியின் எதிர்காலம் குறித்த கவலை அவள் மனதில் எழுந்தது...

ஷோபா கூறிய நடுத்தர குடும்பம் என்ற விவரம் அவள் மனதில் பதியவில்லை... ஷோபா விருந்திற்கு அழைக்காத போது... என்னையும் அழைக்க மாட்டாயா என்று கேட்ட பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்ற சிந்தனைதான் அவள் மனதில் ஓடியது...

அப்படி பெரிய இடத்து தொடர்புகளை தானாக தேடிப் போகிறபெண் குடும்பத்திற்கு உசிதமானவளாக இருக்க மாட்டாள் என்பது அவளது எண்ணமாக இருந்தது...

வந்தவள் தானாகத் திரும்பிப் போகாமல்.. விருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களை தொந்தரவு செய்திருக்கிறாள்.. அதிலிருந்து அவள்

Optimized by www.ImageOptimizer.net

"ஓ..." பாலசரஸ்வதியின் குரலில் தோன்றிய யோசனையில் ஷோபாவின் மனதில் சந்தோஷ ஊற்றெடுத்தது...

"அண்ணி.. அந்தப் பொண்ணு மிடில் கிளாஸ் பொண்ணு... இதையும் நீங்க நினைவில் வைச்சுக்கங்க.."

"அப்படியா...?"

"அவகூடல்லாம் நான் சமதையா பேசிப் பழக மாட்டேன்.. அண்ணி... என் திக் பிரண்ட்ஸை இன்வைட் பண்ணின இடத்தில இவ இருந்தா... என்னையும் கூப்பிட மாட்டயான்னு ஏக்கமாய் கேட்டா.. நீயும் வான்னு ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன் அண்ணி... நிஜமாகவே வந்து தொலைச்சிட்டா.. வந்தவளுக்கு திரும்பிப் போக முடியலையாம்... வரும்போது பஸ்ஸில் வந்துட்டேன்.. திரும்பிப்போக ஆட்டோவை ஏற்பாடு பண்ணிக் கொடுன்னு என்னை டிஸ்டர்ப் பண்ண ஆரம்பிச்சுட்டா.. தலையெழுத்தேன்னு.. எங்க வீட்டு கார் டிரைவரைக் கூப்பிட்டு அவளை டிராப் பண்ணச் சொன்னா.. உங்க தம்பி முந்திக்கிட்டு தான் கொண்டு போய் விடறேன்னு சொல்லிட்டார்..."



29

"காத்திருந்த காலங்களை...
காதலனே! நீ அறிவாயா...?"

ஷோபா கதை பிணைவதில் கெட்டிக்காரி.. அவள் சிறந்த கதைசொல்லி...! அதை உணராத பாலசரஸ்வதி.. குறுக்கிடாமல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்... தம்பியின் எதிர்காலம் குறித்த கவலை அவள் மனதில் எழுந்தது...

ஷோபா கூறிய நடுத்தர குடும்பம் என்ற விவரம் அவள் மனதில் பதியவில்லை... ஷோபா விருந்திற்கு அழைக்காத போது... என்னையும் அழைக்க மாட்டாயா என்று கேட்ட பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்ற சிந்தனைதான் அவள் மனதில் ஓடியது...

அப்படி பெரிய இடத்து தொடர்புகளை தானாக தேடிப் போகிறபெண் குடும்பத்திற்கு உசிதமானவளாக இருக்க மாட்டாள் என்பது அவளது எண்ணமாக இருந்தது...

வந்தவள் தானாகத் திரும்பிப் போகாமல்.. விருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களை தொந்தரவு செய்திருக்கிறாள்.. அதிலிருந்து அவள்

Optimized by www.ImageOptimizer.net

ஓசி கார் பயணத்திற்கு ஆசைப்படுகிறவள் என்றல்லவா ஆகிறது..? அப்படிப்பட்டவளை தம்பி தன்காரில் ஏற்றிக் கொண்டானா...?

"நான் என்ன செய்ய முடியும் அண்ணி...? உங்க தம்பி சொல்லும் போது.. வேணாம்.. வேணாம்.. எங்க வீட்டுக் காரில் அவளை அனுப்பி வைக்கிறேன்னா சொல்ல முடியும்...? அப்படிச் சொன்னா.. உங்க தம்பி என்னைப்பற்றி என்ன நினைச்சுக்குவார்..?"

ஷோபாவின் குரலில் ஓடிய அதீத கவலையில் நெக்குருகிப் போய்விட்டாள் பாலசரஸ்வதி..

"அதெல்லாம் அவன் ஒன்னும் நினைச்சுக்க மாட்டான்.. நானிருக்கேன்.. கவலைப்படாதே..."

"எனக்கும் அதுதான் அண்ணி... உங்க தம்பிக்காக பார்க்கலைன்னாலும்.. உங்களுக்காக நான் பார்க்கனுமா.. வேணாமா..?"

"கட்டாயம் பார்க்கனும் தான்..."

"அதனாலதான்.. அவர் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசலை..."

இப்படிப்பட்ட பெண் தம்பியின் மனைவியாக வந்தால்... பிறந்த வீட்டில் தன் உரிமை குறையவே குறையாதே... என்று மகிழ்ந்து போனாள் பாலசரஸ்வதி...

ஷோபாவின் எண்ணமே வேறு.. பாலமுரளியின் பார்வையில் ராதிகாவைக் கண்டதும் தோன்றும்



[illegible]ன்னலில் அவளுக்கு சற்றும் உடன்பாடில்லை... அவள் சங்கரைத்தான் தன் தேர்வாக வைத்திருக்கிறாள் என்பதும்.. வாய்ப்புக் கிடைத்தால் சங்கருக்கு மனைவியாகி விடுவாள் என்பதும் வேறு...

அவளது கனவு நிறைவேறி சங்கருக்கு அவள் மனைவியாகி விட்டாலும்... பாலமுரளிக்கு ராதிகா மனைவியாகி விடலாமா..? அதற்கு அவள் விடலாமா..?

பாலமுரளி கிராமத்துக்காரன்தான் என்றாலும்.. சங்கருக்கு இணையான... ஏன் சங்கரைவிட அதிகமான பணக்காரன்.. வசதியானவன்... ஷோபாவின் தாய்வழி சொந்தக்காரன்.. பெயர் சொன்னாலே தெரிந்து விடும் அளவிற்கு.. அந்த மாவட்டத்திலேயே பெயர் பெற்றவன்...

அவனுக்கு ராதிகா மனைவியாவதா..? அதை ஷோபா அனுமதிப்பதா..? ஒருநாளும் அதற்கு அவள் விடமாட்டாள்..

சங்கரை ஷோபா.. திருமணம் செய்து கொண்டாலும்... ராதிகாவை பாலமுரளி திருமணம் செய்து கொள்ள விட மாட்டாள் எனும்போது... சங்கருடன் அவளுக்கு திருமணம் நடக்குமா.. நடக்காதா என்ற நிலையில்.. அவள் எப்படி பாலமுரளியின் பார்வையை ராதிகாவின் மீது படிய அனுமதிப்பாள்..?

சங்கர் இல்லாவிட்டாள்.. அவள் பாலமுரளியைத்–தானே தேர்வு செய்தாக வேண்டும்..?

கைவிருப்பில் இருக்கும் மாப்பிள்ளையான பாலமுரளியை பத்திரப் படுத்திக் கொள்ள.. அவனது அக்காவும்.. அவளது ஒன்று விட்ட அண்ணனின் மனைவியுமான பாலசரஸ்வதியிடம் அவள் போட்டுக் கொடுத்து விட்டாள்... பாலசரஸ்வதியும் யோசிக்க ஆரம்பித்துவிட்டாள்... எப்போதும் ஒருநாளுக்கு மேல் வெளியூர்களில் தங்காத பாலமுரளி அந்த முறை பதினைந்து தினங்களுக்கு மேல் சென்னையிலேயே தங்கியிருந்தது.. அவளது சந்தேகத்தை அதிகப்படுத்தி விட்டது...

அதனால்தான்... அவள் கேள்வி மேல் கேள்வி கேட்டு.. தம்பியை துளைத்தெடுத்தாள்... அவனோ ஒரே ஒரு கேள்வியில் அவள் வாயை அடைத்து விட்டான்.. அதற்குமேலும்... அப்பனுக்கே பாடம் சொல்லும் அந்த சுப்பிரமணியைப் போன்ற தம்பியிடம் அவள் வாய் கொடுப்பாளா என்ன...?

மேகலாவின் உடல் தேறியதும் அவளை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார்கள்... லேசான நெஞ்சுவலிதான் என்றாலும்... ஜாக்கிரதையாக அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருந்தார்...

“இப்போது வந்தது மைல்ட் அட்டாக்தான் முரளி... ஆனாலும்.. இனிமேல் இதைப்போல வராம நீங்க பார்த்துக்கனும்...”

“சரிங்க சார்..”



“அதிகமான மன உளைச்சல்... அதிர்ச்சி... இது ரெண்டையும் அவங்க ஃபேஸ் பண்ணாம பார்த்துக்கங்க... இதுதான் அட்டாக்கை வரவழைக்கிற விசயங்கள்.. முக்கியமாக அவங்களை தனிமையில் விடாதீங்க.. அவங்க தனியா இருந்தா... எதையாவது யோசித்து மனதைப் போட்டு உழப்பிக்குவாங்க...”

அதுதான் காரணமா..? தொடர்ந்து பதினைந்து தினங்களாக மேகலாவை அவன் தனிமையில் விட்டது தான் காரணமா..? அதனால்தான் அவள் எதையெதையோ நினைத்து மனதிற்குள் களைத்துப் போனாளா..?

குற்ற உணர்வில் பாலமுரளி குறுகிப் போனபோது... அதைத் தன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டாள் பாலசரஸ்வதி...

“நான் சுயநலமாகிட்டேன்டா.. கல்யாணம் பண்ணிக்கிட்டு போனா.. சீர்வாங்க மட்டும்தான் பிறந்த வீடுன்னு எனக்கு எண்ணம் வந்திருச்சுடா.. நீ ஒத்தை ஆளாய் தொழிலையும் பார்த்து.. குடும்பத்தையும் கவனிச்சுக்கிட்ட... நீ வேலை வெட்டின்னு வெளியூருக்கு போகிற சமயத்திலேயாவது நான் அம்மாவைப் பார்த்துக்கனுமா... இல்லையா...?”

“நீயென்ன பக்கத்திலேயா இருக்கிற..?”

“லண்டனிலயும் இல்லையே...”

“நீ என்னதான் சொல்ல வர்ற..?”

Optimized by www.ImageOptimizer.net

"நான் பொறுப்பாய் இருந்திருக்கனும்டா.. நீ பக்கத்தில் இல்லாத சமயங்களிலேயாவது அம்மாவை நான் பார்த்துக்க வந்திருக்கனும்..."

"விடுக்கா.. இப்படி ஆகுமுன்னு யார் நினைச்சது..?"

பாலமுரளி. மனச்சங்கடத்துடன் கூறி விட்டபின்பும்... பாலசரஸ்வதி அதையே சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்...

மேகலா வீட்டுக்கு வந்தபின்னால் ஒருவாரம் அவள் பிறந்த வீட்டில் இருந்தாள்.. அதற்கு மேல் அவளால் இருக்க முடியவில்லை.. ராஜராஜன் போன்மேல் போனாக போட்டு விட்டான்...

"சரஸ்.. பிள்ளைகள் உன்னைத் தேடறாங்க..."

"ம்ம்ம்..."

"பிள்ளைகள் மட்டுமில்லைடி.. நானும் உன்னைத் தேடறேன்.. நீ பக்கத்தில் இல்லாத இந்த ஒருவாரமும் எனக்கு வீடு.. வீடாவே தோணலை சரஸ்..."

ராஜராஜனின் குரலில் பிரிவுத்துயர் அப்பட்டமாக வழிந்தோட... பாலசரஸ்வதி தவித்தாள்... தன் வீட்டை நோக்கிப் பறந்து விடத்துடித்தாள்... ஆனால்.. பிறந்த வீட்டை மறந்துவிட்டதாக வருத்தப்பட்டு பேசிய வார்த்தைகள் எல்லாம் அவ்வளவுதானா என்று தம்பி கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று விழித்தாள்...

'அவ்வளவு உணக்கையாக நான் டயலாக் பேசியிருக்க வேணாம்...'



அவள் தன்னையே நொந்து கொண்டபோது... பாலமுரளி அவளை அழைத்தான்...

"என்னடா.."

"எனக்கு கரும்பு மில்லில் அர்ஜண்டாய் ஒரு வேலையிருக்கு..."

"உனக்கு வேலையில்லாம இருந்தாத்தான் அதிசயம்.. இதை எதுக்கு என்கிட்டச் சொல்கிற... உன் வேலையைப் பார்க்கப் போ..."

"போயிட்டு உடனடியா திரும்பி வந்துருவேன்..."

"வா.. அதையும்தான் ஏன் சொல்ற...?"

"நீ கிளம்பி ரெடியாய் இருக்கனுமில்ல.. அதுக்காக சொல்கிறேன்..."

"டேய்.. முரளி..."

பாலசரஸ்வதி இமைகொட்டி தம்பியைப் பார்க்க.. அவன் அலட்டிக்கொள்ளாமல் சிரித்தான்...

"பிள்ளைகளை விட்டுட்டு வந்து எத்தனை நாளைக்குத்தான் இங்கேயே டேராபோடுவ.. உன் வீட்டைப் பார்க்க கிளம்பு..."

"அம்மா...?"

"நான் பார்த்துக்கிறேன்... இனி அம்மாவை தனியாய் விட்டுட்டு வெளியூர் போக மாட்டேன்.. போதுமா...?"

"உனக்கும் வேலை இருக்குமேடா..."

Optimized by www.ImageOptimizer.net

அப்போதும் பாலசரஸ்வதி தயங்கினாள்... ஆனால் பாலமுரளி பிடிவாதமாக அவளைக் கிளம்பச் சொல்லி விட்டான்...

"நீயின்னு கிளம்பச் சொல்றியோடா..."

எப்படிக் கிளம்புவதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த பாலசரஸ்வதி... மனதுக்குள் நிம்மதியுடன் சொன்னாள்.. அவளுக்குத் தெரியாது... அவளை கிளப்பி விட முடியாத ராஜாராஜன் பாலமுரளியிடம் போனில் பேசி விட்டான் என்பது...

தாயைக் கவனித்துக் கொள்ள அக்கா இருக்கிறாள் என்ற தெம்புடன் கரும்பு மில்லில் அமர்ந்திருந்தவனுக்கு போன் வந்தது.. எடுத்துப் பேசினான்...

"மாமா...!"

"அத்தை எப்படியிருக்காங்க முரளி... இப்போத் தேவலையா...?"

"தேவலை மாமா..."

"நார்மலா ஆகிட்டாங்கல்ல...?"

"ஆகிட்டாங்க மாமா..."

"அதுவந்து முரளி... அத்தைக்கு உடம்பு சரியில்லைன்னதும் உங்க அக்கா அப்செட் ஆகிட்டா.. அதனாலதான்.. அத்தைக்கு பக்கத்திலே அவ ரெண்டு நாள் இருந்துட்டு வரட்டுமுன்னு விட்டுட்டு வந்தேன்..."



மறைமுகமாக ராஜாராஜன் என்ன சொல்ல வருகிறான் என்று பாலமுரளிக்கு புரிந்து போனது.. அவன் ...சாரம் பாலசரஸ்வதியை தேஜாத்தில் இருக்க ...பித்ததே அதிகம்.. திருமணமான நாளில் இருந்து.. ...ஸ்வதி அதிமுக்கியமான விசேங்களுக்கு மட்டும் ...னுடன் சேர்ந்து வருவாள்.. ஒரே ஒருநாள் தான் ...கள் தங்குவார்கள்... அதற்கு மேல் தங்க.. ராஜாராஜனின் வேலை அவனைவிடாது.. அவன் பாலசரஸ்வதியை விட மாட்டான்... கையோடு திருநெல்வேலிக்கு அழைத்துக் கொண்டு போய்விடுவான்..

அப்படிப்பட்டவன் இப்போதும் பாலசரஸ்வதியை இருக்க விடாமல் அழைத்துக் கொண்டு போகத்தான் முயன்றான்.. இந்தமுறை பாலசரஸ்வதி அசைந்து கொடுக்கவில்லை... தாயின் திடீர் நோய் படுக்கை அவளை அதிகமாக பாதித்துவிட்டது...

"வந்தவுடன் கிளம்பிப் போனா எப்படிங்க...?"

தாயின் சோர்ந்த முகத்தைப் பார்த்தபடி பாலசரஸ்வதி கேட்டபோது... அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

"குழந்தைக படிப்பு கெட்டிரும்டி..."

பிள்ளைகளை முன் வைத்தான் அவன்.. அந்தச் சாக்கை வைத்து அவளைக் கிளப்பிக் கொண்டு போய்விட அவன் முயன்றபோது.. அவள் அதற்கும் அசைந்து கொடுக்கவில்லை...

Optimized by www.ImageOptimizer.net

"அவங்களை வேணும்னா கூப்பிட்டுக்கிட்டு போயிடுங்களேன்..."

அவன் பல்லைக்கடித்தபடி பிள்ளைகளோடு கிளம்பிப் போய் விட்டான்... தினமும் போனில் பாலசரஸ்வதியை கரைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தவன்.. இனிமேல் இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன் மனைவியை விட்டுவிட்டு.. மைத்துனனுடன் போனில் பேசிவிட்டான்...

"பிள்ளைக அவங்களோட அம்மாவைத் தேடுறாங்க முரளி.. உங்க அக்காவை அனுப்பி வைச்சிருங்க..."

"ஆகட்டும் மாமா..."

"நான் வந்து கூப்பிட்டுட்டு வரலாம்.. ஆனா.. அங்கே.. அத்தையின் முன்னாலே... இன்னும் ரெண்டுநாள் இருந்துட்டு வர்றேன்னு உங்க அக்கா கேட்டு வைப்பா.. முடியாதுன்னு சொல்ல என்னால முடியாது..."

"புரியுது மாமா..."

"உடனே அனுப்பி வைக்கனும்னு இல்லை முரளி.. சாவகாசமாக.. நாளைக்குக்கூட அவளை அனுப்பி வைக்கலாம்.. இங்கே நான் பிள்ளைகளைப் பார்த்துக்கிறேன்.."

ராஜராஜன் மகா பெருந்தன்மையுடன் இதைக் கூறியபோது... இரவு மணி எட்டு..! அந்த நேரத்திற்கு மேல் கூடப்பிறந்தவளை பாலமுரளி அனுப்பி வைத்து விடுவானா என்ன..?



விடியும் வரைக் காத்திருப்பதை... காலவரையற்ற காத்திருப்பாக அவன் குறிப்பிட்ட பெருந்தன்மையில் சிலிர்த்து விட்டான் பாலமுரளி...

"ரொம்ப தேங்க்ஸ் மாமா..."

அவனது காத்திருப்பிற்கான நன்றியைச் சொல்லிவிட்டு.. மறுநாள் காலையிலேயே.. தமக்கையை அனுப்பச் சொல்லிவிட்டான் பாலமுரளி...

தளர்வாக படுக்கையில் படுத்திருந்த போதும்.. மகள் பிறந்த வீட்டிற்கு கிளம்புவதை அறிந்த மேகலா.. பலவீனமான குரலில் பாலமுரளியை அழைத்தாள்...

"முரளி..."

அந்த ஒற்றைக் குரலுக்குத்தான் எத்தனை சக்தி..! பாலமுரளி அவசரமாக தாயின் அருகே வந்து அமர்ந்தான்...

"என்னம்மா..."

"அக்காவுக்கு நம்ம ஜவுளிக்கடையில இரந்து விலை உசத்தியா ஒருபட்டுச்சேலையை கொண்டு வரச் சொல்லுப்பா..."

"ஆகட்டும்மா..."

"போகிற வழியில பழக்கடையில ஆப்பிள் ஒரு கூடை.. ஆரஞ்சு ஒருகூடைன்னு வாங்கி வைச்சிரு... நம்ம வாழைத் தோப்பில இருந்து ஒருதார் வாழைப்பழத்தை வெட்டிக் கொண்டு வரச் சொல்லு..."

"சொல்லிர்றேன்ம்மா..."

"கோசலைகிட்டச் சொல்லி.. பலகாரம் பண்ணி சில்வர் டப்பாவுல அடைச்சுக் கொடுக்கச் சொல்லு..."

"சொல்லிட்டாப் போச்சு..."

"நகைக்கடையில சொல்லி... அக்காவுக்கு புதுசா ஏதாவது டிசைன் வந்திருந்தா எடுத்துட்டு வரச் சொல்லு.."

"அதுக்கென்னம்மா.. வாங்கிக் கொடுக்கிறேன்.."

"நம்ம தோட்டத்திலே விளைஞ்சிருக்கிற காய்கறியில இளசா பறிக்கச்சொல்லி... கூடையில போட்டு கார் டிக்கியில் வைக்கச் சொல்லு..."

"ஏம்மா... இதையெல்லாம் நீங்க மூச்சு வாங்கச் சொல்லணுமா... ?"

"இல்லைடா முரளி... அப்பா இல்லாத வீட்டிலே பெண்ணெடுத்தோம்.. சீர்செய்ய ஆளில்லன்னு.. உன் அக்காவோட புருசன் வீட்டில யாரும் நாக்கு மேல பல்லைப்போட்டு ஒருவார்த்தை பேசிரக்கூடாது... கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போனப்ப அவ கூடப்போன சீரைப் போல... அவ பிறந்த வீட்டுக்கு வந்துட்டுப் போற ஒவ்வொரு தடவயும் சீரோடுதான் போகனும்... அதுதான் அவ புருசன் வீட்டிலே அவளுக்கு மரியாதையை வாங்கித் தரும்டா முரளி... ஆயிரம்தான் அவ வீட்டுல பாலும்... தேனும் ஆறாய் ஓடினாலும்... தாய்வீட்டுச் சீதனத்துக்கு ஈடில்லைடா மகனே..."



அதைக் கேட்டுக் கொண்டிருந்த பாலசரஸ்வதிக்கு ஏனோ... கண்ணில் நீர் பெருகியது.. பாலமுரளி சின்னவன்தான்.. தமக்கைக்கு சீர்செய்ய கணக்குப் பார்க்காதவன்தான்.... ஆனாலும்... அதை எடுத்துச் சொல்ல தாய் வேண்டியிருக்கிறதே...






## காற்றோடு நான் தூதுவிட்ட கவிதைகளை நீ கேட்டாயோ...?

மதிய உணவுக்குப் பின்னான வகுப்புகளில் ஏன் மனம் இறங்க மறுக்கிறது என்று.. சொக்கும் இமைகளை கட்டுப்படுத்தியபடியே நினைத்துக் கொண்டாள் ராதிகா...

யார் கேட்டாலும்... கேட்காவிட்டாலும்... வாங்குகிற ஊதியத்திற்கு.. நான் பாடம் நடத்தியே தீருவேன் என்று சூளுரைத்ததைப் போல... விரிவுரையாளர் வகுப்பெடுத்துக் கொண்டிருக்க.. அதைக் கொஞ்சம் கூடக் கவனிக்காமல் வகுப்பறையே தூக்கத்தில் மூழ்கியிருந்தது...

பாடத்தை குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ராதிகாவிற்கு அதில் சந்தேகம் வந்துவிட... அதை

Optimized by www.ImageOptimizer.net

நிவர்த்தி செய்வதற்காக அவள் எழுந்து கொள்ள முயன்றாள்...

“ஏய்.. அடங்கி உட்காருடி...”

கொட்டாவியுடன் அவள் கரம் பிடித்துத் தடுத்தாள் ஹேமா...

“எதுக்குடி குரங்கே... என் கையைப் பிடிச்சு இழுக்கறே...” ராதிகா அவள் மீது பாய்ந்தாள்...

“அடச்சீ... அடங்குன்னு சொல்றேனில்ல.. அவரே.. யாரும் கேட்காத கிளாஸ் ரூமில... கடமையுணர்ச்சிக்கு அளவேயில்லாம ரம்பம் போட்டுத் தள்ளிக்கிட்டு இருக்கிறாரு... போதாக்குறைக்கு நீ வேற அவரை சந்தேகம் கேட்டு கிளப்பி விடப் பார்க்கறியா...” ஹேமா பல்லைக் கடித்தாள்...

“அதில உனக்கு எதுக்குடி இவ்வளவு வருத்தம்...?”

“இருக்காதா பின்னே.. அவர் உன் சந்தேகத்துக்கு விளக்கம் சொல்கிறபோத உன்னை மட்டுமா பார்த்து வைப்பாரு...? உன் பக்கத்திலே இருக்கிற என்னையுமில்ல சேர்த்துப் பார்ப்பாரு...?”

“பார்த்தா என்ன..?”

“உனக்கு ஒன்னுமில்ல... எனக்கு ஆயிரம் இருக்கும்மா...”

“ஏண்டி... தூக்கக் கலக்கத்தில உளறித் தள்ளறயா..?”



“நீயே தூக்கம் கலக்கம்ன்னு சொல்லிட்டேல்ல.. நான் தூங்கி வழிகிறதை அவர் பார்த்தா என்ன ஆகும்..?”

“என்ன ஆகும்..?”

“என் இன்டர்னெல் மார்க்கில் அவர் கைவைக்க மாட்டாரா..?”

“அதுக்கு..?”

“நீ அடங்கி உட்காரு... நான் நிம்மதியாய் ஒரு தூக்கம் போடணும்...”

சந்தேகத்தை கேட்கவிடாத தோழியை கொலை வெறியோடு ராதிகா முறைக்க ஆரம்பிக்க... உன் முறைப்பிற்கெல்லாம் நான் பயந்த ஆளா..? என்பதைப் போல.. உதட்டைச் சுழித்து விட்டு.. ஹேமா தன் தூக்கத்தை தொடர்ந்தாள்...

அவளுடைய தூக்கம்... ராதிகாவையும் தொற்றிக் கொள்ளும்போல தோன்றி வைக்க.. அவசரமாக ஹேமாவிடமிருந்து தன் பார்வையை விலக்கிக் கொண்டு.. பாடத்தை குறிப்பெடுக்க ஆரம்பித்தாள் ராதிகா...

வகுப்பு முடிந்து விரிவுரையாளர் வெளியேற...

“ஹாவ்...” என்று ஒரு கொட்டாவியை வெளியேற்றினாள் ஹேமா...

ராதிகாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது... அதை கவனிக்காமல்...

Optimized by www.ImageOptimizer.net

"பேசாம இந்த லெக்சருக்கு நீலாம்பரன்னு பெயர் வைத்து விடலாம் ராது..." என்றாள் ஹேமா...

ராதிகா அதற்கு பதில் சொல்லவில்லை.. அவள் பக்கத்திலிருந்த ஷீலா..

"ஏண்டி அப்படிச் சொல்ற..? இன்ஜினியரிங் பாடம் எடுக்கிறவருக்கு ஹிஸ்டரிக்கலா.. பெயர் வைக்கணும்னு சொல்றியே.. என்ன விசயம்..?" என்று சந்தேகம் கேட்டாள்...

"ஆமாண்டி.. இவ்வளவு நேரமும் கிளாஸ் ரூமில யாரும் லெக்சரர் கிட்ட சந்தேகம் கேட்க எழுந்திருக்கல.. இவகிட்ட மட்டும் சந்தேகம் கேட்க மூத ஆளா வந்திருங்க... இப்படி இருந்தா இந்தியா எப்படிடி முன்னேறும்..?" ராதிகா காட்டமாக கேட்டாள்...

"இதுக்கும்... இந்தியாவோட முன்னேற்றத்துக்கும் என்னடி சம்பந்தம்..? லெக்சரர் கிட்ட சந்தேகம் கேட்டா.. அவர் இன்னும் கொஞ்சம் மொட்டை ரம்பத்தை போடுவாரு... நம்ம ஹேமா என்ன அப்படியா செய்யப் போறா..? இன்ட்ரெஸ்டிங்கா எதையாவது சொல்லுவா.. நீ சொல்லுடி ஹேமா..." ஷீலா தூண்டினாள்...

"ம்ஹூம்.. உருப்பட்டாப்புலதான்..." ராதிகா தலையில் அடித்துக் கொண்டாள்...

"இவ என்னடி ஔவையாரோட மறுபிறவியைப் போல ஆகிட்டா..." ஷீலாவுக்கு தாங்கவேயில்லை...

"இவளாவது.. ஔவையாருக்கு இணையாய் ஆவதாவது... அதெல்லாம் ஒன்னுமில்ல... அம்மணிக்கு



கொஞ்ச நாளா மூடு அவுட்... அதனால பிலிம் காட்டிக்கிட்டு இருக்கா.." ஹேமா விளக்கம் சொன்னாள்...

"இவ பிலிம் யாருக்கு வேணும்..? நீ சொல்லுடி... ஏன் அவருக்கு நீலாம்பரன்னு பெயர் வைக்கணும்..?" ஷீலா ஆவலாக கேட்டாள்...

"அது வேற ஒன்னுமில்லடி ஷீல்... நீலாம்பரிராகத்தைக் கேட்டா என்ன வரும்..?" ஹேமா கண்சிமிட்ட...

"தூக்கம் வரும்.." புரிந்து கொண்டவளாக ஷீலா பொங்கிச்சிரித்தாள்...

"அப்ப அவருக்கு நீலாம்பரன்னு பெயர் வைக்கிறது தான் சரி..."

அருகிலிருந்த மற்றவர்கள் என்னவென்று கேட்க.. ஹேமா சொன்னதை ஷீலா ஒளிபரப்பிக் கொண்டிருக்க.. அதில் மனம் லயிக்காதவளாக... ராதிகா அசுவாரஸ்யத்துடன் சூள் கொட்டியபடி.. ஜன்னல் வழி வெளியே பார்த்தாள்..

அந்திவெயிலின் கீற்றுக்கள் கல்லூரியின் சாலையின் மீது படிந்திருந்தன...

கல்லூரிவிட்டுக் கிளம்பியபோது...

"கொஞ்சம் பொறுடி..." என்று ஹேமாவும் ராதிகாவின் ஸ்கூட்டியில் ஏறிக் கொண்டாள்...

அவளை அவளது வீட்டில் விட்டுவிட்டு.. தன் வீட்டைநோக்கிச் சென்றாள் ராதிகா.. தெரு முனையைக்

Optimized by www.ImageOptimizer.net

கடக்கும் போது.. வழக்கம் போல அவளது பார்வை அவனைத் தேடித் துழாவியது.. அவன் இல்லை.. மனதில் ஏமாற்றமாக உணர்ந்தாள்...

வீட்டை அணுகும் போது.. தூரத்திலேயே.. அவன் வீட்டு வாசலில் கார் நிற்பது தெரிந்து விட்டது..

'யாராய் இருக்கும்..'

புருவம் சுருங்கியவளுக்கு அருகில் நெருங்கும் போதே.. அது யாருடைய கார் என்று அடையாளம் தெரிந்து விட்டது...

'சங்கர் வந்திருக்கிறான்...'

அவன் எதற்காக அவளுடைய வீட்டிற்கு வரவேண்டும்..? என்ற கேள்வி மனதில் எழுந்தபோதே.. ஒரு பயபந்து அவள் வயிற்றில் சுருண்டு இங்கும்.. அங்குமாக ஓடியது...

ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு வீட்டுப்படி ஏறும்போதே..

"சொல்லவே இல்லை பார்த்தியா..?" என்ற குற்றச் சாட்டுடன் அவளை எதிர் கொண்டாள் கீதா...

"எதைடி சொல்லச் சொல்ற..?"

ஏற்கனெவே தலைவலியில் இருந்த ராதிகா கள்ளென்று எரிந்து விழுந்தாள்... அதை கீதா பொருட்படுத்தவே இல்லை....



"அ...அ... இந்த உடான்ஸையெல்லாம் வேற எங்கேயாவது போய் விடு.. உள்ளே உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க..."

கீதாவின் பேச்சில் ராதிகாவிற்கு தூக்கிவாரிப் போட்டது...

கடைசியில் சங்கர் சொன்னதைப் போலவே செய்து விட்டானா..? அவன் தனியாக வரவில்லையா..?

இல்லை என்றாள் கீதா...

"யாரோ சங்கராம்... பெரிய கோடிஸ்வரனாம்.. உன் ப்ரெண்டோட பர்த்டே பார்ட்டிக்கு போகிறேன்னு போயிட்டு.. ஒரு வெரி ஹேண்ட்சம் மேனோட காரில வீடு வந்து சேர்ந்தியே.. அந்த பர்த்டே பார்ட்டியில உன்னைப் பார்த்தாராம்.. பிடிச்சுப் போயிருச்சாம்.. முறைப்படி பெத்தவங்களோட பொண்ணு கேட்டு வந்திருக்காராம்..."

"கடவுளே..."

"அவர்தான் உனக்கு நல்ல நல்ல சான்ஸா ஏற்படுத்திக் கொடுக்கிறாரே.. எனக்கும் வந்து வாய்க்குதுகளே.. எதிர் வீட்டு தடியன்கிட்ட ஒட்டை ஹீரோ ஹோண்டாதான் இருக்கு..."

"நீ அடி வாங்கத்தான் போறடி.."

"இதை மட்டும் மறக்காம சொல்லிரு... நீ உண்மையிலேயே என்மேல பாசமிருக்கிற அக்காவா இருந்திருந்தா.. அந்த பர்த்டே பார்ட்டிக்கு என்னையும் கூப்பிட்டுக்கிட்டு போயிருக்கலாமில்ல..?"

Optimized by www.ImageOptimizer.net

"அடச்சீ... வாயைக் கழுவு.. அவனெல்லாம் ஒரு மனுஷின்னு அவனோட பர்த்டே பார்ட்டிக்கு தெரியாத்தனமா போயிட்டு வந்ததினாலதான் நானே இத்தனை இம்சைப் பட்டுக்கிட்டு இருக்கேன்.. இதில நீ வேற கடுப்படிக்காதே..."

"இது உனக்கு இம்சையா..? ஒன்னுக்கு ரெண்டாய் பணக்காரங்க உன்னைச் சுற்றி வர்றாங்க.. நானும் உன்கூட வந்து.. அவங்களுக்கு முன்னாலேயே இன்ட்ரொடியூஸ் ஆகியிருந்தேன்னு வைய்யி.. ரெண்டில ஒருத்தனாவது என்னைக் கன்ஸிடர் பண்ணுவானில்ல.."

கீதா பொருமித்தவிக்க.. ஓங்கி அவள் கன்னத்தில் நாலு அப்பு... அப்பினால் என்ன என்று ஆவேசப் பட்டாள் ராதிகா...

'இவளைச் சொல்லிக் குற்றமென்ன..? இவளை இப்படியெல்லாம் யோசிக்க வைக்கிற இவனைச் சொல்லனும்... இவனை யாரு என்னைப் பெண் கேட்டு... என் வீட்டுக்கு வரச் சொன்னது...?'

ராதிகாவின் கோபம் சங்கரின் மீது திரும்பியது... அவள் கோபாவேசத்துடன் உள்ளே சென்றபோது...

"இதோ.. எங்க ராதுவே வந்திட்டாளே..." என்று முகமலர்ச்சியாய் திரும்பிப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனம் ராதிகாவின் பக்கம் திரும்ப... முள்ளின் மேல்



அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தாள் ராதிகா... சங்கரின் உரிமை கலந்த பார்வை... அவளுக்கு நெருப்பாக தகித்தது...

கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்த ...த்தின் அலட்சியமான பார்வை அவள் முகத்தை சுருங்கச் செய்தது... அவரது மனைவி வனஜாவின் பார்வையோ அதற்கு மேல் இருந்தது...

அந்தவீட்டில் வந்து அமர்ந்திருப்பதை அவர்கள் அசௌகரியமாக நினைப்பதை அவர்களது முகபாவமே ராதிகாவிற்கு உணர்த்தியது...

'இப்படி இஷ்டமில்லாம.. எதிரி வீட்டுக்கு வருகிறதைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு.. யாரு இவங்களை வரச்சொன்னதாம்...' மனதிற்குள் வெகுண்டாள் அவள்...

"ராதிகா.. டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டுவா..."

ராஜேஸ்வரி உத்தரவிடும் போதே.. அது எதற்கு என்ற நினைவுடன் மனதிற்குள் முரண்டினாள் ராதிகா...

அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தினாள் வனஜா... ஆனால்.. அவள் அதை வெளிப்படுத்திய விதம்தான் ராதிகாவின் தன்மானத்தை பதம் பார்ப்பதாக இருந்தது...

"நோ.. நோ.. அதெல்லாம் வேண்டாம்.. சங்கர் சொன்னானேன்னு அவனுக்காக.. நானும்.. அவனோட டாடியும் இந்த வீட்டில் காலடி எடுத்து வைச்சோம்..

Optimized by www.ImageOptimizer.net

மத்தபடி.. எங்களுக்கு எந்த பார்மாலிட்டியும் தேவையில்லை..."

அப்படியா..? என்பதைப் போல பார்த்தபடி ராதிகா வீட்டுக்குள் போகப் போனபோது.. ராஜேஸ்வரி அதற்கும் அவளை அதட்டினாள்...

"ராதிகா.. இங்கேயே உட்காரு..."

தாயின் சொல்லை தட்ட முடியாமல்... பல்லைக் கடித்தபடி.. அவர்களுக்கு எதிரே அமர்ந்தாள் ராதிகா...

அவனைப் பார்க்காமல் ராமாமிர்தம் கைக்கடிகாரத்தைப் பார்க்க... வனஜாவோ.. செல்போனை நோண்டிக் கொண்டிருந்தாள்...

சங்கர் மட்டும்.. அவள் முகத்தையே பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்...

ராதிகாவிற்கு அவன் பார்வை பிடிக்கவில்லை... அந்தப் பார்வை அவள்மேல் படர்வதை அவள் விரும்பவில்லை...

நிமிர்ந்து கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள்... சில விசயங்களில் அவர் அவளுடன் இசைந்து போகக் கூடியவர்.. சங்கரின் பெற்றோரின் போக்கை அவர் கவனிக்காமல் இருக்கமாட்டார் என்பது ராதிகாவின் அனுமானமாக இருந்தது..

அதற்கேற்றாற் போல.. கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் ஒரு சளிப்பு ஏற்பட்டிருந்தது.. நடந்து



கொண்டிருக்கும் நிகழ்வை... மூன்றாம் மனிதனைப் போல அவர் விலகியிருந்து கவனித்துக் கொண்டிருந்தது ராதிகாவிற்கு மிகத் தெளிவாக புரிந்தது...

ராஜேஸ்வரி மட்டுமே.. எதையும் கவனிக்காதவளாக உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.. மகளுக்கு அமைய இருக்கும் வளமான வாழ்க்கை குறித்தான அவளது சந்தோசம் அப்பட்டமாகத் தெரிந்தது...

"அப்புறம்.. சொல்லுங்க..." அவள் குரலில் எதிர்பார்ப்பு இருந்தது....

"எதைச் சொல்லச் சொல்கிறீங்க மிஸஸ் ராஜேஸ்வரி..." புரியாதவளைப் போல புருவங்களை உயர்த்தினாள்... வனஜா...

ராதிகாவின் பார்வையும்.. கிருஷ்ணமூர்த்தியின் பார்வையும் சந்தித்து மீண்டன.. கிருஷ்ணமூர்த்தி மனைவி பேசியதை ஆட்சேபித்தார்....

"அவங்க கேட்கிறதுக்கு பதிலைச்சொல்லு ராஜி.. எதைச் சொல்லச் சொல்லி... அவங்ககிட்டக் கேட்கிற..?" அவர் குரலில் கோபம் இருந்தது...

"இது என்னங்க... புரியாதவங்களைப் போல பேசறிங்க... அவங்கதானே நம்ம வீடு தேடிவந்து பெண்ணைக் கேட்கிறாங்க..? இப்ப பெண்ணையும் பார்த்துட்டாங்க... மேற்கொண்டு பேச வேண்டியதைப் பேச வேணாமா..?" கணவரின் கோபத்துக்கு குறையாத கோபக் குரலில் பதில் சொன்னாள் ராஜேஸ்வரி...

Optimized by www.ImageOptimizer.net

"ஒன் வேர்ட் மிஸஸ் ராஜேஸ்வரி... உங்க வீட்டைத் தேடி நாங்களா வரலை.. எங்க மகன் வரவைத்தான்..." வனஜா விளக்கம் கொடுத்தாள்...

அதை ஆமோதிப்பவரைப் போல ராமாமிர்தம் அமைதிகாக்க...

"மம்மி..!" என்று கண்டிப்பான குரலில் வனஜாவை அடக்கினான் சங்கர்...

"பாருங்க ஆண்ட்டி.. எனக்கு உங்க மகளைப் பிடித்திருக்கு.. முறைப்படி என் பேரண்ட்ஸோட வந்து பெண் கேட்டுட்டேன்.. உங்களுக்கும் இதில விருப்பமிருந்தா.. அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாண நாளைக் குறிச்சிடலாம்..."

சங்கர் மிகத் தெளிவாக ராஜேஸ்வரி கேட்டதைச் சொல்லி விட்டான்.. ராஜேஸ்வரியின் முகம்.. பூவாக மலர்ந்து விட்டது...



31



எங்கேயோ கேட்ட குரல்..
உன் மனதில் வரவில்லையா..?

சங்கர் எதிலும் வேகமான.. தீர்க்கமான.. தீர்மானமான முடிவுகளை எடுப்பவன்... அவனது இந்தக் குணத்தை அவனைப் பெற்றவர்கள் எப்போதுமே ஆராதித்து பெருமைப் பட்டுக் கொள்வார்கள்...

அப்போது அந்த குணத்தை எண்ணி அவர்கள் நொந்து நூலாகப் போனார்கள்.. இப்படி எடுத்த எடுப்பில் திருமண நாளைக் குறிக்கும் பேச்சிற்கு சங்கர் போய் விடுவான் என்று அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை...

ஏதோ காதல் அது.. இது என்று சொல்கிறானே... அது யார்வீடாக இருக்கும் என்று போய்த்தான் பார்ப்போமே என்ற நினைவுடன் கூட வந்தவர்கள்.. அவனது உறுதியான முடிவைக்கண்டு அரண்டு விட்டார்கள்...

எப்படி இவன் பேச்சை நிறுத்துவது என்று அவர்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கையிலே..

Optimized by www.ImageOptimizer.net

அவர்களுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து உடனடியாக உதவிவந்தது...

சங்கர் சொன்னதைக் கேட்டதும்... ஆயிரம் வாட்ஸ் பல்புகள் முகத்தில் ஒளிர.. ஆனந்தமாக கணவனைப் பார்த்த ராஜேஸ்வரிக்கு.. அவர் முகத்திலும் அந்த வெளிச்சமில்லாதது அப்போதுதான் உறைத்தது...

'இந்த மனுசன் ஏன் இப்படி இருக்கிறாரு..?' அவள் கவலைக்கு ஆளானாள்...

அதற்கேற்றாற்போல... அவ்வளவு நேரமும் வாயை மூடிக் கொண்டிருந்த அந்த மனிதர்.. அப்போது பார்த்து வாயைத் திறந்தார்...

"அவசரப்பட வேணாம் ராஜி... இது கல்யாண விசயம்... எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு முடிவெடுக்கக் கூடாது... ஆற.. அமர... நாலையும் யோசிச்சுத்தான் முடிவெடுக்கனும்..."

அவரது பேச்சில் 'அப்பாடா...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள் ராமாமிர்தமும்.. வனஜாவும்...

"ஐ அக்ரி வித் யுவர் வெர்டுஸ் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி..."

உடனடியாக தனது ஒப்புதலை அளித்தார் ராமாமிர்தம்...

அது நேரம்வரை யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்திருந்த சங்கரைப் பெற்றவர் அப்போது மட்டும்



...ட்டிய கறுகறுப்பைக் கண்டதும் ராஜேஸ்வரியின் ...ங்கள் முடிச்சிட்டன...

"ஷ்யூர்.. ஷ்யூர்.. சங்கர்.. டாடி சொல்கிறதைக் ...ட்டாயில்லையா...? நாம் இதை யோசித்து ஒரு ...விற்கு வரலாம்..."

சட்டென்று எழுந்து விட்டாள் வனஜா... அதற்கு ...லேயும் அங்கே அமர்ந்திருந்தால் மகன் திருமண நாளை ...றுதி பண்ணாமல் கிளம்ப மாட்டான் என்ற பயம் ...வளைப் பிடித்துக் கொண்டது...

எழுந்து கொண்ட வனஜாவை பின்பற்றி ...மாமிர்தமும் எழுந்து கொள்ள முயன்றபோது.. சங்கர் ...வரை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான்... எழுந்து ...கொள்வதை மறந்து அவர் அப்படியே ஆணியடித்ததைப் ...போல சோபாவில் அசையாமல் அமர்ந்து விட்டார்..

அடுத்ததாக அவன் பார்வை தன் மேல்தான் ...பாயக்கூடும் என்பதை தெளிவாக தெரிந்து வைத்திருந்த ...வனஜா.. அவன் பார்க்கும் முன்னாலேயே அவசரமாக ...உட்கார்ந்தாள்...

அவளைப் பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் ...போக.. சங்கர் ராஜேஸ்வரியைப் பார்த்தான்...

"இதில யோசிக்க என்ன இருக்கு ஆண்ட்டி... ...தையும் இப்போதே தெளிவாகப் பேசி ஒரு முடிவுக்கு ...வந்து விடலாம்தானே..." என்று கோரிக்கையொன்றையும் ...வைத்தான்...

Optimized by www.ImageOptimizer.net

கணவரின் கடுமையான கண்டனப் பார்வைக்கு ஆளானபின்... தானாக வார்த்தைகளை விடுவது உசிதமாகாது என்ற உணர்வுடன் கிருஷ்ணமூர்த்தியை ஏறிட்டாள் ராஜேஸ்வரி...

"தம்பி சொல்கிறதைக் கேட்டிங்கள்ல... இவருக்கு என்ன பதிலைச் சொல்லலாம்..."

அவளது கேள்வியைத் தொடர்ந்து... சங்கரின் விழிகளும் அவரிடம் அதே கேள்வியைக் கேட்க... நிதானத்தை கைவிடாதவராக பேசினார் கிருஷ்ணமூர்த்தி..

"அதான் சொன்னேனில்ல.. நாலையும் யோசிக்கனுமுன்னு..."

"அந்த நாலும் என்ன அங்கிள்... அதைப்பற்றி இப்போதே யோசித்து விடலாமே..." சங்கர் நேரடியாக கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டான்...

அவன் ராஜேஸ்வரியை விட்டுவிட்டு.. அவரிடம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததில் கிருஷ்ணமூர்த்திக்கு மகிழ்ச்சிதான்... ஒருவழியாக அவரை குடும்பத்தலைவன் என்று அவன் கணக்கில் எடுத்துக் கொண்டதில் அவருக்கு திருப்திதான்... அவரோடு பேச்சுவார்த்தைக்கு அவன் தயாரானதில் அவருக்கு பெருத்த வெற்றிதான்...

ஆனாலும்... அவருக்கு யோசிக்க வேண்டியிருந்தது...

சங்கர் மிகமிக அழகாகவும்... கவர்ச்சியாகவும் இருந்தான்... பெரிய கோடீஸ்வரனாகவும்... அந்த இளம் வயதில் மிகப்பெரிய தொழிலதிபனாகவும் இருந்தான்...



அப்படிப்பட்டவன் பெண் கேட்டு வந்திருக்கிறான்... அதைக் கேட்ட ராதிகாவின் முகத்தில் துளிக்கூட மகிழ்வின் சாயல் தெரியவில்லை...

இதைப்பற்றி அவர் யோசிக்க வேண்டியிருந்தது...

சங்கருக்குத்தான் ராதிகாவைப் பிடித்திருந்தது... அவனைப் பெற்றவர்கள் அவனுக்காகவே அந்த வீட்டில் காலடி வைத்ததாக வெளிப்படையாகவே அறிவித்து விட்டார்கள்.. அத்தோடு... அவர்களிடம் அலட்சிய பார்வை குடிகொண்டிருந்தது... ராஜேஸ்வரி குடுத்த காபி... டிபனை மரியாதைக்குக் கூட அவர்கள் ருசி பார்க்கவில்லை... லேசான புருவச் சுளிப்புடன் அவற்றைத் தொடாமல் அப்படியே டீப்பாயின் மேல் வைத்துவிட்டார்கள்...

அவர்களின் பார்வை... அந்த வீட்டின்மீது அதிருப்தியுடன் படிந்து சுழன்றது... கீதாவையும்.. சந்தரையும் ஏதோ வேற்றுக்கிரக வாசிகளைப் பார்ப்பதைப் போல பார்த்து வைத்தார்கள்... ராஜேஸ்வரியின் பேச்சுக்கு அவர்கள் பதில் பேச்சு பேச முனையவில்லை... நீயெல்லாம் எனக்கு இணையாக நின்று பேசுவதா என்ற தலைக்கனம் அப்பட்டமாக அதில் வெளிப்பட்டது...

கிருஷ்ணமூர்த்திக்கும்... ராஜேஸ்வரிக்கும் ராதிகா ஒற்றைப் பெண்ணில்லை... அவளுக்கு அடுத்து கீதாவும்.. சந்தரும் இருந்தார்கள்... ராதிகாவுக்கு வரப்போகும் கணவனின் வீட்டார் இந்த மாதிரி மதிப்பு.. மரியாதையைக் காட்டினால்.. அடுத்து வரும் சம்பந்திகளின் வீடுகளிலும் அதே தானே தொடரும்...?

Optimized by www.ImageOptimizer.net

இதைப் பற்றியும் அவர் யோசிக்க வேண்டியிருந்தது.

ஒரு வீட்டில் மருமகளாக வாழப் போகும் பெண்ணிற்கு கணவன் மட்டும் சரியானவனாக அமைந்து விட்டால் போதுமா...? தனிக் குடித்தனமாக இருந்தால் அது போதும் தான்... இங்கே கதையே வேறு... சங்கர் அவனுடைய பெற்றவர்களுக்கு ஒரே மகன்.. கடைசி வரை மாமனார்.. மாமியாருடன்தான் அவனது மனைவி குப்பை கொட்டியாக வேண்டும்.. அவ்வாறு குப்பை கொட்ட வைப்பதில் கிருஷ்ணமூர்த்திக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை... அது நியாயம் என்றுதான் அவர் நினைத்தார்.. அப்படி குப்பை கொட்டும் பொறுமை.. பொறுப்பு.. குணத்துடன்தான்... ராதிகாவையும் அவர் வளர்த்திருந்தார்...

அப்படிக் குப்பை கொட்ட வேண்டிய சூழ்நிலையில் ராதிகாவை சங்கரைப் பெற்றவர்கள் வேண்டாத மருமகளாக நடத்தினால் ராதிகாவால் அதை எதிர் கொள்ள முடியுமா..? அவர்களின் உதாசீனத்திற்கு வாழ்க்கை முழுவதும்... ராதிகா ஆளாகிக் கொண்டிருக்க வேண்டி நேர்ந்தால்... அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா...?

இதையும் அவர் யோசிக்க வேண்டியிருந்தது...

அவரோ நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்.. சங்கரோ கோடிஸ்வரன்.. மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவன்... இன.. மொழி.. வேறுபாட்டைப் போல... இந்த வர்க்க பேதமும் யோசிக்கப் படக் கூடிய ஒன்றுதான்...



'இந்த மிடில்கிளாஸ் பழக்கத்தை மாத்திக்கவே …டியா...'

'இன்னும் ஹை சொஸைட்டி பழக்க வழக்கத்துக்கு … கன்வர்ட் ஆகவே இல்லியா...'

'இது மிடில்கிளாஸ் யோசனை...'

'நாங்கள்ளாம் இப்படித்தான்...'

இதுபோன்ற பேச்சுக்கள் வாழ்நாள் முழுவதும் …திகாவை தொடர்ந்து வரும் அபாய அறிகுறிகள் …ன்னவே.. அந்தப் போராட்டத்தை ராதிகாவால் …டைசிவரை போராடிக் கொண்டிருக்க முடியுமா..?

இதைத்தான் அவர் முக்கியமாக யோசிக்க வேண்டியிருந்தது...

இந்த நான்கில் ஒன்றைக்கூட.. சங்கரையும்.. …னைப் பெற்றவர்களையும் வைத்துக் கொண்டு அவரால் வெளியே சொல்ல முடியாது எனும் போது.. நான்கையும் சொன்னால்தான் ஆயிற்று என்று சங்கர் அடம் பிடித்தால்... அவர் பாவம்.. என்ன செய்வார்...?

"இல்லை.. நாம் இன்னொரு முறை சந்திக்கும் போது மேற்கொண்டு என்ன செய்யலாமுன்னு யோசிக்கலாம்.." அவர் பட்டுக்கத்தரித்தார்...

"ஓகே..."

அதற்கு மேலும் அவரை சோதிக்க விரும்பாமல் சங்கர் எழுந்து கொண்டான்.. அதற்காகவே

Optimized by www.ImageOptimizer.net

சாத்திருந்ததைப் போல ராமாமிர்தமும்.. வனஜாவும் எழுந்து கொண்டதைக் கவனித்த கிருஷ்ணமூர்த்திக்கு என்னவோ போல இருந்தது—

'இதுக்கு இவங்க இந்த இடத்தில பெண் கேட்க வேணாம்ன்னு மகளிடம் சொல்லிட்டு வராமலேயே இருந்திருக்கலாமே...'

வந்தவர்களை வழியனுப்ப ராஜேஸ்வரி வாசலுக்குப் போக.. கிருஷ்ணமூர்த்திக்கு அவளுடன் போக மனமில்லை.. அவர் தேங்கி நின்று.. ராதிகாவின் முகத்தைப் பார்த்தார்... அதில் தெரிந்த கலவரம் அவரை பாதித்தது...

'பாவம்.. என் குழந்தை... இப்படிப் புயலைப் போல அவங்க வந்து போனா... இவளுக்கு அதிர்ச்சியாத்தானே இருக்கும்...?'

"போம்மா... போய் முகத்தை கழுவி.. டிரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு ரிலாக்ஸாய் காபி சாப்பிடு..." பரிவுடன் மகளைப் பார்த்துச் சொன்னார்...

ராதிகாவிற்கு அவரின் அந்த வார்த்தைகள் இதமாக இருந்தன... அவளுக்கு உடனடியாக தனிமை வேண்டியிருந்தது... சங்கரின் இந்த அதிரடித் தாக்குதலில் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்திக்க வேண்டியிருந்தது...

"தேங்க்ஸ்ப்பா..." ராதிகா அவளுடைய அறைக்கு விரைந்தாள்...



வந்தவர்களை வழியனுப்பி விட்டுவந்த ராஜேஸ்வரி ராதிகாவைக் காணாமல் புருவங்களை உயர்த்தினாள்...

"ராதிகா எங்கே..?"

"அவரூமுக்கு போயிட்டா..."

"எதுக்காம்..?"

"இது என்னடி கேள்வின்னு கேட்டு வைக்கிற... காலையில காலேஜிக்கு கிளம்பிப் போனவ.. இப்பத்தான் … வந்து சேர்ந்திருக்கா.. வந்தவளுக்கு சூடாய் ஒரு கப் காபியைக் கொடுக்கனுமுன்னு உனக்கு தோணுச்சா..."

"அதைத்தான் தினமும் கொடுக்கறேனே.. இன்னைக்கும் அதேதானா..?"

"இப்பவும் கொடு... அவ முகம் கழுவி.. டிரஸ் சேன்ஜ் பண்ணப் போயிருக்கா..."

"இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்..."

"வேற எதுடி முக்கியம்...?"

"ஏங்க... நீங்க விவரத்தோடதான் பேசறிங்களா..?"

"ஆமாண்டி.. இந்த வீட்டில் நீ ஒருத்தி மட்டும்தான் விவரம்... மத்தவங்க எல்லாம் சைபர்தான்.."

"இந்த வீதுபோட இதுவா நேரம்...?"

"சும்மா... இதுவா.. இப்பவான்னு தாண்டிக் குதிக்காதே.. இப்ப என்ன நடந்து போச்சுன்னு நீ ஆகாயத்துக்கும்... பூமிக்குமா தாண்டிக் குதிக்கற...?"

Optimized by www.ImageOptimizer.net

இப்படிக் கேட்ட கணவரை விசித்திரமாகப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

'எப்படிப்பட்ட சம்பந்தம் தேடி வந்திருக்கு.. இந்த மனுசன் என்னன்னா... இப்படி... எனக்கென்னன்னு ஒரு பார்வை பார்த்துக்கிட்டு நின்னு வைக்கிறாரே...' அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே..." என்று அவள் ஆரம்பிக்க... அதுநேரம் வரை அவர் காட்டிய அனு சரணையான தோற்றத்தில்... வீடு மாறி வந்து விட்டோமோ என்ற பலத்த சந்தேகத்துடன் இருந்த கீதாவும்.. சுந்தரும்.. இது அவர்களுடைய வீடுதான்... ராஜேஸ்வரி அவர்களின் அன்புக்குரிய அம்மாதான் என்று உறுதியானவர்களாக.. ஒருவரையொருவர் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்டார்கள்...

"உனக்கு எப்படி வேணும்னாலும் வந்திட்டுப் போகட்டும்.. இப்போதைக்கு தொன தொணக்காம காபியை கலந்து கொடு..."

"இப்பத்தானே குடிச்சீங்க.. ?"

"வந்திருந்த ஜீவராசிகளின் முன்னாலே... மனுசனுக்கு தொண்டையில பச்சைத் தண்ணி இறங்குமாடி.. ?"

இப்படிக் கேள்வி கேட்டவரிடம்...

"பச்சைத் தண்ணிதானே இறங்காது.. காபி இறங்கியிருக்குமில்ல.. ?" என்று எதிர் கேள்வி கேட்டாள் ராஜேஸ்வரி...



"ஏண்டி கேட்க மாட்டே.... வம்பாடு பட்டு இந்தக் குடும்பத்துக்காக உழைச்சுக் கொட்டறேனில்ல... நீ இதெல்லாம் கேட்ப... இன்னமும் கேட்பே.."

சாதுவான கிருஷ்ணமூர்த்திக்கே கோபம் வந்து விட்டது...

அதற்கெல்லாம் அலட்டிக் கொள்கிறவளில்லை ராஜேஸ்வரி... அவள் அவரது கோபத்தை கண்டு கொள்ளவேயில்லை...

"இந்தக் குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டாம வேற எந்தக் குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டப் போறிங்க..? இந்த ரெண்டு மாசமா சம்பளக் கவரில பணம் குறையுதே.. என்ன விவகாரம்னு விசாரிக்கனும்னு நினைச்சேன்.. நிஜமானா அது.. ?"

இப்படியெல்லாம் பேசி வைக்க ராஜேஸ்வரியால் மட்டும் தான் முடியும்...

"அம்மா... பாவம்.. நம்ம அப்பாவுக்கு அவ்வளவுக்கெல்லாம் தைரியம் பத்தாதும்மா...," கீதா தகப்பனாருக்காக பரிந்து பேசி விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டாள்...

"அவருக்கு தைரியம் பத்தாதுன்னு நீ தூண்டிவிடறயா..? வயசுப் பெண் பேசற பேச்சா இது..?"

'நீங்க மட்டும் வயசுப் பெண்ணுக்கு முன்னாலே இன்னொரு குடும்பத்தைப் பத்திப் பேசலாமா..?'

Optimized by www.ImageOptimizer.net

ஆளானப்பட்ட குடும்பத் தலைவரான கிருஷ்ணமூர்த்தியையே வாயைத் திறக்க விடாமல்.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே என்று வார்த்தைக்கு வார்த்தை பேசி மிரட்டி வைத்திருக்கும் ராஜேஸ்வரியின் முன்னால் வாய்விட்டு கீதா மட்டும் பேசிவிட முடியுமா என்ன..?

அவள் மனதிற்குள் பேசியபடி வெற்றிகரமாக பின் வாங்கினாள்...

"எல்லாம் இவர் கொடுக்கிற இடம்டி... பேச வேண்டியவளரூமுக்குள் துரத்தி விட்டுட்டு.. உன்னைப் பேசவிட்டு அழகு பார்க்கிறாரே.. இந்த மகராசன்.. இவரைச் சொல்லனும்டி.. உன்னைச் சொல்லக் கூடாது.."

கிருஷ்ணமூர்த்திக்கான மண்டகப்படி தொடர்ந்து கொண்டிருந்தது...



## 32



**என்னென்னவோ மனதில் நினைத்தேன்..**
**சொல்லிடத்தான் வார்த்தையில்லை...**

சப்தம் செய்யாமல் மாடியேறி வந்தாள் கீதா... அங்கே.. மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து



அண்ணாந்து வானிலிருந்த நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தாள் ராதிகா...

"ஏன்.. இவ எப்பப் பார்த்தாலும்.. ஒரு மார்க்கமாகவே திரிந்து வைக்கிறா...?"

மனதில் கேள்வி எழ... சந்தடி செய்யாமல் ராதிகாவின் முன்னால் போய் நின்றாள் கீதா...

வான்வெளியில் சூன்யவெளியை வெறித்துக் கொண்டிருந்த ராதிகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

"ஏண்டி பிசாசே... சொல்லிட்டு வரமாட்டியா..? திடுதிப்புன்னு இருட்டுக்குள்ள வந்து நின்னு பயமுறுத்துவ...?"

"பயமா..? உனக்கா..? இதை என்னை நம்பச் சொல்றியா..?"

"ஏண்டி..? நான் பயப்படமாட்டேனா..?"

"அது அப்போ.."

"இப்போ மட்டும் என்ன வந்து தொலைச்சுச்சாம்.."

"பயமே உன்னைப் பார்த்து பயப்படுதோன்னு எனக்கொரு சந்தேகம் வந்து தொலைச்சிருக்கடி ராது..."

"ப்ச்ச்..."

ராதிகா எரிச்சலுடன் 'உச்' கொட்டிவிட்டு முகம் திருப்பிக் கொள்ள.. அவளருகில்.. அவளைப் போல கைப்பிடி சுவரில் முதுகை சாய்த்து.. சாய்ந்து உட்காராமல் கைப்பிடி சுவரிலேயே அமர்ந்தாள் கீதா..

Optimized by www.ImageOptimizer.net

"ஏண்டி அங்கே உட்கார்ந்து தொலைக்கிற..?"

"எல்லாம் உன் முடி கோதிவிட வசதியாய் இருக்குமேன்னுதான்..."

கீதாவின் பேச்சு இங்கேயிருக்க.. பார்வை எங்கோ இருப்பதை கவனித்த ராதிகா கடுப்பானாள்...

"உனக்கு எதுக்கு வசதியாய் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதா..? அங்கே யாரு நிக்கிறது..? எதிர் வீட்டுத் தடியனா..?"

"ஊஹிம்... பக்கத்து வீட்டு முரடன்..."

"ஏண்டி.. இப்படி எங்க உயிரைப்போட்டு வாங்கற..?"

"இந்த டயலாக்கை உன்னை நினைச்சுத்தான் இவ்வளவு நேரமா கீழே லேடிஹிட்லர் கத்திக்கிட்டு இருந்தாங்க..."

"ம்ச்ச்..."

மீண்டும் 'உச்' கொட்டிவிட்டு ராதிகா அடங்கிப் போக.. அவளை யோசனையோடு பார்த்தாள் கீதா...

"உனக்கு என்னதான் பிரச்னை ராது.. என்கிட்டக் கூட சொல்ல மாட்டியா...?"

தங்கையின் அனுசரணையான பேச்சில் கண் கலங்கி விட்டாள் ராதிகா... ஒரு வினாடி.. தன் மனதிலிருப்பதை இவளிடம் கொட்டிவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.. மறுநொடியில் அந்த எண்ணத்தை மனதிலிருந்து அழித்தாள்...



எந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவள் மனதிலிருப்பதை வெளியில் சொல்லுவாள்..?

பாலமுரளி அவளிடம் காதல் சொன்னான்தான்.. அதோடு சேர்த்து அவன் சங்கரைக் காதலிக்கிறாள் என்ற குற்றச்சாட்டையும் சேர்த்துச் சொன்னான்.. அவளை முதன் முதலாக தொட்டுத் தழுவி.. முத்தமிட்டவன்.. மறுநாளே.. காற்றில் கலந்த புகைபோல மாயமாய் மறைந்து விட்டான்.. அவளுக்காக தினந்தோறும்.. தெருமுனையில் காத்திருந்ததாக கூறியவன்.. அவளை தொட்டபின்னால்.. எந்த முனையிலும் கண்களுக்கு தென்படாமல் சென்று விட்டான்...

இப்படிப் பட்டவனுடன் நடந்த காதல் நிகழ்வுகளைப் பற்றி எப்படி அவளால் வெளியில் சொல்ல முடியும்...?

அவன் அவளுடைய காதலை அறியவில்லை.. அவள் மனதில் அவனைக் கண்டதும் பற்றிக் கொண்ட மோகத் தீயைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை... மாறாக.. சங்கரின் கவர்ச்சியைக் கண்டு அவள் மோகித்து விட்டதாக அவளைக் குற்றம் சாட்டினான்.. பட்டிக் காட்டை வெறுத்து.. பட்டணத்தின் நாகரிகத்தில் அவள் மூழ்கிவிட்டதாக தீர்ப்புக் கூறினான்... சங்கரும் அவளும் காதலித்துக் கொண்டிருப்பதாக முடிவே எடுத்து விட்டான்...

அவனைத் தேடிப்பிடித்து உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவன் இருக்குமிடத்திற்கு அவள்

Optimized by www.ImageOptimizer.net

போக வேண்டும்... தென்காசியின் அருகிலிருக்கும் தேனூத்து கிராமம் என்ற ஒரே அடையாளத்தை வைத்துக் கொண்டு.. அவன் ஊர் தேடி அவள் செல்ல முடியுமா..? அப்படியே சென்றாலும்.. அடுத்தவனை அவள் காதலித்து விட்டதாக அவன் முடிவே கட்டிவிட்ட பின்பு... அவன் முன்னால் எதைச் சொல்லிக் கொண்டு அவளால் நிற்க முடியும்...?

எதைச் சொன்னாலும்.. அவன் நம்புவானா...? அவள் சொல்வதை காது கொடுத்துத்தான் கேட்பானா..?

அவன் தொட்டதைச் சொல்லலாம்.. அதனால் உன் கற்பு பறிபோய் விட்டதா என்று அவன் கேட்டுவிட்டால்.. அந்த நொடியில் அவள் குற்றுயிராய் ஆகிவிட மாட்டாளா..?

அவன்தான் முதன் முதலாய் அவளைத் தொட்ட ஆண்மகன் என்று அவள் எடுத்துச் சொன்னால் அவன் சிரிக்க மாட்டானா...?

காலேஜிலும்.. லைப்ரரியிலும்.. கோவிலிலும்... பார்க்கிலும்.. அந்த சங்கர்கூடச் சுற்றினாயே... அவன் உன்னைத் தொடவில்லையா..? யாரிடம் காது குத்தப் பார்க்கிறாய் என்று கேட்க மாட்டானா...?

எந்தப் பக்கம் போனாலும்.. அங்கே வழி அடைத்திருக்க.. மூச்சுத்திணறிப் போனாள் ராதிகா... அவளது அந்தரங்க மனதில் அவன் முகம் பதிந்திருப்பதை



இந்த உலகத்தின் முன்னால் சொல்வது என்ற வழி தெரியாமல் திகைத்துப் போனாள்...

அவனின் கோப முகத்தைக் காட்டாமல்... அவன் கொஞ்சமேனும் சாந்த முகத்தைக் காட்டியிருந்தால்.. ராதிகாவிற்கு சிறிதளவாவது நம்பிக்கைக் கீற்றின் வெளிச்சம் பரவியிருக்கக் கூடும்...

அப்படியில்லாமல்.. அவன் கோபத்தை மட்டுமே காட்டி.. அவளை குற்றவாளியென்று அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டான்.. அவனது குண இயல்புகளைப் பற்றிய ஒருவிவரமும் அறியாத ராதிகா பயந்து போய் விட்டாள்..

"ராது.. என்னடி.. எதும் பேச மாட்டேன்கிற... என்னன்னுதான் சொல்லுடி..."

கீதா அவள் தோள் தொட்டு அசைத்தாள்...

'என்னவென்று சொல்லுவது..? ஒரு நாளின் பின் மாலைப் பொழுதும்.. முன்னிரவுப் பொழுதும் சந்தித்துக் கொண்ட அற்புதமான ஒரு பொழுதில் அவனைச் சந்தித்தேன்... அவன் பார்வையும்.. பேச்சும்.. என்னைப் போலவே இயல்பான குணம் கொண்டவனாக.. அவனிருப்பதை எனக்கு அறிவுறுத்தின... அவன் பாட்டும்... என்பாடலும்.. ஒன்றோடொன்று தொடர்ந்து வெளிப்பட்டு எங்களுக்கிடையே சொல்லத் தெரியாத ஒரு சொந்தத்தை ஏற்படுத்தின... நம்வீடு வரை அவன் வந்ததுதான் உனக்குத் தெரியும்.. என் அந்தரங்க

Optimized by www.ImageOptimizer.net

மனதின் அடி ஆழத்திலும் அவன் வந்து விட்டதை நீ அறிய மாட்டாய்.. இத்தனை காதலும் அவன்மீது என் அந்தரங்கத்தில் இருக்க.. அவன் வேறொருவனுடன் எனை இணைத்துப் பேசி பழி சுமத்தி விட்டான்.. பேசியவன் சும்மாவும் போகாமல் எனைத் தொட்டுத்தழுவி.. பின் விட்டு விலகிச் சென்றான்.. அவன் சென்ற திசை அறியாமல் பித்துப் பிடித்து நான் அலைந்து கொண்டிருக்கும் போது.. எவனுடன் எனை இணைத்து அவன் பழி போட்டானோ.. அந்த சங்கரே என்னைப் பெண் கேட்டு.. என் எதிரில் வந்து நிற்கிறான்.. இந்த வினையை நான் எங்கு போய் சொல்ல..?'

"ராது..."

மௌனத்தில் புதைந்து நின்ற ராதிகாவை பயத்துடன் பார்த்தாள் கீதா... இப்படி அவளிருந்து கீதா பார்த்ததேயில்லை.. ராதிகா இருக்குமிடத்தில் மௌனம் இருக்காது.. கலகலப்பு மட்டுமே குடியிருக்கும்...

"என்னைப் பாருடி..."

பக்கத்து வீட்டு மாடியை மறந்து.. ராதிகாவின் அருகே தரையில் சரிந்து அமர்ந்தாள் கீதா...

"என்னன்னு சொல்லுடி..."

இதமான அவளது பேச்சில் ராதிகா குலுங்கி அழுது விட்டாள்.. அதற்கு முன்னால்.. அவள் அழுது பார்த்திராத கீதா பதறிப் போனாள்...



"என்னராது... ஏன் இப்படி குழந்தை போல அழுகிற..?"

"எனக்கு அவனைப் பிடிக்கலைடி..."

"எவனை..?"

"அந்த சங்கரை..."

இதைக் கேட்ட கீதாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை... அப்பேற்பட்ட அழகன்.. கோடிஸ்வரன்.. வெளிநாட்டுக் காரில் வந்து இறங்கி.. ராதிகாவை பிடித்திருப்பதாகக் கூறி.. பெண் கேட்கிறான்.. அதைக் கேட்டதும்.. அதிர்ஷ்டம் வந்து விட்டதாக மகிழ்ந்து போகாமல்.. அவனைப் பிடிக்கவில்லையென்று இவள் அழுது வைக்கிறாளே...

"ராதிகா.." மெதுவான குரலில் அவள் அழைத்தாள்..

"ம்ம்ம்..." ராதிகாவின் விசும்பல் அடங்கவில்லை...

"யாரையாவது நீ காதலிக்கிறாயா..?" ஆழ்ந்த குரலில் கீதா கேட்கவும்.. ராதிகாவிற்கு திக்கென்று ஆகிவிட்டது...

கீதா விவரமானவள்தான்.. ஆனால்.. ராதிகாவின் அந்தரங்க மனதைப் பற்றி அறிந்து கொள்ளும் அளவிற்கு விவரமானவளா...?

அவளது கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்ல ராதிகாவினால் முடியவில்லை.. அதே சமயம்.. ஆமாம் என்று பதிலைச் சொல்ல வழியுமில்லை... அதனால்..

Optimized by www.ImageOptimizer.net

"உளராதேடி.." என்று எரிந்து விழுந்தாள்...

"இதோ பார்.. எதுவாக இருந்தாலும்.. என்னிடம் சொல்லு.. அதை விட்டுவிட்டு.. ஓங்கிப் பேசி.. என்வாயை அடைக்கப் பார்க்காதே..."

"அவனைப் பிடிக்கலைன்னா.. வேற ஒருத்தனை காதலித்துத்தான் ஆகணும்கிற கட்டாயம் எதுவும் இருக்கா கீதா...?"

"அப்படியில்லைதான்.. ஆனாலும்.. வந்திருக்கும் மாப்பிள்ளையை இந்த அளவுக்கு நீ வெறுக்க காரணம் எதுவும் இல்லையேடி.."

"காரணம் இருந்தால்தான் பிடிக்காமப் போகணுமா..? அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலைடி..."

"இதுதானே இடிக்குது... அந்த சங்கரைப் பார்த்தா... எனக்கே உன்மேல் பொறாமை.. பொறாமையாய் வருது.. அழகுன்னா.. அழகு.. அப்படியொரு அழகு.. அவனைப் பிடிக்கலைன்னு எந்தப் பெண்ணாவது சொல்லுவாளா..?"

"நான் சொல்லுவேன்..."

"உன்னை அறிவாளின்னு நினைச்சேன்.. கடைசியில் நீ இவ்வளவுதானா..? அவன்கிட்ட அழகு மட்டுமா இருக்கு..? அறிவும் சேர்ந்திருக்கு... திறமைசாலியா இருக்கான்.. கோடிக்கணக்கில் பணம் கொட்டிக்கிடக்குது... இவனைக் கட்டிக்க உனக்கு கசக்குதா..?"



கசந்ததுதான்.. எட்டிக்காயாய் கசந்ததுதான்.. மாலை மயங்கிய கருக்கல் வேளையில்.. அவனைத் தொட்டு அணைத்து.. அவள் இதழில் முத்தமிட்டுச் சென்றவனின் நினைப்பு மட்டும் அவளது அந்தரங்க மனதில் கரும்பாக இனித்ததுதான்...

இதை எப்படி அவளால் கீதாவிடம் சொல்ல முடியும்..? சொல்லிவிட்டு அவளை ஒரு தமக்கையாக கண்டித்து வைக்க அவளால் முடியுமா..? நீ மட்டும் ஒருவனுடன் ஒட்டி உறவாடலாம்.. அதை உன் அந்தரங்கத்தில் புதைத்து வைத்து.. வேண்டிய பொழுதுகளில் அதை தோண்டியெடுத்து நினைத்து மகிழலாம்.. நான் மட்டும் சைவப் பட்சிணியாக இருக்க வேண்டுமா என்று அவள் கேட்டாலும்.. கேட்டு வைப்பாளே.. அவள் பயமறியாத இளங்கன்றுதானே...

ராதிகா அந்தரங்கத்தை மறைத்தாள்.. கீதாவிடம் சங்கரை மறுத்துச் சொல்லக் காரணம் தேடினாள்... அதையேதான் கீதாவும் அவளிடம் வினவினாள்...

"ஒரு காரணம் சொல்லு... ஒரேயொரு காரணத்தை ஸ்ட்ராங்காகச் சொல்லு.. நான் உன்பக்கம் நிற்கிறேன்.. உன்னால் அதைச் சொல்ல முடியுமா..?"

ராதிகாவினால் அது முடிந்தது.. அவளுக்கு ஒருகாரணம் கிடைத்துவிட்டது...

"நமக்கு நம்வீடு உசத்தி கீது..."

Optimized by www.ImageOptimizer.net

"இதென்னடி பேச்சு.. நம்ம வீடு நமக்கு உசத்தியாத்தானே இருக்கும்.. வேற எப்படி இருக்கும்..?"

"சங்கரோட அம்மாவும்.. அப்பாவும்.. நம்ம வீட்டில் உட்காரக்கூட முகம் சுளிச்சாங்களே.. அதை நீ கவனிச்சியா...?"

"அட.. ஆமாம்.."

கீதாவின் முகத்தில் யோசனை படர்வதை.. நிலவின் மெல்லிய ஒளியிலும் ராதிகாவினால் கணிக்க முடிந்தது..

"நம்ம அம்மா போடற காபி எப்படி டீ இருக்கும்..?"

"கள்ளிச் கொட்டைப் போலவே இருக்கும்.."

"அதைக் கையால் கூட அவங்க ரெண்டு பேரும் தொட்டுப் பார்த்தாங்களா..?"

"நானும் அதை நினைச்சேண்டி.. அதென்னடி அதுக ரெண்டுக்கும் அவ்வளவு மண்டைக் கனம்...?"

"இப்போச் சொல்லு.. அந்த வீட்டுக்கு மருமகளாய் நான போனா எனக்கு என்ன மதிப்பிருக்கும்..?"

"நீ சொல்றதையும் யோசிக்கனும்தான்.. ஆனா ராது.. நீ வாழப் போகிறது சங்கர்கூட.. அவங்களைப் பத்தி நீயேன் கவலைப்படனும்..? ஒற்றை மகனுக்கு பெண்டாட்டியாய் வந்தவளை அனுசரித்து வைத்துக் கலைன்னா அவ மகனைப் பிரிச்சு.. தனிக்குடித்தனம் கூப்பிட்டுக்கிட்டு போயிடுவான்னு அவங்க இல்ல.. உன்னை நினைச்சுக் கவலைப்படனும்...?"



இவள் இத்தனை விவரமானவளாக இருந்து ...லைக்கக் கூடாது என்று ராதிகாவின் மனதிற்குள் ...ச்சல் மண்டியது...

'இவளுக்கு மட்டும் புத்தி எப்படியெல்லாம் வேலை ...து வைக்குது...'

அந்த புத்திசாலியான தங்கையை முறைத்துப் ...த்தாள் ராதிகா...

"உனக்கேண்டி புத்தி இப்படிப் போகுது..?" "எப்படிப் போகுது..?"

"அந்த சங்கரே... அவனைப் பெத்தவங்களுக்கு ...மகன்..."

"அதைத்தானே நானும் சொல்றேன்..?"

"அவன் எப்படிடீ.. பெத்தவங்களை விட்டுவிட்டு ...குடித்தனமாய் வருவான்...? அதை நீ யோசிக்கவே ...டியா..?"

"நீ சொல்லுகிற விதமாய் சொன்னால் அவன் ...ட்டுக்க மாட்டானா..?"

கீதாவின் கேள்வி போகும் திசையை ...ர்ந்தவளுக்கு கோபம் வந்துவிட்டது..

"ச்சீ.. என்ன பேச்சுன்னு.. இப்படியெல்லாம் பேசற..?"

"நாலையும் தெரிஞ்சு வைச்சுக்கனும்னு நம்ம ...டீச்சர் ஹிட்லர் அடிக்கடி சொல்லுவாங்க ராது.. நான்

அதைத்தான் தெரிஞ்சு வைச்சிருக்கேன்.. அது உனக்குத் தப்பாத் தோணினா.. நான் என்ன பண்ண... ?"

"சீது... ப்ளீஸ்... எனக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதில் இஷ்டமில்லை... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவனைப் பெத்தவங்களும்.. சொந்தக்காரங்களும் என் வீட்டை மதிக்கனும்.. என்னைப் பெத்தவங்களை மதிக்கனும்.. என் கூடப் பிறந்தவங்க கிட்ட பாசமா இருக்கனும்.. அப்படிப்பட்ட இடத்தில்தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்..."

"நீ சொல்கிறதும் சரியாத்தான் இருக்கு... எதுக்கும் இதைப் பத்தி லேடி ஹிட்லர் காதில போட்டு வைக்கிறேன்.."

செய்தியைக் கேட்ட ராஜேஸ்வரி மலையேறி விட்டாள்.. ராதிகாவிற்கு கொஞ்சமாவது அறிவிருக்கிறதா என்று கேட்டாள்.. துரும்பைக் கிள்ளிப் போட்டு.. அதை மாப்பிள்ளையென்று அழைத்து வைத்தால்.. அதுகூட தெனாவெட்டுக் காட்டும் என்று எடுத்துவைத்தாள்.. ஒன்றும் இல்லாதவர்களே (இதைச் சொல்லும் போது.. சுவரில் மாட்டியிருந்த மாமனார்... மாமியாரின் மாலை சூட்டப்பட்ட புகைப்படங்களை பார்த்துக் கொண்டாள்..) ஆட்டம் போடுகிறபோது அப்பேர்பட்ட கோடீஸ்வரர்கள் ஆடமாட்டார்கள் என்ற வினாவை முன்னால் வைத்தாள்...

மொத்தத்தில் ராதிகாவின் மறுப்பை ராஜேஸ்வரி அலட்சியம் செய்தாள்...








## நானாக நானில்லை...
## நீயேன் அதை அறியவில்லை..?

ராதிகாவின் முகம் வாடியிருந்தது.. வகுப்பறையில் கவனமாக குறிப்பெடுப்பவள்... இப்போதெல்லாம் அதைச் செய்யாமல் ஏதோ ஒரு ஆழ்ந்த யோசனையில் இருப்பதை ஷோபா கவனித்தாள்... அது என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ளும் ஆவல் அவள் மனதில் குறுகுறுத்தது...

அதை அறிய வேண்டுமானால் அவள் ராதிகாவிடம் பேசவேண்டும்.. இப்போதெல்லாம் ஷோபா ராதிகாவிடம் பேச்சை வைத்துக் கொள்வதில்லை...

எந்த நோக்கத்திற்காக அவள் ராதிகாவை.. பிறந்தநாள் விழாவிற்கு அழைத்தாளோ... அந்த நோக்கம் தகர்ந்து போனதுமில்லாமல்.. சங்கரின் பார்வையில் ராதிகா பட்டு விட்ட கொடுமையை எண்ணியெண்ணி அவள் மனம் வெந்து போயிருந்தாள்...

அதனால்... ராதிகா எதிரே வந்தால்.. இவள் அந்தத் திசையிலேயே போகாமல்... பக்கவாட்டில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்...

Optimized by www.ImageOptimizer.net

"பரவாயில்லையே.. ஒரேயொரு நாள் அவ வீட்டு பர்த்டே பார்ட்டிக்கு போய்... அவளை உன்னைக் கண்டாலே ஓடுகிற அளவுக்கு ஆக்கி வைச்சிட்டயே.. கெட்டிக்காரிதான்..."

ஷோபா கூட ராதிகாவைப் பாராட்டும் அளவிற்கு.. ஷோபா.. ராதிகாவைக் கண்டால்... காத தூரம் விலகி நடந்தாள்..

அப்படியிருக்கையில்.. ராதிகாவின் முகவாட்டத்திற்கான காரணத்தை எப்படி கண்டு பிடிப்பது..?

ஷோபா... பக்கத்திலிருந்த காயத்ரியைப் பார்த்தாள்..

"என்னடி..?" அவள் புருவம் உயர்த்தினாள்...

"அவ ஏண்டி முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தொங்கப்போட்டுக்கிட்டே அலையறா..?" ஷோபா கேட்டாள்..

'எவ..?' என்று பதிலுக்கு காயத்ரி கேட்கவில்லை...

ஷோபா குறிப்பிடும் அந்த 'அவ...' எவள் என்று அவளுக்குத் தெளிவாகத் தெரியும்..

"அதைத் தெரிஞ்சுக்கிட்டு நீயென்னடி பண்ணப் போற..?"

"பலமான அடியை அவ வாங்கியிருந்தான்னா.. உனக்கு ட்ரிட் வைக்கலாம்கிற எண்ணம்தான்..."

"அடிப்பாவி..." என்று சொன்னாலும்... காயத்ரி ராதிகாவின் பக்கத்தில் போகத்தான் செய்தாள்...



அவள் வந்ததைக் கூட உணராமல் கன்னத்தில் [illegible] வைத்து.. ஏதோ ஒரு கவலையுடன் [illegible]திருந்தவளைப் பார்த்து...

"ராதிகா..." என்று அன்பொழுக அழைத்தாள் [illegible]த்ரி...

"ம்ம்ம்" மௌனம் கலைத்து விழியுயர்த்தினாள் [illegible]திகா...

"ஏன்.. என்னவோ போல இருக்கே..?"

"இல்லையே... நான் நல்லாத்தான் இருக்கேன்.."

"பொய்.. நீ சரியாய் இல்லைன்னு ஷோபாவே கண்டு [illegible]டிச்சிட்டா.. நீயானா சமாளிக்கப் பார்க்கிற..."

இதைக் கேட்ட ராதிகா சட்டென்று திரும்பிப் [illegible]ர்த்தாள்.. அது நேரம்வரை அவளையே பார்த்துக் [illegible]கொண்டிருந்த ஷோபா... அவசரமாக முகத்தைத் திருப்பிக் [illegible]கொண்டாள்... அப்பொழுதுதான் ராதிகாவின் மூளையில் [illegible]மின்னல் அடித்தது... அந்த அற்புதமான யோசனையும் [illegible]வந்தது...

'இவளை மறந்துட்டேனே..'

சிக்கலைத் தீர்க்கும் நூல் முனையைக் கண்டுபிடித்து விட்டதும்.. அவளுக்கே இயல்பான அந்த சுறுசுறுப்பும்.. துறுதுறுப்பும் கணப்பொழுதில் அவளிடம் திரும்பி வந்து விட்டன...

Optimized by www.ImageOptimizer.net

"அப்படியா.. அவளுக்கு என்மேல் அவ்வளவு அக்கறையா...?"

"ஆமாங்கிறேன்.."

"நம்ப முடியலையே.."

"நீ.. நம்பித்தான் ஆகனும்... என்னிடம் அவளே சொன்னா..."

"என்ன சொன்னா..? நான் கவலையாய் இருக்கிறதை கன்பார்ம் பண்ணிட்டு வந்தா.. உனக்கு ட்ரீட் கொடுக்கிறேன்னு சொன்னாளா...?"

ராதிகா சிரிக்காமல் கேட்க.. காயத்ரியும் யோசிக்காமல்..

"அட... எப்படிக் கண்டு பிடிச்ச..?" என்று சொல்லி விட்டாள்..

"அதானே பார்த்தேன்..." என்று ராதிகா சொன்னதுமே.. காயத்ரியின் முகத்தில்.. குடம்.. குடமாய் அசடு வழிந்தது..

"ஏண்டி... அவ என்ன சொல்லி விட்டிருப்பான்னு எனக்குத் தெரியாதா...? இதைக் கண்டு பிடிக்க.. வெத்தலையில் மை தடவி... ஜோஸியமா பார்க்கனும்..? அவபுத்தி இப்படித்தானே போகும்...?"

"விடு ராதிகா... அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்..."

"ஊஹீம்... அவளுக்குத் தெரியாதது நிறைய இருக்கு..."



"என்ன.. என்ன..?"

"மெதுவா.. மெதுவா.. எதுக்குடி அவளுக்கு தகவல் [illegible] இவ்வளவு வேகம் காட்டறே..? என்னவோ [illegible] பரப்பு செயலாளர்ன்னு சொல்லுவாங்களே... அதுப்போல.. நீ அவளுக்கு தகவல் அறிந்து சொல்லும் [illegible]ளரா...?"

"ஏண்டி... என்னைப் போட்டு இந்தத் தாக்கு தாக்கறே..?"

"அதானே... நீ வெறும் அம்புதானே... உன்னைத் தாக்கக் கூடாது... உன்னை அனுப்பியவளைத் தாக்கனும். [illegible] பாருடி... அதைவிட முக்கியமாய் எனக்கு ஆயிரம் [illegible]யிருக்கு.. அதனால.. போனாப் போகுதுன்னு விட்டு வைக்கிறேன்..."

அவர்கள் பேசிக் கொள்வதை தெளிவாக கேட்டுக் கொள்ளும் தூரத்தில்தான் ஷோபா அமர்ந்திருந்தாள்.. ராதிகா ரகசியம் பேசினாலே அவளுக்கு கேட்டிருக்கும்.. அப்படியிருக்க... ராதிகா.. வேண்டுமென்றே குரலை உயர்த்திப் பேசினால்.. அவளுக்கு கேட்காமல் போகுமா..?

அவளுக்கு ராதிகா பேசிய ஒவ்வொரு வார்த்தையும்.. அட்சரசுத்தமாக கேட்டு வைத்தது...

'இவ என்னைப் போனாப் போகுதுன்னு விட்டு வைக்கிறாளா...?'

Optimized by www.ImageOptimizer.net

ராதிகாவின் திமிரை எண்ணி அவள் கொதித்துப் போய் விட்டாள்... அவளது திமிரை அடக்கும் வழி தெரியாமல் அவள் தலையைப் பிடிக்க ஆரம்பிக்க...

"பாவம்டி.. இந்த ஒரு மாதமா... உன் வழிக்கே வராம ஒதுங்கியிருந்தா.. தலைவலியும் அவளை விட்டு ஒதுங்கியிருந்தது.. இன்னைக்கு பழைய வேலையை ஆரம்பிக்க நினைச்சா.. நீ தலைவலியை அவளுக்கு அனுப்பிட்டே..." என்று பரிதாபப் பட்டாள் காயத்ரி...

"இதுக்கே தலையைப் பிடிச்சா எப்படி..? இன்னும் நிறைய இருக்கே.. அதைக் கேட்டா.. அவ தலை சுக்கு நூறாய் வெடிச்சுச் சிதறினாலும் சிதறிடும் காயத்ரி..."

"என்னடி ராதிகா.. மந்திரவாதியைப் போல சாபம் கொடுக்கிற.. போனாப் போகிறா.. பிழைச்சுப் போகட்டும் டி..."

"அப்படிங்கிற..? அப்ப நான் சொல்ல வந்ததை சொல்லவா.. வேணாமா...?"

"சொல்லு... சொல்லு..."

"அதைக் கேட்டா.. அவ தாங்குவாளா..?"

"நான் தாங்குவேண்டி..."

"ஆஹா... உன்னை மாதிரியான பிரண்டுதாண்டி அவளுக்கு வாய்க்கும்..."

"அதைப்பத்தி உனக்கென்ன.. நீ விசயத்தைச் சொல்லு..."



"சொல்லிட்டா போச்சு... இதைக் கேட்டவளுக்கு மண்டை வெடிக்குதோ.. இல்லையோ.. இதைச் சொல்லலைன்னா... எனக்கு மண்டை வெடிச்சு விடும்..."

ராதிகா போட்ட பீடிகையில்.. அப்படிப்பட்ட விசயம் என்னவென்று அறிந்து கொள்ளும் ஆர்வம் காயத்ரிக்கு அதிகமானது...

"ஏய்.. சஸ்பென்ஸ் தாங்கலைடி.. இப்போ விசயம் என்னன்னு நீ சொல்லலைன்னு வை.. என் மண்டையே வெடிச்சு விடும்..."

"ஐயோ பாவம்.. அந்தப் பாவம் எனக்கெதுக்குடி.. விசயத்தைக் கேளு..."

"அதைக் கேட்கத்தானே அப்போதிருந்து காதைத் தீட்டிக்கிட்டு காத்துக்கிட்டு இருக்கேன்..."

"ஒரு ஊரில் ஒரு பெரிய மன்மத ராஜா இருந்தானாம்..."

"என்னடி இது.. ஒரு ஊரில ஒரு ராஜா இருந்தானாம்ன்னு கதை சொல்ல ஆரம்பிக்கிற..."

"கதைதான்... இது பெரிய கதை... என்னாலேயே [illegible]க்கை இன்னும் நம்ப முடியல.. நீ எப்படி நம்பப் போறியோ.. போ..."

"என்னவோ.. போ.. ராதிகா.. இன்னைக்கு சரியான கதைசொல்லியா நீ ஆகிட்டே..."

"எதில் விட்டேன்..?"

Optimized by www.ImageOptimizer.net

"மன்மத ராஜாவில் விட்ட..."

"அந்த மன்மத ராஜாவின் பெயர் என்ன தெரியுமா..?"

"நீ சொன்னாத்தான்டி தெரியும்.."

"சங்கர்...!..."

இதைச் சொல்லியவாறு ஷோபாவின் முகத்தை ஜாடையாகக் கவனித்தாள் ராதிகா.. ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் தாக்கியதைப் போல அவள் முகத்தில் அதிர்ச்சியின் அலைகள் தெரிவதை திருப்தியுடன் கவனித்தபடி காயத்ரிக்கு கதை சொல்வதைத் தொடர்ந்தாள்...

"சங்கரா..? எங்கேயோ கேள்விப் பட்ட பெயராய் இருக்கே..."

காயத்ரி நெற்றியில் ஒற்றைவிரலால் தட்ட ஆரம்பிக்க.. தன் எதிர்காலக் கணவனான சங்கரின் பெயரையும்.. அவனது பெருமைகளையும் அவளிடம் சொல்லியிருந்த ஷோபா முகம் வெளுத்துப் போனாள்...

"எங்கேயோ கேட்ட குரலா..? அதை விடு.. இதைக் கேளு.. அந்த சங்கர் பெரிய பிஸினெஸ் மேக்னெட்.. பாரினில் படிச்சவர்.. கோடிஸ்வரர்..."

"இதையும் நான் யாரோ சொல்லக் கேட்டிருக்கேன்டி..."



"அதை அப்புறமாய் யோசி.. இப்ப.. இந்த விஷயத்தைக் கேளு... அந்த சங்கர் போனவாரம் அவரோட பேரண்ட்ஸோட என்னைப் பெண் கேட்டு வந்தார்.. அவருக்கு என்னை அவ்வளவு பிடிச்சிருக்காம்.. இது எப்படியிருக்கு..?"

ஷோபாவிற்கு அது கொஞ்சம்கூட நன்றாகவே இல்லை...

ராதிகா சொல்லிவிட்டாள்.. சங்கர் எப்படியெல்லாம் அவள் பின்னால் சுற்றினான் என்பதை ஷோபாவின் காதுபட விவரித்தாள்.. இது கொஞ்சம் கூட நன்றாக இல்லை என்று ராதிகா கடிந்து கொண்டவுடனேயே.. பெற்றோரைக் கூப்பிட்டுக்கொண்டு பெண் கேட்டு வந்து விட்டான் என்று பெருமை பொங்க கூறினாள்... அவனுடைய பெற்றோர் திருமண நாளைக் குறிக்கக் கிளம்பி விட்டார்கள் என்று வெட்கம் படர்ந்த முகத்துடன் கண்சிமிட்டினாள்...

இதையெல்லாம் 'ஆ' என்று வாய் பிளக்க கேட்டுக் கொண்டிருந்த காயத்ரிக்கு... ராதிகாவின் அதிர்ஷ்டத்தின் மீது பொறாமை வந்தது...

"இதுக்கேன்டி உம்முன்னு இருந்த..?" ஆற்ற மாட்டாமல் அவள் கேட்டு வைத்தாள்..

"வேற என்னடி செய்கிறது..? உனக்கே தெரியும்.. எனக்கு படிப்புன்னா உயிர்.. நான் படிப்பை

Optimized by www.ImageOptimizer.net

முடிச்சுக்கறேன்னு கெஞ்சறேன்.. அவர் அதுவரைக்கும் பொறுக்க மாட்டேன்னு கெஞ்சறார்... உடனே அவருக்கு மேரேஜ் நடந்தாகணுமாம்... அதனால்தான் உம்முன்னு இருந்தேன்..."

"ஏண்டி.. இது ஒரு பிரச்னையா..? மேரேஜ் பண்ணிட்டு படிப்பை கன்டினியூ பண்ண வேண்டியது தானே..."

"உனக்கு அவரைப் பத்தித் தெரியாது காயூ... உடனே வேர்ல்டு டூர் போகணும்னு பிளான் போட்டிருக்கார்.."

"கொடுத்து வைச்சவடி நீ..."

"அவர்தான் கொடுத்து வைத்தவராம்.. அவரே சொன்னார்.."

"அட.. இது வேற நடக்குதா...?"

"பின்னே.. தினமும் போனில் மணிக் கணக்கா பேசியில்ல தள்ளராரு.. என் தூக்கமும் கெடுது.. படிப்பும் கெடுது.. இதை யார்கிட்டச் சொல்றது காயூ..."

"எதுக்குடி.. கேட்கிறவ வயிறு எரியவா..?"

"இதைக் கேட்டு யாராவது வயிறெரிங்களாடி.. இப்ப நீ கேட்டுக்கிட்டு இருக்கிற.. உனக்கு வயித்தெரிச்சலாவா இருக்கு...?"

'அதை உன்கிட்டயா சொல்ல முடியும்..?' காயத்ரி பொறாமையில் வெந்து தணிந்தாள்...



"என்னைப் போலவே எல்லாரும் இருப்பாங்களா ராதிகா...?"

"அதைச் சொல்லு.. ஒரு சிலதுக.. கேட்டவுடனே வெந்து போயிருவாங்கள்ல..."

ராதிகா சொன்னதற்கு தலையைத் தலையை ஆட்டிவிட்டு...

"அவள் உன்னைத்தான் சொன்னாள் ஷோபா..." என்று பற்ற வைத்தாள் காயத்ரி...

அவளை என்ன செய்கிறேன் பார் என்று சூளுரைக்காமல் ஷோபா புயல் வேகத்தில் காரில் ஏறி காலேஜை விட்டுப் பறக்க...

'இவ எதுக்காக இப்படி ஓடுகிறா..?' என்று குழம்பிப் போனாள் காயத்ரி...

ஷோபாவின் வேகம் எதற்காக என்று ராதிகாவுக்குத்தானே தெரியும்..? இனி திருமணத்தைக் கலைக்கும் வேலையை அவள் பார்த்துக் கொள்வாள் என்ற நிம்மதியுடன்...

'அப்பாடா...' என்று ஆசுவாசப் பெருமூச்சை விட்டாள் ராதிகா...

இத்தனை நாளாய் இது தோன்றாமல் போனதே என்று மானசீகமாக தன் தலையில் தானே குட்டியும் கொண்டாள்...

Optimized by www.ImageOptimizer.net

இப்படி ஒரு செமத்தியான வழி இருக்கையில்.. மூலையில் அமர்ந்து கொண்டு கண்ணீர் விட்ட தன் முட்டாள் தனத்தை மனதிற்குள் கடிந்தும் கொண்டாள்..

அவளுக்கு ஷோபாவைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. சங்கர் ராதிகாவை திருமணம் செய்து கொள்வதை அவள் ஒருபோது பொறுத்துக் கொள்ள மாட்டாள்.. எப்பாடு பட்டாவது அந்த திருமணத்தை நடக்க விடாமல் நிறுத்தி விடுவாள்...

அந்த அளவிற்கு ஷோபா.. சங்கரின் மீது கண் வைத்திருந்ததை ராதிகா அறிவாள்..

அவளாவது.. சங்கரை.. ராதிகாவின் கழுத்தில் தாலியைக் கட்ட விட்டு விடுவதாவது.. அப்புறம்.. அவளது பணக்காரப் பெருமை என்ன ஆவது..? ராதிகாவிடம் தோற்றுப் போக ஷோபா விரும்புவாளா என்ன..?

மனதிற்குள் தன் திட்டத்தை மெச்சியபடி ராதிகா நிம்மதியாக நாள்களைக் கடத்தினாள்...

“என்னாச்சுக்கா.. கல்யாணத்துக்கு தயாராகிட்ட போல... முகமெல்லாம் மலர்ந்து.. இப்பவே உன் முகத்தில் கல்யாணக்களை வந்திருச்சு...”

கீதா ஆச்சரியத்துடன் கேட்டபோது... இல்லையென்று மறுக்காமல் அவள் கண் சிமிட்டியதில் ராஜேஸ்வரி ஆனந்தத்தின் உச்சிக்கே போய்விட்டாள்..



சங்கருக்கு தகவல் போனது.. அவன் வழக்கம் போல.. கோவிலில் ராதிகாவை வழி மறித்து நன்றி சொன்னான்... அதை மறுத்துப் பேசாமல் ராதிகா கோவிலை விட்டு வெளியே வந்தாள்..

“இன்னும் கொஞ்ச நாள்தான்... அதுக்குப் பின்னாலே.. நீயும்... நானும் சேர்ந்தே கோவிலுக்கு வந்து போகலாம்...”

சங்கர் புன்னகையுடன் காரில் ஏறி கையசைத்து விட்டுச் சென்றான்... இன்னுமா ஷோபா தன் சதி வேலைகளை ஆரம்பிக்கவில்லை என்று யோசித்தபடி அருகில் நின்று கொண்டிருந்த காரைக் கடந்த ராதிகா அந்தப்பொழுதில் காருக்கு உள்ளே இழுக்கப் பட்டாள்... அவள் முகத்தில் ஒரு கைக்குட்டை அழுத்தப்பட்டது...



# 34

உன்கண் பார்க்கும் ஓர்நொடிக்காக..
கால் கடுக்க நான் நின்றேன்...

யார் தன்னை காருக்கு உள்ளே இழுத்தது என்று விழி விரிய பார்த்த ராதிகா.. அதை உணருமுன்னே.. மயக்க மருந்தை உணர்ந்தவளாக விழி செருகி காரில் சரிந்தாள்... கார் கிளம்பியது... காற்றை விட வேகமாகப்

Optimized by www.ImageOptimizer.net

பாய்ந்து... சென்னைக்கு வெளியே இருந்த ஒரு பண்ணை வீட்டுக்குள் நுழைந்தது...

சில நிமிடங்கள் கழித்து கண் திறந்த ராதிகா.. ஒரு பூட்டிய அறைக்குள் படுக்க வைக்கப் பட்டிருப்பதை உணர்ந்தாள்...

'நான் எங்கேயிருக்கேன்...'

வழக்கமாய் மயக்கத்திலிருந்து விழிப்பவர்கள் கேட்கும் கேள்வியை அவள் மனம் கேட்க.. அறையைச் சுற்றி அவள் பார்வை சுழன்றது..

'இது எந்த இடம்.. ? நான் எப்படி இங்கே வந்தேன்.. ?'

துணைக் கேள்விகள் மனதில் முளைக்க.. அவளுக்கு சற்று முன் நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன...

நான் கடத்தப் பட்டிருப்பதை உணர்ந்தவள் அவசரமாக எழுந்து அமர்ந்தாள்... அவளுக்குள் பதட்ட அலைகள் உற்பத்தி ஆகின...

'எப்படி தப்பிப்பது... ?'

யார் கடத்தியது என்ற ஆராய்ச்சியை விட.. இதுதான் அவளது முக்கியமான நோக்கமாக இருந்தது...

மூடிய ஜன்னல்களை மறைத்து திரைச் சீலைகள் தொங்கிக் கொண்டிருந்தன.. ஏஸியின் இதமான குளிர் அறை முழுவதும் பரவியிருந்தது.. மூடிய கதவொன்று தெரிய.. அது பால்கனியாக இருக்கக் கூடும் என்ற நினைவில் அவள் ஆவலுடன் எழுந்தாள்.. அதே நேரத்தில்



அறைக்கதவும் திறக்கப்பட.. சட்டென்று அருகிலிருந்த அழகிய பாவை விளக்கின் சிலையை கையில் தூக்கிக் கொண்டாள்...

வருகிற ஆளின் தலையில் ஒரே போடாய் போட்டு விட்டு... ஓடிப் போய் விட வேண்டும் என்ற துடிப்புடன் அவள் போராடத் தயாராகி நின்று கொண்டிருக்க.. அறைக்குள் பாலமுரளி வந்தான்...

'இவனா... ? ?..!..!'

ராதிகா பிரமித்து விட்டாள்... அவள் கையிலிருந்த வெண்கலச் சிலை நழுவி.. கணீர் என்ற சப்தத்துடன் தரையில் விழுந்தது..

எவனைப் பார்க்கும் வழி தெரியாமல்.. அல்லும்.. பகலும் அவள் துடித்துக் கொண்டிருந்தாளோ.. அவன் அவளையே உறுத்துப் பார்த்த வண்ணம்.. அவள் கண்முன்னால் வந்து நின்றான்...

எவன் இருக்கும் இடம் தெரியாமல்.. அவனைத் தேடும் வகையறியாமல் அவள் மலைத்து நின்றாளோ.. அந்த அவன்... அவள் தேடாத அந்தப் பொழுதில்... தானாக வந்து நின்றான்...

ராதிகா பேச நினைத்து வாயசைத்தாள்... அவளுக்கு பேச்சு வரவில்லை... மாறாக காற்றுத்தான் வந்தது.. ஓடி அவன் நெஞ்சில் முகம் புதைத்து கண்ணீர் உகுக்க நினைத்தாள்... அவனது சிவந்த விழிகளும்.. கடுமையான முகமும் அதைச் செய்ய விடாமல் தடுத்தன...

Optimized by www.ImageOptimizer.net

அவளது அந்தரங்கத்தில் உறைந்திருந்தவனை... அருகில் அவள் பார்த்தும்.. அந்த அந்தரங்கத்தைச் சொல்ல முடியாமல் வாயடைத்து அவள் பின்னடைந்தாள்...

"என்னடி... அப்படிப் பார்க்கிற...? என்னை நீ எதிர்பார்க்கலையில்ல..?" கண்கள் இடுங்க அவன் கேட்டான்...

அவனை அந்த இடத்தில்.. அது போன்றதொரு சூழ்நிலையில் அவள் எதிர்பார்க்கவில்லைதான்...

அவளைக் காதலித்ததாகச் சொல்லியவனிடம்... அந்தக் காதலைக் காப்பாற்றி அவளுக்கு பிடிக்காத திருமணத்திலிருந்து அவளை விடுவிக்க அவள் சொல்லியிருக்க வேண்டும்..

அதைச் சொல்ல முடியாததொரு சூழ்நிலையில் அவளை நிற்க வைத்தது யார்...?

அவளை முத்தமிட்டுச் சென்றவனிடம்... காதலுக்கான கடமையை ஆற்று என்று அவள் கேட்டிருக்க வேண்டும்...

அதைக் கேட்க முடியாமல் அவளை அவனது பார்வையில் குற்றவாளியாக்கி... ஊமையாக்கியது யார்..?

"எப்படி எதிர்பார்த்திருப்ப.. நீ எதிர்பார்த்ததே வேறயாச்சே..." அவன் எகத்தாளமாகப் பேசினான்...



மௌனப் பார்வையில்.. அவனது அந்தரங்க மனதை அவனுக்கு உணர்த்திவிடும் துடிப்புடன் அவள் நின்றாள்..

"அவன் கூட ஜோடி போட்டுக்கிட்டு கோவிலுக்கு வந்தியே... சாமிகிட்ட என்ன கேட்ட..?"

சங்கருடனான திருமணம் நிற்க வேண்டும் என்று கேட்டாள் என்று சொன்னால் அவன் நம்பப் போகிறான்..?

"இனி சேர்ந்து கோவிலுக்கு வந்து.. சேர்ந்து திரும்பிப் போவோம்ன்னு அவன் சொன்னானே.. உன் எண்ணமும் அதுதானே..."

இல்லையே என்றிருந்தது ராதிகாவிற்கு.. சங்கர் போனால் போதுமென்ற எண்ணம்தான் அவள் மனதிலிருந்தது என்று இவன் எப்போது அறிவான்..?

"அது எப்படிடீ... அன்னைக்கு பார்க்கில உன்னைத் தொட்டு முத்தம் கொடுத்தப்போ... விலகாம நின்னவ... இப்ப.. அவன் கட்டிக்கிறேன்னு சொன்னவுடனே ஈன்னு பல்லைக் காட்டிக்கிட்டு... என்னவோ புருசன் பெண்டாட்டியைப் போல ஜோடி போட்டுக்கிட்டு அவன்கூட கோவிலுக்கு வந்து நிற்கிற..? உனக்கு மனச்சாட்சியே இல்லியா...?"

அடப் போடா.. என்றிருந்தது ராதிகாவிற்கு...

அந்த முத்தத்தைப்பற்றி இப்போது வந்து இவ்வளவு உணக்கையாகப் பேசுகிறவன்.. இத்தனை நாளாய்

Optimized by www.ImageOptimizer.net

எங்கேயிருக்கான் என்று கேட்கத் தோன்றியது அவளுக்கு...

அதைக் கேட்டு வைத்தால்... ஏற்கனவே மலையேறி இருப்பவன்.. இன்னும் அதிகமாக சாமியாட ஆரம்பித்து விடுவான் என்ற பயம் இருந்ததால்... அதைக் கேட்காமல் வாயை மூடிக் கொண்டாள்...

"உன்னைத் தொட்டேனேடி.. நீயும் பேசாம என் கைக்குள்ள வந்தியே.. ஒரு நிமிசம்.. உனக்கும் என்மேல் இஷ்டம்தானோன்னு நினைச்சுட்டேண்டி... அப்படியில்லை... என்கிட்டேயிருந்து தப்பிக்க முடியாம நீ தின்னவன்னு எனக்குத் தெரியாம போயிருச்சேடி..." அவன் குரலின் கோபம் அதிகரித்தது...

'தப்பிப்பதா...? உன்னிடமிருந்தா...?'

தூர்த்திய அவனது நினைவுகளிடமிருந்து தப்பிக்க விரும்பாமல் அதிலேயே புதையுண்டு போன அவளது அந்தரங்க மனம் அதிர்ந்தது...

"கல்யாணம்ன்னா என்னடி...? நான் தொட்ட உன்னை அவனும் தொடுவான்.. நான் கொடுத்த முத்தத்தை அவனும் கொடுப்பான்.. என்னைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டதைப் போல... நீ அவனையும்..."

அவன் பேசிக் கொண்டே போக... அதற்கு மேலும் அதைக் கேட்க முடியாமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள் ராதிகா...



'பேசாதே...' அவள் உடல் நடுங்கியது...

அந்த நடுக்கத்தை பார்த்தவனின் மனம்.. அவளைத் தொட்ட போது அவன் உணர்ந்த நடுக்கத்தில் நிலை கொண்டது...

ஒரு நொடி அவன் மனம் மென்மையானது...

'நான் தொட்ட போது வந்த நடுக்கம்... அவன் தொடும் போதும் வருமா...?'

அந்த நினைவில் மென்மை மறைந்து மாயமாக.. அவன் மனம் கடினமானது...

அவன் அவளையே பார்த்த வண்ணம் நிதானமாக முன்னேறினான்..

"வேண்டாம்..."

அதுவரை பேச்சிழந்து நின்றிருந்த ராதிகா அச்சத்துடன் பதறினாள்...

"அட... என்கிட்டக் கூட நீ பேசுவியா..? வழக்கமா அவன்கூட மட்டும் தானே நீ பேசுவ.. என்கிட்டப் பேச உனக்குப் பிடிக்காதே..."

அவளுக்கு பிடித்தவன் இதைக் கூறிக் கொண்டே.. பயங்கரமான வில்லன் சிரிப்பொன்றை சிரித்து வைத்தான்...

அவளுடைய அந்தரங்க மனதின் கதாநாயகன்.. வில்லனாகிக் கொண்டிருக்கும் கொடுமையைத் தாங்காமல் ராதிகா மனம் குமுறினாள்...

"இது பாவம்.. கிட்ட வராதீங்க..."

"இது பாவ.. புண்ணியம் பார்க்கும் நேரமில்லைடி.."

"நீங்க இதைச் செய்யக்கூடாது..."

"வேற யார் உன்னைத் தொடணும்..? அவனா..?"

அந்தக் கேள்வியில் அதிர்ந்து போனவள்.. அசையாமல் நின்றுவிட... அவன் அவளது தோளைத் தொட்டு... அவளைக் கைப்பற்றி விட்டான்...

அவளைத் தொட்டவுடன் அடங்கிக் கிடந்த அவனின் உணர்வுகள் ஆர்ப்பரித்து எழுந்து கொள்ள.. அடுத்த நொடியில்.. அவனது முரட்டுப் பிடியில் சிக்கிவிட்டாள் ராதிகா...

இறுக அணைத்து.. அவளது முகமெங்கும் அவன் முத்தங்களைப் பதிக்க ஆரம்பித்தபோது... மூச்சுத்திணற.. தந்நிலைமையை அவள் உணர்ந்தாள்.. அவளது வீடு.. அவள் கண் முன் சுழல.. அவள் போராட ஆரம்பித்தாள்...

"விடுங்க... என்னை விட்டு விடுங்க.."

அவள் கதறியதை அவன் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை... விடுபட அவள் நடத்திய போராட்டங்களை மிக எளிதாக அவன் முறியடித்து முன்னேறினான்...

கால் தடுக்கி.. கட்டிலில் சரிந்தவளின் மீது அவன் சரிய... அவளுக்குள் துக்கம் பொங்கியது...



யாரை அவளது உயிருக்குயிராய் நினைத்து அவள் ஆராதித்துக் கொண்டிருக்கிறாளோ... அவனே... அவளது கற்பை சூறையாட நினைத்ததைத் தாங்க முடியாமல் அவள் மனம் துடித்தாள்...

"சொன்னாக் கேளுங்க.. ப்ளீஸ்..."

அவளது கெஞ்சல்கள் அவன் காதில் விழவில்லை...

"உங்க காலில் விழுகறேன்.. இது வேண்டாம்..."

அவள் கை கூப்பியும்.. அவன் அவளை விடவில்லை....

அவன் கல்லாக மாறியிருந்தான்... அவளது கதறலையும்.. கண்ணீரையும்... துடிப்பையும்.. அலட்சியம் செய்தான்.. அவளது மறுப்புக்களை பொருட்படுத்த மறுத்தான்... அணை உடைந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்து பரவிப் படர்ந்தான்...

ஒரு எல்லைக்கு மேல் போராட முடியாமல் தொய்ந்து சரிந்தாள் ராதிகா.. வலுவிழந்தவளின் மீது.. வலிமையான அவனின் கரங்கள் பரவிப் படர்ந்து அவளை அவனுக்கு சொந்தமாக்கிக் கொண்டன...

கடைசியில் அவன் நினைத்ததை நடத்தியே முடித்து விட்டான்...

கலைந்து கிடந்தவளின் முடி கோதி.. அவள் நெற்றியில் முத்தமிட்டவன்.. விலகிச் சென்று விட்டான்... கண்ணீர் பெருக.. ராதிகா அப்படியே கட்டிலில் அமர்ந்து விசும்பிக் கொண்டிருந்தாள்...

Optimized by www.ImageOptimizer.net

நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன... அவளது கண்ணீர்.. வற்றாத ஆறாக... அவளது கன்னத்தில் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது...

அறைக்கதவு திறக்கப்பட்டு.. கையில் காபிக் கோப்பையுடன் அவன் உள்ளே வந்தான்.. ராதிகா நிமிரவில்லை...

"காபியைக் குடி..."

எதுவுமே நடக்காததைப் போல அவன் காபிக் கோப்பையை நீட்ட.. நிமிர்ந்து பார்த்தவளுக்கு.. ஆத்திரம் பெருகியது...

"நீங்கள்ளாம் ஒரு மனுசனா...?"

"நான் ராட்சஸனாகவே இருந்துட்டுப் போறேன்.. அதில எனக்கொரு குறையுமில்ல.. நீ இப்ப காபியைக் குடி..."

"உங்களைப் போய் நல்லவன்னு நினைச்சேனே..."

"அந்த சங்கரை என்னன்னு நினைச்சே..? உன் அகராதியில் நல்லவன்னா... இளிச்சவாயன்னு அர்த்தமா...?"

"என் வாழ்க்கையையே பாழாக்கிட்டிங்களே..."

ராதிகா குமுற... பாலமுரளியின் முகம் இறுகியது...

"அவன்கூட வாழ விடாம பண்ணிடேன்னு உனக்கு ஆங்காரமாய் இருக்கா...?"



'நான் என்ன சொல்கிறேன்.. இவன் என்ன சொல்லி வைக்கிறான்...'

இவன் இப்படித்தான் பேசி வைப்பானா என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது.. இது போன்றதொரு நிகழ்வை அவன்... அவளுக்கு பரிசளிக்கக் கூடும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை...

அவளுடைய ராத்திரி கனவுகளின் நாயகன் அவன்.. அவனோடு கூடி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும்.. ஏக்கமும்... அவளது அந்தரங்க மனதில் அடி ஆழத்தில் இருந்ததென்னவோ உண்மைதான்...

ஆனால்.. அதை.. இதைப்போல அவள் நினைத்துப் பார்க்கவில்லையே.. ஊரும்.. உறவும் அறிய... அவள் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு.. முதல் இரவில் அவனோடு அவன் முறையாக கலக்க வேண்டும் என்று தானே நினைத்தாள்..?

அவளை முத்தமிட்டு அவன் சென்ற மறுநாளிலிருந்தே.. அவளது பார்வை அவனைத் தேடித் துழாவவில்லையா..? அப்போதே.. அவள் முன்னால் அவன் வந்திருந்தால் தனது அந்தரங்க மனதை.. அவன் அறிய.. அவள் சொல்லியிருக்க மாட்டாளா...?

அவளது முகவரியை அறிந்தவன்.. அவளது அலைபேசியின் எண்ணையும் அறிந்திருக்க வேண்டாமா..? அவளைத் தொட்டுத் தழுவ தைரியமிருந்தவனுக்கு அவளை அலைபேசியில் அழைக்கும் எண்ணமிருக்க

Optimized by www.ImageOptimizer.net

வேண்டாமா..? அப்படி அவன் அலைபேசியில் அழைத்திருந்தால்... அவன் முகம் பார்த்து தடுமாறும் நிலை இல்லாமல்.. தன் அந்தரங்கத்தில் அமிழ்ந்திருக்கும் காதலை.. அவன் முன் அவள் கொட்டியிருக்க மாட்டாளா..?

இதை எதையும் செய்யாமல்.. அவளைக் கடத்தி வந்து.. தாலி கட்டாமலே அவளைத் தொட்டு.. குடும்பம் நடத்தி விட்டானே.. இதை அவன் செய்யலாமா...?

இப்போதும் கூட.. அவள் சங்கருடனான திருமணத்தை நிறுத்துகிற முயற்சியில்தானே முனைப்பாக இருந்தாள்..? இந்தச் சிக்கல் தீர்ந்தவுடன்... அவனைத் தேடிச் செல்லும் உத்தேசத்துடன் தானே இருந்தாள்..?

அதை உணராமல் அவன் அவசரப்பட்டு விட்டானே...

"எந்தக் குடியும் முழுகவில்லை... காபியைக் குடித்துவிட்டு கிளம்பு..." என்றான் அந்த கல்நெஞ்சக்காரன்..

அவனை உயிரற்ற பார்வையுடன் வெறித்தாள் ராதிகா...

"எங்கே கிளம்பச் சொல்கிறிங்க...?"

"உன் வீட்டுக்குத்தான்.. வேற எங்கேன்னு நினைச்சே...?"

அவனது கேள்விக்கு பதில் சொல்லாமல் அவனையே குற்றம் சாட்டும் பார்வையைப் பார்த்தபடி அசையாமல் அவள் அமர்ந்திருந்தாள்...



"என்ன..? உன் வீட்டுக்குப் போகிற உத்தேசமில்லையா..? இங்கேயே இருந்து விடுகிறாயா..?"

அவளது பார்வைக்கு அயராமல் அவன் நிதானமாக கேட்டு வைத்தான்...

"இது என் நண்பனின் ஃபார்ம் ஹவுஸ்.. நாளையிலிருந்து என்னுடையதாகி விடும்.. எப்படின்னு கேட்கிறயா..? உன் கூட குடும்பம் நடத்தின இந்த இடம்.. இனி எனக்குத்தான் சொந்தமாக இருக்கணும்... அதனால இதை வாங்க முடிவு பண்ணிட்டேன்.. அவனும் விற்க ஒப்புக்கிட்டான்.. சொல்லு.. இங்கேயே இருந்துருறியா..?"

'அதுக்கு வேற ஆளைப் பார்...' அவள் எழுந்து விட்டாள்...

என்ன மாதிரியான கேள்வியைக் கேட்டுவிட்டான் என்ற நினைவில் அவள் மனம் பொறுமியது....

என்ன மாதிரியான காரியத்தை செய்து விட்டான் என்பதை அவளது அறிவு அவளுக்கு நினைவுறுத்தியது...

இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்தவன்.. இப்படிப் பட்ட கேள்வியைக் கேட்கத் துணிய மாட்டானா..?

மனம் கசந்தவளாக அவள் எழுந்தாள்.. நிற்க முடியாமல் அவள் தள்ளாடிய போது.. தாங்கிப் பிடிக்க அவன் முயன்றான்.. சீற்றத்துடன் அவன் கைகளை தட்டி விட்டவள்... குளியலறைக்குள் புகுந்தாள்..

Optimized by www.ImageOptimizer.net

அவனருகே.. காரில் அமர்ந்திருந்தவளின் ஓய்ந்த தோற்றத்தைக் கண்டவனுக்கு என்ன தோன்றியதோ...

"இத்தனையும்.. உன்னால்தானேடி..." என்று பொருமினான்...

நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்... நான் அதற்கு விளக்கம் சொல்லப் போவதில்லை.. என்பதைப் போல.. அவன் முன்னால் தெரிந்த சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"உன்னைக் காதலிச்சேண்டி.. அதை உன்னிடம் சொல்ல வந்தேன்.. நீ அவன் பின்னால் சுற்றின.. பார்க்கில் அதைப்பத்தி கோபப்பட்டவன்.. அப்படியே போகத்தான் நினைச்சேன்.. ஏதோ ஒரு வேகத்துல.. உனக்கு முத்தம் கொடுத்துட்டேன்.. அதை நீ ஏத்துக்கிட்டயேடி.. அதனாலே தானே... உன்னை விட்டுவிட முடியாம எனக்கு கிறுக்கு பிடிச்சுப் போச்சு..?"

உயிரற்ற பொம்மையாய் அமர்ந்திருந்தவளிடமிருந்து பதில் வராமல் போக.. அவனது பொருமல் அதிகமானது...

"எனக்கு மட்டும் இப்படி.. அத்துவானக் காட்டுக்குள்ள... ஒரு பண்ணை வீட்டுக்குள்ள வைச்சு... உன்னை குறையாடனும்னு ஆசையாடி..? இந்த மாதிரி உன்னைத் தொடறதைப் பத்தி என்மனசில எவ்வளவு கற்பனைகளை வளர்த்து வச்சிருந்தேன் தெரியுமா..? அது அத்தனையையும் சுக்கு நூறாக்கி.. குழி தோண்டி புதைக்க வைச்சிட்டயேடி..."



அதற்கும் அவளிடம் அசைவில்லை...

"அந்த ஷோபா போன் பண்ணிச் சொன்னாடி.. அவனும்.. தினமும் ஒரு இடம்ன்னு ஊரைச் ...கிட்டு அலையறதைச் சொன்னா.. அவனுக்கும் ...க்கும் கல்யாணம் நடக்கப் போகுதுன்னு நீ உன் ...ந்து பூராவும் பீற்றிக்கிட்டு அலையறதைச் சொன்னா... பேசின பேச்சை அவ போனிலே ரிகார்டு ...ணியிருக்காடி.. அதை எனக்கு அனுப்பிவைச்சா ... அதைக் கேட்ட பின்னாலே எனக்கு வெறி கிளம்பாம ... இருக்கும்..?"

இது என்ன புதுக்கதை என்ற முகச்சுளிப்பு ...விடமிருந்து வெளிப்பட அதைவிட அதிகமான ... சுளிப்புடன் பாலமுரளி.. தன் போனை ஒலிக்க ...ட்டான்... அதில்.. ராதிகா.. ஷோபாவை கிளப்பி விட ...ண்டுமென்ற நோக்கத்துடன் காயத்ரியிடம் பேசிய ...ச்சு பதிவாகி இருந்தது...

"கேட்டியா.. அவனை என்னன்னு சொன்ன..? ...மத ராஜாவா..? உன் கண்ணுக்கு அவன் மன்மதனாய் ...தெரிஞ்சிருக்கான்.. நான் யாராய் தெரிஞ்சேண்டி..? நான் ...எனக்கு முத்தம் கொடுத்து காதல் சொன்னப்ப.. நீ முகம் ...சுளிக்காம நின்னுட்டு.. அதுக்குப் பின்னாலேயும்.. ...அவனைப் பார்த்து மன்மத ராஜான்னு சொல்றேன்னா.. ...உன்னை என்ன பண்ணினாலும் தப்பில்லைடி..."

'இதுதானா..?' ராதிகாவிற்கு நெஞ்சை அடைத்தது..

சங்கருடனான திருமணத்தை நிறுத்த.. ஜோபாலைத் தூண்டி விட.. அவன் பேசிய பேச்சு.. அவளுக்கு எதிராக திரும்பி விட்டிருக்கிறதே.. இதை இல்லையென்று அவள் எப்படி நிரூபிப்பாள்...?

"எப்படி.. எப்படி..? அவன் பெரிய பிஸினெஸ் மேக்னெட்டா..? நான் என்ன மாடு மேய்க்கிறவனா..? அவன் பாரினில் படிச்சவனா..? இந்தியாவில் படிச்சவனெல்லாம் உன் அகராதியில் கை நாட்டுக்கேஸா..? அவன் கோடீஸ்வரனா..? நான் என்ன பிச்சைக்காரனா..?"

அவன் பேசப்பேச... ராதிகாவிற்கு உஷ்ணமாக கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது...

"உன் படிப்பு முடிகிற வரைக்கும் அவனால் பொறுக்க முடியாதாமா..? எனக்கு மட்டும் பொறுக்க முடியுமா..? தினமும் மணிக்கணக்காய் போனில் பேசறானா..? அதில உனக்குத் தூக்கம் கெடுதா..? போ.. இதுக்கு பின்னாலே நீ நிம்மதியாய் தூங்கிடுவியா..? வெர்ல்டு டூர் போறிகளோ.. வெர்ல்டு டூர்...? இப்பப் போடி.. போய்ப் பாரு..."

அவளது வீடு இருக்கும் தெரு முனையில் இருளுக்குள் மறைவாக கார் நின்றது.. பாலமுரளி அவளை இரக்கமற்ற பார்வை பார்த்தான்...

"இறங்கு... இனிமே உன்னாலே அவன்கூட மணிக்கணக்கில் போன்பேச முடியாது... அவன்கூட ஜோடி போட்டுக்கிட்டு ஊரைச் சுற்ற முடியாது... அவன் கட்டற



...லியை வாங்கிக்கிட்டு வெர்ல்டு டூர் போக முடியாது.. ...தாண்டி நான் உனக்குக் கொடுக்கிற தண்டனை.. ...னை மட்டுமில்லை... இனி வேற எவனையும் உன்னால் ...யாணம் பண்ணிக்க முடியாது.. காலம் பூராவும்.. ...னக்கு நடந்ததை நினைக்க.. நினைக்க.. புழுவாய் ...துடிச்சுக்கிட்டு கிடக்கனும்.. அதை கண்குளிர நான் ...க்கனும்..."

அதற்கு மேலும்.. அவன் பேசுவதைக் கேட்க ...யாமல்... ராதிகா கார் கதவைத்திறந்து.. கீழே இறங்கி ...ட்டாள்... அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்து.. அவள் வீட்டுப் படியேறியவளைப் பார்த்தவனுக்கு.. வெற்றியின் மகிழ்வு இல்லை... ஒரு பெரு மூச்சுடன் காரைக் கிளப்பி.. சாலைப் போக்குவரத்தில் கலந்த போது நெஞ்சுக்குள் பாறாங்கல் ஏறி உட்கார்ந்து விட்டதை உணர்ந்தான் பாலமுரளி...

Optimized by www.ImageOptimizer.net



## 35

### உன்னைத் தொட்ட கைகள் குளிராமல் சுடுவதும் ஏன்...?

பௌர்ணமி நிலவின் ஒளியில் ஓங்கியெழுந்த பேரலைகள் ஓசையுடன் கரையின் மேல் ஆவேசத்துடன் பாலமுரளியை அடிப்பதைப்போல விழுந்து... சரிந்து... மீண்டும் கடலுக்குள் சென்றன.... இதமான கடல்காற்று பாலமுரளியின் உடலைத் தழுவிச் சென்றது.. அதன் இதம் பாலமுரளியின் மன வெம்மையை தணிக்கவில்லை... சற்று முன் நிகழ்ந்து விட்ட நிகழ்விலேயே அவன் மனம் நிலை கொண்டிருந்தது...

'கடைசியில வில்லனைப் போல ஆகிட்டேனே...'

மனம் குமுறினான் பாலமுரளி....

அவனின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவித்த உறவினர் வட்டாரத்துப் பெண்களைப் பற்றிய நினைவு அவன் மனதில் எழுந்தது...

'ஒருத்தியைக் கூட எனக்குப் பிடிக்காம போயிருச்சே... ஏன்...?'



அவனுக்கு விடை தெரியவில்லை... ராதிகாவை விட அழகான பல பெண்கள் அவனின் உறவினர் வட்டாரத்தில் உண்டு... அவர்களில் சிலரைப் பெண் பார்க்கவென்று மேகலாவே அழைத்துச் சென்றிருக்கிறாள்... அவர்களில் ஒருவரால் கூட பாலமுரளியின் மனக் கதவைத் தட்ட முடியவில்லை...

'அப்படி இவகிட்ட என்னதான் இருக்குன்னு இவ நினைப்பில நான் விழுந்தேன்...?'

அவனால் இனம் பிரித்துச் சொல்ல முடியவில்லை... ஆனால்... ராதிகாவின் வசீகர முகத்தின் நினைவின் முன்னே.. மற்ற எந்தப் பெண்ணின் முகமும் நிற்க முடியவில்லை என்பதை மட்டும் நிதரிசனமாக அவன் உணர்ந்தான்...

அலைகடலின் மேலே எழுந்து நின்ற முழுநிலவின் மீது அவன் பார்வை படிந்தது...

'நாளை இந்த வேளைபார்த்து
ஓடி வா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை
சென்று வா நிலா...'

அலைகடலின் மீது ராதிகா எழுந்து நின்று பாடுவதைப் போல முரளியின் முன்னால் காட்சி தோன்றி மறைந்தது... ஓர் கணம் அது ராதிகாதானோ என்ற

நினைவில் மனம் பேதலித்தான் முரளி... அவளைப் பிடிக்க முயன்றவனாக ஓர் அடி எடுத்து வைத்தும் விட்டான்... ஓங்கி விழுந்த பேரலை அவன் பாதம் நனைத்ததில் உணர்வு மீண்டவனாக கரைக்கு பின் வாங்கினான்...

"ராதிகா..." தாள முடியாமல் கூவினான்...

இருள் சூழ்ந்த அந்த இரவு நேரத்தில் சற்றுத் தொலைவிலிருந்த காரின் அருகில் குழுமியிருந்த நான்கைந்து இளைஞர்கள் இவனைத் திரும்பிப் பார்த்தனர்...

"யாருடா அது..?"

"தெரியலைடா.."

"தனியா நின்னுக்கிட்டு ஒரு பொண்ணோட பேரைச் சொல்லிக் கத்தறானே..."

"காதல் தோல்வியா இருக்கும்..."

"அதுக்கு கத்தினா சரியாப் போச்சா..."

"வேற என்ன செய்யலாம்னு சொல்ற.."

"தண்ணியடிக்கலாம்.."

"அனுபவம் பேசுது..? ம்ம்ம்..?"



மற்ற நண்பர்கள் உரத்துச் சிரிக்க.. சொன்னவன் முரளியை உற்றுப் பார்த்து விட்டு அவனருகே போகப் போனான்...

"எதுக்குடா அங்கே போற...?"

"அட்வைஸ் பண்ணாமுன்னுதான்..."

"நீ போடற மொக்கையை அட்வைஸ்னு பிலா விடாதே... சரக்குன்னா அட்வைஸ் பண்ணக் கிளம்பிருவியே... நீயென்ன கருத்து கந்தசாமியாடா..? இப்படி அட்வைஸங்கிற பேரில மொட்டை ரம்பம் போட்டுத்தானே.. அபூர்வமா கிடைச்ச உன் ஆருயிர் காதலியை ஓட்டி விட்ட... இப்ப இந்த நடுராத்திரியில போயி அவன்கிட்ட அதே ரம்பத்தை ஆரம்பிக்கிறேன்னு சொல்றியே.. உனக்கே இது ஓவராத் தெரியலையா..?"

"ஒருத்தன் நல்லது செய்ய நினைச்சா உங்களுக்கெல்லாம் பொறுக்காதே... அவனே பாவம்... தனியா நின்னு புலம்பிக்கிட்டு இருக்கான்.. அவனுக்கு ஆறுதல் சொல்லனம்னு நினைச்சா.. ஆளாளுக்கு என்னை ஓட்டறிங்களா..?"

"அதுக்கப்புறம் உன் தலைவிதி... போறதுன்னா போ... எதுக்கும் அவன்கிட்டப் போய் பேசாம தள்ளி நின்னே மொக்கை போடு... அவன் பாட்டுக்கு கடுப்பில

உன் செவியிலே நாலு அறையை விட்டு கடலுக்குள்ள தூக்கிக் கடாசிப் போறான்..."

நண்பர்கள் சொன்னதை அலட்சியம் செய்துவிட்டு அந்தக் கருத்து கந்தசாமியாகப் பட்டவன் கடலை வெறித்துக் கொண்டிருந்த பாலமுரளியின் அருகில் சென்றான்...

"சார்...!"

அவன் அழைப்புச் சத்தம் செவியை எட்டாதவனா பாலமுரளி.. கடலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்...

'சொல்ல நினைத்த ஆசைகள்...
சொல்லாமல் போனதேன்...?'

ராதிகா கடலையின் மீது முகம் காட்டிப் பாடிக் கொண்டிருந்தாள்...

அவள் மீது கொண்ட பேராசையின் அளவைச் சொல்ல முடியாமல் போன துயரத்தில் பாலமுரளியின் இதயம் வெடித்து விடும் போல இருந்தது...

'என்னை விட்டுவிடுங்க...'

சற்று முன் கைகூப்பி கதறியழுது மன்றாடிய ராதிகா அவன் மனக் கண்ணில் நினைவுக்கு வந்தாள்...



பூவாக கையாள வேண்டிய காதலியை கசக்கி முகர்ந்து விட்ட நினைவில் மனம் கசந்தான் பாலமுரளி...

"பாவி..." வாய் விட்டுக் குமுறினான்...

"என்னை இந்த நிலைமையில கொண்டாந்து நிறுத்திட்டியேடி..."

ஒரு கீழ்த்தரமான காரியத்தை செய்ய நேர்ந்து விட்ட துயரத்தில் அவன் புலம்பிக் கொண்டிருந்ததை அனுதாபத்துடன் கேட்ட அந்த கருத்து கந்தசாமியாகப் பட்டவன் பரிதாபப் பட்டான்...

"ஐயோ பாவம்... உங்க காதலியும் உங்களை நட்டாத்தில விட்டுட்டு ஓடிப் போயிட்டாளா சார்...?"

மனதில் சுமந்திருந்த துயரச் சுமையின் கனம் தாங்காமல் தனிமையை நாடி வந்திருந்த பாலமுரளி... தனிமை கலைந்ததில் கோபம் கொண்டவனாக... அருகில் நின்றவனை முறைத்தான்...

"இதைப் பார்த்தா ஆறு மாதிரி தெரியுதா..?" கடலைக் காட்டிக் கேள்வி கேட்டான்...

"இதைப் போய் யாராச்சும் ஆறுன்னு சொல்வாங்களா சார்...?"

அனுதாபப்பட்டவன் மனதில் பாலமுரளியின் மனநிலை குறித்தான ஐயம் எழுந்தது...

Optimized by www.ImageOptimizer.net

'என்னடா இது..? இந்த ஆள் பாட்டுக்கு கடலைக் காட்டி ஆறான்னு கேட்கிறானே... மறை கழண்ட கேஸோ...'

பாலமுரளியின் சிவந்த கண்கள் அந்த இருளிலும் தீக்கங்குகளாக ஜொலித்ததில் எதற்கும் இருக்கட்டுமென்று நண்பர்கள் சொல்லியனுப்பியதைப் போல தள்ளி நின்று கொண்டான்...

"தெரியுதில்ல..? இது ஆறில்ல... கடல்ன்னு தெரியுதில்ல...? அப்புறம் என்ன வேலைக் கழுதைக்கு என்னைப் பார்த்து... எவளாவது நட்டாத்தில விட்டுட்டுப் போயிட்டாளான்னு கேள்வி கேட்ட..?" பாலமுரளி உஷ்ணமானான்...

"அதில்ல சார்... தனியே நின்னு புலம்பிக்கிட்டு இருந்தீங்களேன்னு கேட்டேன்..."

"உன் வீட்டுக்கு வந்து உன்கிட்டப் புலம்பினேனா..?"

"அதில்லசார்.. கடல்கிட்ட புலம்பினீங்களேன்னு வந்தேன்..."

"அதுக்கு கடலில்ல கேள்வி கேட்கனும்..? நீயேண்டா கேட்ட..?"

கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் ஆன கதையாய்.. அனுதாபிக்கான மரியாதை தேய்ந்து.. காற்றில் கரைந்த



கற்பூரமாய் காணாமல் போனதில் அனுதாபி அரண்டே போனான்...

"அதில்ல சார்..." அவன் மேலும் விளக்கம் கூற முற்பட... பாலமுரளி... அவன் கழுத்தில் ஒற்றைக் கையை வைத்து இறுக்கினான்...

"சும்மா... கீறல் விழுந்த ரிகார்டைப் போல.. அதில்ல.. அதில்லன்னு ராகம் போட்ட.. அடிச்சுத் தூக்கி.. கடல்லே வீசிருவேன்.. ஏண்டா.. நானே நிம்மதியைத் தேடி கடலுப் பக்கம் வந்திருக்கேன்... நீ இங்கேயும் வந்து ரம்பம் போடறியா.. மகனே! உன்னைப் பொலி போட்டாத்தாண்டா அடங்குவ...."

பாலமுரளியின் ஒற்றைக்கையை இரண்டு கைகளாலும் விலக்கப் பார்த்து முடியாதவனாக.. அனுதாபி... 'லபோ.. திபோ...' என்று அலறிவைக்க.. அவனின் அலறல் சப்தம் கேட்ட நண்பர்கள் திரும்பிப் பார்த்துவிட்டு உதவிக்கு ஓடி வந்தார்கள்...

"என்னசார்... என்ன ஆச்சு...?"

"இவன் யாரு..?"

"எங்க பிரண்ட்தான் சார்.."

"மனுசனுக்கு டென்சன் ஏத்தற மாதிரியே வாயை விடறான்..."

Optimized by www.ImageOptimizer.net

"தெரியாம பேசிட்டான் சார்... விட்டுருங்க..."

அவர்கள் ஏகத்துக்கும் கெஞ்சியதில் போனால் போகிறதென்று கையை விலக்கினான் பாலமுரளி... சுவாசிக்க காற்று கிடைத்ததில் அனுதாபி... லொக்கு.. லொக்கென்று இருமி... வாய்வழியே அவசரமாகக் காற்றை இழுத்து மூச்சு வாங்கினான்...

"வாடா.. டேய்..."

அவனுடைய நண்பர்கள் அவனை ஏறக்குறைய இழுத்துக்கொண்டு அகன்றார்கள்...

"சொன்னாக் கேட்டியாடா.. அவனே வெறி பிடிச்சாப்புல நிக்குறான்... அவன்கிட்டப் போயி மொக்கை போட ஆரம்பிச்சிருக்கியே... நாங்க வரப்போயி ஆச்சு... இல்லைன்னா... நீ போட்ட மொக்கைக்கு... அடிச்சு நடுக்கடல்ல வீசிட்டுப் போயிருப்பான்..."

"போடா டேய்... நல்லது சொல்லப் போனவன அவன் கொல்லப் பாக்குறான்.. அவனை ஏன்னு ஒரு வார்த்தை கேட்காம வந்து நிக்கறிங்களே... நீங்கள்ளாம் பிரண்ட்ஸாடா...?"

"உன் கழுத்தை ஒற்றைக் கையில பிடிச்சுத் திருகிக்கிட்டு இருக்கான்.. நீ ரெண்டு கையாலயும் விலக்கப் பாக்கிற.. முடியலை.. அவன்கிட்டப் போயி.. ஒருவார்த்தை கேட்டு வைச்சோம்ன்னு வைய்யி.. அந்த



ஒற்றைக்கை.. எங்க கழுத்தைத் திருக வந்துரும்.. தேவையாடா எங்களுக்கு...?"

"அதுக்கு...?"

"வாயைப் பொத்திக்கிட்டு காரில் ஏறு... நாம மீட்டிங் போட வேற இடம் கிடைக்குதான்னு பாப்போம்... அவனைப் பார்த்தா ஒற்றைக் கையில நூறு பேரோட மென்னியைத் திருகிருவான் போல இருக்கு... உன்மேல இருக்கிற காண்டை எங்க பக்கம் திருப்பினா என்னாகிறது..."

அவர்கள் அனுதாபியை காரில் இழுத்துப் போட்டுக் கொண்டு... காரைக் கிளப்பிச் சென்றுவிட... பாலமுரளியை அவன் தேடிய தனிமை சூழ்ந்து கொண்டது...

**'வண்ண வெளியின் வாசலில்..**
**என் தேவன் தோன்றினான்...'**

விழிகளைச் சுழற்றி அவனைப் பார்த்த வண்ணம் ராதிகா ஆகாயத்தில் தோன்றிப் பாடினாள்...

'என்னைப் பார்த்துத்தான் உன் தேவன்னு சொன்னேன்னு நான் நினைச்சேனேடி.. அவனைப் பார்த்தில்ல நீ சொல்லியிருக்க...'

பாலமுரளி கடற்கரை மணலில் மல்லாந்து படுத்து கைகளை மடித்துத் தலைக்குக் கொடுத்து.. வானத்தைப் பார்த்துக் கேட்டான்...

Optimized by www.ImageOptimizer.net

'மன்னன் நடந்த பாதையில்
உன் கால்கள் செல்வதேன்..?
மங்கையே உன் கண்கள் இன்று
மயக்கம் கொள்வதேன்...?'

ராதிகாவின் மயக்கும் பார்வை நிலவில் தோன்ற... பாலமுரளிக்கு உன் மத்தம் பிடித்தது...



## 36



தண்டனை கொடுத்தவனே..
தண்டனைக்கு ஆளானேன்...

ராதிகாவின் பார்வையில் தெரிந்த அழைப்பில் பாலமுரளியின் மனம் பித்தானது... அவளது கண்களின் வசீகரத்தில் அவன் நிலைகுலைந்தான்...

'பார்க்காதே ராதிகா...' புலம்பினான்...

'இப்படிப் பார்த்துப் பார்த்துத்தானே என்னை இந்த கதிக்கு ஆளாக்கியிருக்கிற... பார்த்தே மயக்கினேயேடி... நான் மயங்கிப் போனேனே.. உன் பின்னாலே அலைஞ்சேனே... தேனூத்து பெரிய மனுசன் முரளின்னு சொன்னா.. தென்காசிப் பட்டினமே



தலைகட்டி மரியாதையாய் பார்க்கும்.. அப்படிப்பட்டவனை என்ன காரியம் செய்ய வைச்சிட்ட... எத்தனை பஞ்சாயத்தில நான் நீதிபதியா நின்னு தீர்ப்புச் சொல்லியிருக்கேன் தெரியுமா..? என்னை குற்றவாளியா நிக்க வைச்சிட்டியேடி...'

அவன் புலம்பலைக் கேட்ட ராதிகா வரிசைப் பற்கள் தெரிய வசீகரமாய் சிரித்தபடி மறைந்து போனாள்...

அவள் எங்கே போனாள் என்று தேடுவதைப் போல முரளி எழுந்து அமர்ந்து பார்வையைச் சுழல விட்டான்... சற்றுத் தொலைவில் ரோந்து வந்து கொண்டிருந்த போலிஸ்காரர்கள் அவனருகே வந்ததும்...

"யார் சார் நீங்க..?" என்றனர்...

"ஜஸ்ட் ரிலாக்ஸ் பண்ண வந்தேன்..." பாலமுரளி அவனுடைய விசிட்டிங் கார்டை நீட்டினான்...

கையிலிருந்த டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் அதைப் பார்த்தவர்களின் பார்வையில் மரியாதை வந்தது...

"சும்மா ஒரு வெரிபிகேசனுக்குத்தான் கேட்டோம் சார்..." அவர்கள் விலகி நடந்தார்கள்...

அதற்கு மேலும் அங்கிருப்பது உசிதமில்லை என்று தோன்றிவிட முரளி காரை நோக்கி நடந்தான்...

Optimized by www.ImageOptimizer.net

பண்ணை வீட்டின் முன்னால் காரை நிறுத்தி விட்டு.. வீட்டக்கதவை திறந்தவனின் பார்வையில் படியில் கிடந்த மலர்சரம் பட்டது... குனிந்து கையில் எடுத்துப் பார்த்தான்.. அது ராதிகாவின் தலையிலிருந்த பூச்சரம்... அதை கீழே போட மனமில்லாமல் பத்திரப் படுத்தியவனாக கதவைப் பூட்டிவிட்டு மாடிப்படிகளில் ஏறியவனின் மனம் கனத்தது...

படுக்கையறைக் கதவைத் திறந்தான்... அறையில் சிதறிக் கிடந்த பொருள்கள்.. ராதிகாவின் போராட்டத்தை எடுத்துக் கூறின... போர்க்களமாக இருந்த அறையை பெருமூச்சுடன் பார்த்தான்.. உருண்டு கிடந்த வெண்கலச் சிலை அவன் கண்ணில் பட்டது.. எடுத்துப் பார்த்தான்...

‘இதை ஓங்கினவ... என்னைப் பார்த்ததும் கீழே நழுவ விட்டுட்டா...’

அவனைத் தவிர வேறு ஒருவனாக இருந்திருந்தால் நிச்சயமாக அந்தச் சிலையினால் அடிபட்டிருப்பான் என்பதை பாலமுரளி தெளிவாக உணர்ந்து வைத்திருந்தான்...

‘ஏன் அவ இதாலே என் மண்டையைப் பிளக்கல..?’

அவனுக்குள் கேள்வி எழுந்தது.. சிந்தனையுடன் அந்தச் சிலையை அதற்கான இடத்தில் வைத்து



விட்டு சிதறிக்கிடந்த பொருள்களை சேகரித்து அறையை ஒழுங்கு படுத்த முயன்றான்... சிதறிக்கிடந்த பொருள்களைத் தொடும் போது.. அதை பிரயோகித்த ராதிகாவின் நினைவு வந்து அவன் மனதை அசைத்தது...

‘இதை விட்டெறிஞ்சா...’

‘இதை இழுத்துக் கீழே போட்டா...’

‘இது அவ கைபட்டு விழுந்துச்சு...’

ஒவ்வொரு பொருளும்.. ஒவ்வொரு நிகழ்வை உணர்த்த அறையை ஒழுங்கு பண்ணும் முயற்சியில் தோற்றுப் போனவனாக... அதை அப்படியே விட்டு விட்டு.. கட்டிலை அடைந்தான் பாலமுரளி... கசங்கிக் கிடந்த மெத்தைவிரிப்பும் சிதறிக்கிடந்த தலையணைகளும் அவன் மனதை மேலும் கசக்கிச் சிதறவைத்தன...

அவளைத் தொட்டு விட்ட இன்பம் துளிக்கூட அவன் மனதில் இல்லை... கட்டிலில் சரிந்தவனின் மனதில்...

‘தண்டனை கிடைச்சிருக்கிறது.. அவளுக்கா..? இல்லை எனக்கா..?’ என்ற கேள்வி எழுந்தது...

தலையணைகளை ஒழுங்கு படுத்தி.. அதில் தலையை வைத்துப் படுத்தவனின் மனதில்..

Optimized by www.ImageOptimizer.net

'இனி அவ என்ன செய்வா..?' என்ற நினைவு எழுந்தது...

'நிச்சயமாக வாழ்க்கைப் பிச்சைகேட்டு.. என்னைத் தேடி வருவா...'

இந்த நினைவில் அவன் மனதின் வலி மறைவதை வியப்புடன் உணர்ந்தான் பாலமுரளி...

'நிச்சயம் வருவா...'

அவளின் வருகை மீதான உறுதிப் பாட்டுடன் அவன் கண்களை மூடி உறங்க முயன்றான்.. உறக்கம் வரவில்லை...

ராதிகாவின் சில தன்மைகளை பாலமுரளி அறிந்து வைத்திருந்தான்.. அந்த ஒரு காரணத்தினாலேதான்.. அவளைப் பூங்காவில் கட்டி முத்தமிட்டவன்.. உடனே ஊருக்குப் போக நேர்ந்ததும்.. நம்பிக்கையோடு அங்கேயே தங்கி விட்டான்...

'அவளாவது... அந்த முத்தத்துக்குப் பின்னாலேயும் சங்கரைப் பத்தி நினைக்கிறதாவது...'

அவனுடைய முத்தத்தில் மயங்கிப் போனவள் விலகாமல் நின்றதில் அவனது நம்பிக்கை அதிகரித்தது...

'அவ மனசில நான் இருக்கிறேனோ...'

மழைத்துளியைப் போல... அவன் மனதில் ஓரமாக நம்பிக்கைத்துளி தோன்றியிருந்தது... அதை அடியோடு



உடைத்து எறிந்தது செல் போனில் ஷோபா அனுப்பி வைத்த ராதிகாவின் பேச்சு...

வெறி கொண்டவனின் மனதில் இருந்த தர்ம நியாயங்கள் சொல்லாமல்.. கொள்ளாமல் ஓடிவிட... ராதிகாவைக் கவர்ந்து சென்று சூறையாடி விட்டான் பாலமுரளி...

'இத்தனைக்குப் பின்னாலே.. அவளுக்கு என்னை விட்டா வேறு கதி கிடையாது...'

இந்த நினைப்பே அவன் மனதில் நிம்மதியை உண்டாக்கியது... ராதிகாவின் குடும்பத்தைப் பற்றி நன்கு அறிந்தவன் பாலமுரளி...

'குடும்பத்தை நினைச்சுப் பார்ப்பா... நிச்சயமாய் என்னைத் தேடி வந்து காலில் விழுந்து கல்யாணம் பண்ணிக்கன்னு கெஞ்சுவா... கதறுவா...'

பாலமுரளியின் மன வலி கொஞ்சம்... கொஞ்சமாக குறைந்தது... ராதிகாவிற்கு இழைத்து விட்ட அநியாயத்திற்கான பரிகாரம் அவள் கழுத்தில் தாலியைக் கட்டுவதுதான் என்று நினைத்துக் கொண்டான் பாலமுரளி...

'ஆனா... அதைச் செய்துதான் ஆகனுமா..?' அவன் மனம் கேட்டது...

'நிர்பந்தத்தில என்னைத் தேடிவந்தா அவளை நான் ஏத்துக்கனுமா..? அவ செஞ்ச அநியாயத்துக்கு

அதுதான் தண்டனையா..? கூடாது.. நடந்ததை நினைக்க.. நினைக்க அவ புலம்பனும்.. வாழ்நாள் பூராவும் இன்னைக்கு நடந்ததை நினைக்க.. நினைக்க அவ கதறனும்...'

அவன் மனம் இறுகியது.. ஒன்றில் மட்டும் அவன் நிச்சயமாக இருந்தான்...

அது.. இதற்குப் பின்னால்.. ராதிகா சங்கரை நினைத்துக்கூடப் பார்க்க மாட்டாள் என்பது...



## 37



உன் நிழலைத்தானே கேட்டேன்...
நெருப்பாக ஏன் சுட்டாய்

"இதோ ராதுவே வந்திட்டாளே..."

கீதாவின் உற்சாகக் குரலில் திரும்பிப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியின் புருவங்கள் மேலேறின....

"என்னம்மா..? ஏன்.. என்னவோ போல இருக்க..?"

பெற்றவருக்கு பிள்ளையின் முகத்தைப் பார்த்தவுடனேயே அந்தப் பிள்ளையின் மனம் பாதிப்பு



தெரிந்து விடுவதற்கான மர்மம் எதுவென்று ராதிகாவிற்கு தெரியவில்லை...

ஆனாலும்.. தகப்பனாரின் கரிசனத்தில் கண் கலங்கி விட்டாள் ராதிகா...

"ஒன்னுமில்லேப்பா..."

"ஒன்னுமில்லாததுக்கு ஏன் கண் கலங்கற...?" கிருஷ்ணமூர்த்தி விடவில்லை...

"நீங்க வேறப்பா..." கீதா இடைமறித்தாள்...

"என்ன சொல்ற...?"

"இவ இப்பல்லாம் சுத்த அழு மூஞ்சியா ஆகிட்டாப்பா... நேத்து டிவியில செம காமெடி படம் ஓடுதுப்பா... எனக்கும்.. சுந்தருக்கும் சிரிச்சுச்சிரிச்சு... வயித்து வலியே உண்டாகிருச்சு... இவளை யதேச்சையாய் பார்த்தோம்... எங்க ரெண்டு பேருக்கமே... தூக்கிவாரிப் போட்டிருச்சு..."

"எதுக்கும்மா..?" கிருஷ்ணமூர்த்திக்குப் புரியவில்லை...

"காமெடி படத்தைப் பார்த்து இவ அழுது வைச்சாப்பா..."

"என்னது..?!" மகளை விசித்திரமாகப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி... அவரறிந்த ராதிகா... சும்மாவே விழுந்து.. விழுந்து சிரிப்பாள்... இதில் காமெடி படமென்றால் கேட்கவே வேண்டாம்..

Optimized by www.ImageOptimizer.net

அந்த ராதிகா... நகைச்சுவைப் படத்தைப் பார்த்து கண்ணில் தண்ணீரை விட்டாளா...?

'என்னடா இது...?' கிருஷ்ணமூர்த்திக்கு.. உலகின் விசித்திரங்களைக் குறித்து கவலை வந்து விட்டது...

"அதனாலேதான் சொல்றேன்... இவ மூஞ்சி எப்படியோ இருக்கேன்னு காரணம் கேட்காதீங்க... அது அப்படித்தான் இருக்கும்..." கீதா விளக்கம் சொன்னாள்...

"கோவிலுக்கு போயிட்டு வந்தவ... என்னவோ.. நடிகர் திலகத்தோட படத்துக்கு போயிட்டு வந்த மாதிரி அழுமூஞ்சியா வந்து நிற்கறியேடி... என்ன ஆச்சு...?"

அதுவரை நடந்ததை அறியாதவளாக... அப்போதுதான் சமையலறையை விட்டு வெளியே வந்த ராஜேஸ்வரி மகளை அதட்டினாள் அதைக்கேட்ட கீதா வாய் பொத்தி சிரித்தாள்...

ராஜேஸ்வரி அப்படித்தான் பேசி வைப்பாள்... அவள் கருப்பு வெள்ளைப் படங்களின் தீவிர ரசிகை... மக்கள் திலகத்தின் படங்களென்றால் அவளுக்குப் பிடிக்கும்.. திருமணத்திற்குப் பின்னால்..



ஒரு நாளில் கிருஷ்ணமூர்த்தி அவளிடம் மிக யதார்த்தமாக ஒரு விசயத்தைச் சொன்னார்...

"எனக்கு நடிகர் திலகம் படம்ன்னா அவ்வளவு இஷ்டம் ராஜி.. படம்ன்னா அவரோட படம்தான்.. படம்..."

அதுவரை மக்கள் திலகத்தின் படத்தைச் சாதாரணமாக பாராட்டி வந்த ராஜேஸ்வரி... அதற்குப் பின்னால் மக்கள் திலகத்தின் தீவிர அபிமானியாக மாறிவிட்டாள்.. அதில் கிருஷ்ணமூர்த்திக்கு வருத்தம்...

'ம்ஹீம்... நானா வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டேனே...'

அது எப்படித்தான்.. கிருஷ்ணமூர்த்தியைச் சார்ந்த அத்தனை விவரங்களுக்கும் ராஜேஸ்வரி எதிர்மறையான கருத்துக்களை வைத்திருக்கிறாளோ என்றிருந்தது அவருக்கு....

அவரைக் கடுப்படிக்க.. ராஜேஸ்வரி... அவருக்கு பிடித்தவற்றை விமரிசித்து வைப்பாள்...

"கேட்டுக்கடி கீதா... மக்கள் திலகம் படத்துக்குப் போனா... கலகலன்னு சிரிச்சுக்கிட்டு.. சிரிச்ச முகமா வெளியே வரலாம்... அதுவே நடிகர் திலகத்தோட படத்துக்கு போனோம்ன்னு வைய்யி... கர்சீப்பை பிழிஞ்சுக்கிட்டு வர வேண்டியதுதான்..."

Optimized by www.ImageOptimizer.net

"அது எதுக்கும்மா... ?"

"அழுதழுது கர்சீப் நனைஞ்சு போனா.. பிழியாம என்னடி செய்றது... ?"

இப்படிப்பட்ட ராஜேஸ்வரியிடம் நடிகர் திலகம் நடித்த நகைச்சுவை படங்களைப் பற்றி நினைவு படுத்த விருப்பப் படுவார் கிருஷ்ணமூர்த்தி... ஆனால்... அதைச் செய்ய ஆரம்பித்தால் விவாதம் முற்றுப்பெறாமல் சிந்துபாத்தின் கன்னித்தீவைப் போல நீண்டு கொண்டே சென்று விடும் அபாயம் இருந்ததால் வாயை இறுகி மூடிக் கொண்டு அமைதி காத்து விடுவார்...

அன்றும்... அது போல அமைதிக்கு அவர் தாவிவிட... ராதிகா அவளுடைய அறைக்குள் போகாமல்.. மொட்டை மாடிக்குப் போனாள்...

அதைக் கவனிக்காமல் ராஜேஸ்வரி அதிசயமாக கையில் கிடைத்த டிவியின் ரிமோட்டை கைப்பற்றிக் கொண்டு தொலைக்காட்சி தொடரில் ஆழ்ந்துவிட.. அதை எப்படி திரும்பவும் கைப்பற்றுவது என்ற சிந்தனையில் கிருஷ்ணமூர்த்தி ஆழ்ந்துவிட்டார்...

மொட்டைமாடியின் தனிமையில் சரிந்த ராதிகா ஓய்ந்து போயிருந்தாள்... கண்ணுக்கு முன்னால் சூன்யவெளி நிலைத்திருக்க.. அவள் மனம் சல்லடை... சல்லடையாக சிதறியிருந்தது...



முழங்கால்களைக் கட்டி அதில் முகம் புதைத்துக் கொண்டவளின் காதுகளில் அந்தப் பாடல் நுழைந்தது...

"தூது சொல்ல
ஒரு தோழி இல்லையென்று
துயர் கொண்டாயோ தலைவி...?"

தெருவில் சோன்பப்டி விற்றுக் கொண்டு சென்றவனின் கைவண்டியிலிருந்து எப்.எம்மின் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது...

அதைக் கேட்டதும் ராதிகாவின் கண்ணீர் அதிகமானது...

இதைப் போல பலமுறை அவள் நினைத்திருக்கிறாள்... சங்க காலத்தில் மேகம் விடு தூது.. அன்னம் விடு தூது என்று இருந்ததைப் போல... இந்தக் காலத்தில் எந்தத் தூதும் அகப்படவில்லையே என்று ஏங்கியிருக்கிறாள்...

அவளுடைய டைரியில் அவளுடைய காதல் உணர்வுகளை கவிதையாகத் தீட்டியிருக்கிறாள்...

'அம்மம்மா.. கேளடி.. தோழி..!' என்று ஆரம்பித்த அந்தக் கவிதைகளின் அருகே அன்னப் பறவையின் படம் இருக்கும்...

"அசத்தலா இருக்குடி ராதிகா..."

Optimized by www.ImageOptimizer.net

அவள் டைரியைப் படித்துப் பார்த்த கீதா ஒருநாள் ஆச்சரியத்துடன் பாராட்டினாள்...

"அன்னப் பறவையின் படத்தைச் சொல்றியா... ?" என்று கேட்டாள் ராதிகா...

"ஊஹீம்.. இந்தக் காதல் கவிதைகளைச் சொல்றேன்... என்னடி ஆச்சு..? யாரையும் காதலிச்சு.. கீதலிச்சு வைச்சிருக்கியா..?" சந்தேகத்துடன் பார்த்தாள் கீதா...

"தூ.. உன் புத்தி இப்படித்தானே போகும்... கொடுடி டைரியை..." கோபப் படுவதைப் போல நடித்தாள் ராதிகா...

இதற்காகத்தானே.. அவள் டைரியில் அவளுடைய மனதின் உணர்வுகளை சாதாரணமாக எழுதாமல்.. கவிதைகளாக வடித்தாள்... அந்தரங்கமானது என்றெல்லாம் அடுத்தவரின் டைரியை படிக்காமல் விட்டு விடும் ரகமா கீதா..? அவள் பாடத்தை படிக்கிறாளோ இல்லையோ... அந்த வீட்டிலிருப்பவர்களின் டைரிகளை மட்டும் தேடியெடுத்துப் படித்து விடுவாள்...

என்ன ஒன்று.. அவற்றில் அவள் தேடும் சுவாரஸ்யமான அனுபவங்கள் எதுவும் இருக்கவே இருக்காது..



கிருஷ்ணமூர்த்தி.. அவர் வாங்கி வைத்திருக்கும் லோன்களின் புள்ளி விவரங்களை அவருடைய டைரியில் பிட்டுப்பிட்டு வைத்திருப்பார்..

ராஜேஸ்வரியோ.. வீட்டின் பால் கணக்கு... மளிகை கணக்கு... சலவைக் கணக்கு.. மாதாந்திர வீட்டுச் செலவின் கணக்கு என்று.. கணக்குப் புத்தகமாக.. டைரியை மாற்றி வைத்திருப்பாள்...

சுந்தர் மட்டும் உருப்படியாய் தினப்படி அலுவல்களை டைரியில் எழுதிவைத்திருப்பான்... அவற்றில் பெரும்பான்மையானவை.. கீதாவைத் திட்டுவனவாகவே அமைந்திருப்பதால் கீதா அதை விரல் தொட்டுப் படிக்க மாட்டாள்...

ராதிகா எதிலும் முன்யோசனையுடன் செயல்படுபவள்.. அசைவப் பட்சிணியான தங்கையைக் கொண்டிருப்பதால்.. சைவச் சமாச்சாரங்களையே டைரியில் எழுதி வைப்பாள்... அதில் பெரும்பாலானவை பக்திப் பரவசத்துடன் இருந்து வைப்பதில் கீதா கொலை வெறிக்கு ஆளாவாள்...

"காலேஜ் படிக்கிறவ எழுதற டைரி மாதிரியாடி இது இருக்கு..?"

அப்படிப்பட்ட ராதிகாவின் டைரியில்.. 'அம்மம்மா... கேளடி.. தோழி..!' யென்று அன்னப் பறவையிடம் சேதி

Optimized by www.ImageOptimizer.net

சொல்வதைப் போல அனேக காதல் கவிதைகளைக் கண்டதில் கீதா கன்வெறி கொண்டாள்...

"இதையெல்லாம் நான் நோட்ஸ் எடுத்துக்கறேண்டி..."

"இதென்ன பாடமா..? நீ நோட்ஸ் எடுத்துக்கறதுக்கு..."

ராதிகா மறுத்த போதும்.. அவளுக்குத் தெரியாமல் அதை எழுதிவைத்துக் கொண்டாள் கீதா...

அந்த நினைவில் ராதிகாவின் கன்னத்தை சூடான கண்ணீர் நனைத்தது...

'கேட்டாயா.. என் உள்ளம் கவர்ந்தவன்.... என் உடலையும் கவர்ந்து விட்டான்...' விம்மினாள் ராதிகா...

'அவனைத் தொட வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.. ஆனால்.. இப்படித் தொட வேண்டுமென்று ஒரு நாளும் ஆசைப் பட்டதில்லையே...' மனம் வெதும்பினாள்...

'அந்தக் காலப் பெண்களுக்கு தூது சொல்ல ஆயிரம் வழிகள் இருந்தன... எனக்கு ஏன்.. அதில் ஒரு வழிகூட கிடைக்கவில்லை...? உன்னிடம் சேதி சொன்னேனே.. உணக்கையாய் கேட்டுக் கொண்டாயே.. அவனிடம் போய் சொல்ல உனக்கு ஏன் மனமில்லை...'



காகிதத்தில் வரைந்த அன்னப் பறவையிடம் கேள்வி கேட்டாள் ராதிகா... அது சித்திரமாய் உறைந்து நின்றது..

'என மனதிலிருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்தேனே.. அதில் ஒன்றைக்கூட அவனிடம் கொண்டு சேர்க்க உனக்கு துப்பில்லாமல் போய்விட்டதே...'

அவள் முன்னால் விரிந்து கிடந்த டைரியிலிருந்த அன்னப்பறவையின் விழிகளில் கண்ணீர் கசிவதைப் போல ராதிகாவிற்கு பிரமை ஏற்பட்டது...

'நீயென்ன செய்வாய்..? பாவம்..! நீயும் என்னைப் போல ஊமையாகி விட்டாய்.. வாயிருந்தும் பேச முடியாமல் நானே ஊமையாகிப் போகும் போது.. சித்திரமாய் இருக்கும் நீ என்ன பேச முடியும்..?'

ராதிகாவின் கண்ணீர் துளிபட்டு.. அன்னப் பறவையின் கண்ணீரில் நீர் வழிந்தது...

'நீயேன் அழுகிறாய்..? அழ வேண்டியது நான்.. இது எனக்கான தண்டனையாம்.. நான் உயிராய் நினைப்பவன் சொல்லி விட்டுப் போயிருக்கிறான்.. நான் என்ன செய்யட்டும்..? தண்டனையை அனுபவிக்கவா..?'

Optimized by www.ImageOptimizer.net

அன்னப்பறவையிடம் கேள்வி கேட்டாள்.. அது பதில் சொல்லாமல் தோழியின் நிலைமையைக் கண்டு உறைந்து போயிருந்தது.. ராதிகா.. அன்னப் பறவையின் சித்திரத்தின் மீது முகம் புதைத்து... மௌனமாக கண்ணீர் சிந்திக் கொண்டேயிருந்தாள்...



– முதல் பாகம் முடிந்தது –